**தலைப்பு – 102 - நிதி, திட்டமிடல் அமைச்சு மற்றும் அவ் அமைச்சின் கீழுள்ள திணைக்களங்கள் மற்றும் நிறுவனங்கள் சம்பந்தமான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை - 2012 ஆம் ஆண்டு**

---

இவ்அறிக்கை இரண்டு பகுதிகளைக் கொண்டுள்ளது.

1 ஆவது பகுதி- அமைச்சு மற்றும் அமைச்சின் கீழுள்ள திணைக்களங்களின் கணக்குகள் சம்பந்தமான சுருக்கமான அறிக்கை

2 ஆவது பகுதி- ஒவ்வொரு ஒதுக்கீட்டுத் தலைப்பிற்கும் உரிய விபரமான அறிக்கை

## I ஆவது பகுதி

**நிதி, திட்டமிடல் அமைச்சு மற்றும் அவ் அமைச்சின் கீழுள்ள திணைக்களங்களின் கணக்குகள் சம்பந்தமான சுருக்கமான அறிக்கை**

---

**1. அமைச்சு மற்றும் அமைச்சின் கீழுள்ள திணைக்களங்கள்**

| தலைப்பு | திணைக்களத்தின் பெயர் |
|---|---|
| 237 | தேசிய திட்டமிடல் திணைக்களம் |
| 238 | அரசிறைக் கொள்கைத் திணைக்களம் |
| 239 | வெளிநாட்டு வளங்கள் திணைக்களம் |
| 240 | தேசிய வரவு செலவுத் திட்டத் திணைக்களம் |
| 241 | அரச பொது தொழில் முயற்சிகள் திணைக்களம் |
| 242 | முகாமைத்துவ சேவைகள் திணைக்களம் |
| 243 | அபிவிருத்தி நிதித் திணைக்களம் |
| 244 | வியாபாரத் தீர்வை மற்றும் முதலீட்டுக் கொள்கைகள் திணைக்களம் |
| 245 | அரச பொது நிதித் திணைக்களம் |
| 246 | உள்நாட்டு இறைவரித் திணைக்களம் |
| 247 | இலங்கை சுங்கம் |
| 248 | மதுவரித் திணைக்களம் |
| 249 | திறைசேரிச் செயற்பாடுகள் திணைக்களம் |
| 250 | அரச கணக்குகள் திணைக்களம் |
| 251 | மதிப்பீட்டுத் திணைக்களம் |
| 252 | தொகை மதிப்பு, புள்ளிவிபரத் திணைக்களம் |

| | |
|---|---|
| 280 | கருத்திட்ட முகாமைத்துவம் மற்றும் கண்காணிப்புத் திணைக்களம் |
| 296 | இறக்குமதி, ஏற்றுமதிக் கட்டுப்பாட்டுத் திணைக்களம் |
| 323 | சட்ட அலுவல்கள் திணைக்களம் |
| 324 | முகாமைத்துவ கணக்காய்வுத் திணைக்களம் |
| - | மிலோதா நிறுவனம் |
| - | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிக்கூற்றுக்கள் |

## 2. கணக்குகள்

### 2.1 ஒதுக்கீட்டுக் கணக்கு

#### (அ) மொத்த ஏற்பாடுகள் மற்றும் செலவுகள்

அமைச்சு மற்றும் அமைச்சின் கீழுள்ள இருபது (20) திணைக்களங்களுக்காக வழங்கப்பட்டிருந்த மொத்தத் தேறிய ஏற்பாடுகள் ரூபா 512,051,344,197 ஆக இருந்ததுடன் மீளாய்வாண்டின் இறுதிவரையில் இதில் ரூபா 433,334,018,424 தொகை பயன்படுத்தப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் அமைச்சு மற்றும் ஒவ்வொரு திணைக்களங்களின் தேறிய ஏற்பாட்டில் சேமிப்பு ரூபா 962,708 இற்கும் ரூபா 2,588,329,339 இற்கும் இடையிலான வீச்சில் அல்லது மொத்த தேறிய ஏற்பாட்டில் 0.61 சதவீதத்திற்கும் 97.16 சதவீதத்திற்கும் இடையிலான வீச்சுடைய சதவீதத்தில் இருந்தது. விபரம் பின்வருமாறு.

| தலைப்பு | அமைச்சு/ திணைக்களம் | 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறு தேறிய ஏற்பாடுகள் | | 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பயன்பாடுகள் | | 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறு சேமிப்பு | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | மீண்டுவருபவை | மூலதனம் | மீண்டுவருபவை | மூலதனம் | மீண்டுவருபவை | மூலதனம் | மொத்தம் | சதவீதம் |
| | | ரூபா. | ரூபா. | ரூபா. | ரூபா. | ரூபா. | ரூபா. | ரூபா. | |
| 102 | நிதி, திட்டமிடல் அமைச்சு | 635,718,000 | 1,855,195,270 | 601,799,179 | 1,298,459,476 | 33,918,821 | 556,735,794 | 590,654,615 | 23.71 |
| 237 | தேசிய திட்டமிடல் திணைக்களம் | 55,920,500 | 123,023,500 | 54,717,891 | 122,084,857 | 1,202,609 | 938,643 | 2,141,252 | 1.20 |
| 238 | அரசிறைக் கொள்கைத் திணைக்களம் | 636,800,000 | 1,600,000 | 127,561,375 | 1,142,707 | 509,238,625 | 457,293 | 509,695,918 | 79.84 |
| 239 | வெளிநாட்டு வளங்கள் திணைக்களம் | 255,966,927 | 639,176,000 | 176,049,527 | 635,890,072 | 79,917,400 | 3,285,928 | 83,203,328 | 9.29 |
| 240 | தேசிய வரவு செலவுத் திட்டத் திணைக்களம் | 39,280,845,000 | 35,197,950,000 | 68,473,412 | 1,409,412,522 | 506,182,816 | 1,038,749,794 | 1,544,932,610 | 2.07 |
| 241 | அரச பொது தொழில் முயற்சிகள் திணைக்களம் | 48,375,000 | 4,600,000 | 44,205,234 | 2,330,481 | 4,169,766 | 2,269,519 | 6,439,285 | 12.16 |
| 242 | முகாமைத்துவ சேவைகள் திணைக்களம் | 32,800,000 | 1,450,000 | 30,995,445 | 862,279 | 1,804,555 | 587,721 | 2,392,276 | 6.98 |

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 243 | அபிவிருத்தி நிதித் திணைக்களம் | 366,225,000 | 2,378,700,000 | 315,775,337 | 1,560,816,339 | 50,459,663 | 817,883,661 | 868,343,324 | 31.63 |
| 244 | வியாபாரத் தீர்வை மற்றும் முதலீட்டுக் கொள்கைகள் திணைக்களம் | 830,434,000 | 900,000 | 23,062,721 | 561,500 | 807,371,279 | 338,500 | 807,709,779 | 97.16 |
| 245 | அரச பொது நிதித் திணைக்களம் | 136,490,000 | 1,385,000 | 113,492,491 | 1,253,070 | 22,997,509 | 131,930 | 23,129,439 | 16.78 |
| 246 | உள்நாட்டு இறைவரித் திணைக்களம் | 1,563,600,000 | 57,900,000 | 1,562,267,310 | 42,061,640 | 1,332,690 | 15,838,360 | 17,171,050 | 1.06 |
| 247 | இலங்கை சுங்கம் | 1,392,627,000 | 932,800,000 | 1,391,536,742 | 902,832,384 | 1,090,258 | 29,967,616 | 31,057,874 | 1.34 |
| 248 | மதுவரித் திணைக்களம் | 455,096,000 | 67,000,000 | 445,495,674 | 60,358,987 | 9,601,326 | 6,641,013 | 16,242,339 | 3.11 |
| 249 | திறைசேரிச் செயற்பாடுகள் திணைக்களம் | 416,478,342,000 | 6,305,300,000 | 414,147,477,550 | 6,047,835,111 | 2,330,864,450 | 257,464,889 | 2,588,329,339 | 0.61 |
| 250 | அரச கணக்குகள் திணைக்களம் | 34,880,500 | 15,469,500 | 33,713,683 | 11,461,332 | 1,166,817 | 4,008,168 | 5,174,985 | 10.28 |
| 251 | மதிப்பீட்டுத் திணைக்களம் | 235,570,000 | 20,700,000 | 229,100,462 | 18,556,751 | 6,469,538 | 2,143,249 | 8,612,787 | 3.36 |
| 252 | தொகை மதிப்பு புள்ளிவிபரத் திணைக்களம் | 578,900,000 | 1,271,453,000 | 568,752,974 | 1,137,027,123 | 10,147,026 | 134,425,877 | 144,572,903 | 7.81 |

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 280 | கருத்திட்ட முகாமைத்துவம் மற்றும் கண்காணிப்புத் திணைக்களம் | 64,130,000 | 4,700,000 | 59,055,714 | 3,655,425 | 5,074,286 | 1,044,575 | 6,118,861 | 8.89 |
| 296 | இறக்குமதி, ஏற்றுமதிக் கட்டுப்பாட்டுத் திணைக்களம் | 39,698,372 | 11,091,628 | 36,945,353 | 10,480,135 | 2,753,019 | 611,493 | 3,364,512 | 6.62 |
| 323 | சட்ட அலுவல்கள் திணைக்களம் | 10,612,000 | 650,000 | 10,191,281 | 108,011 | 420,719 | 541,989 | 962,708 | 8.55 |
| 324 | முகாமைத்துவ கணக்காய்வுத் திணைக்களம் | 24,620,000 | 2,650,000 | 23,882,818 | 2,277,049 | 737,182 | 372,951 | 1,110,133 | 4.07 |
| | மொத்தம் | 463,157,650,299 | 48,893,693,898 | 420,064,551,173 | 13,269,467,251 | 43,093,099,126 | 35,624,226,647 | 78,717,325,773 | |

## 2.2 வருமானக் கணக்குகள்

### (அ) மதிப்பிடப்பட்ட மற்றும் உள்ளவாறான வருமானம்

அமைச்சின் கீழுள்ள 09 திணைக்களங்களினால் 2012 ஆம் ஆண்டிற்கான அறுபத்தேழு (67) வருமானக் குறியீடுகளுக்காக ரூபா 1,036,329,632,000 தொகையான வருமானம் மதிப்பீடு செய்யப்பட்டிருந்ததுடன் ரூபா 990,664,916,396 கூட்டுத்தொகையான வருமானம் சேகரிக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் மதிப்பீடு செய்யப்பட்ட வருமானத்தில் 35.82 சதவீதத்திற்கும் 553.04 சதவீதத்திற்கும் இடையிலான வீச்சுடைய சதவீதத்தில் வருமானம் சேகரிக்கப்பட்டிருந்தது. விபரம் பின்வருமாறு.

| வருமானக் கணக்கீட்டு உத்தியோகத்தர் | வருமானக் குறியீடு | மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம் | உள்ளவாறான வருமானம் | (குறைவாக சேகரித்தல்)/அதிகமாக சேகரித்தல் | சதவீதம் |
|---|---|---|---|---|---|
| | | ரூபா | ரூபா. | ரூபா | % |
| சுங்கப் பணிப்பாளர் நாயகம் | 10.01.01.00 | 76,830,000,000 | 73,488,797,447 | (3,341,202,553) | 95.65 |
| -மேற்படி- | 10.01.02.00 | 20,000,000 | 20,869,945 | 869,945 | 104.35 |
| இறக்குமதி, ஏற்றுமதிக் கட்டுப்பாட்டாளர் | 10.01.03.00 | 450,000,000 | 512,671,434 | 62,671,434 | 113.92 |
| சுங்கப் பணிப்பாளர் நாயகம் | 10.01.04.00 | 75,211,000,000 | 70,110,728,468 | (5,100,271,532) | 93.22 |
| -மேற்படி- | 10.01.05.01 | 29,287,000,000 | 29,603,817,902 | 316,817,902 | 101.08 |
| -மேற்படி- | 10.01.05.02 | 3,120,000,000 | 3,136,571,565 | 16,571,565 | 100.53 |
| -மேற்படி- | 10.01.06.00 | - | - | | |
| -மேற்படி- | 10.01.07.00 | - | - | | |
| -மேற்படி- | 10.01.08.00 | 36,608,000,000 | 33,665,823,105 | (2,942,176,895) | 91.96 |
| -மேற்படி- | 10.01.99.00 | - | - | - | - |
| -மேற்படி- | 10.02.05.01 | 54,924,000,000 | 53,528,703,599 | (1,395,296,401) | 97.46 |
| -மேற்படி- | 10.02.05.02 | - | 39,070,605 | 39,070,605 | |
| -மேற்படி- | 10.02.05.03 | 23,000,000,000 | 28,466,074,809 | 5,466,074,809 | 123.77 |
| -மேற்படி- | 10.02.05.04 | 57,510,000,000 | 46,495,735,189 | (11,014,264,811) | 80.85 |
| -மேற்படி- | 10.02.05.99 | 5,132,000,000 | 3,336,130,676 | (1,795,869,324) | 65.01 |
| உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகம் | 10.02.01.01 | 22,208,300,000 | 21,090,795,631 | (1,117,504,369) | 94.97 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| -மேற்படி- | 10.02.01.02 | 56,925,200,000 | 45,609,087,661 | (11,316,112,339) | 80.12 |
| -மேற்படி- | 10.02.01.03 | 35,340,500,000 | 38,487,278,292 | 3,146,778,292 | 108.90 |
| -மேற்படி- | 10.02.01.04 | 109,487,000,000 | 99,468,871,221 | (10,018,128,779) | 90.85 |
| -மேற்படி- | 10.02.02.01 | 12,000,000 | 8,012,275 | (3,987,725) | 66.77 |
| -மேற்படி- | 10.02.02.02 | 6,000,000 | 3,982,398 | (2,017,602) | 66.37 |
| -மேற்படி- | 10.02.02.03 | - | - | - | - |
| -மேற்படி- | 10.02.03.01 | 2,000,000 | 2,008,516 | 8,516 | 100.43 |
| -மேற்படி- | 10.02.03.02 | 2,000,000 | 1,921,838 | (78,162) | 96.09 |
| -மேற்படி- | 10.02.03.03 | - | - | - | - |
| மதுவரி ஆணையாளர் நாயகம் | 10.02.04.00 | 60,971,000,000 | 60,046,840,535 | (924,159,465) | 137.38 |
| -மேற்படி- | 10.02.06.00 | 25,000,000 | 34,344,008 | 9,344,008 | |
| உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகம் | 10.02.08.00 | - | (481,999) | (481,999) | |
| -மேற்படி- | 10.02.09.00 | 25,000,000 | 138,260,169 | 113,260,169 | 553.04 |
| அரசிறைக் கொள்கைப் பணிப்பாளர் நாயகம் | 10.02.10.00 | 200,000,000 | 128,505,342 | (71,494,658) | 64.25 |
| திறைசேரிச் செயற்பாடுகள் பணிப்பாளர் நாயகம் | 10.02.11.00 | 22,900,000,000 | 22,289,140,870 | (610,859,130) | 97.33 |
| உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகம் | 10.02.12.01 | 17,441,000,000 | 13,534,045,176 | (3,906,954,824) | 77.60 |
| -மேற்படி- | 10.02.12.02 | 7,489,190,000 | 9,542,448,857 | 2,056,258,857 | 127.42 |
| -மேற்படி- | 10.02.12.03 | 18,823,000,000 | 15,659,658,331 | (3,163,341,669) | 83.19 |
| -மேற்படி- | 10.03.03.00 | 312,000,000 | 289,175,098 | (22,824,902) | 92.68 |
| -மேற்படி- | 10.03.04.00 | 2,200,000,000 | 1,285,744,429 | (914,255,571) | 58.44 |
| -மேற்படி- | 10.03.05.00 | 950,000,000 | 709,648,933 | (240,351,067) | 74.70 |
| திறைசேரிச் செயற்பாடுகள் பணிப்பாளர் நாயகம் | 10.03.06.00 | - | - | - | - |
| உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகம் | 10.04.01.02 | 7,409,210,000 | 8,712,982,193 | 1,303,772,193 | 117.60 |
| -மேற்படி- | 10.04.04.00 | 17,318,000,000 | 14,864,241,267 | (2,453,758,733) | 85.83 |
| -மேற்படி- | 10.04.01.01 | 75,790,000,000 | 68,285,005,102 | (7,504,994,898) | 90.10 |
| -மேற்படி- | 10.04.02.01 | 17,411,000,000 | 14,763,457,967 | (2,647,542,033) | 84.79 |
| -மேற்படி- | 10.04.03.01 | 52,574,000,000 | 59,262,107,756 | 6,688,107,756 | 112.72 |
| -மேற்படி- | 10.04.03.99 | 400,000,000 | 344,211,910 | (55,788,090) | 86.05 |
| -மேற்படி- | 10.04.02.99 | 6,388,790,000 | 6,305,109,016 | (83,680,984) | 98.69 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| -மேற்படி- | 10.04.01.03 | 12,000,000 | 56,028,959 | 44,028,959 | 466.91 |
| தேசிய வரவு செலவுத்திட்ட பணிப்பாளர் நாயகம் | 20.01.03.00 | 100,000,000 | 289,427,871 | 189,427,871 | 289.43 |
| திறைசேரிச் செயற்பாடுகள் பணிப்பாளர் நாயகம் | 20.02.01.01 | 650,000,000 | 582,263,523 | (67,736,477) | 89.58 |
| -மேற்படி- | 20.02.01.99 | 62,000,000 | 50,139,146 | (11,860,854) | 80.87 |
| -மேற்படி- | 20.02.02.01 | 7,704,000,000 | 8,100,515,778 | 396,515,778 | 105.15 |
| -மேற்படி- | 20.02.02.99 | 1,325,000,000 | 1,387,710,751 | 62,710,751 | 104.73 |
| அரச பொது தொழில் முயற்சிகள் பணிப்பாளர் நாயகம் | 20.02.03.00 | 36,459,060,000 | 42,214,108,456 | 5,755,048,456 | 115.78 |
| -மேற்படி- | 20.02.04.00 | 5,096,800,000 | 4,546,957,702 | (549,842,298) | 89.21 |
| திறைசேரிச் செயற்பாடுகள் பணிப்பாளர் நாயகம் | 20.03.01.00 | 130,000,000 | 143,436,379 | 13,436,379 | 110.34 |
| பிரதான மதிப்பீட்டாளர் | 20.03.02.09 | 30,000,000 | 32,585,761 | 2,585,761 | 108.62 |
| அரச பொது தொழில் முயற்சிகள் பணிப்பாளர் நாயகம் | 20.03.02.11 | 32,000,000 | 34,359,965 | 2,359,965 | 107.37 |
| திறைசேரிச் செயற்பாடுகள் பணிப்பாளர் நாயகம் | 20.03.02.99 | 7,114,582,000 | 2,941,497,189 | (4,173,084,811) | 41.34 |
| சுங்கப் பணிப்பாளர் நாயகம் | 20.03.02.17 | 100,000,000 | 104,693,242 | 4,693,242 | 104.69 |
| திறைசேரிச் செயற்பாடுகள் பணிப்பாளர் நாயகம் | 20.03.03.00 | 3,000,000,000 | 5,137,117,410 | 2,137,117,410 | 171.24 |
| -மேற்படி- | 20.03.99.00 | 9,042,000,000 | 3,238,910,549 | (5,803,089,451) | 35.82 |
| அரசிறைக் கொள்கைப் பணிப்பாளர் நாயகம் | 20.05.01.00 | 32,000,000,000 | 43,000,000,000 | 11,000,000,000 | 134.38 |
| திறைசேரிச் செயற்பாடுகள் பணிப்பாளர் நாயகம் | 20.05.99.00 | 1,800,000,000 | 2,222,737,157 | 422,737,157 | 123.49 |
| -மேற்படி- | 20.06.02.00 | 500,000,000 | 831,151,867 | 331,151,867 | 166.23 |
| உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகம் | 20.06.03.00 | - | - | - | - |
| திறைசேரிச் | 20.06.04.00 | 16,470,000,000 | 16,409,105,273 | (60,894,727) | 99.63 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| செயற்பாடுகள் பணிப்பாளர் நாயகம் -மேற்படி- | 30.01.01.00 | 20,000,000,000 | 16,070,771,882 | (3,929,228,118) | 80.35 |
| | | 1,036,329,632,000 | 990,664,916,396 | (45,664,715,604) | |

## 2.3 முற்பணக் கணக்குகள்

### 2.3.1 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகள்

**பாராளுமன்றத்தினால் விதிக்கப்பட்டிருந்த எல்லைகள்**

அமைச்சு மற்றும் அமைச்சின் கீழுள்ள இருபது (20) திணைக்களங்களினால் அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கிற்காக பாராளுமன்றத்தினால் விதிக்கப்பட்டிருந்த பின்வரும் எல்லைகள் பின்பற்றப்பட்டிருந்தன. விபரம் பின்வருமாறு.

| தலைப்பு | விடய இலக்கம் | செலவினம் | | பெறுவனவு | | வரவு மீதி | |
|---|---|---|---|---|---|---|---|
| | | ஆகக்கூடிய எல்லை | உள்ளவாறான | ஆகக் குறைந்த எல்லை | உள்ளவாறான | ஆகக்கூடிய எல்லை | உள்ளவாறான |
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| 102 | 10201 | 24,000,000 | 10,815,088 | 7,500,000 | 10,222,247 | 90,000,000 | 44,678,838 |
| 237 | 23701 | 4,000,000 | 3,685,564 | 2,500,000 | 3,257,921 | 30,000,000 | 16,832,869 |
| 238 | 23801 | 2,600,000 | 2,069,916 | 1,000,000 | 1,653,259 | 10,000,000 | 7,151,436 |
| 239 | 23901 | 5,000,000 | 4,241,921 | 2,880,000 | 3,086,126 | 32,000,000 | 17,255,208 |
| 240 | 24001 | 7,000,000 | 3,968,834 | 3,700,000 | 4,813,624 | 35,000,000 | 22,223,115 |
| 241 | 24101 | 4,000,000 | 1,913,495 | 1,500,000 | 1,965,027 | 18,000,000 | 10,820,522 |
| 242 | 24201 | 5,000,000 | 2,596,073 | 2,000,000 | 2,144,103 | 23,000,000 | 10,437,504 |
| 243 | 24301 | 2,500,000 | 1,437,657 | 500,000 | 809,643 | 12,000,000 | 4,160,448 |
| 244 | 24401 | 2,500,000 | 1,892,364 | 1,500,000 | 1,578,843 | 15,000,000 | 8,608,918 |
| 245 | 24501 | 4,000,000 | 1,806,388 | 1,000,000 | 2,159,529 | 16,000,000 | 9,425,671 |
| 246 | 24601 | 45,000,000 | 44,681,193 | 48,000,000 | 59,858,857 | 295,000,000 | 219,759,166 |

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 247 | 24701 | 40,100,000 | 40,057,661 | 35,000,000 | 46,697,536 | 294,000,000 | 243,699,139 |
| 248 | 24801 | 28,000,000 | 25,997,714 | 22,000,000 | 25,943,682 | 195,000,000 | 130,598,452 |
| 249 | 24901 | 5,500,000 | 3,532,868 | 2,800,000 | 3,204,052 | 30,000,000 | 17,874,645 |
| 250 | 25001 | 5,000,000 | 2,682,229 | 2,000,000 | 6,016,206 | 25,000,000 | 8,598,509 |
| 251 | 25101 | 15,000,000 | 12,305,765 | 12,500,000 | 12,970,015 | 60,000,000 | 58,186,946 |
| 252 | 25201 | 52,000,000 | 21,079,978 | 19,500,000 | 32,048,355 | 215,000,000 | 139,987,869 |
| 280 | 28001 | 6,000,000 | 2,646,481 | 1,600,000 | 2,658,137 | 21,000,000 | 12,954,686 |
| 296 | 29601 | 4,500,000 | 3,825,966 | 2,000,000 | 3,718,583 | 20,000,000 | 11,929,264 |
| 323 | 32301 | 1,000,000 | 240,292 | 200,000 | 343,320 | 3,000,000 | 1,286,198 |
| 324 | 32401 | 2,000,000 | 1,284,767 | 1,200,000 | 2,008,870 | 11,000,000 | 8,055,013 |

### 2.3.2 வணிகரீதியற்ற முற்பணக் கணக்குகள்

**பாராளுமன்றத்தினால் விதிக்கப்பட்டிருந்த எல்லைகள்**

அமைச்சின் கீழுள்ள ஒரு திணைக்களத்தினால் வணிகரீதியற்ற இரண்டு (02) முற்பணக் கணக்குகளின் செயற்பாடுகளில் பாராளுமன்றத்தினால் விதிக்கப்பட்டிருந்த பின்வரும் எல்லைகள் பின்பற்றப்பட்டிருந்தன. விபரம் பின்வருமாறு.

| தலைப்பு | விடய இலக்கம் | செலவினம் | | பெறுவனவு | | வரவு மீதி | |
|---|---|---|---|---|---|---|---|
| | | ஆகக்கூடிய எல்லை | உள்ளவாறான | ஆகக் குறைந்த எல்லை | உள்ளவாறான | ஆகக்கூடிய எல்லை | உள்ளவாறான |
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| 250 | 25002 | 4,250,000 | 3,836,933 | 4,250,000 | 4,088,717 | 3,500,000 | 909,279 |
| 250 | 25003 | 10,000,000 | 1,872,138 | 3,000,000 | 14,573,099 | 520,000,000 | 490,459,153 |

## 2.4 கட்டுநிதியும் பொது வைப்புக் கணக்கும்

### (அ) கட்டுநிதிக் கணக்கு

அமைச்சின் கீழுள்ள நான்கு (04) திணைக்களங்கள் என்பனவற்றில் 2012 திசெம்பர் 31 ஆந் திகதி வரையில் கட்டுநிதிக் கணக்குகளில் ரூபா 102,550,997 கூட்டுத்தொகையான வரவு மீதி காணப்பட்டது. விபரம் பின்வருமாறு.

| திணைக்களம் | 2012 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு மீதி வரவு |
|---|---|
| | ரூபா. |
| தேசிய வரவு செலவுத் திட்டத் திணைக்களம் | 83,325 |
| உள்நாட்டு இறைவரித் திணைக்களம் | 70,021,041 |
| இலங்கை சுங்கம் | 4,938,397 |
| மது வரித் திணைக்களம் | 27,508,234 |
| | 102,550,997 |

### (ஆ) பொது வைப்புக் கணக்கு

2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான அமைச்சு மற்றும் அமைச்சின் கீழுள்ள பதினைந்து (15) திணைக்களங்களின் பொது வைப்புக் கணக்கு மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 5,322,927,661 ஆக இருந்ததுடன் இது தொடர்பான விபரம் கீழே தரப்படுகின்றது.

| அமைச்சு / திணைக்களம் | தலைப்பு | 2012 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு மீதி |
|---|---|---|
| -------------- | --------- | --------------------- |
| | | ரூபா. |
| நிதி, திட்டமிடல் அமைச்சு | 6000/0000/00/0015/0016/000 | 700,498 |
| அரசிறைக் கொள்கைத் திணைக்களம் | 6000/00000/00/0015/118/000 | 38,317 |
| தேசிய வரவு செலவுத் திட்டத் திணைக்களம் | 15/120 | 14,058 |
| அரச பொது தொழில் முயற்சிகள் திணைக்களம் | 6000/0/0/15/121 | 2,950 |
| முகாமைத்துவ சேவைகள் திணைக்களம் | 6000/0000/00/0015/0122/000 | 3,505 |
| வியாபாரத் தீர்வை மற்றும் முதலீட்டுக் கொள்கைகள் திணைக்களம் | 6000/00000/00/0015/124/000 | 19,625 |
| அரச பொது நிதித் திணைக்களம் | 6000/0/0/15/25 | 330,888 |
| உள்நாட்டு இறைவரித் திணைக்களம் | 6000/0/0/15/0126 | 36,079,237 |
| | 6000/0/0/14/3 | 1,096,890,829 |
| இலங்கை சுங்கம் | 6000/0/0/15/127 | 3,820,783,061 |
| மதுவரித் திணைக்களம் | 6000/15/128 | 83,085,184 |
| | 6000/08/051 | 14,437,857 |
| | 6000/06/60 | 215,954,027 |
| அரசாங்க கணக்குகள் திணைக்களம் | 6000/0000/00/0015/0130/000 | 2,925 |
| மதிப்பீட்டுத் திணைக்களம் | 6000/0000/00/0015/0131/000 | 435,149 |
| தொகை மதிப்பு, புள்ளிவிபரத் திணைக்களம் | 6000/0000/00/0015/0132/000 | 39,803,307 |
| | 6000/0000/00/0011/0592/000 | 13,865,258 |

| | | |
|---|---|---|
| செயற்திட்ட முகாமைத்துவம் மற்றும் கண்காணிப்புத் திணைக்களம் | 6000/0/0/15/135 | **3,**175 |
| இறக்குமதி, ஏற்றுமதிக் கட்டுப்பாட்டுத் திணைக்களம் | 6000/0000/00/0015/0151/000 | 477,811 |
| | | -------------------- |
| மொத்தம் | | 5,322,927,661 |
| | | =========== |

## 2 ஆவது பகுதி

---------------------

### 1. தலைப்பு 102 – நிதி, திட்டமிடல் அமைச்சு

### 1.1 கணக்காய்வின் நோக்கெல்லை

நிதி, திட்டமிடல் அமைச்சின் 2012 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிஅறிக்கைகள், இணக்கக்கூற்றுகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய அறிக்கைகளை உள்ளடக்கிய ஒதுக்கீட்டுக் கணக்குகள் மீதான கணக்காய்வு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2013 நவம்பர் 26 ஆந் திகதி அமைச்சின் செயலாளருக்கு அனுப்பிவைக்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக்கூற்றுக்கள் சம்பந்தமான கணக்காய்வு அவதானிப்புக்கள், கருத்துரைகள் மற்றும் கண்டுபிடிப்புக்கள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகளினதும் இணக்கக்கூற்றுக்களினதும் மீளாய்வின் அடிப்படையிலும் கொடுக்கல் வாங்கல்களின் மாதிரிகளினது போதியளவு செவ்வை பார்த்தலின் அடிப்படையிலும் எழுந்தனவேயாகும். அவ்வாறான மீளாய்வினதும் செவ்வை பார்த்தலினதும் நோக்கெல்லையும் அளவும் எனக்குக் கிடைப்பதற்குள்ள பதவியணியினர், ஏனைய மூலவளங்கள், நேரம் என்பவற்றிற்கமைய இயலுமானளவு விரிவான கணக்காய்வை உள்ளடக்கக் கூடியவாறிருந்தது.

## 1.2 கணக்குகள் மற்றும் இணக்கக்கூற்றுக்கள் சம்பந்தமாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்புக்கள்

ஒதுக்கீட்டுக் கணக்குகள் மற்றும் இணக்கக்கூற்றுக்களை இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 உறுப்புரைகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், அரசாங்க நிதி மற்றும் நிருவாக பிரமாணங்களுக்கிணங்க பேணுதல், தயாரித்தல் மற்றும் நியாயபூர்வமாகச் சமர்ப்பித்தல் என்பன பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும். மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயபூர்வமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாட்டைத் திட்டமிடுதல், அமுல்படுத்துதல் மற்றும் பராமரித்தல் போன்றன இப்பொறுப்பில் உள்ளடங்குகின்றன.

## 1.3 கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

2012 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறான நிதி அறிக்கைகள் மற்றும் ஏடுகளின் பிரகாரம் நிதி, திட்டமிடல் அமைச்சின் ஒதுக்கீட்டுக் கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் இந்த அறிக்கையின் (அ) முதல் (ஈ) வரையிலுமான பொதுவான அவதானிப்புக்கள் மற்றும் கீழேயுள்ள 1.4 முதல் 1.8 வரையிலான பந்திகளில் குறிப்பிடப்பட்ட பிரதான கணக்காய்வு அவதானிப்புக்கள் தவிர திருப்திகரமானதாக தயாரிக்கப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.

### (அ) பாதீட்டு முரண்கள்

(i) மூன்று (03) செலவின விடயங்களுக்காக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ரூபா 2,120,000 கூட்டுத்தொகையான மொத்த மூலதன ஏற்பாடு முழுவதும் சேமிக்கப்பட்டிருந்தன.

(ii) பதினைந்து (15) செலவின விடயங்களுக்கு ரூபா 529,302,566 கூட்டுத்தொகையான தேறிய நிதியேற்பாடு ஒதுக்கப்பட்டிருந்ததுடன் அதில் ரூபா 112,570,615 கூட்டுத்தொகையினைப் பயன்படுத்தியதன் பின்னர் ரூபா 416,731,951 சேமிப்பு அவதானிக்கப்பட்டது. அந்த சேமிப்பு உரிய விடயங்களின் கீழ் ஒதுக்கப்பட்ட தேறிய ஏற்பாட்டில் 6 சதவீதத்திற்கும் 98 சதவீதத்திற்கும் இடையிலான சதவீதத்தைக் கொண்டிருந்தது.

**(ஆ) அரசாங்க செலவின முகாமைத்துவம்**

2011 திசெம்பர் 30 ஆந் திகதிய தேசிய பாதீட்டுச் சுற்றறிக்கையின் 155 ஆம் இலக்கத்தின் 2.4 ஆம் பந்தியின் ஏற்பாடுகளுக்கு முரணாக சேமிக்கப்பட்ட ஒரு செலவின விடயத்திற்காக அதிகார இலக்கம் 391 இன் கீழ் குறைநிரப்பு மதிப்பீட்டில் ரூபா 12,500,000 தொகையான மேலதிக நிதியேற்பாடு பெறப்பட்டிருந்தது.

**(இ) எரிபொருள் மற்றும் மின்சார செலவின முகாமைத்துவம்**

(i) 2012 பெப்ரவரி 16 ஆந் திகதிய 156 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றுநிபத்தின் ஆலோசனைகளைக் கருத்தில் கொள்ளாது மீளாய்வாண்டின் போது செலவின விடயங்களக்காக நிதிப் பிரமாணம் 66 இன் மூலம் ரூபா 5,963,000 தொகையான நிதியேற்பாடு மாற்றப்பட்டிருந்தது.

(ii) 2012 பெப்ரவரி 16 ஆந் திகதிய 156 ஆம் இலக்க தேசிய பாதீட்டுச் சுற்றுநிபத்தின் 3 ஆம் பந்தியின் ஏற்பாடுகளுக்கு முரணாக 2012 சனவரி மாதத்தில் எரிபொருள் மற்றும் மின்சாரத்திற்காக செலவிடப்பட்ட செலவினத்தை அடிப்படையாகக் கொண்டு அந்த எல்லையினை விஞ்சாத வகையில் அடுத்த மாதங்களின் செலவினம் பேணப்பட வேண்டிய போதிலும் சனவரி மாத செலவினத்தை விஞ்சி ஏனைய மாதங்களில் எரிபொருள் மற்றும் மின்சாரத்திற்காக முறையே ரூபா 1,108,001 தொகை மற்றும் ரூபா 3,826,820 தொகையாக ரூபா 4,934,821 தொகையான செலவினம் மேற்கொள்ளப்பட்டிருந்தது.

**(ஈ) அரசாங்க உத்தியோகத்தர்களின் முற்பணக் கணக்கு தொடர்பான இணக்கக்கூற்று**

அசைவுறாத நான்கு (04) நிலுவைக் கடன் மீதிகளுக்குரிய ரூபா 719,257 கூட்டுத்தொகையான நிலுவைக் கடன் மீதி காணப்பட்டதுடன் அத் தொகையினை அறவீடு செய்தல் தொடர்பான பின்தொடர் நடவடிக்கைகள் நலிவான நிலையில் காணப்பட்டது.

## 1.4 நல்லாளுகையும் கணக்களிப்பொறுப்பும்

### 1.4.1 கூட்டிணைந்த திட்டம்

2010 மார்ச் 10 ஆந் திகதிய பீஎப்/ஆர்/2/2/3/5(4) ஆம் இலக்க அரச பொது நிதிப்பணிப்பாளர் நாயகத்தின் கடிதத்தின் பிரகாரம் 2010 ஆம் ஆண்டு தொடக்கம் ஆகக் குறைந்தது தொடர்ந்து வரும் 03 வருடங்களுக்கான கூட்டிணைந்த திட்டம் அமைச்சினால் ஆண்டின் ஆரம்பத்தில் தயாரிக்கப்பட வேண்டிய போதிலும் அத்திட்டம் 2012 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

### 1.4.2 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுவை அமுல்படுத்தல்

2012 ஆம் ஆண்டின் போது மூன்று கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுக் கூட்டங்கள் மாத்திரம் நடாத்தப்பட்டிருந்தன.

## 1.5 இணங்காமைகள்

**சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் என்பவற்றுடனான இணங்காமைகள்**

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாண ஏற்பாடுகள் என்பனவற்றுடன் இணங்காத சந்தர்ப்பங்கள் பகுப்பாய்வு செய்து கீழே தரப்படுகின்றன.

| | சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் என்பவற்றுடனான தொடர்பு | இணங்காமைகள் |
|---|---|---|
| (அ) | நியதிச்சட்ட ஏற்பாடுகள் | |
| | 1971 இன் 03 ஆம் இலக்கம் மற்றும் 1974 இன் 40 ஆம் இலக்க அதிகாரச் சட்டங்களில் திருத்தப்பட்ட 1969 இன் 07 ஆம் இலக்க அரசாங்க வீடமைப்பு (உரித்தினை மீளப்பெறுதல்) அதிகாரச்சட்டம் | தாபன விதிக் கோவையின் XIX ஆம் அத்தியாயத்தின் 7.1 ஆம் பந்தியின் பிரகாரம் அரசாங்க விடுதியிலிருந்து அகன்று செல்வதற்கு உத்தியோகத்தர் ஒருவருக்கு உரிய காலம் வரும்போது அவர் அவ்வாறு செல்லாதிருந்தால் இந்த அதிகாரச்சட்டத்தின் கீழ் அந்த வீட்டிலிருந்து அகற்றப்பட வேண்டியிருந்த போதிலும் முன்னாள் பிரதி திறைசேரிச் செயலாளர் தொடர்பாக அவ்வாறு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |

(ஆ) தாபன விதிக்கோவை

| | | |
|---|---|---|
| (i) | XIX ஆம் அத்தியாயத்தின் 6.15 ஆம் பிரிவு | அரசாங்க வீடுகள் அரச உத்தியோகத்தர்களுக்கு வழங்கும் போது வாடகைக் கால முடிவின் போது அல்லது வீட்டை ஒதுக்கும் உத்தியோகத்தர் கட்டளையிடும் போது வீட்டிலிருந்து விலகிச் செல்ல வேண்டியிருந்த போதிலும் முன்னாள் பிரிதி திறைசேரிச் செயலாளரும் தேசிய பாதீட்டுத் திணைக்கள உதவி பணிப்பாளரும் அவ்வாறு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. |
| (ii) | 7.2 ஆம் பிரிவு | வாடகைக் காலத்தை விஞ்சி அரசாங்க வீடுகளில் வாழ்ந்து கொண்டிருக்கும் காலப் பகுதிக்காக மேற்கூறப்பட இரண்டு உத்தியோகத்தர்கள் மற்றும் அரசிறைக் கொள்கைத் திணைக்களத்தின் உதவிப் பணிப்பாளரிடமிருந்து 2012 திசெம்பர் 31 ஆந் திகதி வரை தண்ட வாடகை அறவிடப்பட்டிருக்கவில்லை. |
| (iii) | 5.2.1 ஆம் பிரிவு | பட்டோலையிடப்பட்ட வீடுகளைப் பெற்றுக் கொள்வதற்கு உரித்தற்ற உத்தியோகத்தருக்கு அரசாங்க வீடொன்றில் வசிப்பதற்காக விவாகமான உத்தியோகத்தரின் சம்பளத்தில் 12½ சதவீதம் அறவிடப்பட வேண்டிய போதிலும் சம்பளத்தில் 10 சதவீதம் மாத்திரமே அறவிடப்பட்டிருந்தது. |
| (iv) | 5.4 ஆம் பிரிவு | அரசாங்க சேவையில் ஈடுபட்டிருக்கின்ற குடும்பங்கள் அரசாங்க வீடுகளில் வாழ்ந்து கொண்டிருக்கின்ற சந்தர்ப்பங்களின் போது பட்டியலிடப்பட்ட வீடுகளைப் பெற்றுக் கொள்வதற்கு உரித்தற்றிருந்ததால் அந்த இருவரிலும் கூடிய சம்பளம் பெறுகின்ற |

உத்தியோகத்தரின் சம்பளத்தில் 12½ சதவீதமும் குறைந்த சம்பளம் பெறுகின்ற உத்தியோகத்தரின் சம்பளத்தில் 5 சதவீதமும் அறவிடப்பட வேண்டியிருந்த போதிலும் இந்த அமைச்சின் கீழ் காணப்படுகின்ற உத்தியோகபூர்வ இல்லங்களுக்காக சம்பளத்தில் 10 சதவீதம் மாத்திரம் உத்தியோகத்தர் களிடமிருந்து அறவிடப்பட்டிருந்ததுடன் வீட்டினைப் பெற்றவரின் மனைவி அரசாங்க சேவையிலிருந்த மூன்று சந்தர்ப்பங்களின் போது அந்த துணைவியரிடமிருந்து 2012 திசெம்பர் 31 ஆந் திகதி வரை அவ்வாறு வீட்டு வாடகை அறவிடப்பட்டிருக்கவில்லை.

(இ) பொது நிருவாகச் சுற்றுநிருபம்

| | |
|---|---|
| (i) 1992 ஆகஸ்ட் 19 ஆந் திகதிய 26/92 ஆம் இலக்கம் 1994 ஆகஸ்ட் 03 ஆந் திகதிய 26/92(i) ஆம் இலக்கம் மற்றும் 2002 பெப்ரவரி 26 ஆந் திகதிய 01/2002 ஆம் இலக்க சுற்றுநிருபம் | அமைச்சின் குழாம் வாகனங்களில் அரசாங்க இலட்சனை மற்றும் நிறுவனத்தின் பெயர் பொறிக்கப்பட்டிருக்க வில்லை. |
| (ii) 2008 யூன் 26 ஆந் திகதிய 13/2008 ஆம் இலக்க சுற்றுநிருபத்தின் 07 ஆம் பந்தி | வீடு மற்றும் அலுவலகத்திற்கிடையே குழு வாகன வசதி வழங்கக்கூடிய ஆகக் கூடிய தூரம் போவதற்கும் வருவதற்குமாக 50 கிலோ மீற்றராக இருக்க வேண்டிய போதிலும் அதற்கு முரணாக அந்த எல்லையினை விஞ்சி 58 தொடக்கம் 86 கிலோ மீற்றர் வரை குழு வாகன வசதிகளை வழங்குவதற்காக 05 வாகனங்கள் ஈடுபடுத்தப்பட்டிருந்தன. |

(ஈ) பொது நிதிச் சுற்றுநிருபம்

| | |
|---|---|
| 1997 செப்தெம்பர் 30 ஆந் திகதிய 353 ஆம் இலக்க சுற்றுநிருபத்தின் 3 II ஆம் பிரிவு | மெய்மையாய்வுச் சபை / மதிப்பீட்டுச் சபை நியமிக்கப்பட்டு விற்றுத் தீர்ப்பதற்காக சமர்ப்பிக்கப்பட்ட வாகனங்கள் தொடர்பான மதிப்பீட்டு அறிக்கையுடன் நிலைமை அறிக்கை மற்றும் ஏனைய உரிய தரவுகள் சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் 2011 ஆம் ஆண்டின் போது விற்றுத் தீர்க்கப்பட்ட 25 வாகனங்கள் மற்றும் 2012 ஆம் ஆண்டின் போது விற்றுத் தீர்க்கப்பட்ட 24 வாகனங்களுக்காக நிலைமை அறிக்கை மற்றும் ஏனைய உரிய தரவுகள் பெறப்பட்டிருக்கவில்லை. |

(உ) தேசிய பாதீட்டுச் சுற்றுநிருபம்

| | |
|---|---|
| 2010 திசெம்பர் 07 ஆந் திகதிய 150 ஆம் இலக்க சுற்றுநிருபம் | 10 வருடங்களுக்கு மேற்பட்ட பழைய மற்றும் பொருளாதார ரீதியில் பயன்பாடற்ற வாகனங்களை விற்றுத் தீர்ப்பதற்காக முன்னுரிமை வழங்கப்பட வேண்டியிருந்த போதிலும் 2004, 2005 மற்றும் 2007 ஆம் ஆண்டுகளில் பதிவு செய்யப்பட்ட 04 வாகனங்கள் காரணமின்றி விற்றுத் தீர்க்கப்பட்டிருந்தது. |

(ஊ) ஓய்வூதியச் சுற்றுநிருபம்

| | |
|---|---|
| 2010 மே 25 ஆந் திகதிய 4/2010 ஆம் இலக்க ஓய்வூதியச் சுற்றுநிருபத்தின் VII ஆம் பந்தி | ஒவ்வொரு மாதத்தினதும் பங்களிப்புப் பணம் அடுத்துவரும் மாதத்தின் 10 ஆந் திகதிக்கு முன்னர் அரசாங்க சேவை சேமலாப நிதியத்திற்கு கிடைப்பதற்கு ஆவன செய்வதுடன் அவ்வாறு அறவிடப்படுகின்ற பங்களிப்புப் பணம் தொடர்பான செலவு அறிவித்தலை அனுப்புவது பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாக இருந்த போதிலும் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படாது 3 மாதங்கள் |

தொடக்கம் 2 வருடங்கள் வரையான தாமதத்துடன் பங்களிப்புப் பணம் அனுப்பப்பட்டிருந்தது.

## 1.6 செயலாற்றல்

2012 இன் வருடாந்த பாதீட்டு மதிப்பீடு/ செயல்நடவடிக்கை திட்டத்தின் பிரகாரம் அமைச்சின் முன்னேற்றம் தொடர்பான அவதானிப்புக்கள் கீழே காட்டப்படுகின்றது.

### திட்டமிடல்

**வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டத்திற்கு இணங்க செயற்படாமை**

பின்வரும் சந்தர்ப்பங்களில் செயல் நடவடிக்கைத் திட்டத்திற்கு இணங்க செயற்படாதிருந்தமை அவதானிக்கப்பட்டது.

| | பிரிவு | செயற்பாடுகள் |
|---|---|---|
| (i) | இலங்கை திட்டமிடல் சேவைப் பிரிவு | இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவகத்தின் மூலம் பயிற்சிகளை நடாத்துதல் |
| (ii) | கட்டிட கட்டுப்பாட்டுப் பிரிவு | i பொதுத் திறைசேரிக் கட்டிடத்திற்கு அடுத்துள்ள புதிய ஐந்து மாடிக் கட்டிடத்தினை நிர்மாணிக்கும் ஒப்பந்தத்தை வழங்குதல் மற்றும் நிர்மாணத்தை ஆரம்பித்தல்.<br>ii புத்தர் சிலையை திருத்தும் நடவடிக்கைகள்<br>iii இரண்டாவது மாடியின் கூரையைத் திருத்துதல் |
| (ii) | இலங்கை கணக்காளர் சேவைப் பிரிவு | இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவகத்தின் மூலம் பயிற்சிகளை நடாத்துதல் |

| | | | |
|---|---|---|---|
| (iv) | நிருவாக மற்றும் மனிதவள அபிவிருத்தி பிரிவு | i | நிதி, திட்டமிடல் அமைச்சிற்காக கூட்டமைப்பு உத்தியோகத்தர் பதவியொன்றை ஏற்படுத்துதல் |
| | | ii | ஆவணக்கூடத்தில் உள்ள அகற்றப்பட முடியுமான கோவைகள் பொது நிருவாகச் சுற்றுநிருபம் 25/2008 இன் பிரகாரம் முறையான வகையில் அங்கீகாரத்தைப் பெற்றதன் பின்னர் அகற்றுதல் |

## 1.7 முகாமைத்துவ நலிவுகள்

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளின் போது பின்வரும் நலிவுகள் அவதானிக்கப்பட்டன.

### நில அழகுபடுத்தல் நடவடிக்கைகள் - 2011/2012

2011 யூன் தொடக்கம் 2012 ஆகஸ்ட் வரை நில அழகுபடுத்தல் நடவடிக்கைகளுக்காக ரூபா 963,166 தொகை செலவிடப்பட்டிருந்ததுடன் பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) கட்டிட வளவில் தோட்டமொன்றை அமைக்கும் நோக்கமாக இருந்த போதிலும் மூலிகைத் தோட்டத்தின் முறைக்கு மூலிகைக் கன்றுகள் நாட்டப்பட்டிருக்கவில்லை. மேலும், நிலத்தை அலங்கரிக்கும் வகையில் சுற்றாடலுக்குப் பொருத்தமான நாற்றுக்கள் தேர்ந்தெடுக்கப்படாமையினாலும் உரிய வகையில் பராமரிக்கப்படாமையினாலும் சில கன்றுகள் அழிவடைந்திருந்தன. அவ்வாறு அழிவடைந்த கன்றுகளுக்குப் பதிலாக புதிய கன்றுகளும் நாட்டப்பட்டிருக்கவில்லை.

(ஆ) ஆகக் குறைந்தது 3 அடி உயரமான இயற்கையான 50 பூச்சாடிகளை விஷேடமான இடங்களில் வைப்பதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதிலும் அந்த விடயம் அகற்றப்பட்டு திறைசேரி வளவில் மரக்கறி கன்றுகளை நடுவதற்கு கவனம் செலுத்தப்பட்டிருந்தது. அந்த மரக்கறி பயிர்ச்செய்கையில் விளைச்சல் கிடைத்திருக்காததுடன் அவைகள் அழிவடைந்திருந்தது.

## 1.8 மனிதவள முகாமைத்துவம்

### அங்கீகரித்த பதவியணியும் உள்ளபடியான பதவியணியும்

2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பதவியணி மீதான நிலை பின்வருமாறு.

| | ஊழியர் வகை | அங்கீகரித்த ஊழியர் எண்ணிக்கை | உள்ளபடியான ஊழியர் எண்ணிக்கை | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| (அ) | சிரேஷ்ட நிலை | 25 | 19 | 06 |
| (ஆ) | மூன்றாம் நிலை | 08 | 04 | 04 |
| (இ) | இரண்டாம் நிலை | 139 | 107 | 32 |
| (ஈ) | ஆரம்ப நிலை | 110 | 99 | 11 |
| | மொத்தம் | 282 | 229 | 53 |

மீளாய்வாண்டின் இறுதி வரையில் 53 வெற்றிடங்களை நிரப்புவதற்கு அமைச்சினால் முடியாதிருந்தது.

## 2. தலைப்பு 237 – தேசிய திட்டமிடல் திணைக்களம்

### 2.1 கணக்காய்வின் நோக்கெல்லை

தேசிய திட்டமிடல் திணைக்களத்தின் 2012 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிஅறிக்கைகள், இணக்கக்கூற்றுகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய அறிக்கைகளை உள்ளடக்கிய ஒதுக்கீட்டுக் கணக்குகள் மீதான கணக்காய்வு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2013 திசெம்பர் 09 ஆந் திகதி திணைக்களத்தின் தலைவருக்கு அனுப்பிவைக்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக்கூற்றுக்கள் சம்பந்தமான கணக்காய்வு அவதானிப்புக்கள், கருத்துரைகள் மற்றும் கண்டுபிடிப்புக்கள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகளினதும் இணக்கக்கூற்றுக்களினதும் மீளாய்வின் அடிப்படையிலும் கொடுக்கல் வாங்கல்களின் மாதிரிகளினது போதியளவு செவ்வை பார்த்தலின் அடிப்படையிலும் எழுந்தனவேயாகும். அவ்வாறான மீளாய்வினதும் செவ்வை பார்த்தலினதும் நோக்கெல்லையும் அளவும் எனக்குக் கிடைப்பதற்குள்ள பதவியணியினர், ஏனைய மூலவளங்கள், நேரம் என்பவற்றிற்கமைய இயலுமானளவு விரிவான கணக்காய்வை உள்ளடக்கக் கூடியவாறிருந்தது.

### 2.2 கணக்குகள் மற்றும் இணக்கக்கூற்றுக்கள் சம்பந்தமாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்புக்கள்

ஒதுக்கீட்டுக் கணக்குகள் மற்றும் இணக்கக்கூற்றுக்களை இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 உறுப்புரைகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், அரசாங்க நிதி மற்றும் நிருவாக பிரமாணங்களுக்கிணங்க பேணுதல், தயாரித்தல் மற்றும் நியாயபூர்வமாகச் சமர்ப்பித்தல் என்பன பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பாகும். மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயபூர்வமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாட்டைத் திட்டமிடுதல், அமுல்படுத்துதல் மற்றும் பராமரித்தல் போன்றன இப்பொறுப்பில் உள்ளடங்குகின்றன.

## 2.3 கணக்காய்வு அவதானிப்புக்கள்

2012 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறான நிதி அறிக்கைகள் மற்றும் ஏடுகளின் பிரகாரம் தேசிய திட்டமிடல் திணைக்களத்தின் ஒதுக்கீட்டுக் கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் இந்த அறிக்கையின் (அ) முதல் (ஈ) வரையிலுமான பொதுவான அவதானிப்புக்கள் மற்றும் கீழேயுள்ள 2.4 முதல் 2.7 வரையிலான பந்திகளில் குறிப்பிடப்பட்ட பிரதான கணக்காய்வு அவதானிப்புக்கள் தவிர திருப்திகரமானதாக தயாரிக்கப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.

### (அ) பாதீட்டு முரண்கள்

ஒரு செலவின விடயத்திற்கு ரூபா 2,250,000 தொகையான தேறிய நிதியேற்பாடு ஒதுக்கப்பட்டிருந்ததுடன் அதில் ரூபா 1,730,192 தொகையினைப் பயன்படுத்தியதன் பின்னர் ரூபா 519,808 சேமிப்பு அவதானிக்கப்பட்டது. அந்த சேமிப்பு ஒதுக்கப்பட்ட தேறிய ஏற்பாட்டில் 23 சதவீதத்தைக் கொண்டிருந்தது. செலவின விடயத்திற்காக மிகை ஏற்பாடுகள் வழங்கப்பட்டமையினால் இந்த சேமிப்பு ஏற்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.

### (ஆ) அரசாங்க செலவின முகாமைத்துவம்

2011 திசெம்பர் 30 ஆந் திகதிய 155 ஆம் இலக்க தேசிய பாதீட்டுச் சுற்றறிக்கையின் பிரகாரம் வருடாந்த பாதீட்டு மதிப்பீடுகளிலிருந்து ஒதுக்கப்பட்ட நிதியேற்பாடுகளிலிருந்து மீண்டெழும் மற்றும் மூலதன ஏற்பாடுகளில் முறையே 2 சதவீதம் மற்றும் 9 சதவீதம் சேமிக்கப்பட வேண்டியிருந்த போதிலும் 2012 ஆம் ஆண்டிற்காக திணைக்களத்தினால் முறையே 1.72 சதவீதம் மற்றும் 0.2 சதவீதம் சேமிக்கப்பட்டிருந்தது.

### (இ) எரிபொருள் மற்றும் மின்சார செலவின முகாமைத்துவம்

எரிபொருள் மற்றும் மின்சாரத்திற்காக மேலதிக நிதி வழங்கப்படாதிருந்தமையும், நிதிப் பிரமாணம் 66 இன் மூலம் நிதியேற்பாட்டை மாற்றுதல் திறைசேரியினால் அங்கீகரிக்கப்படாதிருந்தமையும் 2012 பெப்ரவரி 16 ஆந் திகதிய 156 ஆம் இலக்க தேசிய பாதீட்டுச் சுற்றுநிருபத்தில் ஆலோசனை வழங்கப்பட்டிருந்த போதிலும் அவ் ஆலோசனைகளைக் கருத்தில் கொள்ளாது செலவின விடயத்திற்காக நிதிப் பிரமாணம் 66 இன் மூலம் ரூபா 100,000 தொகையான நிதியேற்பாடு மீளாய்வாண்டின் போது மாற்றப்பட்டிருந்தது.

**(ஈ) அரச உத்தியோகத்தர்களின் முற்பணக் கணக்குகள் தொடர்பான இணக்கக்கூற்றுக்கள்**

விடய இல. 23701 இன் அரச உத்தியோகத்தர்களின் முற்பணக் கணக்குகள் தொடர்பான 2012 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறான இணக்கக் கூற்றுக்களின் பிரகாரம் அத்திகதியில் உள்ளவாறு அறவீடுகள் நிலுவையாக இருந்த மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 233,836 ஆக இருந்ததுடன் அந்நிலுவை மீதியினை அறவிடுவதற்கு திணைக்களம் தவறியிருந்தது.

## 2.4 நல்லாளுகையும் கணக்களிப்பொறுப்பும்

### 2.4.1 கூட்டிணைந்த திட்டம்

2010 மார்ச் 10 ஆந் திகதிய பீஎப்/ஆர்/2/2/3/5(4) ஆம் இலக்க அரச பொது நிதிப்பணிப்பாளர் நாயகத்தின் கடிதத்தின் பிரகாரம் 2010 ஆம் ஆண்டு தொடக்கம் ஆகக் குறைந்தது தொடர்ந்து வரும் 03 வருடங்களுக்கான கூட்டிணைந்த திட்டம் திணைக்களத்தால் ஆண்டின் ஆரம்பத்தில் தயாரிக்கப்பட வேண்டிய போதிலும் அத்திட்டம் இந்த அறிக்கைத் திகதி வரையிலும் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.4.2 வருடாந்த செயலாற்றல் அறிக்கை

மேலே 2.4.1 பந்தியில் குறிப்பிடப்பட்ட அரச பொது நிதிப்பணிப்பாளர் நாயகத்தின் கடிதத்தில் குறிப்பிடப்பட்ட முறையே 2002 செப்தெம்பர் 12 ஆந் திகதிய மற்றும் 2004 பெப்ரவரி 20 ஆந் திகதிய 402 மற்றும் 402(1) ஆம் இலக்க அரச நிதிச் சுற்றுநிருபத்தின் பிரகாரம் திணைக்களத்தினால் தயாரிக்கப்பட வேண்டிய வருடாந்த செயலாற்றல் அறிக்கை நிதி ஆண்டு முடிவடைந்து 150 நாட்களுக்குள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கான பிரதியுடன் பாராளுமன்றத்தில் முன்வைக்கப்படவேண்டிய போதிலும் மீளாய்வாண்டிற்கான செயலாற்றல் அறிக்கை 2013 ஒக்தோபர் 03 ஆந் திகதியே பாராளுமன்றத்தில் முன்வைக்கப்பட்டிருந்தது.

## 2.5 சொத்துக்கள் முகாமைத்துவம்

**வருடாந்த பொருள் மெய்மையாய்வை நடாத்துதல்**

2010 திசெம்பர் 17 ஆந் திகதிய பீஎப்/மெய்மையாய்வுச் சபை/01 ஆம் இலக்க அரசாங்க நிதிப் பணிப்பாளர் நாயகத்தின் கடிதத்தினால் திருத்தப்பட்ட 2009 திசெம்பர் 09 ஆந் திகதிய 441 ஆம் இலக்க அரசாங்க நிதிச் சுற்றுநிருபத்தின் பிரகாரம் 2012 இன் வருடாந்த பொருள் மெய்மையாய்வு மேற்கொள்ளப்பட்டு அவ்வறிக்கை 2013 மார்ச் 31 ஆந் திகதிக்கு கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் திணைக்களத்தினால் வருடாந்த பொருள் மெய்மையாய்வு இந்த அறிக்கைத் திகதி வரையிலும் நடாத்தப்பட்டிருக்கவில்லை. இறுதியாக பொருள் மெய்மையாய்வு 2011 ஆம் ஆண்டிற்காகவே மேற்கொள்ளப்பட்டிருந்தது.

## 2.6 இணங்காமைகள்

**சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் என்பவற்றுடனான இணங்காமைகள்**

உத்தியோகபூர்வ இல்லங்களின் உடன்படிக்கைக் காலம் முடிவடைந்திருந்த போதிலும் அந்த உத்தியோகபூர்வ இல்லங்கள் மீளக் கையளிக்கப்பட்டிராததுடன் 05 உத்தியோகத்தர்கள் தொடர்பாக தாபன விதிக் கோவையின் XIX ஆம் அத்தியாயத்தின் 7.1 மற்றும் 7.2 ஆம் பிரிவின் பிரகாரம் உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 2.7 மனிதவள முகாமைத்துவம்

**அங்கீகரித்த பதவியணியும் உள்ளபடியான பதவியணியும்**

2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பதவியணி மீதான நிலை பின்வருமாறு.

| | ஊழியர் வகை | அங்கீகரித்த பதவியணி | உள்ளபடியான பதவியணி | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| (அ) | சிரேஷ்ட நிலை | 58 | 35 | 23 |
| (ஆ) | மூன்றாம் நிலை | 02 | 01 | 01 |
| (இ) | இரண்டாம் நிலை | 26 | 22 | 04 |
| (ஈ) | ஆரம்ப நிலை | 29 | 29 | - |
| | மொத்தம் | 115 | 87 | 28 |

மீளாய்வாண்டின் இறுதி வரையில் 28 வெற்றிடங்களை நிரப்புவதற்கு திணைக்களத்தினால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 3. தலைப்பு 238 – அரசிறைக் கொள்கைத் திணைக்களம்

### 3.1 கணக்காய்வின் நோக்கெல்லை

அரசிறைக் கொள்கைத் திணைக்களத்தின் 2012 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிஅறிக்கைகள், இணக்கக்கூற்றுகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய அறிக்கைகளை உள்ளடக்கிய ஒதுக்கீட்டுக் கணக்குகள் மீதான கணக்காய்வு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2014 மார்ச் 03 ஆந் திகதி திணைக்களத்தின் தலைவருக்கு அனுப்பிவைக்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக்கூற்றுக்கள் சம்பந்தமான கணக்காய்வு அவதானிப்புக்கள், கருத்துரைகள் மற்றும் கண்டுபிடிப்புக்கள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகளினதும் இணக்கக்கூற்றுக்களினதும் மீளாய்வின் அடிப்படையிலும் கொடுக்கல் வாங்கல்களின் மாதிரிகளினது போதியளவு செவ்வை பார்த்தலின் அடிப்படையிலும் எழுந்தனவேயாகும். அவ்வாறான மீளாய்வினதும் செவ்வை பார்த்தலினதும் நோக்கெல்லையும் அளவும் எனக்குக் கிடைப்பதற்குள்ள பதவியணியினர், ஏனைய மூலவளங்கள், நேரம் என்பவற்றிற்கமைய இயலுமானளவு விரிவான கணக்காய்வை உள்ளடக்கக் கூடியவாறிருந்தது.

**3.2 கணக்குகள் மற்றும் இணக்கக்கூற்றுக்கள் சம்பந்தமாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்புக்கள்**

ஒதுக்கீட்டுக் கணக்குகள், வருமானக் கணக்குகள் மற்றும் இணக்கக்கூற்றுக்களை இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 உறுப்புரைகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், அரசாங்க நிதி மற்றும் நிருவாக பிரமாணங்களுக்கிணங்க பேணுதல், தயாரித்தல் மற்றும் நியாயபூர்வமாகச் சமர்ப்பித்தல் என்பன பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பாகும். மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயபூர்வமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாட்டைத் திட்டமிடுதல், அமுல்படுத்துதல் மற்றும் பராமரித்தல் போன்றன இப்பொறுப்பில் உள்ளடங்குகின்றன.

**3.3 கணக்காய்வு அவதானிப்புக்கள்**

2012 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறான நிதி அறிக்கைகள் மற்றும் ஏடுகளின் அரசிறைக் கொள்கைத் திணைக்களத்தின் ஒதுக்கீட்டுக் கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் இந்த அறிக்கையின் (அ) மற்றும் (ஆ) இலுள்ள பொதுவான அவதானிப்புக்கள் மற்றும் கீழேயுள்ள 3.4 மற்றும் 3.8 ஆம் பந்திகளில் குறிப்பிடப்பட்ட பிரதான கணக்காய்வு அவதானிப்புக்கள் தவிர திருப்திகரமானதாக தயாரிக்கப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.

**(அ) பாதீட்டு முரண்கள்**

06 செலவின விடயங்களுக்கு ரூபா 605,035,000 கூட்டுத்தொகையான நிதியேற்பாடு ஒதுக்கப்பட்டிருந்ததுடன் அதில் ரூபா 99,561,167 கூட்டுத்தொகையினைப் பயன்படுத்தியதன் பின்னர் ரூபா 505,473,833 சேமிப்பு அவதானிக்கப்பட்டது. அந்த சேமிப்பு உரிய செலவின விடயத்தின் கீழ் ஒதுக்கப்பட்ட தேறிய ஏற்பாட்டில் 27 சதவீதத்திற்கும் 84 சதவீதத்திற்கும் இடையிலான சதவீதத்தைக் கொண்டிருந்தது.

அவ்வாறே வருடாந்த பாதீட்டு மதிப்பீட்டின் மூலம் நிதியேற்பாடுகள் வழங்கப்படாதிருந்த செலவின விடய இல. 238-1-1-1405(i) இற்காக வீரமன் நடைமுறையின் கீழ் ரூபா 78,728,000 தொகை மாற்றப்பட்டிருந்தது.

(ஆ) **வருமானக் கணக்கு**

சமர்ப்பிக்கப்பட்ட 2 கணக்குகளின் பிரகாரம் ரூபா 1,435.858,156 தொகையான வருமானம் நிலுவையாக இருந்ததுடன் அதில் ரூபா 82,306,007 தொகை 2 வருடங்களுக்கு மேற்பட்ட நிலுவை வருமானமாக இருந்தது. அந் நிலுவை வருமானத்தை அறவீடு செய்யும் பின்தொடர் நடவடிக்கைகள் நலிவான நிலையில் காணப்பட்டது.

## 3.4 நல்லாளுகையும் கணக்களிப்பொறுப்பும்

### 3.4.1 கூட்டிணைந்த திட்டம்

2010 மார்ச் 10 ஆந் திகதிய பீஎப்/ஆர்/2/2/3/5(4) ஆம் இலக்க அரச பொது நிதிப்பணிப்பாளர் நாயகத்தின் கடிதத்தின் பிரகாரம் 2010 ஆம் ஆண்டு தொடக்கம் ஆகக் குறைந்தது தொடர்ந்து வரும் 03 வருடங்களுக்கான கூட்டிணைந்த திட்டம் திணைக்களத்தால் ஆண்டின் ஆரம்பத்தில் தயாரிக்கப்பட வேண்டிய போதிலும் அத்திட்டம் 2013 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

### 3.4.2 வருடாந்த செயலாற்றல் அறிக்கை

மேலே 3.4.1 பந்தியில் குறிப்பிடப்பட்ட அரச பொது நிதிப்பணிப்பாளர் நாயகத்தின் கடிதத்தில் குறிப்பிடப்பட்ட முறையே 2002 செப்தெம்பர் 12 ஆந் திகதிய மற்றும் 2004 பெப்ரவரி 20 ஆந் திகதிய 402 மற்றும் 402(1) ஆம் இலக்க அரச நிதிச் சுற்றுநிருபத்தின் பிரகாரம் திணைக்களத்தினால் தயாரிக்கப்பட வேண்டிய வருடாந்த செயலாற்றல் அறிக்கை நிதி ஆண்டு முடிவடைந்து 150 நாட்களுக்குள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கான பிரதியுடன் பாராளுமன்றத்தில் முன்வைக்கப்படவேண்டிய போதிலும் மீளாய்வாண்டிற்கான செயலாற்றல் அறிக்கை 2013 திசெம்பர் 19 ஆந் திகதியே பாராளுமன்றத்தில் முன்வைக்கப்பட்டிருந்தது.

### 3.4.3 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுவை அமுல்படுத்தல்

மீளாய்வாண்டில் 03 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுக் கூட்டங்கள் மாத்திரம் நடாத்தப்பட்டிருந்தன.

## 3.5 சொத்துக்கள் முகாமைத்துவம்

### (அ) செயற்பாடற்ற மற்றும் குறைவான பயன்பாடுடைய சொத்துக்கள்

கீழே விபரிக்கப்பட்டதன் படி சொத்துக்கள் செயற்பாடற்று அல்லது குறைவான பயன்பாட்டுடன் காணப்படுகின்றமை தெரிவுக் கணக்காய்வு பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்டது.

| சொத்து வகை | அலகுகளின் எண்ணிக்கை | செயற்பாடற்று அல்லது குறைவான பயன்பாட்டுன் காணப்பட்ட காலம் |
|---|---|---|
| இயந்திரங்கள் | 14 | 01 ஆண்டிற்கு மேல் |
| ஏனைய சொத்துக்கள் | 275 | 01 ஆண்டிற்கு மேல் |
| ஏனைய சொத்துகள் (டோனர்) | 84 | 03 ஆண்டிற்கு மேல் |

### (ஆ) வருடாந்த பொருள் மெய்மையாய்வை நடாத்துதல்

2010 திசெம்பர் 17 ஆந் திகதிய பீஎப்/மெய்மையாய்வுச் சபை/01 ஆம் இலக்க அரசாங்க நிதிப் பணிப்பாளர் நாயகத்தின் கடிதத்தினால் திருத்தப்பட்ட 2009 திசெம்பர் 09 ஆந் திகதிய 441 ஆம் இலக்க அரசாங்க நிதிச் சுற்றுநிருபத்தின் பிரகாரம் 2012 இன் வருடாந்த பொருள் மெய்மையாய்வு மேற்கொள்ளப்பட்டு அவ்வறிக்கை 2013 மார்ச் 31 ஆந் திகதிக்கு கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் திணைக்களத்தினால் வருடாந்த பொருள் மெய்மையாய்வு 2013 யூலை 25 ஆந் திகதியே மேற்கொள்ளப்பட்டிருந்தது.

## 3.6 இணங்காமைகள்

### சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் என்பவற்றுடனான இணங்காமைகள்

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாண ஏற்பாடுகள் என்பனவற்றுடன் இணங்காத சந்தர்ப்பங்கள் பகுப்பாய்வு செய்து கீழே தரப்படுகின்றன.

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் என்பவற்றுடனான தொடர்பு | பெறுமதி | இணங்காமைகள் |
|---|---|---|
| (அ) நிதிப் பிரமாணம் | | |
| நிதிப் பிரமாணம் 104(3) மற்றும் (4) | 75,525 | இழப்பு நட்டம் தொடர்பான பூரணமான அறிக்கை சமர்ப்பிப்பதற்கு 07 நாட்களுக்கு மேற்பட்ட காலம் எடுக்குமாயின் பூர்வாங்க அறிக்கையும் மூன்று மாதத்திற்குள் பூரணமான அறிக்கையும் வழங்கப்பட வேண்டியிருந்த போதிலும் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) திறைசேரிச் சுற்றுநிருபம் | | |
| 1978 திசெம்பர் 19 ஆம் திகதிய 842 ஆம் இலக்க சுற்றுநிருபத்தின் 02 ஆம் பந்தி மற்றும் 3 ஆம் பட்டோலை | 84,228 | மீளாய்வாண்டின் போது 04 சந்தர்ப்பங்களில் கொள்வனவு செய்யப்பட்ட 07 யூபீஎஸ் இயந்திரங்கள் நிலையான சொத்துப் பதிவேட்டில் பதியும் போது கணிசமான குறைபாடுகளுடன் மேற்கொள்ளப்பட்டிருந்தது. |

## 3.7 செயலாற்றல்

திணைக்களத்தினால் மீளாய்வாண்டிற்கான கூட்டிணைந்த திட்டம் தயாரிக்கப்பட்டிராமையால் இணக்கமின்மைகளை அவதானிக்க முடியாதிருந்தது.

## 3.8 மனிதவள முகாமைத்துவம்

**அங்கீகரித்த பதவியணியும் உள்ளபடியான பதவியணியும்**

2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பதவியணி மீதான நிலை பின்வருமாறு.

| | ஊழியர் வகை | அங்கீகரித்த பதவியணி | உள்ளபடியான பதவியணி | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| (அ) | சிரேஷ்ட நிலை | 22 | 11 | 11 |
| (ஆ) | மூன்றாம் நிலை | 03 | 02 | 01 |
| (இ) | இரண்டாம் நிலை | 25 | 16 | 09 |
| (ஈ) | ஆரம்ப நிலை | 15 | 10 | 05 |
| | மொத்தம் | 65 | 39 | 26 |

மீளாய்வாண்டின் இறுதி வரையில் 26 வெற்றிடங்களை நிரப்புவதற்கு திணைக்களத்தினால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 4. தலைப்பு 239 – வெளிநாட்டு வளங்கள் திணைக்களம்

### 4.1 கணக்காய்வின் நோக்கெல்லை

வெளிநாட்டு வளங்கள் திணைக்களத்தின் 2012 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிஅறிக்கைகள், இணக்கக்கூற்றுகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய அறிக்கைகளை உள்ளடக்கிய ஒதுக்கீட்டுக் கணக்குகள் மீதான கணக்காய்வு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2013 நவம்பர் 07 ஆந் திகதி திணைக்களத்தின் தலைவருக்கு அனுப்பிவைக்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக்கூற்றுக்கள் சம்பந்தமான கணக்காய்வு அவதானிப்புக்கள், கருத்துரைகள் மற்றும் கண்டுபிடிப்புக்கள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகளினதும் இணக்கக்கூற்றுக்களினதும் மீளாய்வின் அடிப்படையிலும் கொடுக்கல் வாங்கல்களின் மாதிரிகளினது போதியளவு செவ்வை பார்த்தலின் அடிப்படையிலும் எழுந்தனவேயாகும். அவ்வாறான மீளாய்வினதும் செவ்வை பார்த்தலினதும் நோக்கெல்லையும் அளவும் எனக்குக் கிடைப்பதற்குள்ள பதவியணியினர், ஏனைய மூலவளங்கள், நேரம் என்பவற்றிற்கமைய இயலுமானளவு விரிவான கணக்காய்வை உள்ளடக்கக் கூடியவாறிருந்தது.

**4.2 கணக்குகள் மற்றும் இணக்கக்கூற்றுக்கள் சம்பந்தமாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்புக்கள்**

ஒதுக்கீட்டுக் கணக்குகள் மற்றும் இணக்கக்கூற்றுக்களை இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 உறுப்புரைகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், அரசாங்க நிதி மற்றும் நிருவாக பிரமாணங்களுக்கிணங்க பேணுதல், தயாரித்தல் மற்றும் நியாயபூர்வமாகச் சமர்ப்பித்தல் என்பன பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பாகும். மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயபூர்வமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாட்டைத் திட்டமிடுதல், அமுல்படுத்துதல் மற்றும் பராமரித்தல் போன்றன இப்பொறுப்பில் உள்ளடங்குகின்றன.

**4.3 கணக்காய்வு அவதானிப்புக்கள்**

2012 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறான நிதி அறிக்கைகள் மற்றும் ஏடுகளின் வெளிநாட்டு வளங்கள் திணைக்களத்தின் ஒதுக்கீட்டுக் கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் இந்த அறிக்கையின் (அ) மற்றும் (ஆ) வரையிலுமான பொதுவான அவதானிப்புக்கள் மற்றும் கீழேயுள்ள 4.4 மற்றும் 4.6 ஆம் பந்திகளில் குறிப்பிடப்பட்ட பிரதான கணக்காய்வு அவதானிப்புக்கள் தவிர திருப்திகரமானதாக தயாரிக்கப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.

**(அ) பாதீட்டு முரண்கள்**

04 செலவின விடயங்களுக்கு ரூபா 7,700,000 கூட்டுத்தொகையான நிதியேற்பாடு ஒதுக்கப்பட்டிருந்ததுடன் அதில் ரூபா 4,629,527 கூட்டுத்தொகையினைப் பயன்படுத்தியதன் பின்னர் ரூபா 3,070,473 சேமிப்பு அவதானிக்கப்பட்டது. அந்த சேமிப்பு உரிய செலவின விடயங்களின் கீழ் ஒதுக்கப்பட்ட தேறிய ஏற்பாட்டில் 26 சதவீதத்திற்கும் 82 சதவீதத்திற்கும் இடையிலான சதவீதத்தைக் கொண்டிருந்தது. செலவின விடயங்களுக்காக மிகை ஏற்பாடுகள் ஒதுக்கப்பட்டமையினால் இந்த சேமிப்பு ஏற்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.

**(ஆ) அரசாங்க செலவின முகாமைத்துவம்**

2011 திசெம்பர் 30 ஆந் திகதிய 155 ஆம் இலக்க தேசிய பாதீட்டுச் சுற்றறிக்கையின் பிரகாரம் வருடாந்த பாதீட்டு மதிப்பீடுகளிலிருந்து ஒதுக்கப்பட்ட நிதியேற்பாடுகளிலிருந்து மீண்டெழும் மற்றும் மூலதன ஏற்பாடுகளில் முறையே 2 சதவீதம் மற்றும் 9 சதவீதம் சேமிக்கப்பட வேண்டியிருந்த போதிலும் 2012 ஆம் ஆண்டில் திணைக்களத்தினால் மீண்டெழும் நிதியேற்பாடுகளிலிருந்து அவ்வாறு நிதியேற்பாடு சேமிக்கப்பட்டிருக்காததுடன் மூலதன நிதியேற்பாடுகளிலிருந்து 0.25 சதவீதமே சேமிக்கப்பட்டிருந்தது.

## 4.4 நல்லாளுகையும் கணக்களிப்பொறுப்பும்

### 4.4.1 கூட்டிணைந்த திட்டம்

2010 மார்ச் 10 ஆந் திகதிய பீஎப்/ஆர்/2/2/3/5(4) ஆம் இலக்க அரச பொது நிதிப்பணிப்பாளர் நாயகத்தின் கடிதத்தின் பிரகாரம் 2010 ஆம் ஆண்டு தொடக்கம் ஆகக் குறைந்தது தொடர்ந்து வரும் 03 வருடங்களுக்கான கூட்டிணைந்த திட்டம் திணைக்களத்தால் ஆண்டின் ஆரம்பத்தில் தயாரிக்கப்பட வேண்டிய போதிலும் அத்திட்டம் 2012 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

## 4.5 இணங்காமைகள்

**சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் என்பவற்றுடனான இணங்காமைகள்**

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாண ஏற்பாடுகள் என்பனவற்றுடன் இணங்காத சந்தர்ப்பங்கள் பகுப்பாய்வு செய்து கீழே தரப்படுகின்றன.

| | சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் என்பவற்றுடனான தொடர்பு | பெறுமதி | இணங்காமைகள் |
|---|---|---|---|
| (அ) | நிதிப் பிரமாணம் 94 | 1,027,302 | 3 செலவின விடயங்களுக்கு வழங்கப்பட்ட ரூபா 6,594,615 தொகையான தேறிய நிதியேற்பாட்டில் ரூபா 6,593,058 தொகை பயன்படுத்தப்பட்டதன் பின்னர் சேமிப்பு ரூபா 1,757 ஆக இருந்தது. |

| | | | |
|---|---|---|---|
| | | | நிதிப் பிரமாணம் 94 இற்கு முரணாக அந்த சேமிப்பு ரூபா 1,025,545 இனால் விஞ்சி ரூபா 1,027,302 ஆன பொறுப்புக்கள் ஏற்படுத்திக் கொள்ளப்பட்டிருந்தது. |
| (ஆ) | 2004 ஒக்தோபர் 18 ஆந் திகதிய 174 ஆம் இலக்க அரசாங்க கணக்குகள் சுற்றுநிருபம் | 5,750 | 10 கணிக்கும் இயந்திரங்களின் கொள்வனவு நடைமுறையல்லாச் சொத்துக்களின் அசைவுகள் தொடர்பான அறிக்கையில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. |

**4.6 மனிதவள முகாமைத்துவம்**

**அங்கீகரித்த பதவியணியும் உள்ளபடியான பதவியணியும்**

2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பதவியணி மீதான நிலை பின்வருமாறு.

| | ஊழியர் வகை | அங்கீகரித்த பதவியணி | உள்ளபடியான பதவியணி | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| (அ) | சிரேஷ்ட நிலை | 45 | 29 | 16 |
| (ஆ) | மூன்றாம் நிலை | 03 | 02 | 01 |
| (இ) | இரண்டாம் நிலை | 64 | 40 | 24 |
| (ஈ) | ஆரம்ப நிலை | 29 | 24 | 05 |
| | மொத்தம் | 141 | 95 | 46 |

மீளாய்வாண்டின் இறுதி வரையில் 46 வெற்றிடங்களை நிரப்புவதற்கு திணைக்களத்தினால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 5. தலைப்பு 240 – தேசிய வரவு செலவுத் திட்டத் திணைக்களம்

### 5.1 கணக்காய்வின் நோக்கெல்லை

தேசிய வரவு செலவுத் திட்டத் திணைக்களத்தின் 2012 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிஅறிக்கைகள், இணக்கக்கூற்றுகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய அறிக்கைகளை உள்ளடக்கிய ஒதுக்கீட்டுக் கணக்குகள் மீதான கணக்காய்வு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2014 பெப்ரவரி 28 ஆந் திகதி திணைக்களத்தின் தலைவருக்கு அனுப்பிவைக்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக்கூற்றுக்கள் சம்பந்தமான கணக்காய்வு அவதானிப்புக்கள், கருத்துரைகள் மற்றும் கண்டுபிடிப்புக்கள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகளினதும் இணக்கக்கூற்றுக்களினதும் மீளாய்வின் அடிப்படையிலும் கொடுக்கல் வாங்கல்களின் மாதிரிகளினது போதியளவு செவ்வை பார்த்தலின் அடிப்படையிலும் எழுந்தனவேயாகும். அவ்வாறான மீளாய்வினதும் செவ்வை பார்த்தலினதும் நோக்கெல்லையும் அளவும் எனக்குக் கிடைப்பதற்குள்ள பதவியணியினர், ஏனைய மூலவளங்கள், நேரம் என்பவற்றிற்கமைய இயலுமானளவு விரிவான கணக்காய்வை உள்ளடக்கக் கூடியவாறிருந்தது.

### 5.2 கணக்குகள் மற்றும் இணக்கக்கூற்றுக்கள் சம்பந்தமாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்புக்கள்

ஒதுக்கீட்டுக் கணக்குகள், வருமானக் கணக்குகள் மற்றும் இணக்கக்கூற்றுக்களை இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 உறுப்புரைகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், அரசாங்க நிதி மற்றும் நிருவாக பிரமாணங்களுக்கிணங்க பேணுதல், தயாரித்தல் மற்றும் நியாயபூர்வமாகச் சமர்ப்பித்தல் என்பன பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பாகும். மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயபூர்வமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாட்டைத் திட்டமிடுதல், அமுல்படுத்துதல் மற்றும் பராமரித்தல் போன்றன இப்பொறுப்பில் உள்ளடங்குகின்றன.

## 5.3 கணக்காய்வு அவதானிப்புக்கள்

2012 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறான நிதி அறிக்கைகள் மற்றும் ஏடுகளின் தேசிய வரவு செலவுத் திட்டத் திணைக்களத்தின் ஒதுக்கீட்டுக் கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் இந்த அறிக்கையின் (அ) முதல் (ஈ) வரையிலுமான பொதுவான அவதானிப்புக்கள் மற்றும் கீழேயுள்ள 5.4 மற்றும் 5.7 ஆம் பந்திகளில் குறிப்பிடப்பட்ட பிரதான கணக்காய்வு அவதானிப்புக்கள் தவிர திருப்திகரமானதாக தயாரிக்கப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.

### (அ) பாதீட்டு முரண்கள்

(i) ஒரு மூலதன செலவின விடயத்திற்காக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ரூபா 30,000,000 கூட்டுத்தொகையான மொத்த தேறிய ஏற்பாடு முழுவதும் சேமிக்கப்பட்டிருந்தன.

(ii) 07 செலவின விடயங்களுக்கு ரூபா 1,161,642,000 கூட்டுத்தொகையான நிதியேற்பாடு ஒதுக்கப்பட்டிருந்ததுடன் அதில் ரூபா 787,617,504 கூட்டுத்தொகையினைப் பயன்படுத்தியதன் பின்னர் ரூபா 374,024,496 சேமிப்பு அவதானிக்கப்பட்டது. அந்த சேமிப்பு உரிய செலவின விடயங்களின் ஒதுக்கப்பட்ட தேறிய ஏற்பாட்டில் 23 சதவீதத்திற்கும் 50 சதவீதத்திற்கும் இடையிலான சதவீதத்தைக் கொண்டிருந்தது. செலவின விடயங்களுக்காக மிகை ஏற்பாடுகள் ஒதுக்கப்பட்டமையினால் இந்த சேமிப்பு ஏற்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.

### (ஆ) கட்டுநிதிக் கணக்குகள்

2008 சனவரி 09 ஆந் திகதி தொடக்கம் கொண்டுவரப்பட்ட ரூபா 83,325 தொகையான கட்டுநிதி மீதி 2012 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் தீர்ப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### (இ) வருமானக் கணக்கு

(i) சமர்ப்பிக்கப்பட்ட கணக்கின் பிரகாரம் ரூபா 270,798,938 தொகையான வருமானம் நிலுவையாக இருந்ததுடன் அந்த நிலுவையாக இருந்த வருமானம் 01 வருடத்திற்குக் குறைவாகவும் 4 வருடங்களுக்கு

மேற்பட்ட காலப்பகுதிகளுக்குரியதாகவும் காணப்பட்டது அந்த நிலுவையாக இருந்த வருமானங்களை அறவீடு செய்யும் பின்தொடர் நடவடிக்கைகள் நலிவான நிலையில் காணப்பட்டது.

(ii) 2012 ஆம் ஆண்டில் ரூபா 50,000,000 தொகையான ஆரம்ப வருமான மதிப்பீடு ரூபா 100,000,000 ஆக திருத்தப்பட்டிருந்த போதிலும் சேகரிக்கப்பட்ட தேறிய வருமானம் ரூபா 289,427,871 ஆனமையால் அது ஆரம்ப வருமான மதிப்பீட்டில் 579 சதவீதமாகவும் திருத்தப்பட்ட வருமான மதிப்பீட்டில் 289 சதவீதமாகவும் இருந்தது. அதன் பிரகாரம் வருமான மதிப்பீடு செய்தல் உரிய ஆய்வுடனும் கவனமாகவும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(iii) சமர்ப்பிக்கப்பட்ட வருமானக் கணக்கின் பிரகாரம் 2011 ஆம் ஆண்டில் சேகரிக்கப்பட்ட தேறிய வருமானம் ரூபா 4,640 ஆக இருந்த போதிலும் 2012 ஆம் ஆண்டில் சேகரிக்கப்பட்ட தேறிய வருமானம் ரூபா 289,427,871 ஆனமையால் ரூபா 289,423.231 தொகையான வருமானத்தில் பாரிய அதிகரிப்பு ஏற்பட்டிருந்தது. இந்த வருமான முரண்பாட்டிற்கான காரணமாக இலங்கை கடற்படையினதும் சிறைச்சாலைகள் திணைக்களத்தினதும் முன்னைய ஆண்டுகளில் கிடைக்க வேண்டிய நிலுவை வருமானம் முறையே ரூபா 250,000,000 தொகை மற்றும் ரூபா 39,427,871 தொகை 2012 ஆம் ஆண்டின் போது இந்த வருமானக் குறியீட்டில் செலவு வைக்கப்பட்டமையாகும்.

(iv) 2012 ஆம் ஆண்டிற்கான மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம் ரூபா 50,000,000 தொடக்கம் ரூபா 100,000,000 வரை திருத்தப்பட்டிருந்த போதிலும் நிதிப் பிரமாணம் 85(2)(ஆ) இன் பிரகாரம் அது தொடர்பாக அரசிறைக் கொள்கை பணிப்பாளர் நாயகத்திற்கு அறிக்கையிடுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(v) 2002 யூலை 17 ஆந் திகதிய 2002/01 ஆம் இலக்க அரசிறைக் கொள்கை மற்றும் பொருளாதார செயற்பாடுகள் சுற்றுநிருபத்தின் 7 ஆம் பந்தியின் பிரகாரம் வருமானக் கணக்கிற்குரிய அரையாண்டு வருமான அறிக்கை அரசிறைக் கொள்கை பணிப்பாளர் நாயகத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டியிருந்த போதிலும் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(vi) 2006 செப்தெம்பர் 27 ஆந் திகதிய 2006/187 ஆம் இலக்க அரசாங்க கணக்குகள் சுற்றுநிருபத்தன் 4 ஆம் பந்தியின் பிரகாரம் மொத்த வருமானம் தொடர்பாக திறைசேரி கணனி அச்சிடல், திணைக்களப் புத்தகங்களுடன் இணக்கஞ் செய்து அடுத்த மாதத்தின் இறுதித் திகதியளவில் அரசாங்க கணக்குகள் பணிப்பாளர் நாயகத்திற்கு அறிக்கையிடப்பட வேண்டியிருந்த போதிலும் இலங்கை கடற்படை மற்றும் சிறைச்சாலைகள் திணைக்களத்தினால் முற்பணக் கணக்குகளிலிருந்து சேகரிக்கப்படுகின்ற வருமானம் தொடர்பாக அந்த திணைக்களத்தின் புத்தகங்களைப் பராமரிக்க முடியாமையினால் உரிய இணக்கங்கள் மேற்கொள்ளப்பட்டாதிருந்தமை அவதானிக்கப்பட்டது.

(vii) இந்த வருமானக் குறியீட்டிற்கு வருமானம் செலவு வைக்கப்படுகின்ற இரண்டு நிறுவனங்களின் நிலுவை வருமானம் எதுவும் இல்லாதிருந்தமை பணிப்பாளர் நாயகத்தினால் 2013 மே 31 ஆந் திகதிய பீடி/ஆகி 2010/ கடிதம் ஆம் இலக்கத்தின் மூலம் கணக்காய்விற்கு அறிவிக்கப்பட்டிருந்த போதிலும் சமர்ப்பிக்கப்பட்ட வருமானக் கணக்கில் மீளாய்வாண்டின் இறுதி வரையில் மொத்தத் தேறிய நிலுவைத் தொகை ரூபா 178,000,000 ஆகக் காண்பிக்கப்பட்டிருந்தது. அவ்வாறே தேறிய நிலுவைப் பணம் ரூபா 178,000,000 ஆகக் காண்பிக்கப்பட்டிருந்த போதிலும் இலங்கை கடற்படையினதும் சிறைச்சாலைகள் திணைக்களத்தினதும் முற்பணக் கணக்குகளின் பிரகாரம் உள்ளபடியான நிலுவைத் தொகை ரூபா 270,798,938 ஆக இருந்தமை கணக்காய்வின் பொது வெளிப்படுத்தப்பட்டது.

(viii) நிதிப் பிரமாணம் 128(2)(இ) இன் பிரகாரம் ஒவ்வொரு நிதியாண்டின் யூன் 30 ஆந் திகதியில் உள்ளவாறும் திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறும் நிலுவை வருமானம் தொடர்பான நிலைமையைக் காண்பிக்கின்ற அரையாண்டு அறிக்கை தயாரிக்கப்பட்டு கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டியிருந்த போதிலும் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ix) 2011 ஆம் ஆண்டிற்காகச் சமர்ப்பிக்கப்பட்ட வருமானக் கணக்கில் 2011 ஆம் ஆண்டிற்குரிய நிலுவை வருமானம் ரூபா 150,000,000 ஆகவும் 2012 ஆம் ஆண்டிற்காகச் சமர்ப்பிக்கப்பட்ட வருமானக் கணக்கில் 2011 ஆம் ஆண்டிற்குரிய நிலுவை வருமானம் ரூபா 288,000,000 ஆகவும் காண்பிக்கப்பட்டிருந்தது. எனினும் வருமானம் சேகரிக்கப்பட்ட இலங்கை

கடற்படை மற்றும் சிறைச்சாலைகள் திணைக்களத்தின் முற்பணக் கணக்கின் பிரகாரம் உரிய நிலுவைத் தொகை ரூபா 162,713,169 ஆக இருந்தமை கணக்காய்வின் போது வெளிப்படுத்தப்பட்டது.

(x) 2011 ஆம் ஆண்டிற்கு முன்னைய வருடத்திற்கான நிலுவைப் பணம் காணப்படாதிருந்தமை வருமானக் கணக்கில் காண்பிக்கப்பட்டிருந்த போதிலும் இலங்கை கடற்படை மற்றும் சிறைச்சாலைகள் திணைக்களத்தின் முற்பணக் கணக்குகளிலிருந்து முறையே ரூபா 165,216,126 மற்றும் ரூபா 86,289,503 தொகை அதாவது ரூபா 251,505,629 கூட்டுத்தொகையானது கிடைக்க வேண்டிய நிலுவை வருமானம் 2011 ஆண்டிற்கு முற்பட்ட வருடத்திற்காக காணப்படுகின்றமை அந்த நிறுவனங்களின் கணக்குகளின் பிரகாரம் கணக்காய்வின் போது வெளிப்படுத்தப்பட்டது.

(xi) சிறைச்சாலைகள் திணைக்களத்தினதும் இலங்கை கடற்படையினதும் 2012 ஆம் ஆண்டின் முற்பணக்கணக்கிலிருந்து கிடைக்க வேண்டிய நிலுவை வருமானம் முறையே ரூபா 45,566,785 தொகை மற்றும் ரூபா 100,441,256 தொகை அதாவது ரூபா 146,008,011 கூட்டுத்தொகையாக இருந்த போதிலும் வருமானக்கணக்கில் ‘‘அறிக்கையிடப்படுகின்ற வருடத்திற்குரிய நிலுவைப் பணம்’’ ரூபா 140,000,000 என அதாவது ரூபா 6,008,011 தொகை குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(xii) சிறைச்சாலைகள் திணைக்களம் இலங்கை கடற்படையின் முற்பணக்கணக்கிலிருந்து மீளாய்வாண்டின் போது முறையே ரூபா 39,427,871 தொகை மற்றும் ரூபா 250,000,000 தொகை அதாவது ரூபா 289,427,871 தொகை முன்னைய ஆண்டுகளுக்குரிய நிலுவைப் பணமாகக் கிடைத்திருந்த போதிலும் வருமானக் கணக்கில் ‘‘அறிக்கையிடப்படுகின்ற வருடத்தில் நிலுவைத் தொகைக்கு நேரொத்ததாக சேகரிக்கப்பட்ட மொத்த அளவு’’ என ரூபா 250,000,000 தொகை மாத்திரம் அதாவது ரூபா 39,427,871 தொகை குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(xiii) சிறைச்சாலைகள் திணைக்களத்தின் முற்பணக் கணக்கிற்குரிய 2009 ஆம் ஆண்டின் போதும் 2010 ஆம் ஆண்டின் போதும் உழைக்கப்பட்ட தேறிய வருமானத்தில் 2010 மற்றும் 2011 ஆம் ஆண்டுகளின் போது கிடைத்த முறையே ரூபா 46,622,554 தொகை மற்றும் ரூபா 39,666,949 தொகை இந்த வருமானக் கணக்கில் செலவு வைப்பதற்குப் பதிலாக 20.03.02.99 ஆம் இலக்க ''நானாவித'' வருமானக் கணக்கில் 2010 மற்றும் 2011 ஆம் ஆண்டுகளில் பிழையாக செலவு வைக்கப்பட்டிருந்தது. இந்த பிழையான செலவு வைத்தலை சரிசெய்வதற்கு இது வரையிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**(ஈ) அரச உத்தியோகத்தர்களின் முற்பணக் கணக்குகள் தொடர்பான இணக்கக்கூற்றுக்கள்**

விடய இல. 24001 இன் அரச உத்தியோகத்தர்களின் முற்பணக் கணக்குகள் தொடர்பான 2012 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறான இணக்கக் கூற்றுக்களின் பிரகாரம் அத்திகதியில் உள்ளவாறு அறவீடுகள் நிலுவையாக இருந்த மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 481,629 ஆக இருந்ததுடன் அந்த நிலுவை மீதியினை அறவீடு செய்வதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 5.4 நல்லாளுகையும் கணக்களிப்பொறுப்பும்

### 5.4.1 கூட்டிணைந்த திட்டம்

2010 மார்ச் 10 ஆந் திகதிய பீஎப்/ஆர்/2/2/3/5(4) ஆம் இலக்க அரச பொது நிதிப்பணிப்பாளர் நாயகத்தின் கடிதத்தின் பிரகாரம் 2010 ஆம் ஆண்டு தொடக்கம் ஆகக் குறைந்தது தொடர்ந்து வரும் 03 வருடங்களுக்கான கூட்டிணைந்த திட்டம் அமைச்சினால் ஆண்டின் ஆரம்பத்தில் தயாரிக்கப்பட வேண்டிய போதிலும் அத்திட்டம் 2013 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

### 5.4.2 வருடாந்த செயலாற்றல் அறிக்கை

மேலே 5.4.1 பந்தியில் குறிப்பிடப்பட்ட அரச பொது நிதிப்பணிப்பாளர் நாயகத்தின் கடிதத்தில் குறிப்பிடப்பட்ட முறையே 2002 செப்தெம்பர் 12 ஆந் திகதிய மற்றும் 2004 பெப்ரவரி 20 ஆந் திகதிய 402 மற்றும் 402(1) ஆம் இலக்க அரச நிதிச் சுற்றுநிருபத்தின் பிரகாரம் திணைக்களத்தினால் தயாரிக்கப்பட வேண்டிய வருடாந்த

செயலாற்றல் அறிக்கை நிதி ஆண்டு முடிவடைந்து 150 நாட்களுக்குள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கான பிரதியுடன் பாராளுமன்றத்தில் முன்வைக்கப்படவேண்டிய போதிலும் மீளாய்வாண்டிற்கான செயலாற்றல் அறிக்கை 2013 ஒக்தோபர் 31 ஆந் திகதியே பாராளுமன்றத்தில் முன்வைக்கப்பட்டிருந்தது.

## 5.5 இணங்காமைகள்

### சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் என்பவற்றுடனான இணங்காமைகள்

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாண ஏற்பாடுகள் என்பனவற்றுடன் இணங்காத சந்தர்ப்பங்கள் பகுப்பாய்வு செய்து கீழே தரப்படுகின்றன.

| | சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் என்பவற்றுடனான தொடர்பு | பெறுமதி | இணங்காமைகள் |
|---|---|---|---|
| | **நிதிப் பிரமாணம்** | ரூபா | |
| (i) | நிதிப் பிரமாணம் 110(2) | - | 2012 ஆண்டின் போது ஏற்பட்ட வாகன விபத்துக்கள் தொடர்பான விபரம் ஒதுக்கீட்டுக் கணக்கில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ii) | நிதிப் பிரமாணம் 371(ஆ) | 87,340 | ஒரு சந்தர்ப்பத்தின் போது செயல்நிமித்தக் கட்டுநிதியாக வழங்கப்படக்கூடிய தொகை ரூபா 20,000 இற்கு மேற்படாதிருந்த போதிலும் அதற்கு முரணாக 3 சந்தர்ப்பங்களின் போது பதவிநிலை உத்தியோகத்தருக்கு உப கட்டுநிதி வழங்கப்பட்டிருந்தது. |
| (iii) | நிதிப் பிரமாணம் 371(இ) | 7,000 | செயல்நிமித்த உப கட்டநிதியின் கீழ் எரிபொருள் முற்பணமாக வழங்கப்பட்ட நிதியினைத் தீர்ப்பதற்கு 3½ மாத காலம் எடுத்திருந்தது. |

## 5.6 செயலாற்றல்

மீளாய்வாண்டின் போது அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் நிதியேற்பாடு மேற்கொள்ளப்பட்டு அமுல்படுத்துவதற்கு திட்டமிடப்பட்டு 30 பாதீட்டு உத்தேசத் திட்டத்தில் 15 பாதீட்டு உத்தேசத் திட்டத்திற்காக ஒதுக்கப்பட்ட ரூபா 5,000,000,000 தொகையான மொத்த நிதியேற்பாடும் எஞ்சிய 15 உத்தேசத் திட்டத்திற்காக ஒதுக்கப்பட்ட ரூபா 12,625,000,000 தொகையான நிதியேற்பாடுகளிலிருந்து 80 சதவீதம் அதாவது ரூபா 10,073,700,000 தொகை ஏனைய செலவின விடயங்களுக்கு நிதிப் பிரமாணம் 66 இன் கீழ் மாற்றப்பட்டமையின் காரணமாக மீளாய்வாண்டின் போது அமுல்படுத்துவதற்குத் திட்டமிடப்பட்ட பாதீட்டு உத்தேசத் திட்டத்தை அமுல்படுத்த முடியாதிருந்தது.

## 5.7 மனிதவள முகாமைத்துவம்

### அங்கீகரித்த பதவியணியும் உள்ளபடியான பதவியணியும்

2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பதவியணி மீதான நிலை பின்வருமாறு.

| | ஊழியர் வகை | அங்கீகரித்த பதவியணி | உள்ளபடியான பதவியணி | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| (அ) | சிரேஷ்ட நிலை | 36 | 22 | 14 |
| (ஆ) | மூன்றாம் நிலை | 02 | 02 | - |
| (இ) | இரண்டாம் நிலை | 83 | 65 | 18 |
| (ஈ) | ஆரம்ப நிலை | 37 | 32 | 05 |
| | மொத்தம் | 158 | 121 | 37 |

மீளாய்வாண்டின் இறுதி வரையில் 37 வெற்றிடங்களை நிரப்புவதற்கு திணைக்களம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

## 6. தலைப்பு 241 – அரச பொது தொழில் முயற்சிகள் திணைக்களம்

### 6.1 கணக்காய்வின் நோக்கெல்லை

அரச பொது தொழில் முயற்சிகள் திணைக்களத்தின் 2012 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிஅறிக்கைகள், இணக்கக்கூற்றுகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய அறிக்கைகளை உள்ளடக்கிய ஒதுக்கீட்டுக் கணக்குகள் மீதான கணக்காய்வு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2013 நவம்பர் 27 ஆந் திகதி திணைக்களத்தின் தலைவருக்கு அனுப்பிவைக்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக்கூற்றுக்கள் சம்பந்தமான கணக்காய்வு அவதானிப்புக்கள், கருத்துரைகள் மற்றும் கண்டுபிடிப்புக்கள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகளினதும் இணக்கக்கூற்றுக்களினதும் மீளாய்வின் அடிப்படையிலும் கொடுக்கல் வாங்கல்களின் மாதிரிகளினது போதியளவு செவ்வை பார்த்தலின் அடிப்படையிலும் எழுந்தனவேயாகும். அவ்வாறான மீளாய்வினதும் செவ்வை பார்த்தலினதும் நோக்கெல்லையும் அளவும் எனக்குக் கிடைப்பதற்குள்ள பதவியணியினர், ஏனைய மூலவளங்கள், நேரம் என்பவற்றிற்கமைய இயலுமானளவு விரிவான கணக்காய்வை உள்ளடக்கக் கூடியவாறிருந்தது.

### 6.2 கணக்குகள் மற்றும் இணக்கக்கூற்றுக்கள் சம்பந்தமாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்புக்கள்

ஒதுக்கீட்டுக் கணக்குகள் மற்றும் இணக்கக்கூற்றுக்களை இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 உறுப்புரைகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், அரசாங்க நிதி மற்றும் நிருவாக பிரமாணங்களுக்கிணங்க பேணுதல், தயாரித்தல் மற்றும் நியாயபூர்வமாகச் சமர்ப்பித்தல் என்பன பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பாகும். மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயபூர்வமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாட்டைத் திட்டமிடுதல், அமுல்படுத்துதல் மற்றும் பராமரித்தல் போன்றன இப்பொறுப்பில் உள்ளடங்குகின்றன.

## 6.3 கணக்காய்வு அவதானிப்புக்கள்

2012 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறான நிதி அறிக்கைகள் மற்றும் ஏடுகளின் அரச பொது தொழில் முயற்சிகள் திணைக்களத்தின் ஒதுக்கீட்டுக் கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் இந்த அறிக்கையின் (அ) முதல் (இ) வரையிலுமான பொதுவான அவதானிப்புக்கள் மற்றும் கீழேயுள்ள 6.4 தொடக்கம் 6.8 வரையுள்ள பந்திகளில் குறிப்பிடப்பட்ட பிரதான கணக்காய்வு அவதானிப்புக்கள் தவிர திருப்திகரமானதாக தயாரிக்கப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.

### (அ) பாதீடு முரண்கள்

(i) 01 செலவின விடயத்திற்காக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ரூபா 1,500,000 கூட்டுத்தொகையான மொத்த தேறிய ஏற்பாடு முழுவதும் சேமிக்கப்பட்டிருந்தன.

(ii) 09 செலவின விடயங்களுக்கு ரூபா 14,455,000 கூட்டுத்தொகையான நிதியேற்பாடு ஒதுக்கப்பட்டிருந்ததுடன் அதில் ரூபா 10,522,719 கூட்டுத்தொகையினைப் பயன்படுத்தியதன் பின்னர் ரூபா 3,932,281 சேமிப்பு அவதானிக்கப்பட்டது. அந்த சேமிப்பு அந்த செலவின விடயங்களின் கீழ் ஒதுக்கப்பட்ட தேறிய ஏற்பாட்டில் 11 சதவீதத்திற்கும் 85 சதவீதத்திற்கும் இடையிலான சதவீதத்தைக் கொண்டிருந்தது. செலவின விடயங்களுக்காக மிகை ஏற்பாடுகள் ஒதுக்கப்பட்டமையினால் இந்த சேமிப்பு ஏற்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.

(iii) பொது முயற்சி மீளமைப்பு ஆணைக்குழுவிற்குரிய கொடுப்பனவுகள் 241-1-1-1503 (பொது முயற்சிகள் மீளமைப்பு ஆணைக்குழு – அரச நிறுவனம்) செலவின விடயத்தில் மேற்கொள்ளப்பட வேண்டி இருந்த போதிலும் ரூபா 4,743,309 தொகையான பணிக்கொடைக் கொடுப்பனவுகள் 241-1-1-1405 (ஏனைய) செலவின விடயத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்டிருந்தது.

### (ஆ) வருமானக் கணக்கு

(i) நிதிப் பிரமாணம் 128(2) இன் பிரகாரம் இரண்டு (2) வருமானக் குறியீடுகளுக்குரிய நிலுவை வருமானம் தொடர்பான அறிக்கை தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) வருமானக் குறியீட்டு இலக்கம் - 20.02.03.00 - இலாபம்

i. வருமான மதிப்பீடு தயாரித்தல்

மீளாய்வாண்டில் ரூபா 30,091,000,000 தொகையான ஆரம்ப மதிப்பீடு ரூபா 36,459,060,000 தொகையாக திருத்தப்பட்டிருந்த போதிலும் ஆண்டின் போது சேகரிக்கப்பட்ட தேறிய வருமானம் ரூபா 42,214,108,456 ஆக இருந்தது. அதாவது ஆரம்ப மதிப்பீட்டு வருமானத்தை ஒப்பீடு செய்த போது 140 சதவீதமும் திருத்தப்பட்ட வருமானத்தை ஒப்பீடு செய்த போது 116 சதவீதமுமாக இருந்தது. அதன் பிரகாரம் மதிப்பீடு செய்தல் உரிய ஆய்வின்றி மேற்கொள்ளப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.

ii. நிலுவை வருமானம் தொடர்பாக அறிக்கையிடல்

நிலுவை வருமான அறிக்கை பேணப்படாமையினால் கிடைக்க வேண்டிய வருமானம் திணைக்களப் புத்தகங்களின் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

- 2012 ஆம் ஆண்டின் போது இலங்கை ரூபவாஹினிக் கூட்டுத்தாபனத்திலிருந்து 2007 ஆம் ஆண்டிற்குரிய ரூபா 5,000,000 தொகை கிடைத்திருந்த போதிலும் அது நிலுவை வருமானமாக திணைக்களப் புத்தகங்களில் குறிப்பிடப்பட்டிருக்கவில்லை.

- ரூபவாஹினிக் கூட்டுத்தாபனத்தின் நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2011 ஆம் ஆண்டிற்காக வெளியிடப்பட்ட இலாபம் ரூபா 32,498,000 ஆகவும் 2012 ஆம் ஆண்டிற்காக வெளியிடப்பட்ட இலாபம் ரூபா 922,000 ஆகவும் இருந்தன. திணைக்களப் புத்தகங்களில் அந்தக் கூட்டுத்தாபனத்திடமிருந்து கிடைக்க வேண்டிய வருமானமாக எந்தத் தொகையும் குறிப்பிடப்பட்டிருக்கவில்லை.

iii. இலாபம் பெறுகின்ற நிறுவனங்களினால் கிடைக்க வேண்டிய இலாபம் மதிப்பீட்டில் உள்ளடக்கப்படாமை

- 12 நிறுவனங்களினால் 2012 ஆம் ஆண்டின் போது ரூபா 21,508 மில்லியன் இலாபம் உழைக்கப்பட்டிருந்த போதிலும் அந்த இலாபத்திலிருந்து இந்த வருமானத் திருத்தங்களுக்குரிய அளவு மதிப்பீடு செய்யப்பட்டு திணைக்களப் புத்தகங்களில் கிடைக்க வேண்டிய வருமானமாகக் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை.

- இலங்கை ஏற்றுமதிக் கடன் காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தினால் 2011 மற்றும் 2012 ஆம் ஆண்டுகளில் முறையே ரூபா 113 மில்லியன் மற்றும் ரூபா 163 மில்லியன் தொகையும், அரசாங்க அச்சகக் கூட்டுத்தாபனத்தினால் 2011 மற்றும் 2012 ஆம் ஆண்டுகளில் முறையே ரூபா 134 மில்லியன் மற்றும் ரூபா 141 மில்லியன் தொகையும் இலாபம் பெறப்பட்டிருந்த போதிலும் வருமானத் திருத்தங்களுக்குரிய அளவு மதிப்பீடு செய்யப்பட்டு புத்தகங்களில் பெற வேண்டிய வருமானமாகக் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை.

iv. இலாபம் பெறுவதற்கு தீர்மானிக்கப்பட்ட நிறுவனங்கள்

பொது முயற்சிகள் திணைக்களத்தினால் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட இலாபம் மற்றும் பங்கிலாபம் பெறுவதற்கு தீர்மானிக்கப்பட்ட நிறுவனங்களில் வகைப்படுத்தப்பட்ட அறிக்கையில் இலாபத்தைப் பெறுவதற்கு திர்மானிக்கப்பட்ட நிறுவனங்களின் எண்ணிக்கை 199 ஆக காண்பிக்கப்பட்டிருந்த போதிலும் வருமான மதிப்பீடு தயாரிக்கும் போது 24 நிறுவனங்கள் மாத்திரம் கவனத்தில் கொள்ளப்பட்டிருந்தது.

(iii) வருமானக் குறியீட்டு இலக்கம் 20.02.04.00 பங்கிலாபம்

i. வருமான மதிப்பீடு தயாரித்தல்

மீளாய்வாண்டில் ரூபா 8,012,000,000 தொகையான ஆரம்ப மதிப்பீடு ரூபா 5,096,800,000 ஆகத் திருத்தப்பட்டிருந்ததுடன் ஆண்டின் போது

சேகரிக்கப்பட்ட தேறிய வருமானம் ரூபா 4,546,957,702 ஆகும். அதாவது ஆரம்ப மதிப்பீட்டு வருமானத்தை ஒப்பீடு செய்த போது 57 சதவீதமும் திருத்தப்பட்ட வருமானத்தை ஒப்பீடு செய்த போது 89 சதவீதமாக இருந்தது. அதன் பிரகாரம் மதிப்பீடு செய்தல் உரிய ஆய்வின்றி மேற்கொள்ளப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.

ii. நிலுவை வருமானம் தொடர்பாக அறிக்கையிடல்

திணைக்களத்தினால் நிலுவை வருமான அறிக்கை பராமரிக்கப்படாமையினால் பெறவேண்டிய வருமானம் எவ்வளவு என திணைக்களப் புத்தகங்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. உதாரணமாக 2012 செப்தெம்பர் 27 ஆந் திகதி பொது முயற்சிகள் திணைக்களத்திலிருந்து சிலாபம் பெருந்தோட்டக் கம்பனிக்கு அனுப்பிவைக்கப்பட்ட கடிதத்தின் பிரகாரம் அந்தக் கம்பனியிலிருந்து 2010 ஆம் ஆண்டிற்குரிய ரூபா 75 மில்லியன் தொகை பங்கிலாபமாக பெறப்பட வேண்டியிருந்த போதிலும் அந்தத் தொகை இது வரையிலும் கிடைத்திருக்காததுடன் நிலுவை வருமானமாகவும் புத்தகங்களில் குறிப்பிடப்பட்டிருக்கவில்லை.

iii. இலாபம் பெறுகின்ற நிறுவனங்கள் மதிப்பீட்டில் உள்ளடக்கப்படாமை

- 08 நிறுவனங்களினால் 2012 ஆம் ஆண்டின் போது ரூபா 8,463 மில்லியன் இலாபம் உழைக்கப்பட்டிருந்த போதிலும் அந்த இலாபத்திலிருந்து இந்த வருமானக் குறியீட்டிற்குரிய அளவு மதிப்பீடு செய்யப்பட்டு திணைக்களப் புத்தகங்களில் கிடைக்க வேண்டிய வருமானமாகக் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை.

- iv. இலாபம் பெறுவதற்கு தீர்மானிக்கப்பட்ட நிறுவனங்கள்

பொது முயற்சிகள் திணைக்களத்தினால் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட பங்கிலாபம் பெறுவதற்கு தீர்மானிக்கப்பட்ட நிறுவனங்களில் வகைப்படுத்தப்பட்ட அறிக்கையில் இலாபத்தைப் பெறுவதற்கு திர்மானிக்கப்பட்ட நிறுவனங்களின் எண்ணிக்கை 52 ஆக காண்பிக்கப்பட்டிருந்த போதிலும் வருமான மதிப்பீடு தயாரிக்கும் போது 24 நிறுவனங்கள் மாத்திரம் கவனத்தில் கொள்ளப்பட்டிருந்தது.

**(இ) அரச உத்தியோகத்தர்களின் முற்பணக் கணக்குகள் தொடர்பான இணக்கக்கூற்றுக்கள்**

விடய இல. 24101 இன் அரச உத்தியோகத்தர்களின் முற்பணக் கணக்குகள் தொடர்பான இணக்கக் கூற்றில் 2012 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு அறவீடுகள் நிலுவையாக இருந்த மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 745,556 ஆக இருந்ததுடன் அந்நிலுவை மீதியினை அறவீடு செய்வதற்கான பின்தொடர் நடவடிக்கைகள் பலவீனமான நிலைமையில் காணப்பட்டது.

## 6.4 நல்லாளுகையும் கணக்களிப்பொறுப்பும்

### 6.4.1 கூட்டிணைந்த திட்டம்

2010 மார்ச் 10 ஆந் திகதிய பீஎப்/ஆர்/2/2/3/5(4) ஆம் இலக்க அரச பொது நிதிப்பணிப்பாளர் நாயகத்தின் கடிதத்தின் பிரகாரம் 2010 ஆம் ஆண்டு தொடக்கம் ஆகக் குறைந்தது தொடர்ந்து வரும் 03 வருடங்களுக்கான கூட்டிணைந்த திட்டம் அமைச்சினால் ஆண்டின் ஆரம்பத்தில் தயாரிக்கப்பட வேண்டிய போதிலும் அத்திட்டம் இந்த அறிக்கைத் திகதி வரையிலும் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

### 6.4.2 வருடாந்த செயலாற்றல் அறிக்கை

மேலே 6.4.1 பந்தியில் குறிப்பிடப்பட்ட அரச பொது நிதிப்பணிப்பாளர் நாயகத்தின் கடிதத்தில் குறிப்பிடப்பட்ட முறையே 2002 செப்தெம்பர் 12 ஆந் திகதிய மற்றும் 2004 பெப்ரவரி 20 ஆந் திகதிய 402 மற்றும் 402(1) ஆம் இலக்க அரச நிதிச் சுற்றுநிருபத்தின் பிரகாரம் திணைக்களத்தினால் தயாரிக்கப்பட வேண்டிய வருடாந்த செயலாற்றல் அறிக்கை நிதி ஆண்டு முடிவடைந்து 150 நாட்களுக்குள் தலைமை அதிபதிக்கான பிரதியுடன் பாராளுமன்றத்தில் முன்வைக்கப்படவேண்டிய போதிலும் மீளாய்வாண்டிற்கான செயலாற்றல் அறிக்கை 2013 நவம்பர் 11 ஆந் திகதி வரையிலும் பாராளுமன்றத்தில் முன்வைக்கப்பட்டிருக்கவில்லை.

### 6.4.3 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுவினை அமுல்படுத்துதல்

ஆகக் குறைந்தது காலாண்டிற்கு ஒரு தடவை கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டம் நடாத்தப்பட வேண்டியிருந்த போதிலும் 2012 ஆம் ஆண்டிற்காக கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக்கூட்டம் ஆண்டிற்கு 03 மாத்திரமே நடாத்தப்பட்டிருந்தது.

**6.5 இணங்காமைகள்**

**சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் என்பவற்றுடனான இணங்காமைகள்**

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாண ஏற்பாடுகள் என்பனவற்றுடன் இணங்காத சந்தர்ப்பங்கள் கீழே தரப்படுகின்றன.

1994 ஆகஸ்ட் 10 ஆந் திகதிய 96 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றுநிருபத்தின் 9(iv) ஆம் பந்தியின் பிரகாரம் கடன் கட்டுப்பாட்டுக் கணக்கு பேணப்பட்டிருக்கவில்லை.

**6.6 செயலாற்றல்**

2012 ஆம் ஆண்டின் செயல் நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் திணைக்களத்தின் பிரதான செயற்பாடுகள் போதியளவில் நிறைவேற்றப்படாதிருந்ததுடன் அவ்வாறு அவதானிக்கப்பட்ட சில சந்தர்ப்பங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

(அ) பொது முயற்சிகள் திணைக்களத்தின் வழிகாட்டிக் கோவையை நாளது வரையாக்குதல் - இது 2011 ஆம் ஆண்டின் போதும் நிறைவேற்றப்படாத செயற்பாடாகக் காண்பிக்கப்பட்டிருந்த போதிலும் இது வரையிலும் அது அவ்வாறே காணப்படுகின்றது.

(ஆ) செயலிழந்த நிலையில் காணப்படுகின்ற பொது முயற்சிகளை கட்டி எழுப்புதல்

(இ) கிரயக் கணக்கு முறைமையை அறிமுகப்படுத்துதல்.

**6.7 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்**

பொது முயற்சிகள் மீளமைப்பு ஆணைக்குழுவிற்கு இது வரையிலும் செயற்பாடுள்ள நிறுவனமாக இல்லாதிருந்ததுடன் இந்த ஆணைக்குழுவில் சேவையாற்றிய உத்தியோகத்தர்களும் 2011 சனவரி 01 ஆந் திகதி தொடக்கம் பொது முயற்சிகள் திணைக்களத்திற்கு நியமிக்கப்பட்டிருந்தனர். இருந்த போதிலும் இந்த ஆணைக்குழு பேணப்படுகின்ற லோகோர் சீமாட்டி நிதியத்திற்குரிய கட்டிடத்தில் பேணப்பட்டு வந்த அலுவலகத்திற்காக மேலும் அந்த மாதாந்த வாடகை ரூபா 56,000 படி 2012 ஆம் ஆண்டின் போது ரூபா 616,000 தொகை பொது முயற்சிகள் திணைக்களத்தினால் லோஹோர் சீமாட்டி கடன் நிதியத்திற்குச் செலுத்தப்பட்டிருந்தது. உரிய வாடகையைச்

செலுத்துவதற்குரிய உடன்படிக்கையின் சட்டத்தரணிக் கட்டணமாக ரூபா 6,000 தொகையும் செலுத்தப்பட்டிருந்தது.

**6.8 மனிதவள முகாமைத்துவம்**

**அங்கீகரித்த பதவியணியும் உள்ளபடியான பதவியணியும்**

2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பதவியணி மீதான நிலை பின்வருமாறு.

| | ஊழியர் வகை | அங்கீகரித்த பதவியணி | உள்ளபடியான பதவியணி | வெற்றிடங்களின் எண்ணிக்கை | மிகைகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|
| (அ) | சிரேஷ்ட நிலை | 22 | 21 | 01 | - |
| (ஆ) | மூன்றாம் நிலை | 04 | 04 | - | - |
| (இ) | இரண்டாம் நிலை | 34 | 20 | 14 | - |
| (ஈ) | ஆரம்ப நிலை | 15 | 15 | - | - |
| (உ) | ஏனைய ( அமைய/ தற்காலிக/ ஒப்பந்த அடிப்படை) | - | - | - | 03 |
| | மொத்தம் | 75 | 60 | 15 | 03 |

மீளாய்வாண்டின் இறுதி வரையில் 15 வெற்றிடங்கள் காணப்பட்டதுடன் 03 மிகை ஊழியர் எண்ணிக்கைக்காக முறையான அங்கீகாரத்தைப் பெற்றுக்கொள்வதற்கு திணைக்களத்தினால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 7. தலைப்பு 242 – முகாமைத்துவ சேவைகள் திணைக்களம்

### 7.1 கணக்காய்வின் நோக்கெல்லை

முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் 2012 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிஅறிக்கைகள், இணக்கக்கூற்றுகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய அறிக்கைகளை உள்ளடக்கிய ஒதுக்கீட்டுக் கணக்குகள் மீதான கணக்காய்வு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2014 சனவரி 27 ஆந் திகதி திணைக்களத்தின் தலைவருக்கு அனுப்பிவைக்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக்கூற்றுக்கள் சம்பந்தமான கணக்காய்வு அவதானிப்புக்கள், கருத்துரைகள் மற்றும் கண்டுபிடிப்புக்கள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகளினதும் இணக்கக்கூற்றுக்களினதும் மீளாய்வின் அடிப்படையிலும் கொடுக்கல் வாங்கல்களின் மாதிரிகளினது போதியளவு செவ்வை பார்த்தலின் அடிப்படையிலும் எழுந்தனவேயாகும். அவ்வாறான மீளாய்வினதும் செவ்வை பார்த்தலினதும் நோக்கெல்லையும் அளவும் எனக்குக் கிடைப்பதற்குள்ள பதவியணியினர், ஏனைய மூலவளங்கள், நேரம் என்பவற்றிற்கமைய இயலுமானளவு விரிவான கணக்காய்வை உள்ளடக்கக் கூடியவாறிருந்தது.

### 7.2 கணக்குகள் மற்றும் இணக்கக்கூற்றுக்கள் சம்பந்தமாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்புக்கள்

ஒதுக்கீட்டுக் கணக்குகள் மற்றும் இணக்கக்கூற்றுக்களை இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 உறுப்புரைகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், அரசாங்க நிதி மற்றும் நிருவாக பிரமாணங்களுக்கிணங்க பேணுதல், தயாரித்தல் மற்றும் நியாயபூர்வமாகச் சமர்ப்பித்தல் என்பன பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பாகும். மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயபூர்வமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாட்டைத் திட்டமிடுதல், அமுல்படுத்துதல் மற்றும் பராமரித்தல் போன்றன இப்பொறுப்பில் உள்ளடங்குகின்றன.

**7.3 கணக்காய்வு அவதானிப்புக்கள்**

2012 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறான நிதி அறிக்கைகள் மற்றும் ஏடுகளின் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் ஒதுக்கீட்டுக் கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் இந்த அறிக்கையின் (அ) இலுள்ள பொதுவான அவதானிப்புக்கள் மற்றும் கீழேயுள்ள 7.4 மற்றும் 7.5 வரையுள்ள பந்திகளில் குறிப்பிடப்பட்ட பிரதான கணக்காய்வு அவதானிப்புக்கள் தவிர திருப்திகரமானதாக தயாரிக்கப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.

**(அ) பாதீட்டு முரண்கள்**

மூன்று (03) செலவின விடயங்களுக்கு ரூபா 881,000 கூட்டுத்தொகையான நிதியேற்பாடு ஒதுக்கப்பட்டிருந்ததுடன் அதில் ரூபா 292,069 கூட்டுத்தொகையினைப் பயன்படுத்தியதன் பின்னர் ரூபா 588,931 சேமிப்பு அவதானிக்கப்பட்டது. அந்த சேமிப்பு அந்த ஒவ்வொரு செலவின விடயங்களுக்காகவும் ஒதுக்கப்பட்ட தேறிய ஏற்பாட்டில் 53 சதவீதத்திற்கும் 100 சதவீதத்திற்கும் இடையிலான சதவீதத்தைக் கொண்டிருந்தது. செலவின விடயங்களுக்காக மிகை ஏற்பாடுகள் ஒதுக்கப்பட்டமையினால் இந்த சேமிப்பு ஏற்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.

**7.4 நல்லாளுகையும் கணக்களிப்பொறுப்பும்**

**7.4.1 கூட்டிணைந்த திட்டம்**

2010 மார்ச் 10 ஆந் திகதிய பீஎப்/ஆர்/2/2/3/5(4) ஆம் இலக்க அரச பொது நிதிப்பணிப்பாளர் நாயகத்தின் கடிதத்தின் பிரகாரம் 2010 ஆம் ஆண்டு தொடக்கம் ஆகக் குறைந்தது தொடர்ந்து வரும் 03 வருடங்களுக்கான கூட்டிணைந்த திட்டம் அமைச்சினால் ஆண்டின் ஆரம்பத்தில் தயாரிக்கப்பட வேண்டிய போதிலும் அத்திட்டம் 2012 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

**7.5 மனிதவள முகாமைத்துவம்**

**அங்கீகரித்த பதவியணியும் உள்ளபடியான பதவியணியும்**

2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பதவியணி மீதான நிலை பின்வருமாறு.

| | ஊழியர் வகை | அங்கீகரித்த பதவியணி | உள்ளபடியான பதவியணி | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| (அ) | சிரேஷ்ட நிலை | 22 | 11 | 11 |
| (ஆ) | மூன்றாம் நிலை | 02 | 02 | - |
| (இ) | இரண்டாம் நிலை | 40 | 35 | 05 |
| (ஈ) | ஆரம்ப நிலை | 13 | 11 | 02 |
| | மொத்தம் | 77 | 59 | 18 |

மீளாய்வாண்டின் இறுதி வரையில் 18 வெற்றிடங்களை நிரப்புவதற்கு திணைக்களத்தினால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 8. தலைப்பு 243 – அபிவிருத்தி நிதித் திணைக்களம்

### 8.1 கணக்காய்வின் நோக்கெல்லை

அபிவிருத்தி நிதித் திணைக்களத்தின் 2012 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிஅறிக்கைகள், இணக்கக்கூற்றுகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய அறிக்கைகளை உள்ளடக்கிய ஒதுக்கீட்டுக் கணக்குகள் மீதான கணக்காய்வு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2013 நவம்பர் 06 ஆந் திகதி திணைக்களத்தின் தலைவருக்கு அனுப்பிவைக்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக்கூற்றுக்கள் சம்பந்தமான கணக்காய்வு அவதானிப்புக்கள், கருத்துரைகள் மற்றும் கண்டுபிடிப்புக்கள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகளினதும் இணக்கக்கூற்றுக்களினதும் மீளாய்வின் அடிப்படையிலும் கொடுக்கல் வாங்கல்களின் மாதிரிகளினது போதியளவு செவ்வை பார்த்தலின் அடிப்படையிலும் எழுந்தனவேயாகும். அவ்வாறான மீளாய்வினதும் செவ்வை பார்த்தலினதும் நோக்கெல்லையும் அளவும் எனக்குக் கிடைப்பதற்குள்ள பதவியணியினர், ஏனைய மூலவளங்கள், நேரம் என்பவற்றிற்கமைய இயலுமானளவு விரிவான கணக்காய்வை உள்ளடக்கக் கூடியவாறிருந்தது.

**8.2 கணக்குகள் மற்றும் இணைக்கக்கூற்றுக்கள் சம்பந்தமாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்புக்கள்**

ஒதுக்கீட்டுக் கணக்குகள் மற்றும் இணைக்கக்கூற்றுக்களை இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 உறுப்புரைகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், அரசாங்க நிதி மற்றும் நிருவாக பிரமாணங்களுக்கிணங்க பேணுதல், தயாரித்தல் மற்றும் நியாயபூர்வமாகச் சமர்ப்பித்தல் என்பன பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பாகும். மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட கணக்குகள் மற்றும் இணைக்கக் கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயபூர்வமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாட்டைத் திட்டமிடுதல், அமுல்படுத்துதல் மற்றும் பராமரித்தல் போன்றன இப்பொறுப்பில் உள்ளடங்குகின்றன.

**8.3 கணக்காய்வு அவதானிப்புக்கள்**

2012 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறான நிதி அறிக்கைகள் மற்றும் ஏடுகளின் அபிவிருத்தி நிதித் திணைக்களத்தின் ஒதுக்கீட்டுக் கணக்குகள் மற்றும் இணைக்கக் கூற்றுக்கள் இந்த அறிக்கையின் (அ) முதல் (இ) வரையிலுமான பொதுவான அவதானிப்புக்கள் மற்றும் கீழேயுள்ள 8.4 தொடக்கம் 8.7 வரையுள்ள பந்திகளில் குறிப்பிடப்பட்ட பிரதான கணக்காய்வு அவதானிப்புக்கள் தவிர திருப்திகரமானதாக தயாரிக்கப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.

**(அ) பாதீட்டு முரண்கள்**

(i) 03 செலவின விடயங்களிற்காக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ரூபா 302,234,402 கூட்டுத்தொகையான மொத்த தேறிய ஏற்பாடு முழுவதும் சேமிக்கப்பட்டிருந்தன. அதில் ஒரு செலவின விடயத்திற்காக ரூபா 1,764,952 தொகையான நிதியேற்பாடு நிதிப் பிரமாணம் 66 இன் வீரமன் நடைமுறையின் கீழ் பெறப்பட்டிருந்தது.

(ii) பதினொரு (11) செலவின விடயங்களுக்கு ரூபா 2,207,838,650 கூட்டுத்தொகையான நிதியேற்பாடு ஒதுக்கப்பட்டிருந்ததுடன் அதில் ரூபா 1,861,452,119 கூட்டுத்தொகையினைப் பயன்படுத்தியதன் பின்னர் ரூபா 346,386,531 சேமிப்பு அவதானிக்கப்பட்டது. அந்த சேமிப்பு அதன் ஒவ்வொரு செலவின விடயத்திற்காகவும் ஒதுக்கப்பட்ட தேறிய

ஏற்பாட்டில் 9 சதவீதத்திற்கும் 91 சதவீதத்திற்கும் இடையிலான சதவீதத்தைக் கொண்டிருந்தது. செலவின விடயங்களுக்காக மிகை ஏற்பாடுகள் ஒதுக்கப்பட்டமையினால் இந்த சேமிப்பு ஏற்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.

**(ஆ) எரிபொருள் மற்றும் மின்சார செலவின முகாமைத்துவம்**

2012 பெப்ரவரி 16 ஆந் திகதிய 156 ஆம் இலக்க பாதீட்டுச் சுற்றுநிருபத்தில் வழங்கப்பட்ட ஆலோசனைகளைக் கருத்தில் கொள்ளாது எரிபொருள் மற்றும் மின்சாரச் செலவினம் தொடர்பான செலவின விடயத்திற்காக நிதிப் பிரமாணம் 66 இன் மூலம் ரூபா 167,280 தொகையான நிதியேற்பாடு மீளாய்வாண்டின் போது மாற்றப்பட்டிருந்தது.

**(இ) அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகள் தொடர்பான இணக்கக்கூற்று**

(i) 2012 ஆம் ஆண்டில் மார்ச் மற்றும் மே மாதங்களின் போது முறையே ரூபா 46,000 மற்றும் ரூபா 56,000 தொகையாக இரண்டு சாரதிகளுக்கு இரண்டு (02) சந்தர்ப்பங்களின் போது வழங்கப்பட்ட ரூபா 102,000 கூட்டுத்தொகையான இடர் கடனுக்கான கடன் தவணைப் பணம் மற்றும் அதற்குரிய வட்டி என்பன 2012 ஆகஸ்ட் மாதம் வரையிலும் அதாவது இடமாற்றம் பெற்றுச் சென்ற திகதி வரையிலும் அறவிடப்பட்டிருக்கவில்லை.

(ii) 2012 ஆகஸ்ட் 06 ஆந் திகதி உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திற்கு இடமாற்றலாகிச் சென்ற மேற்கூறப்பட்ட ஒரு சாரதியின் கடன் மீதியில் ரூபா 46,000 தொகையான இடர் கடன் தொகை சேர்க்கப்பட்டிருக்கவில்லை.

## 8.4 நல்லாளுகையும் கணக்களிப்பொறுப்பும்

### வருடாந்த செயலாற்றல் அறிக்கை

2010 மார்ச் 10 ஆந் திகதிய பீஎப்/ஆர்/2/2/3/5(4) ஆம் இலக்க அரச பொது நிதிப்பணிப்பாளர் நாயகத்தின் கடிதத்தில் குறிப்படப்பட்ட 2002 செப்தெம்பர் 12 ஆந் திகதிய 402 ஆம் இலக்க மற்றும் 2004 பெப்ரவரி 20 ஆந் திகதிய 402(1) ஆம் இலக்க அரசாங்க நிதிச் சுற்றுநிருபத்தின் பிரகாரம் திணைக்களத்தினால் தயாரிக்கப்பட வேண்டிய வருடாந்த செயலாற்றல் அறிக்கை நிதியாண்டு முடிவடைந்து 150 தினங்களுக்குள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு பிரதியுடன் பாராளுமன்றத்திற்கு முன்வைக்கப்பட வேண்டிய போதிலும் மீளாய்வாண்டிற்குரிய செயலாற்றல் அறிக்கை 2013 ஆகஸ்ட் 21 ஆந் திகதியே பாராளுமன்றத்தில் முன்வைக்கப்பட்டிருந்தது.

## 8.5 இணங்காமைகள்

### சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் என்பவற்றுடனான இணங்காமைகள்

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாண ஏற்பாடுகள் என்பனவற்றுடன் இணங்காத சந்தர்ப்பங்கள் பகுப்பாய்வு செய்து கீழே காண்பிக்கப்பட்டுள்ளன.

| | சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் என்பவற்றுடனான தொடர்பு | இணங்காமைகள் |
|---|---|---|
| | பொது நிருவாகச் சுற்றுநிருபம் | |
| (i) | 1992 சனவரி 25 ஆந் திகதிய 03/92 ஆம் இலக்க சுற்றுநிருபம் | i. மு.ப 8.30 இற்கும் மு.ப 9.00 இற்குமிடையே எந்த நேரத்திலும் அலுவலகத்திற்குச் சமுகமளிக்கின்ற உத்தியோகத்தர் அவ்வாறு தாமதமாக வரும் காலத்தை பி.ப 4.15 இன் பின்னர் பி.ப 4.45 வரையும் வேலைகளைக் கவனிப்பதற்காக அவகாசமளிக்கப்பட்டிருந்த போதிலும் தாமதமான காலம் |

| | | |
|---|---|---|
| | | ஈடுசெய்யப்படாமல் அலுவலகத்திலிருந்து உத்தியோகத்தர்கள் வெளியேறிய சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன.<br><br>ii. மு.ப 8.00 இற்கும் மு.ப 8.15 இற்கும் இடையே அலுவலகத்திற்குச் சமுகமளிக்கின்ற சிற்றூழியர்கள் அவ்வாறு தாமதமான காலத்தை பி.ப 4.45 இன் பின்னர் ஈடுசெய்வதற்கு வசதியளிக்கப்பட்டிருந்த போதிலும் இத்திணைக்களத்தில் சிற்றூழியர்கள் மு.ப 8.15 இன் பின்னர் சேவைக்கு அறிக்கையிட்டிருந்த போதிலும் அனேமான சந்தர்ப்பங்களின் போது அந்த தாமதக்காலம் ஈடுசெய்யப்பட்டிருக்க வில்லை. |
| (ii) | 1994 சனவரி 21 ஆந் திகதிய 06/94 ஆம் இலக்க சற்றுநிருபம் | ஏதாவது ஒரு உத்தியோகத்தர் மேற்கூறப்பட்ட (i) இன் பிரகாரம் நடவடிக்கை எடுப்பதற்கு முடியாதுவிடின் அவ்வாறு தாமதமான மூன்று சந்தர்ப்பங்களுக்காக உரிய உத்தியோகத்தரின் விடுமுறையில் அரைநாள் விடுமுறை கழிக்கப்பட வேண்டியிருந்த போதிலும் அவ்வாறு செய்யப்பட்டிருக்கவில்லை. |
| (iii) | 2006 மே 30 ஆந் திகதிய 09/2006 ஆம் இலக்க சுற்றுநிருபம் | அரசாங்க சேவையில் ஈடுபட்டிருக்கின்ற கனிஷ்ட ஊழியர்கள் தவிர ஏனைய சகல ஊழியர்களினதும் அலுவலக நேரம் மு.ப 8.30 தொடக்கம் பி.பி 4.15 வரையாக இருந்த போதிலும் திணைக்களத்தின் உத்தியோகத்தர்கள் மு.ப 9.00 இற்குப் பின்னர் கடமைக்கு சமூகமளித்த சந்தர்ப்பங்கள் காணப்பட்டன. இந்த சந்தர்ப்பங்களில் குறுகியகால விடுமுறை வழங்கவதற்கோ அல்லது அரைநாள் (1/2) விடுமுறை வழங்கலோ மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. |

| | | |
|---|---|---|
| (iv) | 2009 ஏப்ரல் 16 ஆந் திகதிய 09/2009 ஆம் இலக்க சுற்றுநிருபம் | அரசாங்க நிறுவனங்களில் உத்தியோகத்தர்களின் சேவை நிலையத்திற்கு வருகைதரல் மற்றும் வெளிச் செல்லல் கைவிரல் அடையாள இயந்திரம் மூலம் உறுதிப்படுத்தப்பட வேண்டிய போதிலும் திணைக்களத்தின் மூலம் வழங்கப்பட்ட கைவிரல் அடையாள இயந்திரத்தின் அச்சிடல் பிரதி பரிசோதனையின் போது உத்தியோகத்தர்களின் வருகை மற்றும் வெளிச் செல்லல் என்ற இரு நேரங்களிலும் ஒரு நேரம் மாத்திரம் குறிப்பிடப்பட்ட சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன. |

**8.6 செயலாற்றல்**

**போதியளவில் நிறைவேற்றப்படாத பிரதான செயற்பாடுகள்**

**(அ) சுய தொழில் கடன் வழங்கும் செயற்திட்டம்**

2013 இன் வரவு செலவுத்திட்ட பிரேரணையின் அடிப்படையில் ஆரம்பிக்கப்பட்ட புனரமைப்புச் செய்யப்பட்ட பயிலுனர்களுக்கு சுய தொழில் கடன் வழங்கும் செயற்திட்டம் கட்டுநிதி கிடைக்கப்பெறாமையினால் அமுல்படுத்தப்பட்டிருக்கவில்லை.

**(ஆ) புதிய சுபிரி கடன் உத்தேசத் திட்டம்**

இந்த உத்தேசத் திட்டத்திற்காக ஒதுக்கப்பட்ட தொகையில் 19 சதவீதம் அல்லது ரூபா 48,273,656 தொகை கட்டுநிதி கிடைக்காமையினால் சேமிக்கப்பட்டிருந்தது.

**(இ) பண்டகசாலை பற்றுச்சீட்டு நிதியிடல் செயற்திட்டம்**

இந்த செயற்திட்டத்தின் உடன்படிக்கை 2012 யூலை மாதத்தில் உலக வங்கியின் மூலம் கையொப்பமிடப்பட்டிருந்த போதிலும் அந்த நடவடிக்கைகள் அந்த ஆண்டின் போது ஆரம்பிக்கப்படாமையினால் வெளிநாட்டு நிதியத்தின் கீழ் ஒதுக்கப்பட்ட ரூபா 300,000,000 தொகையான மொத்தப் பணமும் ஒன்றிணைந்த நிதியத்திலிருந்து ஒதுக்கப்பட்ட தொகையில் 69 சதவீதம் அல்லது ரூபா 16,881,754 தொகையும் சேமிக்கப்பட்டிருந்தது.

(ஈ) சிறிய, நடுத்தர மற்றும் கிராமிய முயற்சிகள் அபிவிருத்தி செயற்திட்டத்தின் கீழ் தேசிய விவசாய முயற்சிகள் அபிவிருத்தி வேலைத் திட்டத்தற்காக 2010 பெப்ரவரி 23 ஆந் திகதி அபிவிருத்திக்கான சர்வதேச நிதியத்துடன் இலங்கை அரசாங்கம் உடன்படிக்கை கைச்சாத்திட்டிருந்த போதிலும் இந்த செயற்திட்டம் பொருளாதார அலுவல்கள் அமைச்சின் திவிநெகும செயற்திட்டத்துடன் இணைந்ததாக அமுல்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்ததாக அறிவிக்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும் திறைசேரி கணனி அச்சிடல் குறிப்புக்களின் ஊடாக 2012 ஆம் ஆண்டின் போது ரூபா 11,618,165 தொகை வெளிநாட்டு நிதியத்தின் கீழும் ரூபா 188,788 தொகை ஒன்றிணைந்த நிதியத்தின் கீழும் செலவின விடயங்களில் வரவு வைக்கப்பட்டிருந்ததுடன் இந்த செலவினங்கள் பதவியணியினரின் சம்பளம், சமூக நேர் காணல் செயற்பாடுகளுக்கான சம்பளம், பயிற்சியளித்தல் செலவினம், கொள்வனவு செய்தல் மற்றும் வரி செலுத்தல் என்பன அறிக்கையிடப்பட்டிருந்தது.

அதன் பிரகாரம் ஒதுக்கப்பட்ட பணத்தில் வெளிநாட்டு நிதியத்தின் கீழ் 97 சதவீதம் அல்லது ரூபா 338,381,836 தொகை மற்றும் உள்நாட்டு நிதியத்திலிருந்து 81 சதவீதம் அல்லது ரூபா 811,212 தொகைகளாக ரூபா 339,193,048 கூட்டுத்தொகை சேமிக்கப்பட்டிருந்தது.

## 8.7 மனிதவள முகாமைத்துவம்

### அங்கீகரித்த பதவியணியும் உள்ளபடியான பதவியணியும்

2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பதவியணி மீதான நிலை பின்வருமாறு.

| | ஊழியர் வகை | அங்கீகரித்த பதவியணி | உள்ளபடியான பதவியணி | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| (அ) | சிரேஷ்ட நிலை | 10 | 09 | 01 |
| (ஆ) | இரண்டாம் நிலை | 07 | 06 | 01 |
| (இ) | ஆரம்ப நிலை | 09 | 09 | - |
| | மொத்தம் | 26 | 24 | 02 |

மீளாய்வாண்டின் இறுதி வரையில் 02 வெற்றிடங்களை நிரப்புவதற்கு திணைக்களத்தினால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 9. தலைப்பு 244 – வியாபாரத் தீர்வை மற்றும் முதலீட்டுக் கொள்கைகள் திணைக்களம்

### 9.1 கணக்காய்வின் நோக்கெல்லை

வியாபாரத் தீர்வை மற்றும் முதலீட்டுக் கொள்கைகள் திணைக்களத்தின் 2012 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிஅறிக்கைகள், இணக்கக்கூற்றுகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய அறிக்கைகளை உள்ளடக்கிய ஒதுக்கீட்டுக் கணக்குகள் மீதான கணக்காய்வு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2014 சனவரி 21 ஆந் திகதி திணைக்களத்தின் தலைவருக்கு அனுப்பிவைக்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக்கூற்றுக்கள் சம்பந்தமான கணக்காய்வு அவதானிப்புக்கள், கருத்துரைகள் மற்றும் கண்டுபிடிப்புக்கள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகளினதும் இணக்கக்கூற்றுக்களினதும் மீளாய்வின் அடிப்படையிலும் கொடுக்கல் வாங்கல்களின் மாதிரிகளினது போதியளவு செவ்வை பார்த்தலின் அடிப்படையிலும் எழுந்தனவேயாகும். அவ்வாறான மீளாய்வினதும் செவ்வை பார்த்தலினதும் நோக்கெல்லையும் அளவும் எனக்குக் கிடைப்பதற்குள்ள பதவியணியினர், ஏனைய மூலவளங்கள், நேரம் என்பவற்றிற்கமைய இயலுமானளவு விரிவான கணக்காய்வை உள்ளடக்கக் கூடியவாறிருந்தது.

### 9.2 கணக்குகள் மற்றும் இணக்கக்கூற்றுக்கள் சம்பந்தமாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்புக்கள்

ஒதுக்கீட்டுக் கணக்குகள் மற்றும் இணக்கக்கூற்றுக்களை இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 உறுப்புரைகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், அரசாங்க நிதி மற்றும் நிருவாக பிரமாணங்களுக்கிணங்க பேணுதல், தயாரித்தல் மற்றும் நியாயபூர்வமாகச் சமர்ப்பித்தல் என்பன பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பாகும். மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயபூர்வமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாட்டைத் திட்டமிடுதல், அமுல்படுத்துதல் மற்றும் பராமரித்தல் போன்றன இப்பொறுப்பில் உள்ளடங்குகின்றன.

## 9.3 கணக்காய்வு அவதானிப்புக்கள்

2012 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறான நிதி அறிக்கைகள் மற்றும் ஏடுகளின் வியாபாரத் தீர்வை மற்றும் முதலீட்டுக் கொள்கைகள் திணைக்களத்தின் ஒதுக்கீட்டுக் கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் இந்த அறிக்கையின் (அ) இலுள்ள பொதுவான அவதானிப்புக்கள் மற்றும் கீழேயுள்ள 9.4 தொடக்கம் 9.7 வரையுள்ள பந்திகளில் குறிப்பிடப்பட்ட பிரதான கணக்காய்வு அவதானிப்புக்கள் தவிர திருப்திகரமானதாக தயாரிக்கப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.

### (அ) பாதீட்டு முரண்கள்

(i) 03 செலவின விடயங்களுக்காக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ரூபா 804,510,000 கூட்டுத்தொகையான மொத்த தேறிய ஏற்பாடும் சேமிக்கப்பட்டிருந்தன.

(ii) 07 செலவின விடயங்களுக்கு ரூபா 3,900,000 கூட்டுத்தொகையான நிதியேற்பாடு ஒதுக்கப்பட்டிருந்ததுடன் அதில் ரூபா 2,473,809 கூட்டுத்தொகையினைப் பயன்படுத்தியதன் பின்னர் ரூபா 1,426,191 சேமிப்பு அவதானிக்கப்பட்டது. அந்த சேமிப்பு ஒவ்வொரு செலவின விடயத்திற்காகவும் ஒதுக்கப்பட்ட தேறிய ஏற்பாட்டில் 27 சதவீதத்திற்கும் 92 சதவீதத்திற்கும் இடையிலான சதவீதத்தைக் கொண்டிருந்தது. செலவின விடயங்களுக்காக மிகை ஏற்பாடுகள் ஒதுக்கப்பட்டமையினால் இந்த சேமிப்பு ஏற்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.

## 9.4 நல்லாளுகையும் கணக்களிப்பொறுப்பும்

### 9.4.1 கூட்டிணைந்த திட்டம்

2010 மார்ச் 10 ஆந் திகதிய பீஎப்/ஆர்/2/2/3/5(4) ஆம் இலக்க அரச பொது நிதிப்பணிப்பாளர் நாயகத்தின் கடிதத்தின் பிரகாரம் 2010 ஆம் ஆண்டு தொடக்கம் ஆகக் குறைந்தது தொடர்ந்து வரும் 03 வருடங்களுக்கான கூட்டிணைந்த திட்டம் அமைச்சினால் ஆண்டின் ஆரம்பத்தில் தயாரிக்கப்பட வேண்டிய போதிலும் அத்திட்டம் இந்த அறிக்கைத் திகதி வரையிலும் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

**9.4.2 வருடாந்த செயலாற்றல் அறிக்கை**

மேலே 9.4.1 பந்தியில் குறிப்பிடப்பட்ட அரச பொது நிதிப்பணிப்பாளர் நாயகத்தின் கடிதத்தில் குறிப்பிடப்பட்ட முறையே 2002 செப்தெம்பர் 12 ஆந் திகதிய மற்றும் 2004 பெப்ரவரி 20 ஆந் திகதிய 402 மற்றும் 402(1) ஆம் இலக்க அரச நிதிச் சுற்றுநிருபத்தின் பிரகாரம் திணைக்களத்தினால் தயாரிக்கப்பட வேண்டிய வருடாந்த செயலாற்றல் அறிக்கை நிதி ஆண்டு முடிவடைந்து 150 நாட்களுக்குள் தலைமை அதிபதிக்கான பிரதியுடன் பாராளுமன்றத்தில் முன்வைக்கப்படவேண்டிய போதிலும் மீளாய்வாண்டிற்கான செயலாற்றல் அறிக்கை இந்த அறிக்கைத் திகதி வரையிலும் பாராளுமன்றத்தில் முன்வைக்கப்பட்டிருக்கவில்லை.

**9.4.3 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுக் கூட்டம்**

மீளாய்வாண்டில் 03 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுக் கூட்டங்கள் மாத்திரம் நடாத்தப்பட்டிருந்தன.

**9.5 சொத்துக்கள் முகாமைத்துவம்**

**தீர்க்கப்படாத பொறுப்புக்கள்**

2012 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு 1 வருடத்திற்குக் குறைந்த தீர்க்கப்படாத பொறுப்புக்கள் ரூபா 306,228 ஆக இருந்தது.

**9.6 செயலாற்றல்**

2012 இன் வருடாந்த பாதீட்டு மதிப்பீடு மற்றும் செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் திணைக்களத்தின் செயல்முன்னேற்றம் தொடர்பான அவதானிப்பு கீழே காண்பிக்கப்படுகின்றது.

(அ) இந்திய - இலங்கை விரிவான பொருளாதார ஒத்துழைப்பு உடன்படிக்கையை அமுல்படுத்துதல் தொடர்பாக ஏற்படுகின்ற கலந்துரையாடல்களுக்காக சமூகமளிப்பது தற்காலிகமாகக் கைவிடப்பட்டிருந்தமையால் உரிய செயற்பாடுகள் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை.

(ஆ) வங்காள விரிகுடாவை அண்மித்த நாடுகளின் தொழில்நுட்ப மற்றும் பொருளாதார ஒத்துழைப்பு உடன்படிக்கையை அமுல்படுத்துவதற்கான கலந்துரையாடலுக்காக பங்குபற்றியிருக்கவில்லை.

(இ) ஆசிய பசுபிக் வர்த்தக உடன்படிக்கையின் செயல்முன்னேற்ற மீளாய்வு நடவடிக்கைகள் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஈ) தெற்காசிய சுதந்திர வர்த்தக வலய ஒத்துழைப்பு உடன்படிக்கையின் நிகழ்ச்சி நிரலை திருத்துவதற்கு உரிய அவதானிப்புக்கள் கைத்தொழில் மற்றும் வணிக அலுவல்கள் அமைச்சிற்கு அனுப்பப்பட்டிருந்ததுடன் இது வரையிலும் உரிய திருத்தங்கள் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை.

(உ) சுங்கக் கட்டளைச் சட்டத்தின் 19(அ) பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் சுங்கத் தீர்வை விடுவிக்கப்படுகின்ற சகல நிறுவனங்கள் தொடர்பான விபரங்கள் வர்த்தமானியின் மூலம் அறிவித்தல் மற்றும் பாராளுமன்றத்தில் முன்வைத்தல் செயற்பாடுகள் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை.

## 9.7 மனிதவள முகாமைத்துவம்

**அங்கீகரித்த பதவியணியும் உள்ளபடியான பதவியணியும்**

2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பதவியணி மீதான நிலை பின்வருமாறு.

| | ஊழியர் வகை | அங்கீகரித்த பதவியணி | உள்ளபடியான பதவியணி | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| (அ) | சிரேஷ்ட நிலை | 14 | 11 | 03 |
| (ஆ) | இரண்டாம் நிலை | 25 | 23 | 02 |
| (இ) | ஆரம்ப நிலை | 13 | 13 | - |
| | மொத்தம் | 52 | 47 | 05 |

## 10. தலைப்பு 245 – அரச பொது நிதித் திணைக்களம்

### 10.1 கணக்காய்வின் நோக்கெல்லை

அரச பொது நிதித் திணைக்களத்தின் 2012 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிஅறிக்கைகள், இணக்கக்கூற்றுகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய அறிக்கைகளை உள்ளடக்கிய ஒதுக்கீட்டுக் கணக்குகள் மீதான கணக்காய்வு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2014 சனவரி 21 ஆந் திகதி திணைக்களத்தின் தலைவருக்கு அனுப்பிவைக்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக்கூற்றுக்கள் சம்பந்தமான கணக்காய்வு அவதானிப்புக்கள், கருத்துரைகள் மற்றும் கண்டுபிடிப்புக்கள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகளினதும் இணக்கக்கூற்றுக்களினதும் மீளாய்வின் அடிப்படையிலும் கொடுக்கல் வாங்கல்களின் மாதிரிகளினது போதியளவு செவ்வை பார்த்தலின் அடிப்படையிலும் எழுந்தனவேயாகும். அவ்வாறான மீளாய்வினதும் செவ்வை பார்த்தலினதும் நோக்கெல்லையும் அளவும் எனக்குக் கிடைப்பதற்குள்ள பதவியணியினர், ஏனைய மூலவளங்கள், நேரம் என்பவற்றிற்கமைய இயலுமானளவு விரிவான கணக்காய்வை உள்ளடக்கக் கூடியவாறிருந்தது.

### 10.2 கணக்குகள் மற்றும் இணக்கக்கூற்றுக்கள் சம்பந்தமாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்புக்கள்

ஒதுக்கீட்டுக் கணக்குகள் மற்றும் இணக்கக்கூற்றுக்களை இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 உறுப்புரைகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், அரசாங்க நிதி மற்றும் நிருவாக பிரமாணங்களுக்கிணங்க பேணுதல், தயாரித்தல் மற்றும் நியாயபூர்வமாகச் சமர்ப்பித்தல் என்பன பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பாகும். மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயபூர்வமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாட்டைத் திட்டமிடுதல், அமுல்படுத்துதல் மற்றும் பராமரித்தல் போன்றன இப்பொறுப்பில் உள்ளடங்குகின்றன.

## 10.3 கணக்காய்வு அவதானிப்புக்கள்

2012 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறான நிதி அறிக்கைகள் மற்றும் ஏடுகளின் பிரகாரம் அரச பொது நிதித் திணைக்களத்தின் ஒதுக்கீட்டுக் கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் இந்த அறிக்கையின் (அ) முதல் (இ) வரையிலுமான பொதுவான அவதானிப்புக்கள் மற்றும் கீழேயுள்ள 10.4 தொடக்கம் 10.7 வரையுள்ள பந்திகளில் குறிப்பிடப்பட்ட பிரதான கணக்காய்வு அவதானிப்புக்கள் தவிர திருப்திகரமானதாக தயாரிக்கப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.

### (அ) கணக்குகள் சமர்ப்பித்தல்

திணைக்களத்தினால் 2013 மார்ச் 31 ஆந் திகதி வரையில் பின்வரும் கணக்குகள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

| தலைப்பு / விடய இலக்கம் | கணக்கின் பெயர் |
|---|---|
| 24501 | அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு |
| 999/408 | கலைத்தல் முற்பணக் கணக்கு |
| 999/407 | கலைத்தல் முற்பணக் கணக்கு |
| 0999/08 | கலைத்தல் முற்பணக் கணக்கு |

### (ஆ) ஏடுகள் மற்றும் புத்தகங்கள் பேணப்படாமை

1994 ஆகஸ்ட் 10 ஆந் திகதிய 96 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றுநிருபத்தின் 6.1 ஆம் பந்தியின் பிரகாரம் முற்பணம் பீ கணக்கிற்குரிய சகல பதிவேடுகளும் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதி வரையில் உரிய பிரகாரம் எழுதி சமப்படுத்தப்பட்டிருக்கவில்லை. அரசாங்க நிதித் திணைக்களத்தின் அரசாங்க உத்தியோகத்தர்களின் பீ கட்டுப்பாட்டுக் கணக்கு கணக்காய்விற்கு 2013 யூலை 25 ஆந் திகதியே சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. மேலும் அரசாங்க உத்தியோகத்தர்களின் முற்பணம் பீ கட்டுப்பாட்டுக் கணக்கு உரிய வகையில் சமப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

**(இ) பாதீட்டு முரண்**

செலவின விடய குறியீட்டு இலக்கம் 1504 இற்காக நிதிப் பிரமாணம் 66 வீரமன் நடைமுறையின் கீழ் வழங்கப்பட்ட ரூபா 499,500 தொகையான நிதியேற்பாடு ஆண்டின் இறுதி வரையிலும் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

## 10.4 நல்லாளுகையும் கணக்களிப்பொறுப்பும்

### 10.4.1 கூட்டிணைந்த திட்டம்

2010 மார்ச் 10 ஆந் திகதிய பீஎப்/ஆர்/2/2/3/5(4) ஆம் இலக்க அரச பொது நிதிப்பணிப்பாளர் நாயகத்தின் கடிதத்தின் பிரகாரம் 2010 ஆம் ஆண்டு தொடக்கம் ஆகக் குறைந்தது தொடர்ந்து வரும் 03 வருடங்களுக்கான கூட்டிணைந்த திட்டம் அமைச்சினால் ஆண்டின் ஆரம்பத்தில் தயாரிக்கப்பட வேண்டிய போதிலும் அத்திட்டம் 2012 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

### 10.4.2 வருடாந்த செயலாற்றல் அறிக்கை

மேலே 10.4.1 பந்தியில் குறிப்பிடப்பட்ட அரச பொது நிதிப்பணிப்பாளர் நாயகத்தின் கடிதத்தில் குறிப்பிடப்பட்ட முறையே 2002 செப்தெம்பர் 12 ஆந் திகதிய மற்றும் 2004 பெப்ரவரி 20 ஆந் திகதிய 402 மற்றும் 402(1) ஆம் இலக்க அரச நிதிச் சுற்றுநிருபத்தின் பிரகாரம் திணைக்களத்தினால் தயாரிக்கப்பட வேண்டிய வருடாந்த செயலாற்றல் அறிக்கை நிதி ஆண்டு முடிவடைந்து 150 நாட்களுக்குள் தலைமை அதிபதிக்கான பிரதியுடன் பாராளுமன்றத்தில் முன்வைக்கப்படவேண்டிய போதிலும் மீளாய்வாண்டிற்கான செயலாற்றல் அறிக்கை 2013 ஒக்தோபர் 23 ஆந் திகதியே பாராளுமன்றத்தில் முன்வைக்கப்பட்டிருந்தது.

### 10.4.3 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுக் கூட்டம்

மீளாய்வாண்டில் 03 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுக் கூட்டங்கள் மாத்திரம் நடாத்தப்பட்டிருந்தன.

**10.5 சொத்துக்கள் முகாமைத்துவம்**

**வருடாந்த பொருள் மெய்மையாய்வை நடாத்துதல்**

2010 திசெம்பர் 17 ஆந் திகதிய பீஎப்/மெய்மையாய்வுச் சபை/01 ஆம் இலக்க அரசாங்க நிதிப் பணிப்பாளர் நாயகத்தின் கடிதத்தினால் திருத்தப்பட்ட 2009 திசெம்பர் 09 ஆந் திகதிய 441 ஆம் இலக்க அரசாங்க நிதிச் சுற்றுநிருபத்தின் பிரகாரம் 2012 இன் வருடாந்த பொருள் மெய்மையாய்வு மேற்கொள்ளப்பட்டு அவ்வறிக்கை 2013 மார்ச் 31 ஆந் திகதிக்கு கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் திணைக்களத்தினால் வருடாந்த பொருள் மெய்மையாய்வு 2013 ஏப்ரல் 30 ஆந் திகதியே சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.

**10.6 செயலாற்றல்**

தற்பொது அமுல்படுத்தப்படுகின்ற 1992 இன் நிதிப் பிரமாணக் கோவையை நாளது வரையாக்குதல் பல வருட காலமாக அரசாங்க நிதித் திணைக்களத்தின் செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரதான செயற்பாடாக காண்பிக்கப்பட்டிருந்த போதிலும் 2012 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் நிதிப் பிரமாணக் கோவையை நாளதுவரையாக்கும் நடவடிக்கைகள் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை.

**10.7 மனிதவள முகாமைத்துவம்**

**அங்கீகரித்த பதவியணியும் உள்ளபடியான பதவியணியும்**

2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பதவியணி மீதான நிலை பின்வருமாறு.

| | ஊழியர் வகை | அங்கீரித்த பதவியணி | உள்ளபடியான பதவியணி | வெற்றிடங்களின் எண்ணிக்கை | மிகைகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|
| (அ) | சிரேஷ்ட நிலை | 27 | 15 | 12 | - |
| (ஆ) | மூன்றாம் நிலை | 04 | 01 | 03 | - |
| (இ) | இரண்டாம் நிலை | 28 | 26 | 02 | 01 |
| (ஈ) | ஆரம்ப நிலை | 17 | 14 | 03 | - |
| | மொத்தம் | 76 | 56 | 20 | 01 |

மீளாய்வாண்டின் இறுதி வரையில் 20 வெற்றிடங்களை நிரப்புவதற்கு திணைக்களத்தினால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 11. தலைப்பு 246 – உள்நாட்டு இறைவரித் திணைக்களம்

### 11.1 கணக்காய்வின் நோக்கெல்லை

உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின் 2012 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிஅறிக்கைகள், இணக்கக்கூற்றுகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய அறிக்கைகளை உள்ளடக்கிய ஒதுக்கீட்டுக் கணக்குகள் மீதான கணக்காய்வு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2014 பெப்ரவரி 13 ஆந் திகதி திணைக்களத்தின் தலைவருக்கு அனுப்பிவைக்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக்கூற்றுக்கள் சம்பந்தமான கணக்காய்வு அவதானிப்புக்கள், கருத்துரைகள் மற்றும் கண்டுபிடிப்புக்கள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகளினதும் இணக்கக்கூற்றுக்களினதும் மீளாய்வின் அடிப்படையிலும் கொடுக்கல் வாங்கல்களின் மாதிரிகளினது போதியளவு செவ்வை பார்த்தலின் அடிப்படையிலும் எழுந்தனவேயாகும். அவ்வாறான மீளாய்வினதும் செவ்வை பார்த்தலினதும் நோக்கெல்லையும் அளவும் எனக்குக் கிடைப்பதற்குள்ள பதவியணியினர், ஏனைய மூலவளங்கள், நேரம் என்பவற்றிற்கமைய இயலுமானளவு விரிவான கணக்காய்வை உள்ளடக்கக் கூடியவாறிருந்தது.

### 11.2 கணக்குகள் மற்றும் இணக்கக்கூற்றுக்கள் சம்பந்தமாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்புக்கள்

ஒதுக்கீட்டுக் கணக்குகள் மற்றும் இணக்கக்கூற்றுக்களை இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 உறுப்புரைகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், அரசாங்க நிதி மற்றும் நிருவாக பிரமாணங்களுக்கிணங்க பேணுதல், தயாரித்தல் மற்றும் நியாயபூர்வமாகச் சமர்ப்பித்தல் என்பன பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பாகும். மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயபூர்வமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாட்டைத் திட்டமிடுதல், அமுல்படுத்துதல் மற்றும் பராமரித்தல் போன்றன இப்பொறுப்பில் உள்ளடங்குகின்றன.

## 11.3 கணக்காய்வு அவதானிப்புக்கள்

2012 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறான நிதி அறிக்கைகள் மற்றும் ஏடுகளின் உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின் ஒதுக்கீட்டுக் கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் இந்த அறிக்கையின் (அ) மற்றும் (எ) வரையிலுமான பொதுவான அவதானிப்புக்கள் மற்றும் கீழேயுள்ள 11.4 தொடக்கம் 11.13 வரையான பந்திகளில் குறிப்பிடப்பட்ட பிரதான கணக்காய்வு அவதானிப்புக்கள் தவிர திருப்திகரமானதாக தயாரிக்கப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.

### (அ) கணக்குகள் சமர்ப்பித்தல்

திணைக்களத்தினால் 2012 மார்ச் 31 ஆந் திகதி வரையிலும் 31 வருமானக் குறியீடுகளுக்குரிய வருமானக் கணக்கு கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

### (ஆ) பாதீட்டு முரண்கள்

04 செலவின விடயங்களுக்கு ரூபா 41,900,000 கூட்டுத்தொகையான நிதியேற்பாடு ஒதுக்கப்பட்டிருந்ததுடன் அதில் ரூபா 27,808,309 கூட்டுத்தொகையினைப் பயன்படுத்தியதன் பின்னர் ரூபா 14,091,691 சேமிப்பு அவதானிக்கப்பட்டது. அந்த சேமிப்பு ஒவ்வொரு விடயத்திற்காகவும் ஒதுக்கப்பட்ட தேறிய ஏற்பாட்டில் 21 சதவீதத்திற்கும் 49 சதவீதத்திற்கும் இடையிலான சதவீதத்தைக் கொண்டிருந்தது. செலவின விடயங்களுக்காக மிகை ஏற்பாடுகள் ஒதுக்கப்பட்டமையினால் இந்த சேமிப்பு ஏற்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.

### (இ) பாதீட்டு உதவிச் சேவை அவசர தேவை பொறுப்பின் கீழ் வழங்கப்பட்ட நிதியேற்பாடு

பாதீட்டு உதவிச் சேவை அவசர தேவைப் பொறுப்பு செயற்திட்டத்தின் கீழ் 2001 ஆம் இலக்க செலவின விடயத்திற்காக ரூபா 10,000,000 தொகையான மேலதிக நிதியேற்பாடு பெறப்பட்டிருந்த போதிலும் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் அதில் எவ்வித பயன்படுத்தல்களும் மேற்கொள்ளப்பட்டிருக்க வில்லை.

**(ஈ) அரசாங்க செலவின முகாமைத்துவம்**

2011 திசெம்பர் 30 ஆந் திகதிய 155 ஆம் இலக்க தேசிய பாதீட்டு சுற்றுநிருபத்தின் பிரகாரம் பாதீட்டு மதிப்பீட்டில் ஒதுக்கப்பட்ட நிதியேற்பாடுகளிலிருந்து சேமிக்கப்பட வேண்டியதாகக் காண்பிக்கப்பட்ட 16 செலவின விடயங்கள் சேமிக்கப்பட்டிருக்கவில்லை. அதற்காக 2012 திசெம்பர் 19 ஆந் திகதி நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத் தீர்மானத்தின் பிரகாரம் சேமிக்கும் தேவைப்பாடுகளை விடுவிப்பதற்காக திறைசேரிச் செயலாளரின் அங்கீகாரம் பெறப்பட வேண்டியிருந்த போதிலும் அவ்வாறான அங்கீகாரம் பெறப்பட்டிருக்கவில்லை.

**(உ) பொது வைப்புக் கணக்கு**

வருமானக் குறியீடுகளில் திறைசேரி அறிக்கை மற்றும் திணைக்கள அறிக்கைக் கிடையே 2010 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு காணப்பட்ட ரூபா 202,076,920 தொகையான வேறுபாடுகள் 6000/0000/000/015/0126/00 ஆம் இலக்க பொது வைப்புக் கணக்கில் 2010 ஆம் ஆண்டின் போது மாற்றப்பட்டிருந்ததுடன் அதில் இது வரையிலும் இனங்காணப்படாத ரூபா 6,045,171 தொகையான நிதி இனங்காணப்படாமல் 2012 ஆம் ஆண்டின் போது 10.02.01.02 வருமானக் குறியீட்டிற்கு செலவு வைக்கப்பட்டு பொது வைப்புக் கணக்கு தீர்க்கப்பட்டிருந்தது.

**(ஊ) வருமானக் கணக்கு**

2012 ஆம் ஆண்டிற்காக உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின் திருத்தப்பட்ட மதிப்பிடப்பட்ட வருமானம் ரூபா 448,526,190,000 ஆக இருந்ததுடன் சேகரிக்கப்பட்ட வருமானம் ரூபா 418,423,600,997 ஆனமையால் மதிப்பிடப்பட்ட வருமானத்தை விட ரூபா 30,102,589,003 தொகையான குறைவொன்று ஏற்பட்டிருந்தது. அறிக்கையிடப்பட்ட தேறிய வருமானமாக ரூபா 418,423,606,997 தொகையில் ரூபா 118,098,650,535 தொகை அல்லது 28 சதவீதம் பல்வேறு திணைக்களங்கள் / நிறுவனங்களினால் நேரடியாக உள்நாட்டு இறைவரி ஆணையாளரின் கணக்கில் செலவு வைக்கப்பட்ட வருமானமாக இருந்தது.

மீளாய்வாண்டில் பெறப்பட்ட வரி வருமானமான ரூபா 433,333,049,649 தொகையில் ரூபா 14,909,448,652 தொகை அல்லது வரி வருமானத்தில் 3 சதவீதம் மீளச் செலுத்தப்பட்டிருந்தது. 2002 ஆம் ஆண்டில் ரூபா 52,102,129,721 தொகையான நிலுவை வரி வருமானம் மீளாய்வாண்டின் இறுதியில் ரூபா 192,663,476,919 தொகை வரை அதிகரித்திருந்ததுடன் அது தொடர்பான விபரங்கள் வருமானக் கணக்குகளில் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை. மேற்கூறப்பட்ட ரூபா 192,663,476,919 தொகையான நிலுவை வருமானங்களிலிருந்து காலப்பகுப்பாய்வு ரூபா 183,937,243,290 தொகைக்காக மாத்திரமே சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. மீளாய்வாண்டின் போது சேகரிக்கப்பட்டிருந்த ரூபா 418,423,600,997 தொகையில் முன்னைய ஆண்டிற்குரிய நிலுவை வரி வருமானமும் உள்ளடக்கப்பட்டிருந்தமையினால் மீளாய்வாண்டில் கிடைத்த உள்ளபடியான வருமானம் எவ்வளவு என சரியாக உறுதிப்படுத்திக்கொள்ள முடியாதிருந்தது.

10 வருடங்களுக்கு முன்னர் இரத்துச் செய்யப்பட்ட புரள்வு வரி, பொருட்கள் சேவைகள் வரி மற்றும் பாதுகாப்பு சேவை வரிகளுக்காக முறையே ரூபா 6,052,626,880 தொகை, ரூபா 8,658,357,263 தொகைகள் மற்றும் ரூபா 2,123,845,021 தொகையான நிலுவை காணப்பட்டன.

2005/2006 ஆம் ஆண்டின் போது வெளிப்படுத்தப்பட்ட பெறுமதிசேர் வரி மோசடியினால் 2003 ஆண்டு 15 சதவீதமாக இருந்த பெறுமதிசேர் வரி மீளச் செலுத்தும் அளவு 2012 ஆம் ஆண்டின் இறுதிவரையிலும் 2 சதவீதம் வரை குறைவடைந்திருந்தது.

2010 இன் 16 ஆம் இலக்க கொடுப்பனவுகள் தவிர்க்கப்பட்ட வரி தீர்த்தல் (விஷேட ஏற்பாடுகள்) ஏற்பாடுகள் வரி அதிகாரச்சட்டத்தின் மூலம் தவிர்க்கப்பட்ட வரியினை அறவீடு செய்வதற்காக தனியான அலகொன்று 2012 ஆம் ஆண்டின் போது ஆரம்பிக்கப்பட்டிருந்ததுடன் அந்தப் பிரிவிற்கு 2009 திசெம்பர் 31 ஆந் திகதி முன்னரான காலத்திற்குரிய ரூபா 91,161,681,174 தொகையான வரி மாற்றப்பட்டிருந்தது. 2012 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு ரூபா 71,094,633,641 தொகை மேலும் அறவிடப்பட வேண்டியிருந்தமையால் இந்தப் பிரிவில் வரி அறவீடு செய்யும் நிலைமை திருப்திகரமானதாக இருந்தமைக்கான சான்றுகள் காணப்படவில்லை.

மீளாய்வாண்டின் போது மதிப்பீடு செய்தல், பதிவழித்தல் மற்றும் விடுவித்தல் தொடர்பான பெறுமதிகளைப் பெற்றுக் கொள்வதற்காக தேவையான மாற்றுதல்

நாட்குறிப்பு, இரத்துச் செய்யப்பட்ட காசோலைகள் போன்ற விபரங்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. கடந்த 9 வருடங்களில் மதிப்பீடு செய்யப்பட்ட வரித் தொகை ரூபா 238.2 பில்லியனாக இருந்ததுடன் அறவிடப்பட்ட அளவு ரூபா 85.3 பில்லியன் அல்லது 35.8 சதவீதம் மாத்திரமாகும். எனினும் 9 வருட காலத்தில் மதிப்பீடு செய்யப்பட்டதன் பின்னர் பதிவழிக்கப்பட்ட/ விடுவிக்கப்பட்ட (Discharge Orders) அளவு ரூபா 98.9 பில்லியன் அல்லது 41.5 சதவீதமாகும்.

வருமானக் கணக்கு தொடர்பாக பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன.

(i) தனிப்பட்ட கணக்குகள் மற்றும் கட்டுப்பாட்டுக் கணக்குகள் இணக்கஞ் செய்யப்படாது மாற்றுபத்திரம் மூலம் மாற்றப்பட்ட வேறுபாடுகள் அவதானிக்கப்பட்டன. விபரம் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| | கணக்கின் பெயர் | குறியீடு | வேறுபாடு | செலவு வைக்கப்பட்ட கணக்குக் குறியீடு |
|---|---|---|---|---|
| | | | ரூபா | |
| i. | பெறுமதி சேர்க்கப்பட்ட வரிக் கட்டுப்பாட்டுக் கணக்கு | 10.02.01.01 | 12,496,608 | 10.02.01.02 |
| ii | பொருட்கள், சேவைகள் வரிக்கான கட்டுப்பாட்டுக் கணக்கு | 10.02.02.00 | 47,479 | 10.02.02.01 |
| iii | ஏனைய வரிக் கணக்கு | 10.04.02.99 | 26,553,978 | அந்தக் கணக்கில் சீராக்கப்பட்டிருந்தது. |

வரி செலுத்துவதற்குரிய கொடுப்பனவு பத்திரங்கள் அந்த வருடத்தின் போதே கிடைக்காமை வேறுபாட்டிற்கான காரணமாக இருந்தமையும் 2008 தொடக்கம் 2011 காலப்பகுதிகளுக்குரிய ரூபா 26,583,868 தொகையான கொடுப்பனவு பத்திரம் 2012 ஆம் ஆண்டின் போது கிடைத்திருந்தமையும் உள்நாட்டு இறைவரி ஆணையாளர்

நாயகத்தினால் அறிவிக்கப்பட்டிருந்தது. மேற்கூறப்பட்ட வருமான வேறுபாட்டிற்கான விபரம் கணக்காய்விற்கு வழங்கப்பட்டிருக்கவில்லை.

(ii) வங்கிக் கொடுப்பனவுப் பத்திரமின்றி செலவு வைத்தல்

2012 ஆம் ஆண்டின் போது பொருளாதார சேவைக் கட்டணமாக ரூபா 43,489,718 தொகையும், வருமான வரியாக ரூபா 93,336,460 தொகையும் கொடுப்பனவுப் பத்திரமின்றி உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகத்தின் கணக்கில் செலவு வைக்கப்பட்டிருந்தது.

2013 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு பொருளாதார சேவைக் கட்டணமாக ரூபா 10,534,796 தொகையும் வருமான வரியாக ரூபா 392,278 தொகைக்காகவும் கொடுப்பனவுப் பத்திரம் இனங்காணப்பட்டிருந்தது. எஞ்சிய தொகை இனங்காணப்பட்டிருக்கவில்லை.

(iii) மீளாய்வாண்டின் போது மாதாந்த அறிக்கைகளில் பதிவு செய்யப்படாததாக காணப்படுகின்ற 4 வரி வகைகளுக்குரிய ரூபா 395,432,094 தொகைக்காக பிழையான குறியீடாக காண்பிக்கப்பட்ட 3 வரி வகைகளுக்குரிய ரூபா 55,095,335 தொகையான வருமானப் பெறுவனவுகளில் சரியான தன்மையினை உறுதிப்படுத்திக் கொள்வதற்குத் தேவையான சான்றுகள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(iv) பின்வரும் விடயங்கள் தொடர்பாக உரிய சான்றுகள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

| | | ரூபா |
|---|---|---|
| | | ---------- |
| i | பெறுமதிசேர் வரி மீளச் செலுத்துதல் | 702,527,076 |
| ii. | இலங்கை இராணுவத்திற்கு மீளச் செலுத்துதல் | 17,838,913 |
| iii. | இலங்கை இராணுவத்திற்கு மீளச் செலுத்திய தேசத்தைக் கட்டியெழுப்பும் வரி | 4,620,480 |
| iv. | பங்குக் கொடுக்கல் வாங்கல் வரி மீளச் செலுத்துதல் | 1,220,515 |
| v. | வருமான வரி மீளச் செலுத்துதல் | 3,242,259 |
| vi. | பெறுமதிசேர் வரி மீளச் செலுத்துதல் | 2,430,112 |

(v) மீளாய்வாண்டின் ஆரம்பத்திலும் இறுதியிலும் பொருட்கள், சேவைகள் நிலுவை வரி அறிக்கையின் பிரகாரம் கிடைக்க வேண்டிய தொகையினை விட ரூபா 93,123,713 தொகை குறைவாகக் காணப்பட்டதுடன் அதற்கான வரி விடுவிப்பு ரூபா 7,976 தொகை மற்றும் தண்டங்களைப் பதிவழித்தல் ரூபா 93,115,738 தொகை உள்ளடக்கப்பட்டிருந்தது.

(iv) நிதிப் பிரமாணம் 128(2)(அ) இன் பிரகாரம் அரையாண்டு அறிக்கை யூலை 31 ஆந் திகதி மற்றும் அடுத்த அறிக்கை சனவரி 31 ஆந் திகதிக்கு முன்னர் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டியிருந்த போதிலும் 2012 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு உரிய அறிக்கை 2013 யூன் 14 ஆந் திகதி அதாவது 133 நாட்கள் தாமதத்தின் பின்னரே கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.

மீளாய்வாண்டின் இறுதியில் முத்திரை வரி நிலுவை மீதி ரூபா 62,130,578 ஆக இருந்த போதிலும் அத்தொகை ரூபா 66,384,917 ஆக புத்தகங்கள் மற்றும் அறிக்கைகளில் காண்பிக்கப்பட்டிருந்தது.

**(எ) அரச உத்தியோகத்தர்களின் முற்பணக் கணக்குகள் தொடர்பான இணக்கக்கூற்றுக்கள்**

---

விடய இல. 24601 இன் அரச உத்தியோகத்தர்களின் முற்பணக் கணக்குகள் தொடர்பான 2012 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறான இணக்கக் கூற்றுக்களின் பிரகாரம் அறவீடுகள் நிலுவையாக இருந்த மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 2,409,450 ஆக இருந்தது. அது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) 1997 இற்கு முன்னர் வேலை நீக்கம் செய்யப்பட்ட மூன்று ஊழியர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 8,196 கூட்டுத்தொகையிலிருந்து மீளாய்வாண்டில் எத்தொகையும் அறவிடப்பட்டிருக்கவில்லை.

(ii) முற்பணம் "பீ" கணக்கின் பட்டோலை இலக்கம் 07 மற்றும் 08 இல் காணப்படுகின்ற ரூபா 230,534 தொகையான கடன் மீதி அறவிடப்படாத கடனுக்கு உள்ளாகியிருந்தது.

(iii) 1999 ஆம் ஆண்டின் போது வேலையைக் கைவிட்டுச் சென்ற ஊழியர் ஒருவருக்கு ரூபா 250,445 தொகையான ஆதனக் கடன் வழங்கும் போது அந்த உத்தியோகத்தர் தனக்கு காணியை எழுதுவதற்கு நடவடிக்கை எடுக்காமையினால் அந்தத் தொகையை அறவீடு செய்வதற்கு முடியாதிருந்தது.

(iv) மேலும் 1996, 1997, 1998 மற்றும் 2010 ஆம் ஆண்டுகளில் சேவையை விட்டுச் சென்ற 5 உத்தியோகத்தர்களிடமிருந்தும் ரூபா 76,226 தொகை அறவிடப்பட வேண்டியிருந்த போதிலும் அத்தொகையும் அறவிடப்பட்டிருக்கவில்லை.

**11.4 நல்லாளுகையும் கணக்களிப்பொறுப்பும்**

**11.4.1 கூட்டிணைந்த திட்டம்**

2010 மார்ச் 10 ஆந் திகதிய பீஎப்/ஆர்/2/2/3/5(4) ஆம் இலக்க அரச பொது நிதிப்பணிப்பாளர் நாயகத்தின் கடிதத்தின் பிரகாரம் 2010 ஆம் ஆண்டு தொடக்கம் ஆகக் குறைந்தது தொடர்ந்து வரும் 03 வருடங்களுக்கான கூட்டிணைந்த திட்டம் அமைச்சினால் ஆண்டின் ஆரம்பத்தில் தயாரிக்கப்பட வேண்டிய போதிலும் அத்திட்டம் 2012 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

**11.4.2 வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டம்**

திணைக்களத்தினால் வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்பட்டிருக்க வில்லை.

**11.4.3 வருடாந்த செயலாற்றல் அறிக்கை**

2010 மார்ச் 10 ஆந் திகதிய பீஎப்/ஆர்/2/2/3/5(4) ஆம் இலக்க அரச பொது நிதிப்பணிப்பாளர் நாயகத்தின் கடிதத்தில் குறிப்பிடப்பட்ட 2002 செப்தெம்பர் 12 ஆந் திகதிய மற்றும் 2004 பெப்ரவரி 20 ஆந் திகதிய 402 மற்றும் 402(1) ஆம் இலக்க அரச நிதிச் சுற்றுநிருபத்தின் பிரகாரம் திணைக்களத்தினால் தயாரிக்கப்பட வேண்டிய வருடாந்த செயலாற்றல் அறிக்கை நிதி ஆண்டு முடிவடைந்து 150 நாட்களுக்குள் தலைமை அதிபதிக்கான பிரதியுடன் பாராளுமன்றத்தில் முன்வைக்கப்படவேண்டிய போதிலும் மீளாய்வாண்டிற்கான செயலாற்றல் அறிக்கை 2013 செப்தெம்பர் 30 ஆந் திகதி வரையிலும் பாராளுமன்றத்தில் முன்வைக்கப்பட்டிருக்கவில்லை.

**11.4.4 வருடாந்த கொள்வனவுத் திட்டம்**

2006 மார்ச் 24 ஆந் திகதி 128 ஆம் இலக்க தேசிய பாதீட்டுச் சுற்றுநிருபத்தின் பிரகாரம் வருடாந்த கொள்வனவுத் திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. எனினும் கொள்வனவுத் திட்டத்தின் பிரகாரம் கொள்வனவு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

**11.4.5 உள்ளகக் கணக்காய்வு**

திணைக்களத்தில் உள்ளகக் கணக்காய்வுப் பிரிவு ஸ்தாபிக்கப்பட்டிருந்த போதிலும் வரி தொடர்பான பரிசோதனைகள் அந்தக் கணக்காய்வுப் பிரிவினால் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை.

**11.4.6 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுக் கூட்டத்தை நடாத்துதல்**

கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுக் கூட்டங்கள் நிதி, திட்டமிடல் அமைச்சின் கீழ் அமுல்படுத்தப்படுவதுடன் 2012 ஆம் ஆண்டிற்காக 03 குழுக் கூட்டங்கள் மாத்திரம் நடாத்தப்பட்டிருந்தன.

**11.5 சொத்துக்கள் முகாமைத்துவம்**

**(அ) செயற்பாடற்ற மற்றும் குறைவான பயன்பாடுடைய சொத்துக்கள்**

கீழே விபரிக்கப்பட்டதன் பிரகாரம் சில சொத்துக்கள் செயற்பாடற்றோ அல்லது குறைவான பயன்பாட்டுடனோ காணப்பட்டமை தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளின் போது அவதானிக்கப்பட்டன.

| | சொத்து வகை | அலகுகளின் எண்ணிக்கை | செயற்பாடற்று அல்லது குறைவான பயன்பாட்டுடன் காணப்பட்ட காலம் |
|---|---|---|---|
| (i) | மின் பிறப்பாக்கி இயந்திரம் | 01 | உள்நாட்டு இறைவரிக் கட்டிடத்தை நவீனமயப்படுத்தும் போது இந்த மின் பிறப்பாக்கி இயந்திரம் அரச பொறியியல் கூட்டுத்தாபனத்தினால் 2009 ஆம் ஆண்டின் போது எடுத்துச் செல்லப்பட்டிருந்தது. |

| | | | |
|---|---|---|---|
| (ii) | மின்மாற்றி இயந்திரம் | 02 | உள்நாட்டு இறைவரிக் கட்டிடத்தை நவீனமயப்படுத்தம் போது வழங்கப்பட்ட அந்த இரண்டு மின் மாற்றிகள் 2009 ஆம் ஆண்டிலிருந்து பாவனைக்கு எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (iii) | சீ.சீ.ரீ.வீ. கெமரா | 70 | 2010 ஆம் ஆண்டின் போது உள்நாட்டு இறைவரிக் கட்டிடத்தை நவீனமயப்படுத்தும் போது கட்டிடத்தின் மாடிகளுக்குப் பொருத்தப்பட்டிருந்த போதிலும் அவை பாவனைக்கு எடுக்கப்பட்டிருக்கவில்லை. |

**(ஆ) கிடைக்க வேண்டிய மீதி**

கொழும்பு 12, ஸ்ரீ சங்கராஜ மாவத்தையில் அமைந்துள்ள வரையறுக்கப்பட்ட கட்டிடப் பொருள் கூட்டுத்தாபனத்திற்குச் சொந்தமான காணியில் 100 பேர்சஸ் காணித்துண்டை உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திற்கு கையேற்பதற்காக 2008 பெப்ரவரி 28 ஆந் திகதி ரூபா 50 மில்லியன் வ/ப கட்டிடப்பொருள் கூட்டுத்தாபனத்தின் தலைவருக்குச் செலுத்தப்பட்டிருந்தது. பின்னர் சொத்துக் கையளித்தல் நிறுத்தப்பட்டிருந்த போதிலும் அந்த முற்பணம் அறவிடப்பட்டிருக்கவில்லை.

**(இ) தீர்க்கப்படாத பொறுப்புக்கள்**

மீளாய்வாண்டிற்கான ஒதுக்கீட்டுக் கணக்கில் 01 வருடத்திற்குக் குறைந்த தீர்க்கப்படாத பொறுப்புக்களாக ரூபா 76,294,694 தொகை மாத்திரம் காண்பிக்கப்பட்டிருந்த போதிலும் 2013 இன் ஒதுக்கீட்டுப் பேரேட்டில் காண்பிக்கப்பட்ட பொறுப்புக்களின் பிரகாரம் ஒதுக்கீட்டுக் கணக்கில் காண்பிக்கப்பட்ட பொறுப்புக்களுக்கு மேலதிகமாக ரூபா 2,144,523 தொகையான பொறுப்புக்கள் காணப்பட்டது.

## 11.6 இணங்காமைகள்

### (அ) சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் என்பவற்றுடனான இணங்காமைகள்

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாண ஏற்பாடுகள் என்பனவற்றுடன் இணங்காத சந்தர்ப்பங்கள் பகுப்பாய்வு செய்து கீழே தரப்படுகின்றன.

**(i) நிதிப் பிரமாணம்**

நிதிப் பிரமாணம் 1646 இன் பிரகாரம் நாளாந்த ஓட்ட அட்டவணை மற்றும் மாதாந்த பொழிப்பு குறிப்பிடப்பட்ட பிரகாரம் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

நிதிப் பிரமாணம் 245(3) இன் பிரகாரம் சகல கொடுப்பனவு உறுதிச் சீட்டுக்களிலும் உரிய விபரங்கள் குறிப்பிட்ட செலவினப் பேரேட்டில் குறிப்பிட்ட செலவின விபத்தின் கீழ் பதியப்பட வேண்டும். மேலும் நிதிப் பிரமாணம் 447(6) இன் பிரகாரம் கொடுப்பனவு உறுதிச்சீட்டின் இலக்கம் ஒதுக்கீட்டுப் (ஏற்றுக்கொள்ளப்பட்ட) பேரேட்டில் உள்ள நிரலில் காண்பிக்கப்பட வேண்டும். எனினும் உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தினால் ஒதுக்கீட்டுப் (ஏற்றுக்கொள்ளப்பட்ட) பேரேட்டில் கொடுப்பனவு உறுதிச்சீட்டுக்களுக்குரிய விபரங்கள் மற்றும் கொடுப்பனவு உறுதிச்சீட்டு இலக்கம் என்பன குறிப்பிடப்பட்டிருக்கவில்லை.

**(ii) சுற்றுநிருபம்**

2004 ஒக்தோபர் 10 ஆந் திகதிய 174 ஆம் இலக்க அரசாங்க கணக்குகள் சுற்றுநிருபத்தின் பிரகாரம் ஒதுக்கீட்டுக் கணக்குடன் அட்டவணை இலக்கம் (1) இன் கீழ் சமர்ப்பிக்கப்பட வேண்டிய நடைமுறையல்லாச் சொத்துக்களின் அசைவுகள் தொடர்பான அறிக்கை - 2012 இல் கீழே காண்பிக்கப்படுகின்ற குறைபாடுகள் காணப்பட்டன.

i. திணைக்களத்திற்குரிய காணி மற்றும் கட்டிடம் தொடர்பான விபரங்கள் உள்ளடக்கப்பட்டிராமை.

ii. மீளாய்வாண்டின் போது நிதி, திட்டமிடல் அமைச்சிலிருந்து கிடைத்திருந்த 03 வாகனங்களின் விலையான ரூபா 27,500,000 தொகையும், விற்றுத் தீர்க்கப்பட்ட 15 வாகனங்களின் பெறுமதியான ரூபா 17,514,326 தொகையும் அறிக்கையில் உள்ளடக்கப்பட்டிருக்காமை.

**(ஆ) வரித் தேவைப்பாடுகளுடன் இணங்காமை**

(i) பெறுமதிசேர் வரி அறிக்கை சமர்ப்பிக்கப்படாமை

2002 செப்தெம்பர் 30 ஆந் திகதிய 364(3) ஆம் இலக்க அரசாங்க நிதிச் சுற்றுநிருபத்தின் 5 ஆம் பந்தியின் பிரகாரம் கேள்விதாரருக்கு/ வழங்குனருக்கு பெறுமதிசேர் வரி செலுத்தும் போது அவ்வாறு செலுத்தப்பட்ட வரி விபரம் தொடர்பாக உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகத்திற்கு அனுப்ப வேண்டியிருந்த போதிலும் செலுத்தப்பட்ட மற்றும் நிறுத்திவைக்கப்பட்ட பெறுமதிசேர் வரிக்குரிய அறிக்கையைப் பெற்றுக்கொள்வதற்கு முறையான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) 2007 இன் 14 ஆம் இலக்க பெறுமதிசேர் வரி (திருத்த) அதிகாரச் சட்டத்தின் 07 ஆம் பிரிவின் பிரகாரம் உரிய ஒப்பந்தக்காரருக்குச் செலுத்தப்படுகின்ற பெறுமதி சேர் வரியில் 33 1/3 சதவீதம் நிறுத்தி வைக்கப்பட்டு உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகத்திற்கு அனுப்பப்பட வேண்டும். 08 நிறுவனங்கள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது அவ்வாறு 2007 தொடக்கம் 2010 ஆம் ஆண்டு வரையான காலத்திற்குரிய திணைக்களத்திற்கு அனுப்பிவைக்கப்பட்ட ரூபா 13,796,542 கூட்டுத்தொகையான 33 1/3 சதவீதமான வரிக்குக்குரிய வரியிறுப்பாளர்களினால் அனுப்பிவைக்கப்பட வேண்டிய 66 2/3 சதவீதப் பணம் அறவிடப்பட்டிருக்கவில்லை. அதற்குரிய சில வரியிறுப்பாளர்கள் பதிவு செய்யப்பாடதிருந்தமையும், அழைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சைக்கு சமூகமளிக்காதிருந்தமையும் 2014 மார்ச் 24 ஆந் திகதி அனுப்பப்பட்ட கடிதத்தில் அறிவிக்கப்பட்டிருந்தது.

(iii) எனினும் உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திற்குரிய செயற்படும் வரியிறுப்பாளர்களினால் மாதாந்த/ மும்மாத அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டிராமையினால் அந்த வரியிறுப்பாளர்களினால் அனுப்பிவைக்கப்பட வேண்டியிருந்த பெறுமதிசேர் வரித்தொகை திணைக்களத்திற்கு கிடைத்திருந்தமை உறுதிப்படுத்தப்படவில்லை.

**11.7 வரிக் கோவை பரிசோதனை**

வரிக் கோவை தொடர்பாக தெரிவுப் பரிசோதனையின் போது பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) டின் இலக்கம் 124006139

வாடகைக்குப் பெறப்பட்ட கட்டிடத்தை அபிவிருத்தி செய்வதற்காகச் செய்யப்பட்ட செலவினங்களில் 2007/08 ஆம் ஆண்டின் போது 6.67 சதவீதமும், 2008/09 ஆம் ஆண்டின் போது 12.5 சதவீதமும் மூலதனக் கொடுப்பனவு வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்திருந்த போது 2009/10 மதிப்பீட்டு வருடத்தின் போது வாடகைக்கு எடுக்கப்பட்ட கட்டிடத்திற்காக செலவிடப்பட்ட ரூபா 108,690,000 தொகையான செலவினத்தை ஒரே தடவையில் கழிப்பதற்கு வாடகையாளருக்கு வசதியளிக்கப்பட்டிருந்தது. இதனால் ரூபா 33,286,312 தொகையான வரி வருமானம் கைவிடப்பட்டிருந்தது.

(ஆ) டின் இலக்கம் 114020265

(i) வரி கணிப்பீடு செய்யும் போது சமூக அனுசரணைச் செலவினமாக 2008/09 மதிப்பீட்டு வருடத்தின் போது ரூபா 36,154,345 தொகையும், 2009/10 மதிப்பீட்டு வருடத்தின் போது ரூபா 68,946,968 தொகையும் கழிக்கப்பட்டிருந்தது. 2006 இன் 10 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரி அதிகாரச் சட்டத்தின் 26(ந) பிரிவின் பிரகாரம் விளம்பரக் கட்டணங்களிலிருந்து

அரைவாசி இடமளிக்கப்படாத செலவினமாகையால் அந்த செலவினங்கள் விளம்பரச் செலவினமாக இல்லாதிருந்தமையை உறுதிப்படுத்திக் கொள்வதற்கான சான்றுகள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) இந்த வரியிறுப்பாளரிடமிருந்து 2002 தொடக்கம் கொண்டுவரப்படுகின்ற ரூபா 55,175,099 தொகையான பாதுகாப்பு வரியினை உள்ளடக்கிய ரூபா 686,307,414 தொகையான நிலுவை வரி 2013 ஏப்ரல் 24 ஆந் திகதியில் உள்ளவாறு காணப்பட்டிருந்த போதிலும் அந்த வரியினை அறவிடுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

| | | |
|---|---|---|
| (இ) | டின் இலக்கம் 114117854 | இந்த வரியிறுப்பாளர்களிடமிருந்து 2009 ஆம் ஆண்டு வரை அறவிடவேண்டியிருந்த ரூபா 11,091,584 தொகையான பெறுமதி சேர்க்கப்பட்ட வரி இது வரை அறவிடப்பட்டிருக்கவில்லை. |
| (ஈ) | டின் இலக்கம் 114226815 | 20 வருடங்கள் வரிச் சலுகையைப் பெற்றிருந்த இந்த வரியிறுப்பாளர் முதலீட்டுச் சபையின் கீழ் பதிவு செய்யப்பட ஒரு கம்பனியாக இருந்துதுடன் 2003 பெப்ரவரி மாதம் உற்பத்தி நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டிருந்தது. இந்த வரியிறுப்பாளர் தொடர்பான கோவையைப் பரிசோதனை செய்தபோது வெளிப்படுத்தப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன. |

(i) இந்தக் கம்பனியிலிருந்து ஏனைய வருமான மூலங்களிலிருந்து பெறுகின்ற வருமானத்தின் அடிப்படையில் வரி அறவிடப்பட வேண்டியிருந்தமையினால் 2006/07 மதிப்பீட்டு வருடத்தின் போது

காப்பாற்றப்பட்ட பொருள் விற்பனையால் பெறப்பட்ட வருமானத்தின் அடிப்படையில் வரி கணிப்பிடப்பட வேண்டியிருந்த போதிலும் 2007/08 மதிப்பீட்டு வருடத்தின் போது காப்பாற்றப்பட்ட பொருள் விற்பனையிலிருந்து பெறப்பட்ட ரூபா 4,645,088 தொகைக்காக வரி அறவிடுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) இந்த வரியிறுப்பாளர்களிடமிருந்து 2013 நவம்பர் 15 ஆந் திகதி வரையிலும் பெறுமதி சேர் வரியாக ரூபா 947,981,622 தொகையும் வருமான வரியாக ரூபா 1,318,909 தொகையும் அறவிட வேண்டியிருந்தது.

(உ) டின் இலக்கம் 104024025

(i) கார் வாகனத்திற்காக 2006 இன் 10 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரி அதிகாரச்சட்டத்தின் 26(2)(அ) பிரிவின் பிரகாரம் மூலதனப் படிக்காக உரித்தற்றிருந்த போதிலும் 2009/10 மதிப்பீட்டு வருடத்தின் போது 02 கார்களுக்காக ரூபா 1,880,000 கூட்டுத்தொகையான மூலதனப் படி வரி கணிக்கும் போது கழிக்கப்பட்டிருந்தமையால் ரூபா 658,000 தொகையான வருமான வரி குறைவாக அறவிடப்பட்டிருந்தது.

(ii) 2008/09 மதிப்பீட்டு வருடத்தின் போது ஏனைய படியாகச் செலுத்தப்பட்ட ரூபா 10,741,650 தொகையான பணத்திலிருந்து ரூபா 1,080,000 தொகையானது ஊழியர் வாடகைக் கொடுப்பனவாக கழிக்கப்பட்டு எஞ்சிய தொகை வாடகைக்

கொடுப்பனவாக கழிக்கப்பட்டு எஞ்சிய தொகை இடமளிக்கப்படாத நிதியாக ரூபா 7,246,240 தொகை திருத்தப்பட்ட மதிப்பீட்டின் போது பெறுமதி சேர்க்கப்பட்ட வரி அறவிடப்பட்டிருந்த போதிலும் 2009/10 மதிப்பீட்டு வருடத்தின் போது வாடகைக் கொடுப்பனவாகச் செலுத்தப்பட்ட ரூபா 3,149,305 தொகையிலிருந்து சலுகையளிக்க முடியாத வாடகைக் கொடுப்பனவு தீர்மானிக்கப்பட்டு வரி அறவிடப்பட்டிருக்கவில்லை.

(iii) 2009/10 மதிப்பீட்டு வருடத்தில் வரிக் கணிப்பீட்டின் போது குத்தகை வாகனங்கள் விற்பனையில் ரூபா 6,054,823 தொகையான நட்டம் கழிக்கப்பட்டிருந்த போதிலும் அந்த நட்டத்தைக் கணிப்பீடு செய்யும் போது விற்பனை செய்யப்பட குத்தகை வாகனங்களுக்குரிய பெறுமானத் தேய்வு/ மூலதனப் படி கவனத்தில் கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(iv) 2009/10 மதிப்பீட்டு வருடத்தின் போது ரூபா 14,009,371 தொகையான கட்டிடம் விற்கப்பட்டிருந்தமை கணக்குகளுடன் அட்டவணை இலக்கம் 15 இல் காண்பிக்கப்பட்டிருந்த போதிலும் அந்தக் கட்டிடத்தை விற்பனை செய்ததால் பெறப்பட்ட பணம் சமர்ப்பிக்கப்பட்ட காசோட்டக்கூற்றில் குறிப்பிடப்படாதிருந்த துடன் அப்பணம் தொடர்பான விளக்கமளித்தல்களும் பெறப்பட்டிருக்க வில்லை.

| | |
|---|---|
| (ஊ) டின் இலக்கம் 114333506 | 2008/09 மதிப்பீட்டு வருடத்தின் போது வியாபாரத்திலிருந்து ரூபா 26,379,293 தொகையான நட்டம் பெறப்பட்டிருந்ததுடன் அந்த மதிப்பீட்டு வருடத்தின் கொடுக்கல் வாங்கல்களைப் பரிசோதனை செய்த போது பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.<br><br>(i) உரிய கம்பனியினால் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் புரள்வு ரூபா 577,285,154 தொகையாக இருந்த போதிலும் கொடுக்கல் வாங்கல்களுக்காகப் பேணப்பட்ட வங்கிக் கணக்கு பரிசோதனையின் போது தேறிய புரள்வு ரூபா 2,085,390,250 ஆக இருந்தது. பின்னர் மேற்கொள்ளப்பட்ட பரிசோதனையின் போது தேறிய புரள்வு ரூபா 1,533,845,911 ஆகக் கணிக்கப்பட்டு அதன் பிரகாரம் ரூபா 82,471,769 தொகையான இலாபத்தின் அடிப்படையில் 2008/09 மதிப்பீட்டு வருடத்திற்காக ரூபா 23,525,249 தொகையான வரியினை அறவீடு செய்வதற்கான மதிப்பீட்டு அறிவித்தல் விநியோகிக்கப்பட்டிருந்தது.<br><br>(ii) இந்தக் கம்பனியினால் 2003/04 மதிப்பீட்டு வருடத்திலிருந்து 2009/10 வரை வருமானம் தொடர்பான அறிக்கை சமர்ப்பிக்கும் போது 04 மாதங்கள் தொடக்கம் 13 மாதங்கள் வரையான தாமதம் ஏற்பட்டிருந்தது. |

**11.8 பந்தயம் மற்றும் சூதாட்ட வரி அதிகாரச்சட்டத்தை அமுல்படுத்துதல் மற்றும் வரி அறவிடல்**

(i) மீளாய்வாண்டில் மதிப்பீடு செய்யப்பட்ட பந்தயம் மற்றும் சூதாட்ட வரி வருமானம் ரூபா 312,000,000 ஆக இருந்ததுடன் ரூபா 289,175,098 தொகை அல்லது 93 சதவீதம் மாத்திரம் வருமானம் சேகரிக்கப்பட்டிருந்தது.

(ii) பந்தயம் மற்றும் சூதாட்ட வரி செலுத்துகின்ற வரியிறுப்பாளர்களுக்கு மேலதிகமாக பந்தயம் மற்றும் சூது தொழில் முயற்சிகள் அனேகமாக கொழும்பு மற்றும் அதனை அண்மித்த பிரதேசங்களில் அமுல்படுத்தப்படுகின்ற போதிலும் அந்த தொழில் முயற்சிகள் தொடர்பான புலனாய்வு திணைக்களத்தினால் மேற்கொள்ளப்பட்டமைக்கான சான்றுகள் காணப்படவில்லை.

மேலும் 2013 யூலை 13 ஆந் திகதிய செய்திப் பத்திரிகை வெளிப்படுத்தலின் பிரகாரம் சூதாட்ட வரி செலுத்தாத இரண்டு நிறுவனங்கள் தொடர்பாக வெளிப்படுத்தப்பட்டிருந்ததுடன் அதில் ஒரு நிறுவனம் 2009 ஆம் ஆண்டின் பின்னர் வரி செலுத்தாத நிறுவனமாகவும் இருந்தது.

(iii) வரி செலுத்துவதற்காகக் கிடைத்த ரூபா 5,000,000 தொகையான காசோலை 2010 நவம்பர் 02 ஆந் திகதி மதிப்பிழந்திருந்த போதிலும் அக்காசோலை பந்தயம் மற்றும் சூதாட்ட வரிப் பிரிவிற்கு 14 மாதங்களின் பின்னர் அதாவது 2012 சனவரி 02 ஆந் திகதி அனுப்பப்பட்டிருந்தது. அது கசினோ நிறுவனமாக செயற்படுகின்ற நிறுவனமா என உறுதிப்படுத்திக்கொள்ள முடியாதிருந்தது.

(iv) இது வரை பந்தயம் மற்றும் சூதாட்ட வரி தொடர்பாக வரியிறுப்பாளர்களிடமிருந்து தகவல்கள் திணைக்களத்தின் கணனி முறையில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

**11.9 செயற்திட்டத்தை நிறைவேற்றுவதில் தாமதம்/ நலிவுகள்**

2009 ஆம் ஆண்டின் போது ரூபா 1,584,898,000 கூட்டுத்தொகையான மதிப்பீட்டின் அடிப்படையில் உள்நாட்டு இறைவரிக் கட்டிடத்தை நவீனமயப்படுத்தும் ஒப்பந்தம் அரச பொறியியல் கூட்டுத்தாபனத்திற்கு வழங்கப்பட்டிருந்ததுடன் அந்த நவீனமயப்படுத்தல் செயற்பாடுகள் முறையான பிரகாரம் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. அது தொடர்பாக பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) கட்டிடத்தின் சில மாடிகளில் மழைநீர் வடிந்து வருகின்றமையினால் அலுவலக நடவடிக்கைகளை கொண்டுசெல்லும் போது கஷ்டம் ஏற்படுகின்றமை.

(ஆ) அம் மதிப்பீட்டில் உள்ளடக்கப்பட்ட ரூபா 190,000,000 தொகையான 09 மாடியினையுடைய வாகன தளத்தின் செயற்பாடுகள் 2014 யூன் 30 ஆந் திகதி வரையிலும் பூர்த்திசெய்யப்பட்டிருக்காமை.

(இ) பழுதுபார்த்தல் பூர்த்தி செய்யப்பட்டதன் பின்னர் பொருத்துதல், ஒப்பந்தத்தின் கீழ் வழங்கப்பட்ட அலுவலக உபகரணங்கள், இயந்திர உபகரணங்கள் முறையாகக் கையளிக்கப்படாமை.

(ஈ) நவீனமயப்படுத்தப்பட்ட கட்டிடத்தின் சில நிர்மாணங்கள், பொருத்திகள் மற்றும் வழங்கப்பட்ட உபகரணங்கள் உடைந்து விழுந்திருந்தமை.

## 11.10 வங்கிக் கணக்கு செயற்பாடுகளின் குறைபாடு

4224 ஆம் இலக்க வங்கிக் கணக்கில் 2012 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு 06 மாதங்களை விஞ்சிய ரூபா 480,556 தொகையான காசோலைகளுக்குப் பதிலாக புதிய காசோலைகள் 2013 நவம்பர் 08 ஆந் திகதி விநியோகிக்கப்பட்டிருந்த போதிலும் அந்த காசோலைகளும் செல்லுபடியற்றதாகியிருந்தது. அந்தக் காசோலைகள் தொடர்பாக 2014 மார்ச் 25 ஆந் திகதி வரையிலும் நிதிப் பிரமாணம் 396(இ) இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 11.11 முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

### (அ) உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின் பதுளை பிரதேச அலுவலகத்தை நவீனமயப்படுத்துதல்

இந்த பிரதேச அலுவலகத்தை நவீனமயப்படுத்துவதற்கான ஒப்பந்தம் ரூபா 1,499,378 தொகையில் 2012 ஒக்தோபர் 16 ஆந் திகதி கையளிக்கப்பட்டிருந்ததுடன் ஒப்பந்தச் செயற்பாடுகள் 2013 சனவரி 23 ஆந் திகதிக்கு முன்னர் பூர்த்தி செய்யப்பட்டு கையளிக்கப்பட வேண்டியிருந்த போதிலும் ஒப்பந்தக்காரரினால் உரிய ஒப்பந்தச் செயற்பாடுகள் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை.

**(ஆ) பிரதேச அலுவலகத்தை நடாத்திச் செல்வதற்காக வாடகை அடிப்படையில் கட்டிடத்தைப் பெறல்**

---

திணைக்களத்தினால் இரத்தினபுரி, களுத்துறை, யாழ்ப்பாணம், தம்புள்ள, மஹரகம மற்றும் கம்பஹா பிரதேச அலுவலகங்களை நடாத்திச் செல்வதற்காக வாடகை அடிப்படையில் கட்டிடம் பெறப்பட்டிருந்ததுடன் அது தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

(i) கட்டிடத்தை வாடகைக்குப் பெற்றுக்கொள்ளும் போது அலுவலகத்தை நடாத்திச் செல்வதற்கான தேவையான இடவசதிகள் தொடர்பான மாதிரியை உள்ளடக்கி அதன் பிரகாரம் கேள்வி கோரப்பட்டிருக்கவில்லை. அதனால் மேலதிக இடவசதிகள் திரும்பத்திரும்ப வாடகை செலுத்தப்பட்டு அந்தக் கட்டிடங்களை பெற்றுக்கொள்வதற்கு ஏற்பட்டிருந்தது. உதாரணம் :- தம்புள்ள மற்றும் மஹகரம பிரதேச அலுவலகங்கள்.

(ii) கம்பஹா மற்றும் தம்புள்ள பிரதேச அலுவலகங்களுக்காகப் பெறப்பட்ட கட்டிடத்திற்காக ஆரம்பத்தின் போது கைச்சாத்திடப்பட்ட வாடகை உடன்படிக்கை காலங்கடந்த பின்னர் புதுப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(iii) வாடகைக்குப் பெற்ற மஹகரம பிரதேச அலுவலகக் கட்டிடத்திற்காகச் செலுத்தப்பட்ட நீர் மற்றும் மின்சாரத்திற்கான பட்டியல்கள் காணப்படாதிருந்ததுடன் மொத்தக் கட்டிடத்திற்காகவும் அறவிடப்பட்ட நீர்க்கட்டணம் மற்றும் மின்சாரக் கட்டணத்திற்கான பட்டியல்களில் உரிமையாளர் சுட்டிக்காட்டியிருந்த பகுதி திணைக்களத்தினால் செலுத்தப்பட்டிருந்தது. அதனால் பிரதேச அலுவலகத்திற்காகவும் பயன்படுத்தப்பட்ட நீர் மற்றும் மின்சாரத்திற்காக மாத்திரம் கொடுப்பனவு செய்யப்பட்டதா என உறுதிப்படுத்தப்படவில்லை.

**(இ) வாடகை அடிப்படையில் பெற்றுக்கொள்ளப்பட்ட ரெட்வெயா கட்டிடத்திற்குரியதாகச் செலுத்தப்பட்ட முற்பணத்தைத் தீர்த்தல்**

---

திணைக்களத்தினால் 2000 மார்ச் தொடக்கம் அலுவலகத்தை நடாத்திச் செல்வதற்காக கொழும்பு 02, பார்க் வீதி, இலக்கம் 33 என்ற இடத்தில் காணப்பட்ட ரெட்வெயா கட்டிடத்தில் 64,500 சதுர அடி பரப்பளவு பெறப்பட்டிருந்தது. அந்தக் கட்டிடத்திற்கு வாடகை செலுத்துதல் தொடர்பாக பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) மாகாண மதிப்பீட்டாளரின் மாதாந்த வாடகை மதிப்பீட்டின் பிரகாரம் மத்தியப்படுத்தப்பட்ட குளிரூட்டல் வசதிகள், மோட்டார் வாகனங்கள் தரித்து வைக்கும் வசதி மற்றும் ஏனைய சகல அடிப்படை வசதிகளையும் வழங்கும் அடிப்படையில் ஆகக் கூடியது ஒரு சதுர அடிக்கு ரூபா 75 கொடுப்பனவு அங்கீகரிக்கப்பட்டிருந்ததுடன் ஒரு சதுர அடிக்கு ரூபா 75 மற்றும் ஏனைய வரியுடன் ரெட்வெயா கட்டிடத்தில் 64,500 சதுர அடியை வாடகைக்குப் பெற்றுக்கொள்வதற்கு அமைச்சரவைப் பத்திர இலக்கம் 021/306/0364/09 இன் மூலம் அங்கீகரிக்கப்பட்டிருந்தது. அதற்கு முரணாக மின்சாரக் கட்டணம், நீர்க்கட்டணம், மின்விசிறிகள் மற்றும் குளிரூட்டல், பராமரிப்புச் செலவினமாக 2009 மார்ச் தொடக்கம் 2010 யூன் வரை ரூபா 2,752,747 கூட்டுத்தொகையானது செலுத்தப்பட்டிருந்தது.

(ii) 2010 யூன் மாதத்தின் பின்னர் கட்டிடங்களிலிருந்து அகன்றிருந்த போதிலும் ரெட்வெயா கட்டிடத்திற்காக 2009 இன் போது செலுத்தப்பட்ட ரூபா 14,512,500 தொகையான முற்பணத் தொகை 2012 திசெம்பர் 31 ஆந் திகதி அதாவது 2 1/2 வருட அளவிலான காலம் நிறுத்தி வைக்கப்பட்டதன் பின்னர் மீளச் செலுத்தப்பட்டிருந்தது. இதற்கு மேலதிகமாக ஏனைய கட்டிடத்திற்காக செலுத்தப்பட்ட ரூபா 18,900,000 தொகையான முற்பணத் தொகையிலிருந்து ரூபா 10,489,500 தொகை 2 1/2 வருடத்திற்காகவும், ரூபா 8,410,500 தொகை 3 1/2 வருடத்திற்காகவும் நிறுத்திவைக்கப்பட்டதன் பின்னர் மீளச் செலுத்தப்பட்டிருந்தது. இந்த நிலைமை அரசாங்க நிதி முறையற்ற பாவனைக்கு இடமளிக்கப்பட்டதாக கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

## 11.12 மோசடியான வடிவிலுள்ள கொடுக்கல் வாங்கல்கள்

திணைக்களத்தின் கணனி முறைமையின் குறிப்புக்கள் போலியாக மாற்றப்படுவதன் ஊடக ஏழு (07) வரிக் கோவைகளில் ரூபா 184,665,975 தொகை மற்றும் மேலும் ஒரு வரிக் கோவையில் ரூபா 19,242,377 தொகை கற்பனையாக மேற்கொள்ளப்பட்டிருந்தமை மீளாய்வாண்டின் போது உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகத்தினால் பொலிஸ்மா அதிபருக்கு அறிக்கையிடப்பட்டிருந்தது.

இது தொடர்பாக திணைக்களத்தினால் ஆரம்ப புலனாய்வு மேற்கொள்ளப்பட்டு இடைக்கால அறிக்கை 2013 சனவரி 09 ஆந் திகதி ஆணையாளர் நாயகத்திற்கு கையளிக்கப்பட்டிருந்தது. இந்த போலியானவைகளுக்காகவும் விஷேடமாக கணனி முறைமையை செயற்படுத்துவதிலுள்ள குறைபாடு தாக்கமளித்திருந்தது.

## 11.13 மனிதவள முகாமைத்துவம்

**அங்கீகரித்த பதவியணியும் உள்ளபடியான பதவியணியும்**

2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பதவியணி மீதான நிலை பின்வருமாறு.

| | ஊழியர் வகை | அங்கீகரித்த பதவியணி | உள்ளபடியான பதவியணி | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| (அ) | சிரேஷ்ட நிலை | 894 | 755 | 139 |
| (ஆ) | மூன்றாம் நிலை | 1024 | 548 | 476 |
| (இ) | இரண்டாம் நிலை | 664 | 531 | 133 |
| (ஈ) | ஆரம்ப நிலை | 397 | 366 | 31 |
| | மொத்தம் | **2979** | **2200** | **779** |

(i) சிரேஷ்ட நிலையிலும் இரண்டாம் நிலையிலும் 615 பதவிகள் அல்லது 32 சதவீத வெற்றிடம் காணப்பட்டமை திணைக்களத்தின் வரி முகாமைத்துவம் இக்கட்டான நிலைக்கு உள்ளாவதற்கான காரணமாக இருந்தது.

(ii) உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திற்காக புதிய சேவை பிரமாணக் குறிப்பு 2012 ஒக்தோபர் 01 ஆந் திகதி தொடக்கம் அமுல்படுத்தப்பட்டிருந்த போதிலும் அதன் செயற்பாடுகள் பூர்த்தி செய்யப்படாதிருந்தமையும் வெற்றிடம் காணப்படுவதற்கான காரணமாக இருந்தது.

## 12. ஒதுக்கீட்டுத் தலைப்பு 247 – இலங்கை சுங்கம்

### 12.1 கணக்காய்வின் நோக்கெல்லை

இலங்கை சுங்கத்தின் 2012 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிஅறிக்கைகள், இணைக்கக்கூற்றுகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய அறிக்கைகளை உள்ளடக்கிய ஒதுக்கீட்டுக் கணக்குகள் மீதான கணக்காய்வு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2014 பெப்ரவரி 21 ஆந் திகதி இலங்கை சுங்கப் பணிப்பாளர் நாயகத்திற்கு அனுப்பிவைக்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக்கூற்றுக்கள் சம்பந்தமான கணக்காய்வு அவதானிப்புக்கள், கருத்துரைகள் மற்றும் கண்டுபிடிப்புக்கள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகளினதும் இணக்கக்கூற்றுக்களினதும் மீளாய்வின் அடிப்படையிலும் கொடுக்கல் வாங்கல்களின் மாதிரிகளினது போதியளவு செவ்வை பார்த்தலின் அடிப்படையிலும் எழுந்தனவேயாகும். அவ்வாறான மீளாய்வினதும் செவ்வை பார்த்தலினதும் நோக்கெல்லையும் அளவும் எனக்குக் கிடைப்பதற்குள்ள பதவியணியினர், ஏனைய மூலவளங்கள், நேரம் என்பவற்றிற்கமைய இயலுமானளவு விரிவான கணக்காய்வை உள்ளடக்கக் கூடியவாறிருந்தது.

### 12.2 கணக்குகள் மற்றும் இணக்கக்கூற்றுக்கள் சம்பந்தமாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்புக்கள்

ஒதுக்கீட்டுக் கணக்குகள் மற்றும் இணக்கக்கூற்றுக்களை இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 உறுப்புரைகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், அரசாங்க நிதி மற்றும் நிருவாக பிரமாணங்களுக்கிணங்க பேணுதல், தயாரித்தல் மற்றும் நியாயபூர்வமாகச் சமர்ப்பித்தல் என்பன பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பாகும். மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயபூர்வமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாட்டைத் திட்டமிடுதல், அமுல்படுத்துதல் மற்றும் பராமரித்தல் போன்றன இப்பொறுப்பில் உள்ளடங்குகின்றன.

**12.3 கணக்காய்வு அவதானிப்புக்கள்**

2012 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறான நிதி அறிக்கைகள் மற்றும் ஏடுகளின் இலங்கை சுங்கத்தின் ஒதுக்கீட்டுக் கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் இந்த அறிக்கையின் (அ) மற்றும் (ஒ) வரையிலுமான பொதுவான அவதானிப்புக்கள் மற்றும் கீழேயுள்ள 12.4 தொடக்கம் 12.14 வரையுள்ள பந்திகளில் குறிப்பிடப்பட்ட பிரதான கணக்காய்வு அவதானிப்புக்கள் தவிர திருப்திகரமானதாக தயாரிக்கப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.

**(அ) கணக்குகளைச் சமர்ப்பித்தல்**

இலங்கை சுங்கத்தினால் 2013 மார்ச் 31 ஆந் திகதி வரையும் பின்வரும் கணக்குகள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

| தலைப்பு/ வருமானக் குறியீடு/ விடய இலக்கம் | கணக்கின் பெயர் |
|---|---|
| 24701 | அரச உத்தியோகத்தர்களின் முற்பணக் கணக்குகள் தொடர்பான இணக்கக்கூற்று |
| 7000-0-0-24702 | கைப்பற்றப்பட்ட மற்றும் அரசுடமையாக்கப்பட்ட பொருட்கள் தொடர்பான செலவின முற்பணக்கணக்கு |
| 6000/0000/00/00/0/0015/0127 | நானாவித வைப்புக் கணக்கு |
| 6000/0000/00/0006/0062 | சுங்க உத்தியோகத்தர்களின் நன்கொடை நிதியம் |

**(ஆ) ஏடுகள் மற்றும் புத்தகங்கள் பேணப்படாமை**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(i) ரூபா 647,363,760 பெறுமதியான 107 கொடுப்பனவு உறுதிச்சீட்டுக்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) 2012 ஆம் ஆண்டிற்குரிய செயலாற்றல் அறிக்கை, இழப்பு மற்றும் நட்டப் பதிவேடு, 2012 ஆம் ஆண்டிற்கு முன்னர் ஏற்பட்ட வாகன விபத்துக்களின் கோவை, கைப்பற்றப்பட்ட மற்றும் அரசுடைமையாக்கப்பட்ட பொருட்கள் தொடர்பான முற்பணக் கணக்கிற்குரிய சம்பவக்கோவை, ஏனைய நிறுவனங்களுக்கு வழங்கப்பட்ட சொத்துக்கள் மற்றும் மனித வளங்கள் தொடர்பான தகவல்கள் மற்றும் வெளி நிறுவனங்களுக்குரிய சொத்துக்களையும் மனித வளங்களையும் பயன்படுத்துதல் தொடர்பான தகவல்கள் போன்ற தேவையான சான்றுகள் இலங்கை சுங்கத்தினால் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படாமையினால் கணக்காய்வின் போது திருப்திகரமானதாக சான்றுறுதிப்படுத்த முடியாதிருந்தது.

(iii) இலங்கை சுங்கத்திற்கு மீளாய்வாண்டின் போது சமர்ப்பிக்கப்பட்ட 26 கணக்காய்வு ஐய வினாக்களுக்கும் முன்னைய ஆண்டின் போது வழங்கப்பட்ட 34 கணக்காய்வு ஐய வினாக்களுக்கும் 2014 ஏப்ரல் 30 ஆந் திகதி வரையிலும் பதில் அளிக்கப்பட்டிருக்கவில்லை.

**(இ) பாதீட்டு முரண்கள்**

(i) 05 செலவின விடயங்களுக்கு ரூபா 106,550,000 கூட்டுத்தொகையான நிதியேற்பாடு ஒதுக்கப்பட்டிருந்ததுடன் அதில் ரூபா 40,393,044 கூட்டுத்தொகையினைப் பயன்படுத்தியதன் பின்னர் ரூபா 66,156,956 சேமிப்பு அவதானிக்கப்பட்டது. அந்த சேமிப்பு ஒவ்வொரு செலவின விடயத்திற்காகவும் ஒதுக்கப்பட்ட தேறிய ஏற்பாட்டில் 50 சதவீதத்திற்கும் 75 சதவீதத்திற்கும் இடையிலான சதவீதத்தைக் கொண்டிருந்தது. செலவின விடயங்களுக்காக மிகை ஏற்பாடுகள் ஒதுக்கப்பட்டமையினால் இந்த சேமிப்பு ஏற்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.

(ii) 2012 நவம்பர் 26 ஆந் திகதிய 227/2012 ஆம் இலக்க அரசாங்க கணக்குகள் சுற்றுநிருபத்தின் பிரகாரம் நடைமுறையல்லாச் சொத்துக்களின் அசைவு அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டிராததுடன் அதன் காரணமாக இலங்கை சுங்கத்திற்குச் சொந்தமான நிலையான சொத்துக்களின் கிரயங்கள் கணக்குகளில் வெளிப்படுத்தப்பட்டிருக்க வில்லை.

**(ஈ) எரிபொருள் மற்றும் மின்சாரச் செலவின் முகாமைத்துவம்**

(i) எரிபொருள் மற்றும் மின்சாரச் செலவினம் தொடர்பான 2012 பெப்ரவரி 16 ஆந் திகதிய 156 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றுநிருபத்தில் வழங்கப்பட்ட ஆலோசனைகளுக்கு முரணாக மின்சார செலவின விடயத்திற்காக நிதிப் பிரமாணம் 66 இன் மூலம் ரூபா 42,033,000 தொகையான நிதியேற்பாடு மீளாய்வாண்டின் போது மாற்றப்பட்டிருந்தது.

(ii) சுற்றுநிருபத்தின் 03 ஆம் பந்தியின் பிரகாரம் நிதியேற்பாட்டு எல்லைக்குள் செலவின முகாமைத்துவத்தைச் செய்யக்கூடியதாக இருந்த போதிலும் நிதியேற்பாட்டிற்கு மேலதிகமாக நன்கொடை நிதியத்தின் கீழ் உள்ள எரிபொருள் நிதியத்திலிருந்தும் எரிபொருள் செலவினமாக ரூபா 18,577,015 தொகை செலவிடப்பட்டிருந்தது.

**(உ) தேசத்திற்கு மகுடம் அபிவிருத்திக் கண்காட்சியின் செலவினம்**

(i) 2011 யூலை 29 ஆந் திகதிய 153 ஆம் இலக்க தேசிய பாதீட்டு சுற்றுநிருபத்தின் 07 ஆம் பந்தியின் பிரகாரம் தேசத்திற்கு மகுடம் அபிவிருத்திக் கண்காட்சி நிகழ்ச்சித்திட்டத்திற்காக தனியான செலவின விடயமொன்று 2012 ஆம் ஆண்டின் மதிப்பீட்டின் கீழ் உரியவாறு காண்பிக்கப்பட்டிருந்த போதிலும் அவ்வாறு நடவடிக்கை எடுக்கப்படாது 274-1-1-2001 ஆம் இலக்க (கட்டிட நிர்மாணம்) செலவின விடயத்தின் கீழ் ரூபா 2,195,898 தொகையான செலவினம் மேற்கொள்ளப்பட்டிருந்தது.

(ii) தேசத்திற்கு மகுடம் கண்காட்சிக் கட்டிடத்திற்காக செலவிடப்பட்ட ரூபா 1,097,949 தொகையை 02 நிறுவனங்களிலிருந்து அறவிடப்பட வேண்டியிருந்த போதிலும் 2013 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் அத்தொகை அறவிடப்பட்டிருக்கவில்லை.

**(ஊ) கட்டுநிதிக் கணக்கு**

2014 ஏப்ரல் 30 ஆந் திகதியில் உள்ளவாறு தீர்க்கப்படாத கட்டுநிதிக் கணக்கு மீதி ரூபா 4,751,600 ஆக இருந்தது.

**(எ) நானாவித வைப்புக் கணக்கு**

2012 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு வைப்புக் கணக்கு மீதி ரூபா 6,384,478,190 ஆக இருந்தது. அது தொடர்பாக வைப்புப் பேரேடுகளில் இரண்டு வருடங்களை விஞ்சிய சகல வைப்புக்களுக்காகவும் அரையாண்டு பட்டியல் தயாரித்தல், சமப்படுத்திய கணக்கைப் பேணுதல், மீதியை முன்கொண்டு செல்லல் மற்றும் மாதாந்த வைப்புப் பொழிப்பைத் தயாரித்தல் போன்றவை தொடர்பாக நிதிப் பிரமாணம் 571(1), (3), (4) மற்றும் (5) ஆம் பிரிவுகளில் உள்ளடக்கப்பட்ட சில ஏற்பாடுகளைப் பின்பற்றப்பட்டிருக்கவில்லை. பொது வைப்புக் கணக்கில் நானாவித வைப்புப் பெறுவனவு மற்றும் கொடுப்பனவுகளுக்குரிய பயன்பாட்டுப் பேரேட்டில் காண்பிக்கப்பட்ட தனிப்பட்ட மீதிகளின் கூட்டுத்தொகை மற்றும் கணக்குகளில் காண்பிக்கப்பட்ட தனிப்பட்ட மீதிகளின் கூட்டுத்தொகைகளுக்கிடையே முறையே ரூபா 1,350,464,983 தொகை மற்றும் ரூபா 344,636,927 தொகையான வேறுபாடுகள் அவதானிக்கப்பட்டது. இது தொடர்பாக பின்வரும் வேறுபாடுகள் அவதானிக்கப்படுகின்றது.

(i) ரூபா 715,050 தொகை தண்டப்பணம் தண்டப்பண வைப்புப் பேரேட்டில் கொடுப்பனவுகளில் மொத்தக் கூட்டுத்தொகை கழிக்கப்பட்டு பிழையாகக் காண்பிக்கப்பட்டிருந்ததுடன் கொழும்பு தண்டப்பணக் கணக்கில் செலவு வைக்கப்பட வேண்டிய ரூபா 1,700,000 தொகை குறிப்பிட்டிருக்கவில்லை.

(ii) 2012 மார்ச் மாத தண்டப்பண பெறுவனவுகளின் கூட்டுத்தொகை ரூபா 42,736,101 ஆக இருந்த போதிலும், அது பேரேட்டில் ரூபா 60,000 தொகை அதிகரித்துக் காண்பிக்கப்பட்டிருந்ததுடன் கணக்கில் ரூபா 100,000 தொகை குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(iii) 02 வருடங்களை விஞ்சிய வைப்புப் பணங்கள் அரசாங்க வருமானத்தில் செலவு வைக்கப்பட்டு வைப்புப் பேரேட்டில் வரவு வைக்கும் போது அந்த வரவு வைத்தல்கள் வைப்புப் பேரேடுகளில் சரியாக வரவு வைக்கப்படாத சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன. அவ்வாறான இரண்டு சந்தர்ப்பங்களினதும் கூட்டுப் பெறுமதி ரூபா 1,057,112 ஆகும்.

(iv) ஓ.ஈ.பீசிஎச்சீ வைப்புக் கணக்கில் (Outpanel Examination – Bulk Cargo Handling Charges) காணப்பட்ட மீதியினை விஞ்சி நடப்பாண்டின் போது கொடுப்பனவு செய்யப்பட்டதாக அறிக்கையிடப்பட்டதன் காரணமாக ஆண்டின் இறுதியில் அந்தக் கணக்கின் மீதி ரூபா 269,450

தொகையான வரவு மீதிக்கு உள்ளாகியிருந்தது. அது அசாதாரனமான நிலைமையாக இருந்தமை அவதானிக்கப்பட்டது.

(ஏ) **வருமான கணக்கு**

-------------------------------

சமர்ப்பிக்கப்பட்ட ஒன்பது கணக்கின் பிரகாரம் ரூபா 11,455,193,303 தொகையான வருமான நிலுவை காணப்பட்டதுடன் அந்த நிலுவை வருமானங்களிலிருந்து ரூபா 5,563,026,761 தொகை மூன்று வருடங்களுக்கு மேற்பட்ட காலம் காணப்பட்ட போதிலும் ரூபா 4,315,649,690 தொகை 01 ஆண்டு தொடக்கம் 03 ஆண்டுகள் வரையான காலப்பகுதிக்குரியதாக இருந்தது. அந்த நிலுவையாக இருந்த வருமானத்தை அறவீடு செய்யும் பின் தொடர் நடவடிக்கைகள் நலிவான நிலையில் காணப்பட்டது. நிதிப் பிரமாணம் 128(2) இன் பிரகாரம் 2013 சனவரி 31 ஆந் திகதியில் உள்ளவாறு சமர்ப்பிக்கப்பட வேண்டிய நிலுவை வருமான அறிக்கை 2013 ஆகஸ்ட் 12 ஆந் திகதி கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. சமர்ப்பிக்கப்பட்ட நிலுவை வருமான அறிக்கை மற்றும் கணக்குகளுக்கிடையே ரூபா 8,970 தொகையான வேறுபாடு அவதானிக்கப்பட்டதுடன் அதற்கான காரணம் விளக்கப்பட்டிருக்கவில்லை. 2011 ஆம் ஆண்டிற்கு ஒப்பீடாக 2012 ஆம் ஆண்டின் நிலுவை வருமானம் ரூபா 1,526,850,254 இனால் அல்லது 15.38 சதவீதத்தினால் அதிகரித்திருந்தது. நிலுவை வருமானத்தில் 87.25 சதவீதம் அல்லது ரூபா 9,995 தொகையான வருமானம் குறியீட்டு இலக்கம் 10.01.01.00, 10.01.04.00 அல்லது 10.01.05.01 இற்குரித்தான முறையே இறக்குமதி வரி, துறைமுக மற்றும் விமான நிலைய அபிவிருத்தி வரி மற்றும் இறக்குமதி செஸ்வரி அளவாக இருந்தது. இந்த நிலுவை வருமானம் அரசாங்க நிறுவனங்களிலிருந்து கிடைக்க வேண்டிய நிலுவை வருமானமாக இருந்தமையும் நிதியேற்பாட்டைப் பெற்று தீர்ப்பதற்குரிய நிறுவனங்கள் திறைசேரிக்கும் அறிவித்து அனுப்பப்பட்டிருந்தமையும் கணக்காய்விற்கு அறிக்கையிடப்பட்டிருந்தது. எனினும் நிலுவை வருமானத்தில் 2008 ஆம் ஆண்டிலிருந்து கொண்டுவரப்படுகின்ற மீதியும் உள்ளடக்கப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) வருமானக் குறியீட்டு இல. 10.02.05.03 இற்குரியதான ரூபா 891,205,213 தொகையான நிலுவை கனிய எண்ணெய் உற்பத்தி வரி 2008, 2009 ஆம் ஆண்டுகளுக்குரியதாக இருந்ததுடன் இலங்கை கனிய எண்ணெய்க் கூட்டுத்தாபனத்திற்கு நிலுவைப் பணம் செலுத்தியதாக

காண்பிக்கப்பட்டமை அறிக்கையிடப்பட்டிருந்த போதிலும் 2013 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் தீர்க்கப்பட்டிருக்கவில்லை.

(ii) வருமானக் குறியீட்டு இலக்கம் 10.02.05.02 இற்குரிய ரூபா 172,781,322 தொகையான மதுபான வரி உரிய நிறுவனத்தினால் செலுத்தப்படாதிருந்த காரணத்தினால் காணப்பட்ட நிலுவை வருமானமாக இருந்ததுடன் மீளாய்வாண்டின் போது இந்த நிலுவை வருமானத்தில் எத்தொகையும் கிடைத்திருக்கவில்லை.

(iii) வருமானக் குறியீட்டு இல. 10.02.05.04 இற்குரிய ரூபா 343,691,886 தொகையான நிலுவை மோட்டார் வாகன வரித்தொகை வரி அறவிடுவதில் காலதாமதம் ஏற்பட்டதன் அடிப்படையில் அரசாங்க நிறுவனங்களுக்கு பொதுத் திறைசேரியின் அங்கீகாரத்துடன் வாகனம் விடுவிக்கப்பட்டமையினால் நிலுவையாக இருந்த காரணத்தினால் காணப்படுகின்ற நிலுவை வருமானமாக இருந்தமை அவதானிக்கப்பட்டது.

(iv) உற்பத்தி வரிப் பிரிவின் அறிக்கையின் பிரகாரம் ரூபா 31,554,740 தொகையான நிலுவை உற்பத்தி வரியை அறவீடு செய்வதற்காக 228 நிறுவனங்களுக்கு கையளிக்கப்பட்ட வழக்குகள் தொடர்பான தீர்ப்பின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படாமையின் காரணமாக அந்த வரித்தொகை மற்றும் அவைகளுக்கு விதிக்கப்பட்ட தண்டப்பணம் என்பன அரசாங்க வருமானத்திற்கு உரித்தற்றிருந்தது.

**(ஐ) அரச உத்தியோகத்தர்களின் முற்பணக் கணக்குகள் தொடர்பான இணக்கக்கூற்றுக்கள்**

---

விடய இல. 24701 இன் அரச உத்தியோகத்தர்களின் முற்பணக் கணக்குகள் தொடர்பான 2012 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறான இணக்கக் கூற்றுக்களின் பிரகாரம் அத்திகதியில் உள்ளவாறு அறவீடுகள் நிலுவையாக இருந்த மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 8,304,943 ஆக இருந்ததுடன் அந் நிலுவை மீதியினை அறவீடு செய்வதற்கான பின்தொடர் நடவடிக்கைகள் பலவீனமான நிலையில் காணப்பட்டதுடன் பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன

(i) இடமாற்றம் பெற்றுச் சென்ற பன்னிரெண்டு உத்தியோகத்தர்களிடமிருந்து ரூபா 1,054,001 கூட்டுத்தொகையான கடன் மீதி நிதிப் பிரமாணம் 485(4) மற்றும் 2004 ஒக்தோபர் 11 ஆந் திகதிய 118 ஆம் இலக்க தேசிய பாதீட்டுச் சுற்றுநிருபத்தின் 1.1.6 மற்றும் 1.1.7 ஆம் பிரிவுகளின் பிரகாரம் தீர்த்து வைக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) நீண்ட காலமாக முன்கொண்டுவரப்படுகின்ற ஓய்வு பெற்ற, மரணித்த, வேலை நீக்கம் செய்யப்பட்ட மற்றும் சேவையை விட்டுச் சென்ற உத்தியோகத்தர்களிடமிருந்து நிலுவைக் கடனை அறவீடு செய்தல் தொடர்பான பின் தொடர் நடவடிக்கைகள் நலிவான நிலையில் காணப்பட்டது. இது தொடர்பாக தாபன விதிக் கோவையின் XXIV ஆம் அத்தியாயத்தின் 04 ஆம் பிரிவின் பிரகாரம் நடவடிக்கை எடுத்திருந்தமை அவதானிக்கப்படவில்லை.

(iii) 2011 திசெம்பர் 30 ஆந் திகதிய 155 ஆம் இலக்க தேசிய பாதீட்டு சுற்றறிக்கையின் 04 ஆம் பந்தியின் ஆலோசனைகளுக்கு முரணாக ரூபா 250,000 இனை விஞ்சி 16 உத்தியோகத்தர்களுக்கு இடர்கடனாக ரூபா 5,605,515 கூட்டுத்தொகையானது செலுத்தப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.

(iv) ஒரு உத்தியோகத்தரினால் இரண்டு இடங்களில் இரண்டு இடர்கடன் பெற்றமையின் காரணமாக மேலதிமாகச் செலுத்தப்பட்ட ரூபா 114,345 தொகையான கடன் தொகையை அறவீடு செய்வதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(v) சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகளுடன் ஆண்டின் போதான மொத்த வரவு வைத்தல்கள் மற்றும் மொத்த செலவு வைத்தல்கள் தொடர்பான பொழிப்பு அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(vi) தனிப்பட்ட மீதி வகைப்படுத்தல் பொழிப்பின் கூட்டுத்தொகை மற்றும் கட்டுப்பாட்டுக் கணக்குகளின் மீதிகளுக்கிடையே வேறுபாடான ரூபா 28,867 தொகைக்கான காரணம் கணக்காய்விற்கு வெளிப்படுத்தப்பட்டிருக்க வில்லை.

**(ஒ) ஏனைய முற்பணக் கணக்கு**

கைப்பற்றப்பட்ட மற்றும் அரசுடைமையாக்கப்பட்ட பொருட்கள் தொடர்பான செலவினத்தின் முற்பணக் கணக்கு தொடர்பாக ரூபா 2,517,016 தொகையான பெறுவனவுகளில் உள்ளடங்கியுள்ள 156 மீதிகளுக்குரிய ரூபா 645,894 தொகை அல்லது பெறுவனவுகளில் 25.66 சதவீதமான மேலதிக பெறுவனவுகள் அறிக்கையிடப்பட்டிருந்தது. அந்த தொகையிலிருந்து ரூபா 2,100,219 தொகை 2007 ஆம் ஆண்டு தொடக்கம் 2011 ஆம் ஆண்டு வரையான காலத்திற்குரிய மேலதிக பெறுவனவுகள் அவதானிக்கப்பட்டது. பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) முற்பணம் பெறப்பட்ட ஏதாவது சம்பவம் தொடர்பாக சுங்கப் பிழையின்றியிருந்தமை அவதானிக்கப்பட்டதன் பின்னர் புலனாய்வு நடவடிக்கைகள் நிறுத்தப்படும் சந்தர்ப்பங்களின் போது அவ்வாறான சந்தர்ப்பங்களுக்காகப் பெறப்பட்ட முற்பணங்களிலிருந்து நட்டத்தினை ஈடுசெய்யக்கூடிய முறைமையொன்று அறிமுகப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ii) சில புலனாய்வுக் கோவைகள் கணக்காய்விற்கு வழங்கப்படாமையின் காரணமாக ரூபா 13,136,701 தொகையான தீர்க்கப்படாத முற்பண மீதியை திருப்திகரமானதாக சான்றுறுதிப்படுத்த முடியாதிருந்தது.

## 12.4 நல்லாளுகையும் கணக்களிப்பொறுப்பும்

### 12.4.1 கூட்டிணைந்த திட்டம்

2010 மார்ச் 10 ஆந் திகதிய பீஎப்/ஆர்/2/2/3/5(4) ஆம் இலக்க அரச பொது நிதிப்பணிப்பாளர் நாயகத்தின் கடிதத்தின் பிரகாரம் 2010 ஆம் ஆண்டு தொடக்கம் ஆகக் குறைந்தது தொடர்ந்து வரும் 03 வருடங்களுக்கான கூட்டிணைந்த திட்டம் இலங்கை சுங்கத்தினால் ஆண்டின் ஆரம்பத்தில் தயாரிக்கப்பட வேண்டிய போதிலும் அத்திட்டம் 2012 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

### 12.4.2 வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டம்

மேலே 12.4.1 இல் கூறப்பட்ட அரசாங்க நிதிப்பணிப்பாளர் நாயகத்தின் கடிதத்தின் பிரகாரம் தயாரிக்கப்படுகின்ற கூட்டிணைந்த திட்டத்திற்கு இணங்க 2010 மற்றும் அதற்குப் பின்னரும் இலங்கை சுங்கத்தினால் வருடாந்த செயல் நடவடிக்கைத்திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. மீளாய்வாண்டின் போதிலும் செயல் நடவடிக்கைத்திட்டம்

பெயரளவில் தயாரிக்கப்பட்டிருந்த போதிலும் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தமை அவதானிக்கப்படவில்லை.

**12.4.3 வருடாந்த செயலாற்றல் அறிக்கை**

மேலே 12.4.1 பந்தியில் குறிப்பிடப்பட்ட அரச பொது நிதிப்பணிப்பாளர் நாயகத்தின் கடிதத்தில் குறிப்பிடப்பட்ட முறையே 2002 செப்தெம்பர் 12 ஆந் திகதிய மற்றும் 2004 பெப்ரவரி 20 ஆந் திகதிய 402 மற்றும் 402(1) ஆம் இலக்க அரச நிதிச் சுற்றுநிருபத்தின் பிரகாரம் திணைக்களத்தினால் தயாரிக்கப்பட வேண்டிய வருடாந்த செயலாற்றல் அறிக்கை நிதி ஆண்டு முடிவடைந்து 150 நாட்களுக்குள் தலைமை அதிபதிக்கான பிரதியுடன் பாராளுமன்றத்தில் முன்வைக்கப்படவேண்டிய போதிலும் மீளாய்வாண்டிற்கான செயலாற்றல் அறிக்கை 2013 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் பாராளுமன்றத்தில் முன்வைக்கப்பட்டிருக்கவில்லை.

**12.4.4 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழக் கூட்டத்தை நடாத்துதல்**

2012 ஆம் ஆண்டிற்காக 03 குழக் கூட்டங்கள் மாத்திரம் நடாத்தப்பட்டிருந்தன.

**12.5 சொத்துக்கள் முகாமைத்துவம்**

**12.5.1 செயற்பாடற்ற மற்றும் குறைவான பயன்பாடுடைய சொத்துக்கள்**

கீழே காண்பிக்கப்பட்ட சில சொத்துக்கள் செயற்பாடற்று அல்லது குறைவான பயன்பாட்டுடன் காணப்படுகின்றமை தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளின் போது அவதானிக்கப்பட்டது.

(அ) கொள்கலன் பரிசோதனை நடவடிக்கைகளுக்காக 7.03 சதவீத வருடாந்த வட்டி வீதத்தின் கீழ் இலங்கை வங்கியிலிருந்து பெறப்பட்ட ஐக்கிய அமெரிக்க டொலர் 15,600,000 தொகையான கடன் பணம் செலவிடப்பட்டு கொள்வனவு செய்யப்பட்டிருந்த நான்கு (04) ஸ்கேன் இயந்திரங்களும் குறைவான பயன்பாட்டுடன் காணப்பட்டது.

(ஆ) இலங்கை சுங்கத்தினால் ரூபா 859,500 தொகை செலவில் கொள்வனவு செய்யப்பட்ட ஏழு (07) கைவிரல் அடையாள இயந்திரங்கள் பயன்பாட்டிற்கு எடுக்கப்பட்டிருக்கவில்லை. இந்த கைவிரல் அடையாள இயந்திரத்திற்காக வருடாந்தம் ரூபா 153,380 தொகையான சேவைக்கட்டணமும்

செலவிடப்பட்டிருந்த போதிலும் அந்த இயந்திரம் பாவனைக்கு எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**12.5.2 வருடாந்த பொருள் மெய்மையாய்வை நடாத்துதல்**

2010 திசெம்பர் 17 ஆந் திகதிய பீஎப்/பொருள் மெய்மையாய்வு/01 ஆம் இலக்க அரச பொது நிதிப் பணிப்பாளர் நாயகத்தின் கடிதத்தின் மூலம் திருத்தப்பட்ட 2009 திசெம்பர் 09 ஆந் திகதிய 441 ஆம் இலக்க அரச பொது நிதிச் சுற்றுநிருபத்தின் பிரகாரம் 2012 இன் வருடாந்த பொருள் மெய்மையாய்வு நடாத்தப்பட்டு அந்த அறிக்கை 2013 மார்ச் 31 ஆந் திகதிக்கு முன்னர் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டியிருந்த போதிலும் இலங்கை சுங்கத்தினால் அதன் முப்பத்தைந்து பிரிவுகளுக்குரிய பொருள் மெய்மையாய்வு அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

**12.5.3 வெளித்தரப்பினர்களுக்கு வழங்கப்பட்டுள்ள சொத்துக்கள்**

இலங்கை சுங்கத்தினால் மூன்று நிலக்கூறுகள் கரையோரப் பாதுகாப்புத் திணைக்களத்தின் வெளித்தரப்பினர்களுக்கு முறையற்ற வகையில் விடுவிக்கப்பட்டிருந்தது.

**12.5.4 தீர்க்கப்படாத பொறுப்புக்கள்**

இலங்கை சுங்கத்தினால் 2012 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு தீர்க்கப்படாத 01 வருடத்திற்குக் குறைந்த பொறுப்புக்கள் ரூபா 76,817,356 ஆக இருந்தது.

**12.6 இணங்காமைகள்**

**(அ) சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் என்பவற்றுடனான இணங்காமைகள்**

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாண ஏற்பாடுகள் என்பனவற்றுடன் இணங்காத சந்தர்ப்பங்கள் பகுப்பாய்வு செய்து கீழே தரப்படுகின்றன.

| **சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு** | **இணங்காமைகள்** |
| --- | --- |
| **(i) நியதிச்சட்ட ஏற்பாடுகள்** | |
| i. 2011 இன் 22 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரி (திருத்தப்பட்ட) அதிகாரச்சட்டத்தினால் திருத்தப்பட்ட 2006 இன் 10 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரி அதிகாரச்சட்டம் | சில உத்தியோகத்தர்களுக்குச் செலுத்தப்படுகின்ற வெளியார் கொள்கலன் கட்டணம், பரிசு வழங்குதல் போன்றவை அவர்களினால் செலுத்த வேண்டிய உழைக்கும் போதே செலுத்தும் வரி கணிப்பீடு செய்யும் போது கவனத்திற்கு கொள்ளப்பட்டிருக்கவில்லை. |
| ii. 2008 சனவரி 01 ஆந் திகதிய 1530/13 ஆம் இலக்க இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அதிவிஷேட வர்த்தமானி அறிவித்தல் | ரூபா 25,000 இற்கு மேற்பட்ட கொடுப்பனவுகளுக்காக ரூபா 25 தொகையான முத்திரைக் கட்டணம் அறவிடப்படாத 51 சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன. |
| **(ii) தாபன விதிக் கோவை** | |
| XII ஆம் அத்தியாயத்தின் 1 ஆம் பிரிவு, XIV ஆம் அத்தியாயத்தின் 2.1, 4.1, 28.6.1 ஆம் பிரிவுகள் மற்றும் XLVIII ஆம் அத்தியாயத்தின் 13.2 ஆம் பிரிவு | விடுமுறைப் பதிவேடு, பிரயாணச் செலவுகள், இணைந்த படிகள், ஒழுக்காற்று விசாரணை போன்றவை தொடர்பான ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படாதிருந்த சந்தர்ப்பங்கள் காணப்பட்டன. |
| **(iii) நிதிப் பிரமாணம்** | |
| நிதிப் பிரமாணம் 136, 137, 137(6), 156(5), 206(1), 206(1)(அ), 225(4), 232(2), | கொடுப்பனவு உறுதிச் சீட்டுக்களை தயாரித்தல் மாதாந்த மின்சார நுகர்வுகளின் வேறுபாடுகள், கொடுப்பனவு உறுதிச் சீட்டுக்களில் |

| | |
|---|---|
| 237(ஆ), 257 மற்றும் 262(2) | மேற்கொள்ளப்பட்ட வேறுபாடுகள், வைப்புக்களிலிருந்து மீளச் செலுத்துதல், களஞ்சிய பொருட் பதிவேடுகளில் பதிதல் போன்றவை தொடர்பாக ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படாதிருந்த சந்தர்ப்பங்கள் காணப்பட்டன. |

(iv) பொது நிர்வாக சுற்றுநிருபம்

| | |
|---|---|
| 2009 ஏப்ரல் 16 ஆந் திகதிய 19/2009 ஆம் இலக்க மற்றும் 2009 யூன் 17 ஆந் திகதிய 09/2009(1) ஆம் இலக்க பொது நிருவாக சுற்றுநிருபங்கள் | கைவிரல் அடையாள இயந்திரம் பாவிக்கப்படாதிருந்ததுடன் வரவுப் பதிவேடுகளிலும் கையொப்பமிடப்பட்டிருக்க வில்லை. |

(v) திறைசேரி சுற்று நிருபம்

| | |
|---|---|
| 2002 நவம்பர் 28 ஆந் திகதிய ஐஏஐ/2002/02 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றுநிருபம் | உரிய பிரகாரம் கணனி மற்றும் உப பாகங்கள் கொள்வனவு தொடர்பாக பதிவேடு பேணப்பட்டிருக்கவில்லை. |

(vi) அரசாங்க நிதிச் சுற்றுநிருபம்

| | |
|---|---|
| அரசாங்க நிதிச் சுற்றுநிருப இலக்கம் 431 | விமான பயணச்சீட்டு உரிய கம்பனிகளிலிருந்து கொள்வனவு செய்யப்படாத 05 சந்தர்ப்பங்களும், விமான பிரயாணங்கள் ஒழுங்குபடுத்தும் செயற்பாடுகளுக்குரிய நிறுவனத்தினால் நிறைவேற்றப்படாத 02 சந்தர்ப்பங்களும் அவதானிக்கப்பட்டன. |

(vii) திணைக்களத்தின் கட்டளை

| | |
|---|---|
| i. 2001 யூலை 20 ஆந் திகதிய (டிஓபீஎல் 8) எல் | கடமை நிலையத்திலிருந்து வெளிச்செல்லும் போது வெளிச்செல்கைப் பதிவேட்டில் வெளிச் |

| | | |
|---|---|---|
| | 375 | செல்கை மற்றும் மீண்டும் சமூகமளிக்கும் நேரம் உள்ளடக்கப்பட்டு உறுதிப்படுத்தப்படாமை மற்றும் வெளிச்செல்கைப் பதிவேடு பயன்படுத்தப்படாமை போன்ற சந்தர்ப்பங்கள் காணப்பட்டன. |
| ii. | 2010 சனவரி 19 ஆந் திகதிய 01/2010 ஆம் இலக்க திணைக்களச் சுற்றுநிருபத்தின் 3.02 ஆம் பந்தி | அலுவலகத்திற்கு தாமதமாகி வருகை தரும் ஆகக்கூடிய சலுகைக் காலம் அத்தினமே வெளிசெல்லும் போது பூரணப்படுத்தப்படாதிருந்த சந்தர்ப்ங்கள் காணப்பட்டன. |

**(ஆ) வரித் தேவைப்பாடுகளுக்கு உரித்தற்றமை**

2006 இன் 10 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரி அதிகாரச்சட்டத்தின் 114 மற்றும் 116 ஆம் பிரிவுகளின் பிரகாரம் 2011 ஏப்ரல் 01 ஆந் திகதி உள்நாட்டு இறைவரி ஆணையாளரினால் வருமான வரி முறைமை மற்றும் அவற்றைப் உபயோகித்தல் தொடர்பான ஆலோசனைக் கோவை விநியோகிக்கப்பட்டிருந்தது. எனினும் இலங்கை சுங்கத்தினால் உத்தியோகத்தர்களுக்கு வெகுமதிப் பணம் செலுத்தும் போது இந்த வரி முறைமை மற்றும் அதற்குரிய ஆலோசனைகள் கவனத்தில் கொள்ளப்படாத சந்தர்ப்பங்கள் காணப்பட்டன. அதன் பிரகாரம் உத்தியோகத்தர்களுக்குச் செலுத்தப்படுகின்ற வெகுமதிப் பணம் ஒரே தடவையில் செலுத்துவதாகக் கருதி நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்த போதிலும் பல சந்தர்ப்பங்களின் போது செலுத்தப்படுகின்ற கொடுப்பனவுகள் ஒன்றுசேர்க்கப்பட்டு இறுதியாக அறவிட வேண்டிய வரி கணிப்பீடு செய்யப்பட்டிருக்கவில்லை. பல்வேறு சந்தர்ப்பங்களில் செலுத்தப்படுகின்ற வெகுமதிப் பணத்திற்காக தனித்தனியாக உழைக்கும் போதே செலுத்தும் வரி கணிக்கப்பட்டு அதற்குரிய பகுதி மாத்திரம் அறவிடப்பட்ட காரணத்தினால் பாரியளவில் அரசாங்கத்திற்குக் கிடைக்க வேண்டியிருந்த வரி வருமானம் இழக்கப்பட்டிருந்தது. பல்வேறு படிகளைப் பெறுகின்ற சுங்க உத்தியோகத்தர்களிடமிருந்து அரசாங்கத்திற்கு அறவிட வேண்டிய வரித்தொகையை சரியாகக் கணிப்பீடு செய்வதற்காக முறையான வேலைத்திட்டமொன்று ஈடுபடுத்தப்பட்டிருக்கவில்லை. வெகுமதிப் பணம் செலுத்துதல் தொடர்பாக கணக்காய்வின் போது மேற்கொள்ளப்பட்ட கணிப்பீடுகளின் பிரகாரம் 234 உத்தியோகத்தர்களிடமிருந்து மாத்திரம் 2012/2013 இன் வரி ஆண்டின் போது அவ்வாறு குறைவாக அறவிடப்பட்ட உழைக்கும்

போதே செலுத்தும் வரியின் அளவு அண்ணளவாக ரூபா 4,823,846 ஆக இருந்தது.

## 12.7 செயலாற்றல்

2012 இன் வருடாந்த பாதீட்டு மதிப்பீட்டின் பிரகாரம் இலங்கை சுங்கத்தின் முன்னேற்றங்கள் தொடர்பான அவதானிப்புக்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| வரி வகை | 2012 ஆம் ஆண்டு | | | 2011 ஆம் ஆண்டு | | |
|---|---|---|---|---|---|---|
| | திருத்திய மதிப்பீட்டின் பிரகாரம் வரி வருமானம் | உள்ளவாறான வரி வருமானம் | உள்ளவாறான வரி வருமானம் மதிப்பிடப்பட்ட வருமானத்தின் சதவீதமாக | திருத்திய மதிப்பீட்டின் பிரகாரம் வரி வருமானம் | உள்ளவாறான வரி வருமானம் | உள்ளவாறான வரி வருமானம் மதிப்பிடப்பட்ட வருமானத்தின் சதவீதமாக |
| | ரூபா.மில்லியன் | ரூபா.மில்லியன் | | ரூபா.மில்லியன் | ரூபா.மில்லியன் | |
| இறக்குமதி வரி | 76,830 | 73,489 | 95.65 | 80,252 | 76,010 | 94.71 |
| ஏற்றுமதி வரி | 20 | 21 | 105.00 | 30 | 17 | 56.67 |
| துறைமுக மற்றும் விமானநிலைய வரி | 75,211 | 70,111 | 93.22 | 65,032 | 66,028 | 101.53 |
| செஸ் வரி – (இறக்குமதி) | 29,287 | 29,604 | 101.08 | 26,366 | 26,876 | 101.94 |
| மோட்டார் வாகன அனுசரணை வரி | - | - | - | - | 1 | - |
| பிரதேச உட்கட்டமைப்பு வசதிகள் வரி | - | - | - | - | 6 | |
| செஸ் வரி – (ஏற்றுமதி) | 3,120 | 3,136 | 100.54 | 3,000 | 2,785 | 92.83 |
| விசேட வியாபாரப் பொருட்கள் வரி | 36,608 | 33,666 | 91.96 | 14,711 | 15,622 | 106.19 |
| சிகரட் | 54,924 | 53,529 | 97.46 | 49,804 | 49,589 | 99.57 |
| மதுபானம் | - | 39 | - | - | - | |
| பெற்றோலியம் | 23,000 | 28,466 | 123.77 | 26,449 | 22,470 | 84.96 |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| மோட்டார் வாகனம் | 57,510 | 46,496 | 80.85 | 49,362 | 52,835 | 107.04 |
| ஏனையவை | 5,132 | 3,336 | 65.00 | 2,973 | 5,797 | 194.99 |
| ஆடைகளுக்கான உள்நாட்டு செலவினக் கட்டணம் | 100 | 104 | 105.00 | 70 | 94 | 134.29 |
| மொத்தக் கூட்டுத்தொகை | 361,742 | 341,997 | 94.54 | 618,049 | 318,130 | 100.03 |

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2012 ஆம் ஆண்டின் போது திருத்தப்பட்ட மதிப்பீட்டின் பிரகாரம் எதிர்பார்க்கப்பட்ட வரி வருமானத்தின் உள்ளபடியான ஒட்டுமொத்த செயலாற்றலாக 5.46 சதவீதத்தினால் குறைவடைந்திருந்ததுடன் முன்னைய ஆண்டில் அது 0.03 சதவீதத்தினால் அதிகரித்திருந்தது.

(ஆ) ரூபா 20,000 மில்லியனை விஞ்சி வருமானம் பெறுகின்ற ஏழு(07) வருமானக் குறியீடுகளில் மதிப்பீடு செய்யப்பட்ட இலக்கை விஞ்சிச் செல்வதற்கு பிரதானமாக கனிய எண்ணெயின் அடிப்படையில் அறவிடப்படுகின்ற உற்பத்திவரி வருமானத்தில் மாத்திரம் உள்ளடங்கியிருந்ததுடன் இறக்குமதி செஸ்வரி வருமானத்தின் போது சிறிய அதிகரிப்பு மாத்திரம் அவதானிக்கப்பட்டது. அந்த வரி வருமானங்களின் உள்ளபடியான செயலாற்றல் முறையே 123.77 சதவீதம் மற்றும் 101.08 சதவீதமாக இருந்தத. ஏனைய பிரதான வரி வருமான குறியீடு ஐந்திலும் (05) எதிர்ப்பார்க்கப்பட்ட இலக்கு அடையப்பட்டிருக்கவில்லை.

(இ) பதினைந்து (15) வருமானத் குறியீடுகளின் கீழ் பதினைந்து (15) வருமானக் கணக்குகள் சமர்ப்பிக்கப்பட்டிருந்த போதிலும் வருமான மதிப்பீடு பதினொரு (11) குறியீடுகளிற்காக மாத்திரமே சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. எஞ்சிய 4 வருமானக் குறியீட்டில் 3 குறியீட்டிற்காக உள்ளபடியான வரி வருமானமும் இல்லாதிருந்தடன் மதுபான வரி வருமானக் குறியீடுகளில் மாத்திரம் உள்ளபடியான வருமானம் ரூபா 39 மில்லியனாக இருந்தது. அவ்வாறு அதிகரித்திருந்த வருமானத்தில் ரூபா 18,044 மில்லியன் அல்லது 76 சதவீதமும் அத்தியவசிய உணவுப் பொருட்களின் அடிப்படையில் விதிக்கப்பட்ட விசேட

வியாபார பொருட்களின் அடிப்படையில் அவ்வப்போது விதிக்கப்பட்ட வரிகளிலிருந்து சேகரிக்கப்பட்ட வருமானமாகும்.

(ஈ) ஒட்டு மொத்தமாக 2011 ஆம் ஆண்டிற்கு ஒப்பீடாக 2012 ஆம் ஆண்டின் போது உழைக்கப்பட்ட வருமானம் ரூபா 23,869 மில்லியனால் அல்லது 7.5 சதவீதத்தினால் அதிகரித்திருந்தது. 2012 ஆம் ஆண்டின் வருமான மூலத்தில் ஆகக்கூடிய பங்களிப்பான இறக்குமதி வரி, துறைமுக மற்றும் விமான நிலைய வரி மற்றும் சிகரெட் மற்றும் மோட்டார் வாகனத்திற்கான உற்பத்தி வரிகளிலிருந்து கிடைத்திருந்ததுடன் அது மொத்த வருமானத்தின் சதவீதமாக முறையே 21.49 சதவீதம், 20.59 சதவீதம், 15.65 சதவீதம் மற்றும் 13.59 சதவீதம் ஆக இருந்தன. அவ்வாறே மோட்டார் வாகன உற்பத்தி வரி மற்றும் இறக்குமதி வருமானம் என்பன முன்னைய ஆண்டினைவிடக் குறைவடைந்தமை, வருமான மூலத்தில் தனியாகத் தென்படுகின்ற அடையாளமாக இருந்ததுடன் அந்தக் குறைவு முறையே ரூபா 6,339 மில்லியன் தொகை மற்றும் ரூபா 2,521 மில்லியனாக இருந்தது. அந்தக் குறைவு முன்னைய ஆண்டின் வருமானத்தில் 12 சதவீதமாகவும், 3.32 சதவீதமாகவும் இருந்தது. விஷேட வியாபாரப் பொருட்கள் வரி வருமானம் மாற்றப்படும் போது இந்த அதிகரிப்பிற்காக கீழே குறிப்பிடப்படுகின்ற காரணங்களிலிருந்து ஏற்படுகின்ற தாக்கங்கள் புள்ளிவிபரரீதியாக பகுப்பாய்வு செய்யக்கூடிய அளவு தரவுகளைப் பெறமுடியாதிருந்த போதிலும் அந்தக் காரணங்களினால் உருவாக்கப்படுகின்ற வருமானமும் இந்த அதிகரிபப்பிற்கு போதியளவான தாக்கத்தை ஏற்படுத்தியிருந்தமை அவதானிக்கப்பட்டது.

(i) இறக்குமதி செய்யப்படுகின்ற பொருட்கள் மற்றும் சேவைகளின் அளவில் அதிகரிப்பு

(ii) நாணயமாற்று விகிதாசாரத்தில் ஏற்படுகின்ற முரண்கள்

(iii) இறக்குமதி செய்யப்படுகின்ற பொருட்கள் சேவைகளின் விலைகளின் தளம்பல்கள்

(iv) அவ்வப்போது மேற்கொள்ளப்படுகின்ற வரித்திருத்தங்கள்.

(உ) 2012 ஆம் ஆண்டில் இலங்கை அரசாங்கத்தின் ஒட்டுமொத்த பெறுமதிசேர் வரி வருமானம் ரூபா 204,656 மில்லியனாக இருந்ததுடன் அந்த பெறுமதிசேர் வரி வருமானத்தில் இலங்கை சுங்கத்தினால் இறக்குமதி அடிப்படையில் சேகரிக்கப்பட்ட ரூபா 99,469 மில்லியன் தொகையான பெறுமதிசேர் வரி அளவும் உள்ளடங்கியிருந்தது. அரசாங்கத்தின் பெறுமதிசேர் வரி வருமானத்தில் 48.6 சதவீதத்திற்கு அண்ணளவான தொகை இலங்கை

சுங்கத்தினால் சேகரிக்கப்பட்டிருந்த போதிலும் பெறுமதிசேர் வரி வருமானம் தொடர்பாக கணக்களிக்கும் பொறுப்பு உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகத்திற்குச் சொந்தமானமையால் இலங்கை சுங்கத்தின் வருமானக் கணக்கில் பெறுமதிசேர் வரி தொடர்பாக தகவல்கள் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. மேலும் வெளிநாட்டு வியாபாரத்தின் அடிப்படையில் இலங்கை சுங்கத்தினால் சேகரிக்கப்பட்ட ரூபா 15,660 மில்லியன் தொகையான தேசத்தைக் கட்டியெழுப்பும் வரித்தொகை தொடர்பாகவும் கணக்களிக்கும் பொறுப்பு உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகத்திற்கே கையளிக்கப்பட்டிருந்தமையினால் இலங்கை சுங்கத்தின் வருமானக் கணக்குகளில் அந்த வருமானம் தொடர்பான தகவல்களும் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

## 12.8 சர்ச்சைக்குரிய தன்மையிலான கொடுக்கல் வாங்கல்கள்

இலங்கை சுங்கத்தினால் மேற்கொள்ளப்பட்டுள்ள சில கொடுக்கல் வாங்கல்கள் சர்ச்சைக்குரிய தன்மையிலானதாக இருந்தது. தெரிவுப் பரிசோதனைகளின் போது அவ்வாறு வெளிப்படுத்தப்பட்ட சில கொடுக்கல்வாங்கல்கள் தொடர்பான விபரங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

(அ) உத்தியோகத்தர்களினால் அவர்களின் சாதாரண கடமைகளாக மேற்கொள்ளப்படுகின்ற சில செயற்பாடுகளுக்காகவும் தற்போது அமுல்படுத்தப்படுகின்ற வெகுமதி உத்தேசத்திட்டத்தின் கீழ் பாரியளவான பணம் வழங்கப்பட்டிருந்தமை முன்னைய கணக்காய்வு ஐயவினாக்கள் மூலம் சுட்டிக்காட்டப்பட்டிருந்தது. மீளாய்வாண்டின் போது கணக்காய்விற்கு உட்படுத்தப்பட்ட 2 கோவைகளில் மாத்திரம் இந்த முறையில் உத்தியோகத்தர்களுக்கு ரூபா 3,964,847 தொகை வெகுமதியாகச் செலுத்தப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. இவ்வாறு மீள ஏற்றுமதி செய்யும் நோக்கத்தில் சுங்கத் தீர்வை தவிர்த்து இறக்குமதி செய்யப்பட்ட 02 மோட்டார் வாகனங்களை மோட்டார் போக்குவரத்து ஆணையாளர் திணைக்களத்தில் பதிவு செய்வதற்காக அனுமதிகோரி உரிய தரப்பினரால் மேற்கொள்ளப்பட்ட கோரிக்கையின் பிரகாரம் மதிப்பீடு செய்யப்பட்ட வாகனங்களின் வெகுமதியை அடிப்டையாகக் கொண்டு வெகுமதிப் பணம் வழங்கப்பட்டிருந்தது.

(ஆ) தற்போது பேணப்படுகின்ற வெகுமதித் திட்டத்தின் மூலம் அரசாங்க வருமானத்தை பாதுகாப்பதற்காக கிடைக்கப் பெற்ற பங்களிப்பு சர்ச்சைக்குரியதாக இருந்தமை முன்னைய கணக்காய்வு அறிக்கை மூலம் சுட்டிக்காண்பிக்கப்பட்டிருந்தது. காணப்படுகின்ற சட்ட விதிகளின் பிரகாரம்

சுங்கத்தவறுக்காக விதிக்கப்படுகின்ற தண்டப் பணத்தொகைக்கு மேலதிகமாக அந்த தவறுகளின் மூலம் அரசாங்கத்திற்கு இழக்கப்படுகின்ற வரி வருமானத்திலும் பாரிய பகுதி உத்தியோகத்தர்களுக்கு வெகுமதியாக செலுத்தப்பட்டிருந்த போதிலும் சுங்க வரி மோசடிகளில் கவனத்திற் கொள்ளக் கூடிய கட்டுப்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்தமை அவதானிக்கப்படவில்லை. இலங்கை சுங்கத்தின் மத்திய புலனாய்வுப் பிரிவினால் மாத்திரம் 2011 மற்றும் 2012 ஆம் ஆண்டுகளில் நடவடிக்கைகள் பூர்த்தி செய்யப்பட்ட 46 புலனாய்வுகளிலிருந்து சேகரிக்கப்பட்ட ரூபா 183,970,904 தொகையிலிருந்து உத்தியோகத்தர்களுக்கு வெகுமதியாக செலுத்தப்பட்ட தொகை ரூபா 91,985,452 ஆக இருந்தது.

(இ) இலங்கை சுங்கத்தினால் ரூபா 7,149 மில்லியன் தொகையான மதிப்பீடு செய்யப்பட்ட கிரயத்தில் புதிய சுங்கக் கட்டிடத்தை நிர்மாணிப்பதற்கு திட்டமிடப்பட்டிருந்ததுடன் அந்தக் கட்டிடத்தை நிர்மாணிப்பதற்கான 10 உப ஒப்பங்களின் கீழ் கூறு விலைகள் கோரப்பட்டிருந்தது. இந்தக் கட்டிடத்தில் பொதுமக்கள் அழைப்பு முறைக்காக மதிப்பீடு செய்யப்பட்ட கிரயம் ரூபா 22 மில்லியனாக இருந்ததுடன் இது தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட பரிசோதனையின் போது பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) ஒப்பந்தத்திற்காக 07 நிறுவனங்கள் கூறுவிலை சமர்ப்பித்திருந்ததுடன் குறிப்பிட்ட திகதியில் ஐ.சீ.ரீ.ஏ.டீ (ICTAD) சான்றிதழ் பெற்றிருக்காததுடன் நிறுவனத்திற்கு ஒப்பந்தத்தை கையளிப்பதற்காக அமைச்சரவையின் கொள்வனவுக் குழுவினால் தீர்மானம் எடுக்கப்பட்டிருந்தது.

(ii) அமைச்சரவை கொள்வனவுக் குழுவினால் அனேகமான விடயங்களைக் கருத்திற்கொண்டு செய்யப்பட்ட ஒப்பந்தக்காரர் நிராகரிக்கப்பட்டு இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டிருந்ததுடன் கணிப்பீடு சரிசெய்தபின் பின்னர் ஒப்பந்தத்தின் பெறுமதி ரூபா 18,852,551 ஆக இருந்தது.

(iii) கேள்விதாரர்களின் ஆலோசனைப் பதிவேட்டின் பிரகாரம் 05 வருடங்களின் பராமரிப்புக் கிரயத்தையும் உள்ளடக்கிய கூறுவிலை சமர்ப்பிக்கப்பட வேண்டியிருந்த போதிலும் அமைச்சரவை கொள்வனவு முறைப்பாடுகள் குழுவினால் தெரிவு செய்யப்பட்ட ஒப்பந்தக்காரர்களின் கூறுவிலைகளில் பராமரிப்புக் கிரயம் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. இந்த ஒப்பந்தக்காரரினால் வருடாந்தம் கிரயத்தில் 5 சதவீதம்

தொடக்கம் 12 சதவீதம் வரை அதிகரிக்கும் முறையின் கீழ் பராமரிப்புக் கிரயம் தனியாகக் காண்பிக்கப்பட்டிருந்ததுடன் அந்தக் கிரயம் ஒப்பந்தக்காரர் தெரிவு செய்யும் போது கவனத்திற் கொள்ளப்பட்டிருந்தமை அவதானிக்கப்படவில்லை.

(iv) அமைச்சரவை கொள்வனவுக் குழுவினால் ஆரம்பத்தில் தெரிவு செய்யப்பட்ட ஒப்பந்தக்காரர்களிடமிருந்து மொத்தக் கிரயத்திலும் பராமரிப்புக் கிரயமும் உள்ளடக்கப்பட்டிருந்ததுடன் அவைகளின் மொத்தக் கிரயம் ரூபா 22,488,687 ஆக இருந்தது.

(v) பராமரிப்புக் கிரயத்தையும் உள்ளடக்கி அமைச்சரவை கொள்வனவு முறைப்பாட்டுக் குழுவினால் தெரிவு செய்யப்பட்ட ஒப்பந்தக்காரர்களின் மொத்தக்கிரயம் ரூபா 25,356,681 தொகை ஆனமையின் காரணமாக ஆரம்பத்தில் தெரிவு செய்யப்பட்ட ஒப்பந்தக்காரர் நிராகரிக்கப்பட்டமையிளால் அரசாங்கத்திற்கு ஏற்பட்டுள்ள மதிப்பிடப்பட்ட நட்டம் ரூபா 2,867,994 ஆக இருந்தமை அவதானிக்கப்பட்டது. மேலும் இந்த ஒப்பந்தம் கையளிக்கப்பட்ட நிறுவனம் சமர்ப்பித்த விலையினை விட ரூபா 6,504,130 தொகையைச் செலுத்த வேண்டியிருந்தமையும் மேலும் அவதானிக்கப்பட்டது.

(ஈ) இலங்கை முதலீட்டுச் சபையில் பதிவு செய்துள்ள கம்பனியினால் இலங்கை சுங்கத்திற்கும் முதலீட்டுச் சபைக்கும் ஒன்றுக்கொன்று பரஸ்பர தகவல்கள் சமப்பிக்கப்பட்டமையினால் ஆரம்பிக்கப்பட்ட சுங்க புலனாய்வு நடவடிக்கைகள் எதுவும் காரணங்களாகக் காட்டப்படாது 2009 ஒக்தோபர் 08 ஆந் திகதி தொடக்கம் கைவிடப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. உரிய கம்பனி இதற்கு முன்னரும் சுங்க வரி மோசடி செய்த நிறுவனவாக இருந்தமை உறுதிப்படுத்தப்பட்டிருந்ததுடன் முதலீட்டுச் சபைக்குச் சமர்ப்பிக்கப்பட்ட ஐக்கிய அமெரிக்க டொலர் 382,122 பெறுமதியான இலங்கை சுங்கத்திற்கு ஐக்கிய அமெரிக்க டொலர் 64,933 ஆக அறிக்கையிட்டமை தவறாக இருந்தமை கோவைகளின் பிரகாரம் அவதானிக்கப்பட்டது. எவ்வாறாயினும் இந்த பெறுமதியின் வேறுபாடு தொடர்பாக உள்நாட்டுக் கம்பனி மற்றும் அந்தக் கம்பனியின் தாய்க் கம்பனியான இந்தியக் கம்பனியிலும் ஒன்றுக்கொன்று பரஸ்பர தகவல்கள் சமர்ப்பிக்கப்பட்டிருந்தமை உறுதிப்படுத்தப்பட்டிருந்த போதும் அவ்வாறு புலனாய்வு நடவடிக்கைகள் கைவிடப்பட்டமை சர்ச்சைக்குரிய விடயமாக இருந்தது. இறக்குமதி பொருட்களின் பெறுமதி ஐக்கிய அமெரிக்க

டொலர் 382,122 ஆக இருந்தால் அதில் அறவிடவேண்டிக் காணப்பட்ட சுங்க வரிப் பெறுமதி ரூபா 2,500,000 ஆக இருந்தமை அறிக்கையிடப்பட்டிருந்தது.

### 12.9 அதிகார பலமின்றிய கொடுக்கல் வாங்கல்கள்

கார்நெட் (Carnet) உத்தேசத் திட்டத்தின் கீழ் இறக்குமதி செய்யப்பட்ட வாகனங்கள் தொடர்பாக இலங்கை சுங்கத்தினால் தற்போது பின்பற்றப்படுகின்ற கொள்கைகளுக்கு முரணாக வாகனமொன்று இறக்குமதியாளருக்கு விடுவிக்கப்பட்டிருந்ததுடன் அந்த வாகனத்தின் மதிப்பீட்டுப் பெறுமதியான ரூபா 834,028 தொகையை அறவிடுதல் கைவிடப்பட்டிருந்தது. இதற்காக முறையான அங்கீகாரம் பெறப்படாதிருந்ததுடன் அது அரசாங்கத்திற்கு ஏற்பட்ட நட்டமாக அவதானிக்கப்படுகின்றது. இந்த வாகனத்திற்காக உள்நாட்டு முகவர் நிறுவகத்தின் மூலம் இரண்டு சந்தர்ப்பங்களின் போது வாகனத்தின் றெுமதிக்காக இரண்டு கூறுவிலைகள் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் அதில் கூடிய பெறுமதி கவனத்தில் கொள்ளப்பட்டிருக்குமாயின் இழக்கப்பட்ட வருமானம் ரூபா 1,033,920 ஆக இருந்தமை மேலும் அவதானிக்கப்பட்டது.

### 12.10 மோசடியான வடிவிலுள்ள கொடுக்கல் வாங்கல்கள்

மத்திய அகற்றல் பிரிவின் மூலம் விற்கப்பட்ட வாகனங்களுக்குரிய தரவுகள் மோசடியாக மாற்றப்பட்டு மோட்டார் போக்குவரத்துத் திணைக்களத்திற்கு அனுப்பி வைத்தலின் மூலப் பாரியளவிலான வரி மோசடி மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன் அவற்றைத் தடுப்பதற்காக போதியளவான பாதுகாப்பு வழிமுறைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. இந்த முறையில் காட்சிப்படுத்துவதற்காக சுங்க வரி செலுத்தாது கொண்டுவரப்பட்ட இரண்டு மின்சாரக் கார்கள் உரிய கம்பனியினால் முன்வராமையின் காரணமாக சுங்கப் பொறுப்பில் எடுக்கப்பட்டு ஒன்று ரூபா 91,376 இற்கும் மற்றையது ரூபா 105,958 இற்கும் மத்திய விற்றுத்தீர்த்தல் பிரிவினால் விற்பனை செய்யப்பட்டிருந்தது. ரூபா 105,958 இற்கு விற்பனை செய்யப்பட்ட வாகனத்தின் செசி இலக்கம் பிழையாக இருந்தமை மற்றும் ஒன்று கொள்வனவு செய்யப்பட்ட தரப்பினால் இலங்கை சுங்கத்திற்கு அறிக்கையிடப்பட்டு வேறு செசி இலக்கம் தவறாக இலங்கை சுங்கத்தின் மோட்டார் போக்குவரத்து திணைக்களத்திற்குரிய கணனி வலைப்பின்னலுக்குள் உள்ளடக்கப்பட்டு Hammer வகைக்குரிய ரூபா 36 மில்லியனைவிட பெறுமதியான ஒரு வாகனம் போலியாக பதிவு செய்யப்பட்டு குறிப்பிட்ட வரித்தொகை மோசடி செய்யப்பட்டிருந்தது. இதன் போது செசி இலக்கத்திற்கு மேலதிகமாக வாகன வகைப்படுத்தல் இலக்கமும் மாற்றப்பட்டு மோட்டார் போக்குவரத்துத் திணைக்களத்திற்கு தரவுகள் அனுப்பிவைக்கப்பட்டிருந்தது.

**12.11 இழப்பு மற்றும் நட்டம்**

அழிவடைந்த படகுக்கு ஏற்பட்ட ரூபா 6,455,000 தொகையான நட்டம் தொடர்பாக நிதிப் பிரமாணம் 104 தொடக்கம் 109 வரையான ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**12.12 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) சுங்க உத்தியோகத்தர்களுக்கு உணவு மற்றும் தேனீர் வழங்குவதற்காக வருடாந்தம் பாரியளவான பணம் இலங்கை துறைமுக அதிகாரசபைக்குச் செலுத்தப்பட்டிருந்ததுடன் 2012 ஆம் ஆண்டின் போது அவ்வாறு செுலுத்தப்பட்ட பணம் ரூபா 4,982,805 ஆக இருந்தது. இத்தொகை செலுத்துவது தொடர்பாக இலங்கை சுங்கத்தின் எந்தப் பிரிவினாலும் முறையான மேற்பார்வை மேற்கொள்ளப்படாதிருந்ததுடன் அவதானிக்கப்பட்ட சில நலிவுகள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

(i) உள்ளபடியாக வழங்கக் கூடிய உணவு மற்றும் தேனீர் சிற்றூண்டிகளின் அளவு தொடர்பாக நாளாந்த புலனாய்வுகள் மேற்கொள்ளப்படாது ஒவ்வொரு மாதமும் வழங்கப்பட்ட உணவு மற்றும் தேனீர் சிற்றூண்டிகளின் அளவுகள் முறையே 3000 மற்றும் 3400 ஆகக் கருதி பணம் செலுத்தியமை.

(ii) குறிப்பிட்ட நேரத்தின் போது கடமைகளில் ஈடுபட்ட உள்ளபடியான ஊழியர் எண்ணிக்கை தொடர்பாக எவ்வித கண்டறிதலுமின்றி இலங்கை துறைமுக அதிகார சபையினால் சமர்ப்பிக்கப்பட்ட பட்டியல் மற்றும் விலைப்பட்டியலை அடிப்படையாகக் கொண்டு கொடுப்பனவு செய்தல்.

(ஆ) 2012 ஆம் ஆண்டின் போது உள்நாட்டுப் பிரயாணச் செலவாக ரூபா 32,999,958 தொகை செலவிடப்பட்டிருந்ததுடன் பிரயாணச் செலவுகளைச் செய்யும் போது இலங்கை சுங்கத்தினால் சரியாக நடவடிக்கை எடுக்கப்படாத சந்தர்ப்பங்களும், காணப்படுகின்ற சட்ட விதிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்காத சந்தர்ப்பங்களும், விஷேடமாக 06 மாதங்களுக்கு ஒரு தடவை மேற்கொள்ளப்படுகின்ற இடமாற்றக் கொள்கை சகல உத்தியோகத்தர்களுக்கும் முழுமையான மாதத்திற்காக இணைந்த படிகள் பெறக்கூடிய வகையில்

அமுல்படுத்தப்பட்ட சந்தர்ப்பங்களும் தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளின் போது அவதானிக்கப்பட்டன.

(இ) 2012 மார்ச் மாதம் 01 ஆந் திகதி ஓய்வு பெற்றுச் செல்வதற்கு தீர்மானிக்கப்பட்ட ஒரு உத்தியோகத்தருக்காக 2012 சனவரி மாதம் ரூபா 279,000 தொகையான பயிற்சிச் செலவினம் செய்யப்பட்டிருந்தது.

(ஈ) 2008 ஒக்தோபர் 24 ஆந் திகதிய இலங்கை 1572/25 ஆம் இலக்க இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அதிவிஷேட வர்த்த மானியில் பிரசுரிக்கப்பட்ட குறிப்பிட்ட கால எல்லையின் போது மின்சாரப்பட்டியல் செலுத்தாமையின் காரணமாக ரூபா 787,907 தொகையான வட்டித் தொகை செலுத்தப்பட்டிருந்தது.

## 12.13 முகாமைத்துவ நலிவுகள்

பின்வரும் நலிவுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) மீளாய்வாண்டின் போது பதவியணியினருக்கு ஊக்குவிப்புப் படியாக ரூபா 246,317,867 தொகை செலவிடப்பட்டிருந்ததுடன் இந்த ஊக்குவிப்புப் படி கொடுப்பனவு செய்வதற்காக எவ்வித செயலாற்றல் மதிப்பீடும் மேற்கொள்ளப்பட்டமைக்கான சான்றுகள் காணப்படவில்லை. திறைசேரி பிரதிச் செயலாளரின் எச்.எப். 1/04/சீயுஎஸ்/115-27 ஆம் இலக்க 2011 திசெம்பர் 13 ஆந் திகதிய கடிதத்தின் பிரகாரம் செயலாற்றல் மதிப்பீட்டை அடிப்படையாகக் கொண்டு ஊக்குவிப்புப் படி கொடுப்பனவு செய்வதற்கு அங்கீகரிக்கப்பட்டிருந்த போதும் செயலாற்றலை அடிப்படையாகக் கொள்ளாமல் பதவியணியினர்களின் வரவை மாத்திரம் அடிப்படையாகக் கொண்டு ஊக்குவிப்புப்படி கொடுப்பனவு செய்யப்பட்டிருந்ததுடன் விடுமுறையை அடிப்படையாகக் கொள்ளும் போது விடுமுறைகள் சரியாகக் கணிப்பீடு செய்யப்படாதிருந்த சந்தர்ப்பங்களும் அவதானிக்கப்பட்டன. மேலும் ஊக்குவிப்புப் படி செலுத்துதல் அடிப்படைச் சம்பளத்தில் 50 சதவீதம் ஆகக்கூடிய எல்லையாக இருந்த போதிலும் பெறப்பட்ட விடுமுறைகளுக்காக ஒரு நாளைக்கான சம்பளத்தைக் கழிப்பதற்குப் பதிலாக சம்பளத்தில் 50 சதவீதம் மாத்திரம் கழிக்கப்பட்டிருந்தது.

(ஆ) மீளாய்வாண்டின் போது வெளிநாட்டு பிரயாணச் செலவாக திறைசேரி நிதியேற்பாடுகளிலிருந்து ரூபா 672,971 தொகையும், முகாமைத்துவ மற்றும் இழப்பீட்டு நிதியத்திலிருந்து ரூபா 21,915,688 தொகையும் ஆக ரூபா 22,588,659 கூட்டுத்தொகை செலவிடப்பட்டிருந்தது. வெளிநாட்டு பிரயாணச் செலவினம்

தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையில் வெளிநாட்டுப் பயிற்சிகளுக்காக செல்கின்ற சில உத்தியோகத்தர்களினால் அந்த பயிற்சி தொடர்பான முன்னேற்ற அறிக்கை சமர்ப்பிக்கப்படாத சந்தர்ப்பங்களும், அந்த அறிக்கை தொடர்பாக உரிய மதிப்பீடு மேற்கொள்ளப்படாத சந்தர்ப்பங்களும், அந்த அறிக்கை தொடர்பாக உரிய மதிப்பீடு மேற்கொள்ளப்படாத சந்தர்ப்பங்களும், சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கைகளில் உள்ளடக்கப்பட்ட தகவல்கள் மாநாட்டின் போது பகிர்ந்தளிக்கப்பட்ட பிரசுரங்கள் மற்றும் விஞ்ஞாபனங்களாக இருந்தமையும், விமானப் பயணச் சீட்டை கொள்வவு செய்யும் போது முறையாக செயற்படாத சந்தர்ப்பங்களும் அவதானிக்கப்பட்டன.

(இ) கார்நெட் (Carnet) உள்ளக ரீதியில் ஆவணங்கள் பயன்படுத்தப்பட்டு மீள ஏற்றுமதி செய்யும் நோக்கில் சுங்கத்தீர்வை தவிர்த்து இலங்கைக்கு இறக்குமதி செய்யப்படுகின்ற அனேக வாகனங்கள் மீள ஏற்றுமதி செய்யப்படாமல் உள்நாட்டில் பயன்படுத்தப்படுகின்றமை அவதானிக்கப்பட்டது. இந்த வாகனங்களினால் அரசாங்கத்திற்கு ஏற்பட்ட வரி நட்டத்தை குறைப்பதற்காக இலங்கை சுங்கத்தினால் அமுல்படுத்தப்படுகின்ற திட்டமுறைமை மந்தகதியில் இருக்கின்றமை அவதானிக்கப்பட்டது. 2011 மற்றும் 2012 ஆம் ஆண்டுகளின் போது இவ்வாறு 254 வாகனங்கள் தொடர்பாக இலங்கை சுங்கத்தின் மத்திய புலனாய்வு பிரிவினால் புலனாய்வு விசாரனைகள் ஆரம்பிக்கப்பட்டிருந்த போதிலும் 144 வாகனங்கள் தொடர்பான உரிய புலனாய்வு நடவடிக்கைகள் 2012 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. புலனாய்வு நடவடிக்கைககள் பூர்த்தி செய்யப்பட்டிருந்த 46 வாகனங்களுக்குரிய சேகரிக்கப்பட்ட தண்டப் பணம் மற்றும் இழக்கப்பட்டிருந்த வருமானம் ரூபா 183,970,904 ஆக இருந்த போதிலும் புலனாய்வு நடவடிக்கைகள் பூர்த்தி செய்யப்படாத 144 வாகனங்கள் தொடர்பாக தண்டப் பணம் மற்றும் இழக்கப்பட்ட பெறுமதி என்பன தீர்மானிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) இலங்கை சுங்கத்தின் புலனாய்வு நடவடிக்கை நடைமுறைகள் மற்றும் உறுதிப்படுத்தல் தொடர்பான மத்திய பரிசோதனைப் பணியகத்தில் சுங்க புலனாய்வு நடவடிக்கைககள் தொடர்பான செயலாற்றல் போதியளவிலான நிலையில் இல்லாதிருந்தமை அவதனிக்கப்பட்டது. இந்தப் பிரிவினால் 2011 மற்றும் 2012 ஆம் ஆண்டுகளின் போது நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டிருந்த 111 புலனாய்வு நடவடிக்கைகளில் 84 புலனாய்வு நடவடிக்கைகள் 2012 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. ஒரு சுங்கப் பணிப்பாளர், இரண்டு பிரதி சுங்கப் பணிப்பாளர்கள், 09 சுங்க

உத்தியோகத்தர்களை உள்ளடக்கிய 40 பேர்களை உடைய பதவியணியினர் இந்தப் பிரிவிற்கு நியமிக்கப்பட்டிருந்ததுடன் இந்தப் பிரிவின் நடவடிக்கைகளிலிருந்து 2011 மற்றும் 2012 ஆம் ஆண்டுகளில் சேகரிக்கப்பட்ட பணம் ரூபா 587,464,063 ஆக இருந்த போதிலும் அதில் அரசாங்க வருமானத்திற்கு ரூபா 176,239,219 தொகை மாத்திரமே செலவு வைக்கப்பட்டிருந்தது.

(உ) சுங்க புலனாய்வு நடவடிக்கைகளில் காணப்படுகின்ற அசாதாரண தாமதங்களினால் அரசுடைமையாக்கப்பட்ட பொருட்கள் அழிவிற்கு உள்ளாகுவதன் காரணமாக அரசாங்கத்திற்கு பாரியளவான நட்டம் ஏற்படுகின்ற சந்தர்ப்பங்கள் தொடர்பாக முன்னைய கணக்காய்வு அறிக்கைகளிலும் சுட்டிக்காட்டப்பட்டிந்தது. இந்த முறையில் 2008 ஆம் ஆண்டின் போது கொழும்புத் துறைமுகத்தில் கைவிடப்பட்டிருந்த ஆடைகள் அடங்கிய 04 கொள்கலன்களுக்கான புலனாய்வு நடவடிக்கைகள் 2008 ஆம் ஆண்டு தொடக்கம் 2012 ஆம் ஆண்டு வரை மந்தகதியில் மேற்கொள்ளப்பட்டமையின் காரணமாக துணி இருப்புக்கள் பயன்படுத்த முடியாத மோசமான நிலைக்கு உள்ளாகியிருந்தது. இந்த துணி இருப்புக்கள் 2009 நவம்பர் மாதம் ரூபா 3,951,595 தொகைக்கு மதிப்பீடு செய்யப்பட்டிருந்த போதிலும் பயன்படுத்த முடியாத மோசமான நிலையினால் 2012 ஏப்ரல் 01 ஆந் திகதி இந்த துணி இருப்புக்களை ரூபா 527,500 இற்கு விற்பனை செய்வதற்கு ஏற்பட்ட காரணத்தினால் ஏற்பட்ட நட்டம் ரூபா 3,424,095 ஆக இருந்தது. இலங்கை சுங்கத்தின் முதலீட்டுச் சபையை தொடர்புபடுத்தும் பிரிவினால் இந்த புலனாய்வு மேற்கொள்ளப்பட்டிருந்தமை அறிக்கையிடப்பட்டிருந்தது.

(ஊ) இலங்கை சுங்கத்தின் விற்றுத்தீர்த்தல் பிரிவினால் மேற்கொள்ளப்பட்ட செயற்பாடுகள் முறையாகவும் ஆக்கபூர்வமாகவும் அன்றி செயற்பட்டிருந்தமை முன்னைய கணக்காய்வு அறிக்கை மூலம் சுட்டிக்காட்டப்பட்டிருந்தது. 2012 ஆம் ஆண்டின் முதல் அரை ஆண்டில் விற்பனை நடவடிக்கைகள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுப் பரிசோதனையின் போது பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) உரிய திகதியில் விடுவிக்கப்பட்டிருந்த 38 பொருள் வகைகளுக்காக வாடிக்கையாளரிடமிருந்து ரூபா 2,205,000 தொகையான வைப்புப் பணம் அரசுடைமையாக்கப்படாமை.

(ii) மூன்று வாடிக்கையாளர்களுக்குரிய அரசுடைமையாக்கப்பட வேண்டிய வைப்புப் பணத்தை உபயோகித்து ரூபா 6,138,888 தொகை பெறுமதியான 06 பொருள் விடயங்களைக் கோருவதற்கு இடமளிக்கப்பட்டமை.

(iii) மூன்று வாடிக்கையாளர்களுக்கு போதியளவானதும் செல்லுபடியானதுமான வைப்புப் பணம் இன்றி ரூபா 13,985,366 பெறுமதியான 06 பொருள் விடயங்களுக்காக கூறுவிலைகள் சமர்ப்பிப்பதற்கான சந்தர்ப்பம் வழங்கப்பட்டிருந்தமை.

(iv) 04 சந்தர்ப்பங்களின் போது கூறுவிலைகள் சமர்ப்பிப்பதற்கு முன்னர் வைப்புச் செய்யப்பட வேண்டிய ரூபா 175,000 தொகை கூறுவிலைகள் சமர்ப்பிக்கப்பட்டதன் பின்னர் ஒரு சந்தர்ப்பத்தில் வைப்புச் செய்வதற்கு இடமளிக்கப்பட்டமை.

(v) விற்பனை செய்வதற்காக சமர்ப்பிக்கப்பட்ட 29 பொருள் விடயங்கள் 05 சந்தர்ப்பங்களின் போது விற்பனைச் செயற்பாடுகளிலிருந்து அகற்றப்பட்டிருந்த போதிலும் அதற்காக வழங்கப்பட்ட முறையான அங்கீகாரம் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்காமை.

(vi) வாடிக்கையாளரினால் 10 நாட்களுக்குள் பணம் செலுத்தப்பட்டு பொருள் விடுவிக்கப்பட வேண்டிய போதிலும், 21 சந்தர்ப்பங்களின் போது அதற்காக 26 - 88 நாட்கள் வரையான காலம் வழங்கப்பட்டிருந்தது.

(எ) 2012 ஆம் ஆண்டின் முதல் அரையாண்டில் இறக்குமதியாளர்களினால் இறக்குமதி செய்யப்பட்ட பொருட்கள் துறைமுக வளவில் கைவிடப்பட்ட பொருட்களை உள்ளடக்கிய 16 கொள்கலன்களில் 4 கொள்கலன்கள் அழிவடைந்திருந்ததுடன் ஒரு கொள்கலன் மீள ஏற்றுமதி செய்யப்பட்டிருந்தது. ஏலத்தில் விற்பனை செய்யப்பட்ட 11 கொள்கலன்களை உள்ளடக்கிய பொருட்களிலிருந்து இலங்கை சுங்கத்திற்கு கிடைக்க வேண்டிய கட்டணம் ரூபா 9,447,919 ஆக இருந்ததுடன் இந்த விற்பனை நடவடிக்கைகளை துரிதப்படுத்துவதன் மூலம் இறக்குமதி செய்யப்படுகின்ற பொருட்கள் அழிவடைவதைத் தடுத்துக்கொள்வதற்கான முறையான செயல்முறை வேலைத்திட்டமொன்று இலங்கை சுங்கத்திடம் காணப்படாதிருந்தமை பின்வரும் அதானிப்புக்களிலிருந்து தெளிவாகின்றது.

(i) விற்பனை நடவடிக்கைகளை துரிதப்படுத்தாமை மற்றும் இலங்கை சுங்கத்தின் விலை மதிப்பீடு சாதாரணமாக இல்லாமையின் காரணமாக தோடம்பழத்தை உள்ளடக்கிய ஒரு கொள்கலன் அழிவடைந்தமையினால் ரூபா 1,003,520 தொகையான சுங்கக் கட்டணம் இழக்கப்பட்டிருந்தது.

(ii) வெள்ளைப் பூடு கிலோ கிராம் 84,000 உள்ளடக்கிய 03 கொள்கலன்களிலிருந்து 30 சதவீதம் மானிட உணவிற்கு உகந்தது அல்ல எனத் தீர்மானிக்கப்பட்டு ரூபா 1,134,000 தொகையான சுங்கவரி கைவிடப்பட்டிருந்த போதிலும் விற்பனை நடவடிக்கைகளின் போது அவ்வாறு அழிவடைந்த பூடுகளின் இருப்பையும் உள்ளடக்கி வாடிக்கையாளருக்கு மொத்த வெள்ளைப் பூடு இருப்பையும் விடுவிக்கப்பட்டிருந்தமையினால் அழிவடைந்த இருப்பும் பொதுமக்களின் கைகளுக்குச் செல்வதைத்தடுப்பதற்கான வழிமுறைகள் காணப்படாமை.

(iii) இறக்குமதியாளர்களினால் துறைமுக வளவில் கைவிடப்படுகின்ற கொள்கலன்களிலுள்ள பொருட்களை விற்பனை செய்யும் போது உணவு மற்றும் மருந்துக் கட்டுப்பாட்டளரின் சிபார்சின் பிரகாரம் அவைகளில் ஒரு பகுதி உகந்ததற்றதாகக் கருதி சுங்கக் கட்டணம் அறவிடப்படாமையின் காரணமாக இறக்குமதியாளர்களுக்கு செலவினங்களின்றி இவ்வாறு இறக்குமதி செய்யப்பட்ட பொருட்கள் கைவிடப்பட்ட பின்னர் கொள்வனவு செய்வதற்கு இடமளிக்கப்படுவதை தவிர்க்க முடியாமை. 10 சந்தர்ப்பங்களின் போது அவ்வாறு கைவிடப்பட்ட சுங்க வரிப்பெறுமதி ரூபா 1,933,640 ஆகும்.

(ஏ) சுங்கத் தவறுகளுக்குரியதாக மேற்கொள்ளப்படுகின்ற சுங்க புலனாய்வுகளைத் துரிதப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படாமையினால் சுங்கத்தவறுகளை மேற்கொள்கின்ற தரப்பினர்களுக்கு பொருளாதார ரீதியாக சாதகமான நிலைமை ஏற்படுகின்றமையும் அரசாங்கத்திற்குக் கிடைக்க வேண்டிய வருமானம் உரிய காலத்தில் கிடைக்காமையும் அனேக புலனாய்வு நடவடிக்கைகள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளின் போது அவதானிக்கப்பட்டது. உதாரணங்களில் சில கீழே காண்பிக்கப்படுகின்றன.

(i) இலங்கை சுங்கத்தின் முதலீட்டுச் சபையின் மேற்பார்வை அலகினால் மேற்கொள்ளப்பட்ட சுங்க புலனாய்வுகள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளின் போது 2010 சனவரி

மாதத்தில் ஆரம்பிக்கப்பட்ட 02 புலனாய்வுகள் 03 வருடங்களும் மேற்பட்ட காலம் சாதாரண காரணமின்றி தாமதமாகியமையினால் ரூபா 1,950,812 தொகையான வரி வருமானம் தொடர்பாக இறுதித் தீர்மானம் எடுக்க முடியாத நிலை தோன்றியிருந்தமை அவதானிக்கப்பட்டது. இந்த பிரிவினால் 2004 ஆம் ஆண்டு தொடக்கம் 2012 ஆம் ஆண்டு வரை 92 புலனாய்வுகள் ஆரம்பிக்கப்பட்டிருந்ததுடன் பூர்த்தி செய்யப்படாத புலனாய்வுகளின் எண்ணிக்கை 42 ஆகும். 32 புலனாய்வுகள் தொடர்பான எவ்வித தகவல்களும் வெளிப்படுத்தப்படாதிருந்ததுடன் 03 புலனாய்வுகள் மாத்திரம் பூர்த்தி செய்யப்பட்டமை முகாமைத்துவத்தின் செயற்திறனின்மையாக அவதானிக்கப்படுகின்றது.

(ii) இலங்கை சுங்கத்தின் "D" கிளையின் மூலம் தனியார் கம்பனியினால் இறக்குமதி செய்யப்பட்ட இரண்டு சொகுசு வாகனங்களுக்காக குறைந்த பெறுமதி அறிவிக்கப்பட்டு வரி மோசடி ஏற்படுத்தப்பட்டமை அறிக்கையிடப்பட்டு ஆரம்பிக்கப்பட்டிருந்த சுங்க புலனாய்விற்காக 04 வருடங்கள் கடந்திருந்த போதிலும் புலனாய்வு நடவடிக்கைகளை பூர்த்தி செய்வதற்கு சுங்க உத்தியோகத்தர்களால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. இரண்டு வாகனங்களுக்குரிய ஆவணங்கள் மாத்திரம் நிறுத்திவைக்கப்பட்டு இரண்டு வாகனங்கள் விடுவிக்கப்பட்டிருந்ததுடன் போக்குவரத்து அமைச்சினால் பதிவு செய்யப்படாமல் இந்த இரண்டு வாகனங்களும் பணன்படுத்தப்படுகின்றமை அவதானிக்கப்பட்டது. வாகனங்களின் பெறுமதி குறைவாக வெளியிடப்பட்டு மேலதிகமாக அறவிடவேண்டியதாக அறிக்கையிடப்பட்ட ரூபா 3,643,636 தொகை 04 வருட காலமாக அறவிடப்படாமையின் காரணமாக உரிய நிறுவனத்திற்கு சாதகமான நிலை ஏற்பட்டிருந்தது. அவ்வாறே அரசாங்கத்திற்குக் கிடைக்க வேண்டிய வருமானம் உரிய காலத்தில் கிடைக்கப்பெறாமை, சட்டரீதியாகப் பதிவுசெய்யப்படாத வாகனங்கள் அரசாங்க நிறுவனங்களினால் பயன்படுத்தப்படுவதும் சுங்க புலனாய்வுகளின் தாமதத்தினால் ஏற்பட்ட பாதகமான நிலைமையாக இருந்தமை கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

(ஐ) தபால் சுங்க அலுவலகத்தின் மூலம் போதியளவான வருமானம் பெறப்படாதிருந்தமையும், அனேகமாக வழமையாக அந்த அலுவலகத்தில் தபால் பொருட்களை பரிசோதனை செய்வதற்காக ஈடுபடுத்தப்பட்ட உள்ளகக் கட்டுப்பாட்டு வேலைத்திட்டத்தில் நலிவுகள் பல காணப்படுகின்றமை

அவதானிக்கப்பட்டது. யாழ்ப்பாணம் தபால் சுங்க அலுவலகத்தின் தெரிவுப் பரிசோதனையின் போது சராசரியாக நாளொன்றிற்கு கிடைக்கின்ற பொதிகளில் 62 சதவீதமானவை உபயோகிக்கப்பட்ட ஆடைகளாகவும் 22 சதவீதத்திற்கு கிட்டிய அளவானது உணவுப் பொருட்களாகவும் குறிப்பிடப்பட்டிருந்ததுடன் அனேகமான பொதிகள் பெறுமதியின்றியதாகவும் காண்பிக்கப்பட்டு விடுவிக்கப்பட்டிருந்தது. கிடைக்கின்ற பொதிகளில் 50 சதவீதத்திற்கு மேற்பட்ட அளவு சுங்கக் கட்டணம் மற்றும் வரியின்றி விடுவிக்கப்பட்டிருந்ததுடன் அந்த பொதிகளில் வரி அறவிட வேண்டிய பொருட்கள் காணப்படுகின்றதா என கணக்காய்வின் போது பரீட்சிக்கக் கூடிய வகையில் பொருத்தமான உள்ளகக் கட்டுப்பாட்டு வேலைத் திட்டமும் ஈடுபடுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஒ) இலங்கை சுங்கத்தின் வருமான மூலத்தில் உற்பத்தி வரிகளின் ஒப்பீட்டு ரீதியான பங்களிப்பு 38 சதவீதமாக இருந்ததுடன் 2012 ஆம் ஆண்டின் போது உழைக்கப்பட்ட உற்பத்தி வரி வருமானம் ரூபா 139,970 மில்லியனாக இருந்தது. உற்பத்தி வரியைச் சேகரிப்பதற்காக இலங்கை சுங்கத்தினால் ஈடுபடுத்தப்பட்ட உள்ளகக் கட்டுப்பாட்டு வேலைத் திட்டம் திருப்திகரமான நிலையில் இல்லாதிருந்ததுடன் அவதானிக்கப்பட்ட நலிவுகளில் சில கீழே காண்பிக்கப்படுகின்றன.

(i) 1989 இன் 13 ஆம் இலக்க உற்பத்தி வரி (விஷேட ஏற்பாடுகள்) அதிகாரச்சட்டம் 1993 ஆம் ஆண்டு வரை மதுவரித் திணைக்களத்தின் கீழ் அமுல்படுத்தப்பட்டு 1994 மே மாதம் தொடக்கம் சுங்கப் பணிப்பாளர் நாயகத்தின் மூலம் அமுல்படுத்துவதற்கு 1994 மார்ச் 17 ஆந் திகதிய அ.ம.ப/93/360/0601 ஆம் இலக்க அமைச்சரவைத் தீர்மானத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்த போதிலும் அந்தத் தீர்மானம் முழுமையாக அமுல்படுத்தப்படாமையின் காரணமாக உற்பத்தி வரி தொடர்பாக சட்ட ரீதியான ஏற்பாடுகள் எதுவும் காணப்படவில்லை.

(ii) மேற்கூறப்பட்ட சட்ட ஏற்பாடுகள் எதுவும் காணப்படாமையினால் 2012 ஆம் ஆண்டின் நிலுவை வருமானத்தில் உள்ளடக்கப்பட்ட இறக்குமதிப் பொருட்கள் தொடர்பாக 03 நிறுவனங்களுக்குரிய ரூபா 6,100 மில்லியன் தொகையான நிலுவை உற்பத்தி வரித்தொகையும், 04 மதுபான உற்பத்தி நிறுவனங்களிலிருந்து கிடைக்க வேண்டிய ரூபா 173 மில்லியன் தொகையான உற்பத்தி வரித்தொகையும், நிலுவை வருமான அறிக்கைகளில் உள்ளடக்கப்படாத 03 நிறுவனங்களுக்குரியதாகக் கிடைக்க வேண்டிய ரூபா 286 மில்லியன் வரித் தொகையும், மேலும்

228 நிறுவனங்களிலிருந்து கிடைக்கவேண்டிய ரூபா 46.6 மில்லியன் தொகையான நிலுவை வரி மற்றும் தண்டப்பணம் தொடர்பாக தொடுக்கப்பட்டுள்ள வழக்கினை சமரசத்திற்குக் கொண்டுவருதல் அல்லது விலகிக் கொள்ளக்கூடிய ஆபத்தான நிலையில் காணப்படுகின்றமை அவதானிக்கப்பட்டது.

(iii) 18 உற்பத்தி வரி உத்தியோகத்தர்கள் 08 மதுவரி பரிசோதகர்கள் என்போரை உள்ளடக்கிய உற்பத்தி வரிப் பிரிவின் ஒட்டுமொத்த பதவியணியினர் 30 ஆக இருந்துதுடன் இந்த சகல பதவியணியினருக்காகவும் தற்போது அமுல்படுத்தப்படுகின்ற உற்பத்தி வரி கோவைகளின் எண்ணிக்கை 27 மாத்திரமாக இருந்தது. சில கோவைகள் தொடர்பாக வரி செலுத்துகின்ற நிறுவனங்களின் காலாண்டு அறிக்கை கோவையிலிடல் மாத்திரம் கடமையாகச் செய்யப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.

(iv) இந்தப் பிரிவின் பிரதேச கடமைகளில் ஈடுபடுகின்ற பதவியணியினருக்காக நிறுவனங்களைப் பரிசோதனை செய்தல் உரியவாறு திட்டமிடப்படாதிருந்ததுடன் வரிக் கோவையினைப் பேணுகின்ற உத்தியோகத்தரின் விருப்பத்தின் பிரகாரம் பிரதேச கடமைகளில் ஈடுபடுகின்றமையும், எவ்வித மேற்பார்வைக்கும் உள்ளாக்கப்படாத நிறுவனங்கள் காணப்பட்டமையும், நீண்ட காலமாக ஒரு உத்தியோகத்தரினால் ஒரே கோவையின் செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தமையும் இந்த பிரிவுகள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்டது.

(v) உற்பத்தி வரிப் பிரிவினால் அறவிடப்பட வேண்டிய புதிய நிறுவனங்களை இனங்காண்பதற்காக எவ்வித வேலைத்திட்டமும் ஈடுபடுத்தப்படாதிருந்ததுடன் 2012 ஆம் ஆண்டின் போது எந்த ஒரு நிறுவனமும் புதிதாக பதிவு செய்யப்பட்டிருக்கவில்லை.

(vi) வாகனங்களை பகுதிகளாகப் பிரித்து இறக்குமதி செய்யப்பட்ட உதிரிப் பாகங்களை உள்நாட்டில் அந்த பகுதிகளை ஒன்று சேர்த்து வாகனங்களை உற்பத்தி செய்யும் நிறுவனம் காரணமாக அரசாங்கத்திற்கு இழக்கப்பட்ட வரி வருமானத்தை கணிப்பீடு செய்வதற்காக சிறந்த முறைமையொன்றைத் தயாரிப்பதற்கு 2011 மே

11 ஆந் திகதிய அமைச்சரவைத் தீர்மானத்தின் மூலம் சுங்க பணிப்பாளர் நாயகத்திற்கு கட்டளையிடப்பட்டிருந்த போதிலும் அதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தமை அவதானிக்கப்படவில்லை. இந்த நிறுவனத்தினால் உற்பத்தி செய்யப்பட்ட 103 வாகனங்களுக்குரிய உற்பத்தி வரித் தொகையும் செலுத்தப்படாதிருந்தமை அவதானிக்கப்பட்டது.

## 12.14 மனிதவள முகாமைத்துவம்

**அங்கீகரித்த பதவியணியும் உள்ளபடியான பதவியணியும்**

2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பதவியணி மீதான நிலை பின்வருமாறு.

| | ஊழியர் வகை | அங்கீகரித்த பதவியணி | உள்ளபடியான பதவியணி | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| (அ) | சிரேஷ்ட நிலை | 338 | 318 | 20 |
| (ஆ) | மூன்றாம் நிலை | 1151 | 817 | 334 |
| (இ) | இரண்டாம் நிலை | 968 | 718 | 250 |
| (ஈ) | ஆரம்ப நிலை | 488 | 270 | 218 |
| | மொத்தம் | 2945 | 2123 | 822 |

ஆட்சேர்ப்புக்களுக்குரிய உத்தியோகத்தர்களின் சான்றிதழ்களின் உண்மைத் தன்மை பற்றி இலங்கை சுங்கத்தினால் உறுதிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

## 13. தலைப்பு 248 – மதுவரித் திணைக்களம்

### 13.1 கணக்காய்வின் நோக்கெல்லை

மதுவரித் திணைக்களத்தின் 2012 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிஅறிக்கைகள், இணக்கக்கூற்றுகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய அறிக்கைகளை உள்ளடக்கிய ஒதுக்கீட்டுக் கணக்குகள் மீதான கணக்காய்வு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2014 பெப்ரவரி 21 ஆந் திகதி திணைக்களத்தின் தலைவருக்கு அனுப்பிவைக்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக்கூற்றுக்கள் சம்பந்தமான கணக்காய்வு அவதானிப்புக்கள், கருத்துரைகள் மற்றும் கண்டுபிடிப்புக்கள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகளினதும் இணக்கக்கூற்றுக்களினதும் மீளாய்வின் அடிப்படையிலும் கொடுக்கல் வாங்கல்களின் மாதிரிகளினது போதியளவு செவ்வை பார்த்தலின் அடிப்படையிலும் எழுந்தனவேயாகும். அவ்வாறான மீளாய்வினதும் செவ்வை பார்த்தலினதும் நோக்கெல்லையும் அளவும் எனக்குக் கிடைப்பதற்குள்ள பதவியணியினர், ஏனைய மூலவளங்கள், நேரம் என்பவற்றிற்கமைய இயலுமானளவு விரிவான கணக்காய்வை உள்ளடக்கக் கூடியவாறிருந்தது.

### 13.2 கணக்குகள் மற்றும் இணக்கக்கூற்றுக்கள் சம்பந்தமாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்புக்கள்

ஒதுக்கீட்டுக் கணக்குகள் மற்றும் இணக்கக்கூற்றுக்களை இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 உறுப்புரைகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், அரசாங்க நிதி மற்றும் நிருவாக பிரமாணங்களுக்கிணங்க பேணுதல், தயாரித்தல் மற்றும் நியாயபூர்வமாகச் சமர்ப்பித்தல் என்பன பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும். மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயபூர்வமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாட்டைத் திட்டமிடுதல், அமுல்படுத்துதல் மற்றும் பராமரித்தல் போன்றன இப்பொறுப்பில் உள்ளடங்குகின்றன.

**13.3 கணக்காய்வு அவதானிப்புக்கள்**

2012 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறான நிதி அறிக்கைகள் மற்றும் ஏடுகளின் பிரகாரம் மதுவரித் திணைக்களத்தின் ஒதுக்கீட்டுக் கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் இந்த அறிக்கையின் (அ) தொடக்கம் (ஊ) வரையிலுமான பொதுவான அவதானிப்புக்கள் மற்றும் கீழேயுள்ள 13.4 தொடக்கம் 13.8 வரையுள்ள பந்திகளில் குறிப்பிடப்பட்ட பிரதான கணக்காய்வு அவதானிப்புக்கள் தவிர திருப்திகரமானதாக தயாரிக்கப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.

**(அ) பதிவேடுகள் மற்றும் தகவல்கள் சமர்ப்பிக்கப்படாமை**

(i) மீளாய்வாண்டின் போது சமர்ப்பிக்கப்பட்ட ஏழு (07) கணக்காய்வு ஐயவினாக்களுக்கு 2013 யூன் 30 ஆந் திகதி வரையிலும் திணைக்களத்தினால் பதிலளிக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) கீழே காண்பிக்கப்படுகின்ற ஆவணங்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. அதனால் 07/079/0269 ஆம் இலக்க மது அனுமதிப்பத்திரம் 1985 ஆம் ஆண்டு தொடக்கம் 1988 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் சட்டரீதியான உரிமை மாற்றப்பட்டிருந்ததா என கணக்காய்வில் உறுதிப்படுத்த முடியாதிருந்தது.

i. உரிமையை மாற்றுதல் சட்டரீதியாக மாற்றப்பட்டமைக்கான சான்றுகளை உள்ளடக்கிய கோவைகள்
ii. மேற்கூறப்பட்ட அனுமதிப்பத்திரத்திற்குரிய 2002 ஆம் ஆண்டிற்கு முன்னர் பேணப்பட்ட கோவை
iii. வியாபாரப் பதிவினை மாற்றுவதற்குரிய ஆவணங்கள் மற்றும் வியாபாரப் பதிவுச் சான்றிதழ்

**(ஆ) பாதீட்டு முரண்பாடு**

**மதிப்பீடு தயாரித்தலில் குறைபாடு**

நிதிப் பிரமாணம் 50 இன் பிரகாரம் வருடாந்த பாதீட்டு மதிப்பீடு தயாரிக்கும் போது திணைக்களத்தின் தேவைகளை இனங்கண்டு குறிப்பிட்ட திட்டத்தின் கீழ் மதிப்பீடு தயாரிக்கப்பட வேண்டியிருந்த போதிலும் 2012 ஆம் ஆண்டிற்குரிய மதுவரித் திணைக்களத்தின் வருடாந்த பாதீட்டு மதிப்பீடு தயாரிக்கும் போது பின்வரும் நலிவுகள் அவதானிக்கப்பட்டன.

(i) போதியளவான வகையில் மதிப்பீடு தயாரிக்கப்படாமையின் காரணமாக ஒரு செலவின விடய இல. 1402 இற்காக 156 சதவீத குறைநிரப்பு மதிப்பீட்டு நிதியேற்பாடு பெறப்பட்டிருந்தது.

(ii) செலவின விடய இல. 1102 இற்காக ஒதுக்கப்பட்டிருந்த முழுத்தொகையும் நிதிப் பிரமாணம் 66 இன் மூலம் மாற்றப்பட்டிருந்தது.

**(இ) எரிபொருள் மற்றும் மின்சார செலவின முகாமைத்துவம்**

எரிபொருள் மற்றும் மின்சாரச் செலவினம் தொடர்பாக 2012 பெப்ரவரி 16 ஆந் திகதிய 156 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றுநிருபத்தின் ஆலோசனையைக் கருத்திற்கொள்ளாது அந்த செலவின விடயத்திற்காக நிதிப் பிரமாணம் 66 இன் மூலம் ரூபா 4,790,000 தொகையான நிதியேற்பாடு மீளாய்வாண்டின் போது மாற்றப்பட்டிருந்தது.

**(ஈ) பொது வைப்புக் கணக்கு**

இரண்டு வருடங்களை விஞ்சிய ரூபா 2,810,120 தொகையான மீதி தொடர்பாக நிதிப் பிரமாணம் 571 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**(உ) வருமானக் கணக்கு**

(i) வருமானக் குறியீட்டு இல. 10.02.04.01

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

i. மதுவரிக் கட்டளைச் சட்டம் மற்றும் அதற்குரிய திருத்தங்களின் பிரகாரம் மதுவரி வருமானம் தொடர்பான வரியொன்று, கட்டணம் அல்லது தண்டப் பணமாக அறவிடப்படுகின்ற, அல்லது அறவிடப்பட முடியுமான (நீதிமன்றத்தினால் விதிக்கப்படுகின்ற தண்டப் பணம் தவிர) இந்த கட்டளைச் சட்டத்தின் கீழ் அல்லது மதுபானம் அல்லது உரிய ஏனைய விதிக்கப்படுகின்ற சட்டத்தின் கீழ் அல்லது அரசுடமையாக்கப்பட்ட நியமங்களில் அறவிடப்படுகின்ற வருமானமாகும். எவ்வாறாயினும் மதுவரித் திணைக்களத்தினால் மதுவரி வருமானமாக மதுபான வரி

வருமானம் மாத்திரம் இனங்காணப்பட்டு வருடாந்த வருமான மதிப்பீடு தயாரித்து கணக்குகளுக்குக் கொண்டுவரப்பட்டிருந்தது.

ii. மது வரித் திணைக்களத்திற்காக 2012 இன் ஆரம்ப மதிப்பீட்டின் மூலம் ரூபா 65,200 மில்லியன் மதிப்பீடு செய்யப்பட்டிருந்தது. இருந்த போதிலும் உள்ளபடியான வருமானம் ரூபா 60,047 மில்லியனாக இருந்ததுடன் அதன் பிரகாரம் திணைக்களம் எதிர்பார்த்த ஆரம்ப மதிப்பீடு செய்யப்பட்ட வருமானத்தை அடைந்து கொள்வதற்கு முடியாதிருந்தது. ஆரம்ப மதிப்பீட்டு வருமானம் மற்றும் உள்ளபடியான வருமானத்திற்கிடையே ரூபா 4,229 மில்லியன் வேறுபாடாக இருந்ததுடன் அதன் சதவீதம் 6.49 ஆக இருந்தது. மதுவரிக் கட்டளைச் சட்டத்தின் பிரகாரம் நிலுவை வருமான அறிக்கை சமர்ப்பிக்கும் போது நிலுவை மதுபான வரித் தொகைக்கு மேலதிகமாக மதுபான வரித்தொகை தாமதமாகியதன் அடிப்படையில் அறவிட வேண்டியிருந்த நிலுவை தாமதக் கட்டணமும் உள்ளடக்கி தயாரிக்கப்பட வேண்டியிருந்த போதிலும் அதன் பிரகாரம் நிலுவை வருமான அறிக்கை திணைக்களத்தினால் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

iii. ஒரு நிறுவனத்திலிருந்து 2012 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு அறவிட வேண்டியிருந்த ரூபா 9,742,102 தொகையான நிலுவை வருமானம் அறிக்கையில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

iv. சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகளின் பிரகாரம் ரூபா 1,683,970,524 கூட்டுத்தொகையான வருமானம் நிலுவையாக இருந்ததுடன் அந்த நிலுவையாக இருந்த வருமானம் 4 வருடங்களுக்கும் 15 வருடங்களுக்கும் இடைப்பட்ட காலப்பகுதிக்குரிய 5 நிறுவனங்களிலிருந்து நிலுவை மதுவரியாக அறவிடப்பட வேண்டிய தொகையாகும். அந்த நிலுவையாக இருந்த வருமானத்தை அறவீடு செய்தல் நலிவான நிலையில் காணப்பட்டது.

(ii) வருமானக் குறியீட்டு இல. 10.02.06.00

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

i. 2012 ஆம் ஆண்டின் போது புகையிலை வரி ஆரம்ப மதிப்பீட்டை விஞ்சி 36 சதவீதத்தினால் அதிகரித்திருந்த போதிலும் மதிப்பீட்டை திருத்துவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

ii. நிதிப் பிரமாணம் 128(2)(இ) இன் பிரகாரம், வருமானக் கணக்களிப்பு உத்தியோகத்தரினால் தலைப்பு, உப தலைப்பு விடயங்கள் மற்றும் உப விடயங்களின் கீழ் ஒவ்வொரு நிதியாண்டிலும் யூன் 30 ஆந் திகதியில் உள்ளவாறும் திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறும் நிலுவை வருமானம் தொடர்பான நிலையைக் காண்பிக்கின்ற அரையாண்டு அறிக்கை தயாரிக்கப்பட்டு கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டும். நிலுவைப் பணம் இல்லையாயின் ‘‘வெற்று’’ அறிக்கை சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் அவ்வாறு செய்வதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**(ஊ) அரச உத்தியோகத்தர்களின் முற்பணக் கணக்குகள் தொடர்பான இணக்கக்கூற்றுக்கள்**

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன.

(i) விடய இல. 24801 இன் அரச உத்தியோகத்தர்களின் முற்பணக் கணக்குகள் தொடர்பான 2012 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறான இணக்கக் கூற்றுக்களின் பிரகாரம் அத்திகதியில் உள்ளவாறு அறவீடுகள் நிலுவையாக இருந்த மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 2,001,384 ஆக இருந்ததுடன் அந் நிலுவை மீதியினை அறவீடு செய்வதற்கான பின்தொடர் நடவடிக்கைகள் பலவீனமான நிலைமையில் காணப்பட்டது.

(ii) 2012 சனவரி 01 ஆந் திகதி முற்பணம் பதிவேட்டில் குறிப்பிடும் போது 2011 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறான கடன் மீதியுடன் ஒப்பிட்டு குறிப்பிடப்படாமையின் காரணமாக 49 உத்தியோகத்தர்களிடமிருந்து கடன் மீதிகளில் வேறுபாடு அவதானிக்கப்பட்டது.

(iii) 2012 ஆம் ஆண்டில் அரசாங்க உத்தியோகத்தர்களின் முற்பணக் கணக்குகளின் ஆரம்ப மீதியில் வேறுபாடுகள் 2012 செப்தெம்பர் மாதத்தின் போது சரிசெய்யப்பட்டிருந்தது. இருந்த போதிலும் அந்த சரி செய்தல்களை மேற்கொள்வதற்கு சரியான முறைமையொன்று பின்பற்றப்படாதிருந்ததுடன் அதற்காக முறையான அங்கீகாரமும் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. அதன் காரணமாக அந்த சரி செய்தல்கள் தொடர்பாக கணக்காய்வின் போது ஏற்றுக்கொள்வதற்கு முடியாதிருந்தது.

## 13.4 நல்லாளுகையும் கணக்களிப்பொறுப்பும்

### 13.4.1 கூட்டிணைந்த திட்டம்

2010 மார்ச் 10 ஆந் திகதிய பீஎப்/ஆர்/2/2/3/5(4) ஆம் இலக்க அரச பொது நிதிப்பணிப்பாளர் நாயகத்தின் கடிதத்தின் பிரகாரம் 2010 ஆம் ஆண்டு தொடக்கம் ஆகக் குறைந்தது தொடர்ந்து வரும் 03 வருடங்களுக்கான கூட்டிணைந்த திட்டம் அமைச்சினால் ஆண்டின் ஆரம்பத்தில் தயாரிக்கப்பட வேண்டிய போதிலும் அத்திட்டம் 2013 யூன் 30 ஆந் திகதி வரையிலும் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

### 13.4.2 வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டம்

மேலே 13.4.1 இல் கூறப்பட்ட அரசாங்க நிதிப்பணிப்பாளர் நாயகத்தின் கடிதத்தின் பிரகாரம் தயாரிக்கப்படுகின்ற கூட்டிணைந்த திட்டத்திற்கு இணங்க 2010 மற்றும் அதற்குப் பின்னரும் திணைக்களம் வருடாந்த செயல் நடவடிக்கைத்திட்டத்தை தயாரிக்க வேண்டியிருந்த போதிலும் மீளாய்வாண்டிற்கான மேற்கூறப்பட்ட அரசாங்க நிதிப்பணிப்பாளர் நாயகத்தின் கடிதத்திற்கு இணங்காத வகையிலும் செயல் நடவடிக்கைத்திட்டம் வருட ஆரம்பத்தில் தயாரிக்கப்பட்டிருந்தது.

**13.4.3 வருடாந்த செயலாற்றல் அறிக்கை**

மேலே 13.4.1 பந்தியில் குறிப்பிடப்பட்ட அரச பொது நிதிப்பணிப்பாளர் நாயகத்தின் கடிதத்தில் குறிப்பிடப்பட்ட முறையே 2002 செப்தெம்பர் 12 ஆந் திகதிய மற்றும் 2004 பெப்ரவரி 20 ஆந் திகதிய 402 மற்றும் 402(1) ஆம் இலக்க அரச நிதிச் சுற்றுநிருபத்தின் பிரகாரம் திணைக்களத்தினால் தயாரிக்கப்பட வேண்டிய வருடாந்த செயலாற்றல் அறிக்கை நிதி ஆண்டு முடிவடைந்து 150 நாட்களுக்குள் தலைமை அதிபதிக்கான பிரதியுடன் பாராளுமன்றத்தில் முன்வைக்கப்படவேண்டிய போதிலும் மீளாய்வாண்டிற்கான செயலாற்றல் அறிக்கை அவ்வாறு சபையில் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

**13.5 சொத்துக்கள் முகாமைத்துவம்**

**(அ) வருடாந்த பொருள் மெய்மையாய்வை நடாத்துதல்**

2010 திசெம்பர் 17 ஆந் திகதிய பீஎப்/பொருள் மெய்மையாய்வு/01 ஆம் இலக்க அரச பொது நிதிப் பணிப்பாளர் நாயகத்தின் கடிதத்தின் மூலம் திருத்தப்பட்ட 2009 திசெம்பர் 09 ஆந் திகதிய 441 ஆம் இலக்க அரச பொது நிதிச் சுற்றுநிருபத்தின் பிரகாரம் 2012 இன் வருடாந்த பொருள் மெய்மையாய்வு நடாத்தப்பட்டு அந்த அறிக்கை 2013 மார்ச் 31 ஆந் திகதிக்கு முன்னர் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டியிருந்த போதிலும் திணைக்களத்தினால் அவ்வாறு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. இறுதியாக பொருள் மெய்மையாய்வு 2011 ஆண்டிற்காகவே மேற்கொள்ளப்பட்டிருந்தது.

**(ஆ) போதியளவில் நிறைவேற்றப்படாத செயற்பாடுகள்**

பின்வரும் சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) திணைக்களம் புகையிலை வரி அதிகாரச்சட்டத்தை அமுல்படுத்தும் செயற்பொறுப்புக்கள் போதியளவில் நிறைவேற்றப்படாத சந்தர்ப்பங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

i. இலங்கை பாராளுமன்றத்தினால் அங்கீகரிக்கப்பட்ட 1999 இன் 8 ஆம் இலக்க புகையிலை வரி அதிகாரச்சட்டத்திற்குப் பதிலாக 10 வருடங்கள் கடக்கும் வரை அதாவது 2009 யூலை

வரையிலும் மதுவரி அறிவித்தல் தயாரிக்கப்பட்டு வர்த்தமானியில் பிரசுரித்து அமுல்படுத்துவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே அதிகாரச்சட்டத்தில் மேலும் முக்கியமானவைகளை இது வரையிலும் அமுல்படுத்துவதற்கு திணைக்களம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

ii. 2009 ஒக்தோபர் 26 ஆந் திகதிய வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட 2009 இன் 01 ஆம் இலக்க புகையிலை வரி கட்டளையின் 5 ஆவது விடயத்தின் பிரகாரம் பதிவு செய்து சான்றிதழ் ஒன்றைப் பெற்றுக்கொள்வதற்கான சகல விண்ணப்பப் பத்திரமும் கிடைத்து 30 நாட்களுக்குள் பதிவு செய்யப்பட்டு வழங்கப்பட வேண்டிய அல்லது நிராகரிக்கப்பட வேண்டியிருந்த போதிலும் அதற்கு முரணாக விண்ணப்பப்படிவம் கிடைத்து ஒரு வருடத்திற்கு மேற்பட்ட காலம் கடந்ததன் பின்னர் சான்றிதழ் விநியோகிக்கப்பட்ட ஐந்து சந்தர்ப்பங்கள் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டன. திணைக்களத்தினால் இவ்வாறு பதிவு செய்யப்பட்டு சான்றிதழ் வழங்குவதற்கான தாமதத்திற்கான காரணத்தை கண்டறிந்து தேவையான நடவடிக்கைகளை எடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

iii. அனுமதிப் பத்திரத்தின் செல்லுபடிக் காலம் முடிவடைந்ததன் பின்னர் அனேகமான உற்பத்திகளின் மீள் பதிவை புதுப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படாத சந்தர்ப்பங்கள் காணப்பட்டன. அவ்வாறான சந்தர்ப்பங்களின் போது ஒரு உற்பத்தி நிறுவனத்தினால் அனுமதிப்பத்திரமின்றி மேலும் தமது உற்பத்திகளை மேற்கொள்வதற்கு அனேகமாக அவகாசம் காணப்படுகின்றமையால் அது தொடர்பாக திணைக்களத்தினால் அந்த நிறுவனத்தை பரிசோதனைக்கு உட்படுத்தலோ மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. அவ்வாறான பதிவினை புதுப்பிப்பதற்கான நடவடிக்கை எடுக்காத எட்டு நிறுவனங்கள் தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது வெளிப்படுத்தப்பட்டது.

iv. 1999 இன் 8 ஆம் இலக்க புகையிலை வரி அதிகாரச்சட்டத்தின் 17 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அதிகாரச்சட்டத்தின் கீழ்

மேற்கொள்ளப்படுகின்ற அரசுடைமையாக்கல் மற்றும் தண்டங்களிலிருந்து அறவிடப்பட்ட பணத்திலிருந்து ¾ பங்கு திறைசேரியின் பிரதிச் செயலாளருக்கு செலுத்த வேண்டியிருந்ததுடன் அவரால் அந்தப் பணம் திரண்ட நிதியத்திற்கு செலவு வைக்கப்படுகின்றது. எஞ்சிய தொகை அமைச்சரினால் அங்கீகரிக்கப்பட்ட உத்தேசத் திட்டத்தின் பிரகாரம் இந்த அதிகாரச்சட்டத்தை அமுல்படுத்துவதற்கு உதவியாகவுள்ள மதுவரி உத்தியோகத்தர்கள், சுங்க உத்தியோகத்தர்கள், பொலிஸ் உத்தியோகத்தர்கள், உளவாளிகள் மற்றும் ஏனையவர்களிடையே பகிர்ந்தளிப்பதற்காக இந்த அதிகாரச்சட்டத்தின் கீழ் உருவாக்கப்படுகின்றதும் மதுவரி ஆணையாளர் நாயகத்தின் கட்டுப்பாட்டின் கீழ் பேணப்படுகின்ற வெகுமதி நிதியத்தில் செலவு வைக்கப்பட வேண்டியிருந்த போதிலும் இந்த அதிகாரச் சட்டத்தின் கீழ் உள்ள வெகுமதி நிதியம் 2012 ஆம் ஆண்டு வரையிலும் உருவாக்கப்பட்டிருக்கவில்லை.

v. 1999 இன் 8 ஆம் இலக்க புகையிலை வரி அதிகாரச்சட்டத்தின் 21 ஆம் பிரிவின் பிரகாரம் நிதி அமைச்சரினால் பிறப்பிக்கப்பட்ட கட்டளையின் கீழ் 2009 யூலை 17 ஆந் திகதிய 1610/28 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல் மற்றும் அதற்குரிய திருத்தங்களின் கீழ் பிரசுரிக்கப்பட்ட கட்டளை இலக்கம் 1625/1 இன் கீழ் மதுவரி ஆணையாளர் நாயகத்தினால் வழங்கப்பட்ட பதிவுச் சான்றிதழ் பெறப்படாமல் எந்த நபரினாலும் சிகரட், சுறுட்டு, பீடி அல்லது குழல் புகையிலைக்கான மூலப்பொருள் அல்லது பூர்த்திப் பொருள் உற்பத்தி செய்தல், களஞ்சியப்படுத்துதல், இறக்குமதி செய்தல் அல்லது ஏற்றுமதி செய்தல் முடியாதிருந்தமை குறிப்பிடப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், சிகரட் உற்பத்தி கம்பனி ஒன்றினால் பதிவுச் சான்றிதழ் இன்றி களஞ்சியமொன்று பேணப்பட்டிருந்தது.

(ii) ஒழுக்காற்று நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்ற உத்தியோகத்தர்கள் தொடர்பாக தாபன விதிக் கோவையின் பிரகாரம் ஒழுக்காற்று நடவடிக்கைகளை எடுப்பதில் நீண்ட கால தாமதம் அவதானிக்கப்பட்டது.

## 13.6 வங்கிக் கணக்குச் செயற்பாடுகளில் குறைபாடு

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) வங்கிக் கணக்கிற்கு நேரடியாகக் கிடைக்கின்ற பணத்தை இனங்கண்டு உரிய வருமானக் குறியீடுகளில் கணக்கு வைப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்படாமையின் காரணமாக 2012 திசெம்பர் 31 ஆந் திகதி வரையில் ரூபா 43,234,868 தொகையான மீதி இனங்காணப்படாத வைப்பாக அவதானிக்கப்பட்டது.

(ஆ) 2012 திசெம்பர் 31 ஆந் திகதி வரை காணப்பட்ட ரூபா 3,502,874 தொகைக்குரிய வருமானக் குறியீடு இனங்காணப்படாமையின் காரணமாக அரசாங்கத்தின் வருமானத்தில் செலவு வைக்கப்பட்டிருந்தது. நேரடியாக வங்கிக் கிடைக்கின்ற பணத்தை இனங்காணக் கூடிய வகையில் போதியளவான வேலைத் திட்டமொன்று அமுல்படுத்தப்பட்டிருக்கவில்லை.

## 13.7 முகாமைத்துவ நலிவுகள்

2003 செப்தெம்பர் 22 ஆந் திகதிய 859 ஆம் இலக்க மதுவரி அறிவித்தல் மற்றும் 2003 ஒக்தோபர் 10 ஆந் திகதிய 1309/19 ஆம் இலக்க திருத்தப்பட்ட அறிவித்தலின் 1 ஆவது பட்டோலையின் 10 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டதன் பிரகாரம் புதிய விண்ணப்பத்தாரர் ஒருவருக்கு அனுமதிப்பத்திரத்தை மாற்றுவதற்காக ஒரு அனுமதிப்பத்திரத்திற்காக ரூபா 150,000 மேலதிகத் தொகை அரசாங்கத்திற்குச் செலுத்த வேண்டியிருந்த போதிலும் ற.பீ 04 மதுவரி அனுமதிப்பத்திரம் 15 இனை இவ்வாறு மாற்றுவதற்காக ரூபா 2,250,000 தொகை செலுத்தப்பட்டிருந்தது.

## 13.8 மனிதவள முகாமைத்துவம்

### (அ) அங்கீகரித்த பதவியணியும் உள்ளபடியான பதவியணியும்

2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பதவியணி மீதான நிலை பின்வருமாறு.

| | ஊழியர் வகை | அங்கீகரித்த பதவியணி | உள்ளபடியான பதவியணி | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| (அ) | சிரேஷ்ட நிலை | 57 | 38 | 19 |
| (ஆ) | மூன்றாம் நிலை | 380 | 284 | 96 |
| (இ) | இரண்டாம் நிலை | 855 | 592 | 263 |
| (ஈ) | ஆரம்ப நிலை | 129 | 124 | 05 |
| | மொத்தம் | 1421 | 1038 | 383 |

(ஆ) பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

2012 திசெம்பர் 31 ஆந் திகதி வரையில் 383 வெற்றிடங்கள் காணப்பட்டதுடன் அது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) இரண்டு மதுவரி ஆணையாளர்கள் மற்றும் 16 மதுவரி உத்தியோகத்தர்களுடன் இரண்டாம் நிலையில் 19 மதுவரி உத்தியோகத்தரிகளின் வெற்றிடங்களை நிரப்புவதற்காக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(iii) ஒட்டு மொத்த பதவியணியினரில் 383 உத்தியோகத்தர்களின் வெற்றிடங்கள் காணப்பட்டதுடன் அந்த வெற்றிடங்களை பூர்த்தி செய்வது திணைக்களத்தின் இலக்கினை அடைந்து கொள்வதற்காக போதியளவான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 14. தலைப்பு 249 – திறைசேரிச் செயற்பாடுகள் திணைக்களம்

### 14.1 கணக்காய்வின் நோக்கெல்லை

திறைசேரிச் செயற்பாடுகள் திணைக்களத்தின் 2012 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிஅறிக்கைகள், இணக்கக்கூற்றுகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய அறிக்கைகளை உள்ளடக்கிய ஒதுக்கீட்டுக் கணக்குகள் மீதான கணக்காய்வு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2014 ஏப்ரல் 28 ஆந் திகதி திணைக்களத்தின் தலைவருக்கு அனுப்பிவைக்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக்கூற்றுக்கள் சம்பந்தமான கணக்காய்வு அவதானிப்புக்கள், கருத்துரைகள் மற்றும் கண்டுபிடிப்புக்கள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகளினதும் இணக்கக்கூற்றுக்களினதும் மீளாய்வின் அடிப்படையிலும் கொடுக்கல் வாங்கல்களின் மாதிரிகளினது போதியளவு செவ்வை பார்த்தலின் அடிப்படையிலும் எழுந்தனவேயாகும். அவ்வாறான மீளாய்வினதும் செவ்வை பார்த்தலினதும் நோக்கெல்லையும் அளவும் எனக்குக் கிடைப்பதற்குள்ள பதவியணியினர், ஏனைய மூலவளங்கள், நேரம் என்பவற்றிற்கமைய இயலுமானளவு விரிவான கணக்காய்வை உள்ளடக்கக் கூடியவாறிருந்தது.

### 14.2 கணக்குகள் மற்றும் இணக்கக்கூற்றுக்கள் சம்பந்தமாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்புக்கள்

ஒதுக்கீட்டுக் கணக்குகள் மற்றும் இணக்கக்கூற்றுக்களை இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 உறுப்புரைகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், அரசாங்க நிதி மற்றும் நிருவாக பிரமாணங்களுக்கிணங்க பேணுதல், தயாரித்தல் மற்றும் நியாயபூர்வமாகச் சமர்ப்பித்தல் என்பன பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பாகும். மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயபூர்வமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாட்டைத் திட்டமிடுதல், அமுல்படுத்துதல் மற்றும் பராமரித்தல் போன்றன இப்பொறுப்பில் உள்ளடங்குகின்றன.

### 14.3 கணக்காய்வு அவதானிப்புக்கள்

2012 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறான நிதி அறிக்கைகள் மற்றும் ஏடுகளின் திறைசேரிச் செயற்பாடுகள் திணைக்களத்தின் ஒதுக்கீட்டுக் கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் இந்த அறிக்கையின் (அ) தொடக்கம் (இ) வரையிலுமான பொதுவான அவதானிப்புக்கள் மற்றும் கீழேயுள்ள 14.4 மற்றும் 14.5 ஆம் பந்திகளில் குறிப்பிடப்பட்ட பிரதான கணக்காய்வு அவதானிப்புக்கள் தவிர திருப்திகரமானதாக தயாரிக்கப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.

**(அ) பாதீட்டு முரண்**

03 செலவின விடயங்களுக்கான நிதியேற்பாடான ரூபா 1,200,000,000 தொகையான மொத்த மூலதன நிதியேற்பாடும் நிதிப் பிரமாணம் 66 இன் மூலம் ஏனைய 03 மூலதன செலவின விடயங்களுக்காக மாற்றப்பட்டிருந்தது.

**(ஆ) வருமானக் கணக்கு**

2012 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு கீழே காண்பிக்கின்ற பிரகாரம் ரூபா 7,205,394,066 தொகையானது பல வருட காலமாக நிலுவையாகக் காணப்பட்டது.

| வருமானக் குறியீடு | காலப்பகுப்பாய்வு | | | 2012 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு நிலுவை வருமானம் |
|---|---|---|---|---|
| | 1 வருடத்திற்குக் குறைவு | 1 வருடத்திற்கு மேல் 3 இற்குக் குறைவு | 3 வருடத்திற்கு மேல் | |
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| 20.02.01.01 | 44,702,086 | 35,498,682 | 334,303,489 | 382,908,172 |
| 20.02.02.01 | 1,842,565,787 | 1,526,104,246 | 1,388,698,592 | 3,364,458,223 |
| 20.02.02.99 | 47,805 | 24,382 | 0 | 72,187 |
| 20.03.02.99 | 951,263 | 3,580,884 | 4,153,640 | 4,392,242 |

| | | | | |
|---|---|---|---|---|
| 20.03.99.00 | 13,000 | 4,699,150 | 393,368 | 13,000 |
| 20.06.04.00 | 1,200,747,816 | 1,065,526,757 | 1,287,275,669 | 3,453,550,242 |
| மொத்தம் | 3,089,027,757 | 2,635,434,101 | 3,014,824,758 | 7,205,394,066 |

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) வட்டிக் கடன் வழங்கல், விற்பனை மற்றும் கட்டணம் - தண்டப் பணம் மற்றும் அரசவுடைமையாக்கல், விற்பனை மற்றும் கட்டணம், நிருவாகக் கட்டணம், ஏனைய குத்தகை வாடகை போன்ற 04 வருமானக் கணக்குகளுக்குரிய வருமான மதிப்பீட்டை திருத்தம் செய்யும் போது 2002 யூலை 17 ஆந் திகதிய 01/2002 ஆம் இலக்க சுற்றுநிருபத்தின் 3 ஆம் பந்தியின் பிரகாரம் அரசாங்க நிதிப்பணிப்பாளர் நாயகத்திற்கு அறிக்கையிடப்பட்டிருக்கவில்லை.

**(ii) விற்பனை மற்றும் கட்டணம் - ஏனைய பெறுவனவுகள் - வருமானக் குறியீடு இலக்கம் 20.03.99.00**

அரசிறைக் கொள்கை மற்றும் பொருளாதாரச் செயற்பாடுகள் சுற்று நிருபத்தின் 01/2002 இன் பிரகாரம் ஆரம்ப வருமான மதிப்பீட்டுத் திருத்தம் மீளாய்வாண்டின் அது வரையிலும் கிடைத்திருந்த உள்ளபடியான வருமானம் மற்றும் கிடைப்பதற்குள்ள வருமானம் தொடர்பாக ஆய்வு செய்யப்பட்டதன் பின்னரே செய்யப்பட வேண்டிய போதிலும் 2012 ஆம் ஆண்டில் ரூபா 6,000,000,000 தொடர்பாக ஆரம்ப வருமான மதிப்பீடு ரூபா 9,042,000,000 ஆக திருத்தும் போது அதன் பிரகாரம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

**(இ) அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகள் தொடர்பான இணக்கக் கூற்று**

பாராளுமன்றத்தினால் விதிக்கப்பட்ட கீழே காண்பிக்கப்படுகின்ற முற்பணக் கணக்கு எல்லைகள் பின்பற்றப்பட்டிருந்தன.

| | செலவினம் | பெறுவனவு | வரவு மீதி |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா |
| அங்கீகரிக்கப்பட்ட எல்லை | 5,500,000 | 2,800,000 | 30,000,000 |
| உள்ளபடியான மீதி | 3,352,868 | 3,204,052 | 17,874,645 |

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

**(i) நிலுவைக் கடன் மீதி**

2012 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு மரணித்த அல்லது ஓய்வு பெற்ற உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிட வேண்டிய ஒரு வருடத்திற்குக் குறைந்த அசைவுறாத ரூபா 104,148 தொகையான நிலுவைக் கடன் மீதி காணப்பட்டது.

**(ii) ஏனைய அவதானிப்புக்கள்**

2004 ஒக்தோபர் 11 ஆந் திகதிய 118 ஆம் இலக்க தேசிய பாதீட்டுச் சுற்று நிரூபத்தின் ஏற்பாடுகளுக்கு முரணாக இடமாற்றம் பெற்றுச்சென்ற 5 உத்தியோகத்தர்களுக்குரிய ரூபா 1,099,173 கூட்டுத்தொகையான கடன் மீதியை அறவிடுல் 2012 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் 04 மாதங்கள் தொடக்கம் 11 மாதங்கள் வரை தாமதமாயிருந்தது.

**14.4 நல்லாளுகையும் கணக்களிப்பொறுப்பும்**

**14.4.1 கூட்டிணைந்த திட்டம்**

2010 மார்ச் 10 ஆந் திகதிய பீஎப்/ஆர்/2/2/3/5(4) ஆம் இலக்க அரச பொது நிதிப்பணிப்பாளர் நாயகத்தின் கடிதத்தின் பிரகாரம் 2010 ஆம் ஆண்டு தொடக்கம் ஆகக் குறைந்தது தொடர்ந்து வரும் 03 வருடங்களுக்கான கூட்டிணைந்த திட்டம் அமைச்சினால் ஆண்டின் ஆரம்பத்தில் தயாரிக்கப்பட வேண்டிய போதிலும் அத்திட்டம் 2012 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

**14.4.2 வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டம்**

மேலே 14.4.1 இல் கூறப்பட்ட அரசாங்க நிதிப்பணிப்பாளர் நாயகத்தின் கடிதத்தின் பிரகாரம் திணைக்களம் வருடாந்த செயல் நடவடிக்கைத்திட்டத்தை தயாரிக்க வேண்டியிருந்த போதிலும் மீளாய்வாண்டிற்கான செயல் நடவடிக்கைத்திட்டம் 2012 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

**14.5 மனிதவள முகாமைத்துவம்**

**அங்கீகரித்த பதவியணியும் உள்ளபடியான பதவியணியும்**

2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பதவியணி மீதான நிலை பின்வருமாறு.

| | ஊழியர் வகை | அங்கீகரித்த பதவியணி | உள்ளபடியான பதவியணி | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| (அ) | சிரேஷ்ட நிலை | 20 | 16 | 04 |
| (ஆ) | மூன்றாம் நிலை | 01 | 01 | - |
| (இ) | இரண்டாம் நிலை | 82 | 60 | 22 |
| (ஈ) | ஆரம்ப நிலை | 18 | 18 | - |
| | மொத்தம் | 121 | 95 | 26 |

2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறு சிரேஷ்ட நிலையில் அங்கீகரிக்கப்பட்ட 04 பதவிகளையும் இரண்டாம் நிலையில் அங்கீகரிக்கப்பட்ட 22 பதவிகளையும் நிரப்புவதற்கு திணைக்களத்தினால் இயலாதிருந்தது.

## 15. தலைப்பு 250 – அரச கணக்குகள் திணைக்களம்

### 15.1 கணக்காய்வின் நோக்கெல்லை

அரச கணக்குகள் திணைக்களத்தின் 2012 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிஅறிக்கைகள், இணக்கக்கூற்றுகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய அறிக்கைகளை உள்ளடக்கிய ஒதுக்கீட்டுக் கணக்குகள் மீதான கணக்காய்வு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2013 நவம்பர் 28 ஆந் திகதி திணைக்களத்தின் தலைவருக்கு அனுப்பிவைக்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக்கூற்றுக்கள் சம்பந்தமான கணக்காய்வு அவதானிப்புக்கள், கருத்துரைகள் மற்றும் கண்டுபிடிப்புக்கள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகளினதும் இணக்கக்கூற்றுக்களினதும் மீளாய்வின் அடிப்படையிலும் கொடுக்கல் வாங்கல்களின் மாதிரிகளினது போதியளவு செவ்வை பார்த்தலின் அடிப்படையிலும் எழுந்தனவேயாகும். அவ்வாறான மீளாய்வினதும் செவ்வை பார்த்தலினதும் நோக்கெல்லையும் அளவும் எனக்குக் கிடைப்பதற்குள்ள பதவியணியினர், ஏனைய மூலவளங்கள், நேரம் என்பவற்றிற்கமைய இயலுமானளவு விரிவான கணக்காய்வை உள்ளடக்கக் கூடியவாறிருந்தது.

### 15.2 கணக்குகள் மற்றும் இணக்கக்கூற்றுக்கள் சம்பந்தமாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்புக்கள்

ஒதுக்கீட்டுக் கணக்குகள் மற்றும் இணக்கக்கூற்றுக்களை இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 உறுப்புரைகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், அரசாங்க நிதி மற்றும் நிருவாக பிரமாணங்களுக்கிணங்க பேணுதல், தயாரித்தல் மற்றும் நியாயபூர்வமாகச் சமர்ப்பித்தல் என்பன பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பாகும். மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயபூர்வமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாட்டைத் திட்டமிடுதல், அமுல்படுத்துதல் மற்றும் பராமரித்தல் போன்றன இப்பொறுப்பில் உள்ளடங்குகின்றன.

## 15.3 கணக்காய்வு அவதானிப்புக்கள்

2012 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறான நிதி அறிக்கைகள் மற்றும் ஏடுகளின் அரச கணக்குகள் திணைக்களத்தின் ஒதுக்கீட்டுக் கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் இந்த அறிக்கையின் (அ) தொடக்கம் (ஈ) வரையிலுமான பொதுவான அவதானிப்புக்கள் மற்றும் கீழேயுள்ள 15.4 தொடக்கம் 15.6 வரையான பந்திகளில் குறிப்பிடப்பட்ட பிரதான கணக்காய்வு அவதானிப்புக்கள் தவிர திருப்திகரமானதாக தயாரிக்கப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.

### (அ) நிதியேற்பாட்டின் குறைவான பயன்பாடு

02 செலவின விடயத்தின் கீழ் ஏற்பாடு செய்யப்பட்ட ரூபா 1,115,038 கூட்டுத்தொகையான மீண்டெழும் நிதியேற்பாடும், ஒரு செலவின விடயத்தின் கீழ் ஏற்பாடு செய்யப்பட்ட ரூபா 4,000,000 தொகையான மூலதன நிதியேற்பாடும் சேமிக்கப்பட்டிருந்தது.

### (ஆ) அரச உத்தியோகத்தர்களின் முற்பணக் கணக்குகள் தொடர்பான இணக்கக்கூற்றுக்கள்

விடய இல. 25001 இன் அரச உத்தியோகத்தர்களின் முற்பணக் கணக்குகள் தொடர்பான 2012 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறான இணக்கக் கூற்றுக்களின் பிரகாரம் அத்திகதியில் உள்ளவாறு அறவீடுகள் நிலுவையாக இருந்த மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 164,953 ஆக இருந்ததுடன் அந் நிலுவை மீதியினை அறவீடு செய்வதற்கு திணைக்களத்தினால் முடியாதிருந்தது.

### (இ) நானாவித முற்பணக் கணக்குகள்

#### (i) நெல் கொள்வனவு செய்வதற்காக வழங்கப்பட்ட முற்பணம்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

i. நெல் கொள்வனவு செய்வதற்கு 14 மாவட்ட செயலகங்கள், அமைச்சு மற்றும் திணைக்களங்களுக்கு 2001 ஆம் ஆண்டு தொடக்கம் 2008 ஆம் ஆண்டு வரை 18 சந்தர்ப்பங்களின் போது வழங்கப்பட்ட முற்பணத்திலிருந்து 2012 திசெம்பர் 31 ஆந் திகதி

வரையில் தீர்க்கப்படாத முற்பண மீதி கீழே காண்பிக்கின்ற பிரகாரம் ரூபா 481,376,824 ஆக இருந்தது.

2002 ஆம் ஆண்டின் போது 13 மாவட்டச் செயலகங்கள் மற்றும் அமைச்சிற்கு வழங்கப்பட்டு 2012 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் தீர்க்கப்படாத 10 வருடங்களுக்கு மேற்பட்ட காலத்திலிருந்து நிலுவையாக இருக்கின்ற ரூபா 466,235,683 தொகையான முற்பண மீதியும், 2006 ஆம் ஆண்டின் போது கமநல அபிவிருத்தித் திணைக்களத்திற்கு வழங்கப்பட்டு 6 வருடங்களுக்கு மேற்பட்ட காலத்தைக் கடந்திருந்த ரூபா 12,560,031 தொகையான முற்பண மீதி மற்றும் அம்பாறை, மட்டக்களப்பு மற்றும் திருகோணமலை போன்ற மூன்று மாவட்ட செயலகங்களுக்கும் வழங்கப்பட்டிருந்த 2008 ஆம் ஆண்டு தொடக்கம் 4 வருடங்களுக்கு மேற்பட்ட காலமாகக் கொண்டு வரப்படுகின்ற ரூபா 2,581,110 மீதியாக ரூபா 481,376,824 கூட்டுத்தொகையான நிலுவையாக இருந்த முற்பண மீதி 2012 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் தீர்க்கப்பட்டிருக்கவில்லை.

ii. 2013 சனவரி மாதத்தின் போது அரசாங்க கணக்குகள் திணைக்களத்தினால் ரூபா ரூபா 234,693,030 கூட்டுத் தொகையான முற்பண மீதியை உறுதிப்படுத்திக் கொள்வதற்காக முற்பணம் வழங்கப்பட்ட நிறுவனங்களுக்கு கடிதம் அனுப்பப்பட்டிருந்த போதிலும் கீழே குறிப்பிடப்படுகின்ற திணைக்களங்களினால் இந்த அறிக்கைத் திகதி வரையிலும் மீதி உறுதிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

| கணக்கு இலக்கம் | அலுவலகம் | 2012 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறான மீதி |
|---|---|---|
| | | ரூபா |
| 25003/418 | பொலன்னறுவை மாவட்ட செயலகம் | 199,759,798 |
| 25003/423 | குருணாகல் மாவட்ட செயலகம் | 5,349,072 |
| 25003/425 | அம்பாந்தோட்டை மாவட்ட செயலகம் | 19,320,629 |
| 25003/439 | முல்லைத்தீவு மாவட்ட செயலகம் | 627,225 |
| 25003/501 | மட்டக்களப்பு மாவட்ட செயலகம் | 681,800 |

| | | |
|---|---|---|
| 25003/455 | கமநல அபிவிருத்தித் திணைக்களம் | 12,560,031 |
| 25003/431 | மகாவலி அமைச்சு | (3,605,525) |
| | | ---------------- |
| | | 234,693,030 |
| | | ========= |

(iii) கீழே குறிப்பிடப்படுகின்ற 03 மாவட்ட செயலகங்களினால் அறவிட வேண்டிய ரூபா 2,886,535 முற்பணத் தொகை நிதிப் பிரமாணம் 113 இன் பிரகாரம் தேசிய பாதீட்டுத் திணைக்களத்தில் நிதியேற்பாட்டைப் பெற்று தீர்க்கப்பட வேண்டியமை அரசாங்க கணக்குகள் திணைக்களத்தினால் ஆலோசனை வழங்கப்பட்டிருந்த போதிலும் உரிய மாவட்டச் செயலாளர்கள் 2012 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் அவ்வாறு செய்திருக்கவில்லை.

| மாவட்ட செயலகம் | 2012 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறான மீதி |
|---|---|
| | ரூபா |
| அம்பாறை மாவட்ட செயலகம் | 1,809,310 |
| முல்லைத்தீவு மாவட்ட செயலகம் | 627,225 |
| மன்னார் மாவட்ட செயலகம் | 450,000 |
| | ---------------- |
| | 2,886,535 |
| | ========= |

(iv) கமநல அபிவிருத்தித் திணைக்களத்திற்கு ஹிரியால விவசாயக் கம்பனிக்கு மற்றும் உலக உணவு நிகழ்ச்சித் திட்டத்திற்கு அரிசி கொள்வனவு செய்வதற்காக குருணாகல் மாவட்ட செயலகத்திற்கு வழங்கப்பட்ட ரூபா 5,439,019 தொகையான முற்பணத்திலிருந்து ரூபா 349,487 தொகை பொதுத் திறைசேரிக்கு நேரடியாகத் தீர்க்கப்பட்டமைக்கு குருணாகல் மாவட்டச் செயலாளரின் 2012 மார்ச் 29 ஆந் திகதிய 1/5/5/12 ஆம் இலக்க கடிதத்தில் அரசாங்க கணக்குகள் பணிப்பாளர் நாயகத்திற்கு அறிவிக்கப்பட்டிருந்த போதிலும் 2012 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு மீதி இணக்கஞ் செய்யப்பட்டு தீர்த்து வைக்கப்பட்டிருக்கவிருக்கவில்லை.

(v) அனுராதபுரம் மாவட்டச் செயலகத்திற்கு வழங்கப்பட்ட முற்பணத்திலிருந்து 2012 திசெம்பர் 31 ஆந் திகதி வரையில் காகம வங்கிச் சங்கத்திற்கு வழங்கப்பட்ட ரூபா 1,009,449 தொகை மற்றும் வ/ப நொச்சிகாம பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்திற்கு வழங்கப்பட்ட ரூபா 5,023,818 தொகை என்பன அந்த வங்கி மற்றும் சங்கம் கலைக்கப்பட்டதன் பின்னர் தீர்க்கப்படுவதாக அனுராதபுரம் மாவட்ட செயலாளரினால் அரசாங்க கணக்குகள் பணிப்பாளர் நாயகத்திற்கு அறிவிக்கப்பட்டிருந்த போதிலும் அவ்வாறு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. சறுகெத விவசாயச் சங்கத்திடமிருந்து அறவிட வேண்டிய ரூபா 480,000 தொகை மற்றும் வட மத்திய மாகாண கூட்டுறவுச் சங்கத்திடமிருந்து அறவிட வேண்டிய ரூபா 4,264,300 தொகையை அறவீடு செய்வதற்கான சட்டரீதியான நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

(v) நானாவித முற்பண செயற்பாட்டின் கீழ் மகாவலி அமைச்சிற்கு செலவு வைக்கப்பட்ட ரூபா 3,605,525 தொகையான மீதி தீர்க்கப்பட்டிருக்கவில்லை.

(vi) திருகோணமலை மாவட்ட செயலகத்திற்கு ச.தொ.ச நிறுவனத்திலிருந்து அறவிட வேண்டிய ரூபா 1,652,916 தொகையை பதிவழிப்பதற்கான நடவடிக்கை எடுப்பதற்கு அரசாங்க கணக்குகள் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்தினால் 2012 யூன் 05 ஆந் திகதிய எஸ்ஏ/கணக்கு/4/7000/422 என்ற கடிதத்தினால் திருகோணமலை மாவட்ட செயலாளருக்கு அறிவித்து அனுப்பப்பட்டிருந்தும் இது வரையிலும் அது தொடர்பான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. திருகோணமலை மாவட்ட செயலகத்திற்கு வழங்கப்பட்ட முற்பணத்திலிருந்து நெல்லைக் கொள்வனவு செய்த பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களினால் கொள்வனவு செய்யப்பட்ட நெல் அரிசியாக்கப்பட்டு அரசாங்கத்தின் அங்கீகரிக்கப்பட்ட விலையினை விடக் குறைவாக விற்பனை செய்யப்பட்டிருந்தமையினால் ஏற்பட்ட நட்டம் ரூபா 8,757,384 ஆக இருந்தது. இந்த நட்டத்தை உரிய தரப்பினரிடமிருந்து அறவிடுவதற்கோ அல்லது கணக்குகளிலிருந்து பதிவழிப்பதற்கோ நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(viii) 2012 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு இரத்தினபுரி மாவட்ட செயலகத்தில் செலவு மீதியாக பிழையாக ரூபா 6,261,658 தொகை கணக்கு வைக்கப்பட்டிருந்தது. அத்தொகை இரத்தினபுரி மாவட்ட செயலாளரின் கணக்கிற்கு வரவு வைக்கப்பட்டு உரிய குறிப்பிட்ட கணக்கிற்கு செலவு வைத்தல் அரசாங்க கணக்குகள் திணைக்களத்தினால் செய்யப்பட்டமைக்கு 2009 நவம்பர் 27 ஆந் திகதி இரத்தினபுரி மாவட்ட செயலகத்தில் காணப்பட்ட நெல் கொள்வனவுகளின் செயல் முன்னேற்றம் மீளாய்வுக் கட்டத்தின் போது இணங்கப்பட்டிருந்த போதிலும் இந்த அறிக்கைத் திகதி வரையிலும் இந்தத் தவறைத் திருத்துவதற்கு முடியாதிருந்தது.

**(ii) காணாமல் போன காசு, முத்திரை மற்றும் பற்றுச்சீட்டுகள் போன்றவற்றிற்காக முற்பணம் வழங்குதல்**

i. நிதிப் பிரமாணம் 106 இன் பிரகாரம் மேற்கூறப்பட்ட விடயங்களுக்காக பின்வரும் அமைச்சுக்கள் திணைக்களங்கள் மற்றும் அலுவலகங்களுக்கு ரூபா 10,096,624 தொகையான முற்பணம் வழங்கப்பட்டிருந்தது. அவ்வாறு வழங்கப்பட்ட முற்பணங்களிலிருந்து 2012 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு ரூபா 1,014,295 தொகையான முற்பணம் தீர்க்கப்பட்டிருந்தது. தீர்க்கப்படாத முற்பணமான ரூபா 9,082,329 தொடர்பாக நிதிப் பிரமாணம் 109 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்ட கட்டளையின் பிரகாரம் மேலதிக நிதியேற்பாடு பெறப்பட்டு முற்பணம் தீர்க்கப்பட வேண்டியிருந்த போதிலும் அவ்வாறு பெறப்பட்ட மேலதிக நிதியேற்பாடுகளிலிருந்து முற்பணம் தீர்க்கப்பட்டிருக்கவில்லை.

| அமைச்சு/ திணைக்களம் | முற்பணம் பெற்ற காரணம் | முற்பணம் பெற்ற திகதி | பெற்ற முற்பணம் | 2012 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு தீர்த்து வைப்பதிலுள்ள கால தாமதம் |
|---|---|---|---|---|
| | | | **ரூபா** | **வருடம்** |
| நகர அபிவிருத்தி மற்றும் புனித பூமி அபிவிருத்தி அமைச்சு | வீடமைப்பு செயற்திட்டத்தின் நிதி மோசடி | 2007.11.29 | 6,640,249 | 05 வருடங்களும் 01 மாதமும் |

| | | | | |
|---|---|---|---|---|
| சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகம் தேசிய வைத்தியசாலை | நிதி மோசடி - 2002 | 2002 பெப்ரவரி | 2,408,460 | 10 வருடங்களும் 10 மாதங்களும் |
| மாவட்ட செயலகம் - கொழும்பு | நிதி மோசடி - 2005 | 2005.04.20 | 33,620 | 07 வருடங்களும் 08 மாதங்களும் |
| | | | ----------- | |
| | | | 9,082,329 | |
| | | | ====== | |

ii. 2012 சனவரி 26 ஆந் திகதிய எஸ்ஏ/கணக்கு/4/7000/11 ஆம் இலக்க திறைசேரி செயற்பாடுகள் பணிப்பாளர் நாயகத்திற்கு விலாசமிடப்பட்ட அரசாங்க கணக்குகள் பணிப்பாளர் நாயகத்தின் கடிதம் மூலம் மேற்கூறப்பட்ட (அ) இல் குறிப்பிடப்பட்ட கடன் மீதி அந்த நிறுவனங்களுக்கு வழங்கப்பட்ட கட்டு நிதியிலிருந்து தவணையாக அறவிடப்பட்டு நிலுவையாக இருந்த முற்பணங்கள் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறு அறிவித்திருந்த போதிலும் அவ்வாறு செய்யப்பட்டிருக்கவில்லை.

## 15.4 சொத்துக்கள் முகாமைத்துவம்

கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்ட நிலையான சொத்துப் பதிவேடு நாளது வரையாக்கப்படாமை மற்றும் ஒதுக்கீட்டுக் கணக்கில் அட்டவனை (1) இன் கீழ் காண்பிக்கப்படுகின்ற நடைமுறையல்லாச் சொத்துக்களின் அசைவுகள் தொடர்பான அறிக்கையின் மீதிகளுக்கிடையே கீழே காண்பிக்கப்படுகின்றவாறு வேறுபாடுகள் காணப்படுகின்றமை அவதானிக்கப்பட்டது.

| சொத்துக் குறியீடு மற்றும் பெயர் | | நிலையான சொத்துப் பதிவேட்டின் பிரகாரம் 2012 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு மீதி | நடைமுறையல்லாச் சொத்துக்களின் அசைவுகள் தொடர்பான அறிக்கையின் பிரகாரம் 2012 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு மீதி | வேறுபாடு |
|---|---|---|---|---|
| | | **ரூபா** | **ரூபா** | **ரூபா** |
| 3102- | அலுவலக உபகரணம் | 1,667,350 | 1,980,579 | 313,229 |
| 4064- | கணனி வலைப்பின்னல் முறைமை உபகரணம் | 31,736 | 15,826 | (15,910) |

| | | | | |
|---|---|---|---|---|
| 3514- | தொலைபேசி | - | 81,835 | 81,835 |
| 2999- | ஏனைய நிர்மாணங்கள் | - | 797,312 | 797,312 |
| 2999- | ஏனைய நிர்மாணங்கள் | - | 4,965,029 | 4,965,029 |
| | | 1,699,086 | 7,840,581 | 6,141,495 |

## 15.5 நட்டமும் இழப்பும்

2012 திசெம்பர் 24 ஆந் திகதி ரூபா 165,000 பெறுமதியான டொஷிபா 47074875 எச் ஆம் இலக்க மடிக் கணணி களவு போனமையால் ஏற்பட்ட நட்டம் தொடர்பாக நிதிப் பிரமாணம் 104 இன் பிரகாரம் தேவையான நடவடிக்கைகள் இந்த அறிக்கை திகதி வரையிலும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

## 15.6 மனிதவள முகாமைத்துவம்

**அங்கீகரித்த பதவியணியும் உள்ளபடியான பதவியணியும்**

2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பதவியணி மீதான நிலை பின்வருமாறு.

| | ஊழியர் வகை | அங்கீகரித்த பதவியணி | உள்ளபடியான பதவியணி | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| (அ) | சிரேஷ்ட நிலை | 16 | 12 | 04 |
| (ஆ) | மூன்றாம் நிலை | 04 | 04 | - |
| (இ) | இரண்டாம் நிலை | 34 | 21 | 13 |
| (ஈ) | ஆரம்ப நிலை | 15 | 12 | 03 |
| | மொத்தம் | 69 | 49 | 20 |

மீளாய்வாண்டின் இறுதி வரையில் 20 வெற்றிடங்களை நிரப்புவதற்கு திணைக்களத்தினால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 16. தலைப்பு 251 – மதிப்பீட்டுத் திணைக்களம்

### 16.1 கணக்காய்வின் நோக்கெல்லை

மதிப்பீட்டுத் திணைக்களத்தின் 2012 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிஅறிக்கைகள், இணக்கக்கூற்றுகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய அறிக்கைகளை உள்ளடக்கிய ஒதுக்கீட்டுக் கணக்குகள் மீதான கணக்காய்வு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2013 யூலை 03 ஆந் திகதி திணைக்களத்தின் தலைவருக்கு அனுப்பிவைக்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக்கூற்றுக்கள் சம்பந்தமான கணக்காய்வு அவதானிப்புக்கள், கருத்துரைகள் மற்றும் கண்டுபிடிப்புக்கள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகளினதும் இணக்கக்கூற்றுக்களினதும் மீளாய்வின் அடிப்படையிலும் கொடுக்கல் வாங்கல்களின் மாதிரிகளினது போதியளவு செவ்வை பார்த்தலின் அடிப்படையிலும் எழுந்தனவேயாகும். அவ்வாறான மீளாய்வினதும் செவ்வை பார்த்தலினதும் நோக்கெல்லையும் அளவும் எனக்குக் கிடைப்பதற்குள்ள பதவியணியினர், ஏனைய மூலவளங்கள், நேரம் என்பவற்றிற்கமைய இயலுமானளவு விரிவான கணக்காய்வை உள்ளடக்கக் கூடியவாறிருந்தது.

### 16.2 கணக்குகள் மற்றும் இணக்கக்கூற்றுக்கள் சம்பந்தமாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்புக்கள்

ஒதுக்கீட்டுக் கணக்குகள், வருமானக் கணக்குகள் மற்றும் இணக்கக்கூற்றுக்களை இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 உறுப்புரைகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், அரசாங்க நிதி மற்றும் நிருவாக பிரமாணங்களுக்கிணங்க பேணுதல், தயாரித்தல் மற்றும் நியாயபூர்வமாகச் சமர்ப்பித்தல் என்பன பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பாகும். மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயபூர்வமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாட்டைத் திட்டமிடுதல், அமுல்படுத்துதல் மற்றும் பராமரித்தல் போன்றன இப்பொறுப்பில் உள்ளடங்குகின்றன.

## 16.3 கணக்காய்வு அவதானிப்புக்கள்

2012 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறான நிதி அறிக்கைகள் மற்றும் ஏடுகளின் மதிப்பீட்டுத் திணைக்களத்தின் ஒதுக்கீட்டுக் கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் இந்த அறிக்கையின் (அ) தொடக்கம் (ஊ) வரையிலுமான பொதுவான அவதானிப்புக்கள் மற்றும் கீழேயுள்ள 16.4 தொடக்கம் 16.8 வரையுள்ள பந்திகளில் குறிப்பிடப்பட்ட பிரதான கணக்காய்வு அவதானிப்புக்கள் தவிர திருப்திகரமானதாக தயாரிக்கப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.

### (அ) கணக்குகளைச் சமர்ப்பித்தல்

மதிப்பீட்டுத் திணைக்களத்தினால் 2013 மார்ச் 31 ஆந் திகதி வரையும் பின்வரும் கணக்கு கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

| வருமானக் குறியீடு | கணக்கின் பெயர் |
|---|---|
| 2003.20.09 | வருமானக் கணக்கு |

### (ஆ) குறை நிரப்பு மதிப்பீட்டின் மூலம் ஒதுக்கப்பட்ட நிதி பயன்படுத்தப்படாமை

நட்டஈடு தீர்மானிக்கும் சபையின் செலவினமாக ரூபா 7,000,000 தொகையான நிதிஏற்பாடு காணப்பட்ட போது 2012 திசெம்பர் 14 ஆந் திகதி குறைநிரப்பு மதிப்பீட்டிலக்கம் 150 செலவின விடயம் 1405 இற்காக ரூபா 2,260,000 தொகையான நிதியேற்பாடு செய்யப்பட்டிருந்ததுடன் 2012 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு சேமிப்பு ரூபா 3,061,744 ஆக இருந்தது. அதன் பிரகாரம் மொத்த குறைநிரப்பு நிதி மதிப்பீட்டு நிதியேற்பாட்டுத் தொகையும் பயன்படுத்தப்படாதிருந்தமை அவதானிக்கப்பட்டது.

### (இ) எரிபொருள் மற்றும் மின்சாரச் செலவின முகாமைத்துவம்

எரிபொருள் மற்றும் மின்சாரச் செலவினத்திற்காக பாதீட்டு மதிப்பீட்டின் மூலம் ஒதுக்கப்பட்ட நிதியேற்பாட்டை உள்ளடக்கி செலவின முகாமைத்துவத்தைச் செய்ய வேண்டியிருந்த போதிலும் அதற்காக எவ்வித மேலதிக தொகையும் பெறப்படாதிருந்தமையும் நிதிப் பிரமாணம் 66 இன் மூலம் நிதியேற்பாட்டை மாற்றுதல் திறைசேரியினால் அனுமதிக்கப்படாதிருந்தமை 2012 பெப்ரவரி 16 ஆந் திகதிய 156 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றுநிருபத்தில் ஆலோசனை வழங்கப்பட்டிருந்த போதும் அந்த ஆலோசனைகளை கருத்திற்கொள்ளாமல்

அந்த செலவின விடயங்களுக்காக நிதிப் பிரமாணம் 66 இன் மூலம் ரூபா 300,000 தொகையான நிதியேற்பாடு மீளாய்வாண்டின் போது மாற்றப்பட்டிருந்தது.

**(ஈ) பொது வைப்புக் கணக்கு**

2012 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு பொது வைப்புக் கணக்கு மீதி ரூபா 435,149 ஆக இருந்ததுடன் அது தொடர்பான காலப்பகுப்பாய்வு கீழே காண்பிக்கப்படுகின்றன.

| 1 வருடத்திற்குக் குறைவு | 1 வருடத்திற்கு மேல் 2 இற்குக் குறைவு | 2 வருடத்திற்கு மேல் 5 இற்குக் குறைவு | 2012 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு மீதி |
|---|---|---|---|
| ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| 321,500 | 34,019 | 79,629 | 435,149 |

2 வருடங்களை விஞ்சிய ரூபா 79,629 தொகையான 7 வைப்புக்கள் தொடர்பாக நிதிப் பிரமாணம் 571 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**(உ) வருமானக் கணக்குகள்**

சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகளின் பிரகாரம் ரூபா 358,421,647 தொகையான வருமான நிலுவை காணப்பட்டதுடன் அது தொடர்பான காலப்பகுப்பாய்வு கீழே காண்பிக்கப்படுகின்றன.

| வருமானக் குறியீடு | காலப்பகுப்பாய்வு | | | 2012 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு நிலுவை வருமானம் |
|---|---|---|---|---|
| | 1 வருடத்திற்குக் குறைவு | 1 வருடத்திற்கு மேல் 3 இற்குக் குறைவு | 3 வருடத்திற்கு மேல் | |
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| 2003.02.09 | 16,432,241 | 334,879,147 | 7,110,259 | 358,421,647 |
| மொத்தம் | 16,432,241 | 334,879,147 | 7,110,259 | 358,421,647 |

2012 ஆம் ஆண்டில் மொத்த மதிப்பீட்டுக் கட்டணம் ரூபா 42,438,611 ஆக இருந்த போதிலும் ஆண்டின் போது ரூபா 26,006,370 தொகை மாத்திரம் அறவிடப்பட்டிருந்தது. அது மொத்த மதிப்பீட்டுக் கட்டணத்தின் வருமானத்தில் 61.28 சதவீதமாக இருந்தது. மதிப்பீட்டுக் கட்டணத்தை அறவிடுவது மதிப்பீடு செய்யப்பட்டதன் பின்னர் மேற்கொண்டமை மற்றும் பிரதேச அலுவலகங்களின் மூலம் சேகரிக்கப்படுகின்ற மதிப்பீட்டு வருமானம் தொடர்பான அறிக்கை தலைமை அலுவலகத்திற்கு உரிய பிரகாரம் அனுப்பப்படாமை மதிப்பீட்டுக் கட்டணம் நிலுவையாக இருப்பதற்கு பாரியளவில் தாக்கமளித்திருந்ததாக அவதானிக்கப்பட்டது. விபரம் பின்வருமாறு.

(i) கடன் அடிப்படையில் மதிப்பீட்டுச் செயற்பாடுகளை மேற்கொள்ளல்

i. பொதுவாக மதிப்பீட்டுத் திணைக்களத்தினால் மதிப்பீட்டு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டதன் பின்னர் கட்டணம் கோரல் மேற்கொள்ளப்படுவதுடன் அதன் பிரகாரம் அரசாங்க நிறுவனங்களுக்கு மேலதிகமாக தனியார் நிறுவனங்களுக்கும் மதிப்பீட்டு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டதன் பின்னர் கட்டணம் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. கடன் அடிப்படையில் மதிப்பீட்டு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருந்தமையினால் 2008 ஆம் ஆண்டு தொடக்கம் தனியார் நிறுவனங்களிலிருந்து அறவிட வேண்டிய நிலுவை மதிப்பீட்டு வருமானம் 2012 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு ரூபா 40,959,942 ஆக இருந்தது.

ii. மதிப்பீட்டுத் திணைக்களத்தின் 2012 ஆம் ஆண்டிற்குரிய அரசாங்க மற்றும் தனியார் நிறுவனங்களிலிருந்து 2012 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு அறவிட வேண்டிய மொத்த நிலுவை மதிப்பீட்டு வருமானம் ரூபா 16,432,241 ஆக இருந்ததுடன் அதில் ரூபா 1,065,870 தொகை 07 சந்தர்ப்பங்களின் போது 06 தனியார் நிறுவனங்களிலிருந்து அறவிட வேண்டிய நிலுவை வருமானமாக இருந்தமை அவதானிக்கப்பட்டது.

(ii) பிரதேச அலுவலகங்களினால் சேகரிக்கப்படுகின்ற மதிப்பீட்டு வருமானம் தொடர்பான அறிக்கை தலைமை அலுவலகத்திற்கு குறிப்பிட்ட பிரகாரம் அனுப்பப்படாதிருந்தமை

---

2012 ஆம் ஆண்டின் போது 13 பிரதேச அலுவலகங்களினால் மாதாந்த வருமான அறிக்கை தலைமை அலுவலகத்திற்கு அனுப்பப்பட்டிருக்கவில்லை. 08 பிரதேச அலுவலகங்களிலிருந்து சில மாதங்களுக்கு மாத்திரம் உரிய மாதாந்த வருமான அறிக்கை அனுப்பப்பட்டிருந்தது. குறிப்பிட்டவாறு மாதாந்த வருமான அறிக்கை அனுப்பப்படாமையின் காரணமாக பிரதேச அலுவலகங்களிலிருந்து சேகரிக்கப்படுகின்ற சகல மதிப்பீட்டு வருமானங்களிலும் தலைமை அலுவலகத்திற்கு உரிய பிரகாரம் அனுப்பபபட்டிருந்தமை மற்றும் அரசாங்க வருமானம், கணக்குகள் மற்றும் அறிக்கைகளில் உள்ளடக்கப்பட்டிருந்ததா எனக் கணக்காய்வின் போது உறுதிப்படுத்திக்கொள்ள முடியாதிருந்தது.

**(ஊ) அரச உத்தியோகத்தர்களின் முற்பணக் கணக்குகள் தொடர்பான இணக்கக்கூற்றுக்கள்**

---

விடய இலக்கம் 25101 இன் அரச உத்தியோகத்தர்களின் முற்பணக் கணக்குகள் தொடர்பான 2012 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறான இணக்கக் கூற்றுக்களின் பிரகாரம் அத்திகதியில் உள்ளவாறு அறவீடுகள் நிலுவையாக இருந்த மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 1,116,203 ஆக இருந்ததுடன் அந்த நிலுவை மீதிகளை அறவீடு செய்யும் பின்தொடர் நடவடிக்கைகள் நலிவான நிலையில் காணப்பட்டது. நிலுவையாக

இருந்தமைக்கு தாக்கமளித்த காரணங்கள் மற்றும் நிலுவையாக இருந்த காலப்பகுதி தொடர்பான அட்டவணை கீழே காண்பிக்கப்படுகின்றன.

| | காரணம் | காலப்பகுப்பாய்வு | | | | |
|---|---|---|---|---|---|---|
| | | 1 வருடத்திற்குக் குறைவு | 1 வருடத்திற்கு மேல் 2 இற்குக் குறைவு | 2 வருடத்திற்கு மேல் 3 இற்குக் குறைவு | 3 வருடத்திற்கு மேல் | மொத்தம் |
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| (i) | சேவை நிலைய மாற்றம் | - | 1,435 | - | 11,916 | 13,351 |
| (ii) | ஓய்வு பெறல் மற்றும் மரணித்தல் | 94,839 | 426,650 | - | 74,950 | 596,439 |
| (iii) | வேலை நீக்கம் செய்யப்பட்ட மற்றும் சேவையைக் கைவிட்டுச் சென்ற | - | 239,050 | 129,950 | 137,413 | 506,413 |
| | மொத்தம் | 94,839 | 667,135 | 129,950 | 224,279 | 1,116,203 |

15 அசைவுறாத மீதிகளுக்குரிய ரூபா 224,279 தொகையான கடன் மீதி மற்றும் முற்பணம் காணப்பட்டதுடன் அத்தொகைகளை அறவீடு செய்யும் பின்தொடர் நடவடிக்கைகள் நலிவான நிலையில் காணப்பட்டது.

## 16.4 நல்லாளுகையும் கணக்களிப்பொறுப்பும்

### 16.4.1 வருடாந்த செயலாற்றல் அறிக்கை

அரச பொது நிதிப்பணிப்பாளர் நாயகத்தின் கடிதத்தில் குறிப்பிடப்பட்ட முறையே 2002 செப்தெம்பர் 12 ஆந் திகதிய மற்றும் 2004 பெப்ரவரி 20 ஆந் திகதிய 402 மற்றும் 402(1) ஆம் இலக்க அரச நிதிச் சுற்றுநிருபத்தின் பிரகாரம் திணைக்களத்தினால் தயாரிக்கப்பட வேண்டிய வருடாந்த செயலாற்றல் அறிக்கை நிதி ஆண்டு முடிவடைந்து 150 நாட்களுக்குள் தலைமை அதிபதிக்கான பிரதியுடன் பாராளுமன்றத்தில் முன்வைக்கப்படவேண்டிய போதிலும் மீளாய்வாண்டிற்குரிய செயலாற்றல் அறிக்கை 2013 யூன் 20 ஆந் திகதி வரையிலும் பாராளுமன்றத்தில் முன்வைக்கப்பட்டிருக்கவில்லை.

### 16.4.2 வருடாந்த கொள்வனவுத் திட்டம்

2006 மார்ச் 24 ஆந் திகதிய 128 ஆம் இலக்க தேசிய வரவு செலவுத் திட்ட சுற்றுநிருபத்தின் பிரகாரம் வருடாந்த கொள்வனவுத் திட்டம் 2012 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

### 16.4.3 உள்ளகக் னணக்காய்வு

2012 யூலை 01 ஆந் திகதி தொடக்கம் 2012 திசெம்பர் 31 ஆந் திகதி வரை உள்ளகக் கணக்காய்வுப் பதவி மற்றும் உள்ளகக் கணக்காய்வு உதவியாளர் பதவி என்பன வெற்றிடமாகக் காணப்பட்டமையின் காரணமாக உள்ளகக் கணக்காய்வுப் பிரிவு அமுல்படுத்தப்பட்டிருக்கவில்லை.

### 16.5 சொத்துக்கள் முகாமைத்துவம்

#### நடைமுறையல்லாச் சொத்துக்கள்

நடைமுறையல்லாச் சொத்துக்களை கணக்கு வைத்தல் தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றது.

(அ) நிலையான சொத்துப் பதிவேட்டில் 09 வாகனங்களின் விபரங்கள் காண்பிக்கப்பட்டிருந்த போதிலும் அவற்றின் ஒவ்வொன்றினதும் கிரயம் காண்பிக்கப்படாதிருந்ததுடன் 06 வாகனங்களுக்குரிய கிரயங்களின் கூட்டுத்தொகை ரூபா 12,715,000 தொகை மாத்திரம் காண்பிக்கப்பட்டிருந்தது. இருந்த போதிலும் ஒதுக்கீட்டுக் கணக்கில் வாகனங்களின் பெறுமதி ரூபா 7,605,000 ஆகக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஆ) 21 குளிரூட்டி இயந்திரங்களுக்குரிய தகவல்கள் நிலையான சொத்துப் பதிவேட்டில் குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் அதற்குரிய கிரயம் குறிப்பிடப்பட்டிருக்கவில்லை. நடைமுறையல்லாச் சொத்துக்கள் அசைவுகள் தொடர்பான அறிக்கையின் பிரகாரம் ஆண்டின் கொள்வனவுக் கிரயம் ரூபா 161,649 ஆக இருந்தது.

(இ) மதிப்பீட்டுத் திணைக்களத்தின் சுற்றாடலில் அமைந்துள்ள காணியின் பெறுமதி நிலையான சொத்துப் பதிவேட்டிலும் 2012 ஆம் ஆண்டின் ஒதுக்கீட்டுக் கணக்கிலும் உள்ளடக்கப்படாதிருந்தமை அவதானிக்கப்பட்டது.

## 16.6 இணங்காமைகள்

**சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் என்பவற்றுடனான இணங்காமைகள்**

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாண ஏற்பாடுகள் என்பனவற்றுடன் இணங்காத சந்தர்ப்பங்கள் கீழே விபரிக்கப்பட்டுள்ளன.

| | சட்டங்கள் விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | பெறுமதி | இணங்காமைகள் |
|---|---|---|---|
| | | ரூபா | |
| **(அ)** | **நிதிப் பிரமாணம்** | | |
| (i) | நிதிப் பிரமாணம் 50 | - | ஒதுக்கீட்டுக் கணக்குகள் பிரகாரம் மதிப்பீடு செய்யப்பட்ட நிதியேற்பாடுகளிலிருந்து 50 சதவீதத்தை விஞ்சி நிதியேற்பாடு சேமிக்கப்பட்டிருந்த பெறுமதி ரூபா 511,290 தொகையான 01 செலவின விடயமும் 20 சதவீதத்தை விஞ்சி சேமிக்கப்பட்ட பெறுமதி ரூபா 4,249,371 தொகையான 5 செலவின விடயங்களும் அவதானிக்கப்பட்டன. அதன் பிரகாரம் செலவின மதிப்பீடு தயாரிக்கும் போது மதிப்பீடு இயலுமான வரையில் பூரணமான வடிவிலும் செயற்திறனானதாகவும் தயாரிக்கப்படாதிருந்தமை அவதானிக்கப்பட்டது. |
| (ii) | நிதிப் பிரமாணம் 85(1) | - | 2012 ஆம் ஆண்டிற்காக விரிவான ஆரம்ப வருமான மதிப்பீடு பிரதேச அலுவலகங்களின் அடிப்படையில் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (iii) | நிதிப் பிரமாணம் 128(2)(ஈ) | - | ஏனைய அலுவலகங்களின் மூலம் சேகரிக்கப்படுகின்ற வருமானத்தின் ஒரு பகுதி அந்த அலுவலகத்தின் மூலம் அறிக்கை பெறப்பட்டு அரசாங்க வருமானக் கணக்குகள் மற்றும் அறிக்கைகளில் உள்ளடக்கப்பட்டிருக்க வில்லை. |

| | | | |
|---|---|---|---|
| (iv) | நிதிப் பிரமாணம் 128(2)(உ) | - | அரசாங்கத்திற்குக் கிடைக்க வேண்டிய நிலுவை வருமானத்தை தாமதமின்றி சேகரித்தல் தொடர்பாக திணைக்களத்தினால் விஷேட ஏற்பாடுகள் ஈடுபடுத்தப்பட்டிருக்கவில்லை. |
| (v) | நிதிப் பிரமாணம் 128(2)(ஊ) | - | அரசாங்க வருமானக் கணக்குகள் மற்றும் அறிக்கைகளின் பிரகாரம் வருமானம் திறைசேரியின் அறிக்கையுடன் மாதாந்தம் இணக்கஞ் செய்யப்பட்டிருக்கவில்லை. |
| (vi) | நிதிப் பிரமாணம் 371 | 261,265 | 17 சந்தர்ப்பங்களுக்குரிய செயல் நிமித்த உப கட்டுநிதி செயற்பாடு நிறைவு பெற்றதும் உடனடியாகத் தீர்க்கப்பட்டிருக்கவில்லை. |
| (vii) | நிதிப் பிரமாணம் 427 (2) | - | கட்டுநிதிக் கணக்குகளுக்குரிய திறைசேரி கணணி அச்சிடல் குறிப்புக்கள் திணைக்களப் புத்தகங்களுடன் மாதாந்தம் இணக்கஞ் செய்யப்பட்டிருக்கவில்லை. |
| (viii) | நிதிப் பிரமாணம் 571 | - | பொது வைப்புக் கணக்கில் 2012 திசெம்பர் 31 ஆந் திகதியளவில் உள்ளவாறு 2 வருடங்களை விஞ்சிய இனங்காணப்படாத வைப்புக்களின் பெறுமதி ரூபா 79,629 ஆக இருந்தது. |
| (ஆ) | பொது முயற்சிகள் சுற்றுநிரூபம்<br>---------------------------------------------<br>2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ 12 ஆம் இலக்க நல்லாளுகை தொடர்பான சுற்றுநிரூபம் | | |
| | 5.1.2 | - | ஆண்டின் போது இலக்கிடப்பட்ட நோக்கங்களை அடைந்துகொள்வதற்கு பின்பற்றப்பட வேண்டிய உபாய வழிகள் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. |

| | | |
|---|---|---|
| 5.1.3 | - | அங்கீகரிக்கப்பட்ட கூட்டிணைந்த திட்டத்தின் பிரதிகள் ஆண்டு ஆரம்பிப்பதற்கு 15 நாட்களுக்கு முன்னர் நிதி அமைச்சு, பொதுத் திறைசேரி, பொது முயற்சிகள் திணைக்களம் மற்றும் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்படாமை மற்றும் கூட்டிணைந்த திட்டம் அங்கீகரிக்கப்படாமை. |
| (இ) திறைசேரிச் சுற்றுநிருபம் | | |
| 2001 சனவரி 25 ஆந் திகதிய ஐஏஐ/2001/1 ஆம் இலக்க உள்ளகக் கணக்காய்வை உருவாக்கும் சுற்றுநிருபம் | - | கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ செயற்பாடுகளை செயற்படுத்துவதற்காக பேணப்படுகின்ற வரையறுக்கப்பட்ட வளங்களை உச்ச அளவில் பயன்பாட்டிற்கு எடுப்பதற்கு உள்ளகக் கணக்காய்வு பிரிவு உருவாக்கப்பட வேண்டிய போதிலும் 2012 யூலை 01 ஆந் திகதி தொடக்கம் 2012 திசெம்பர் 31 வரை உள்ளகக் கணக்காய்வு பிரிவிற்கு தேவையான உத்தியோகத்தர்கள் நியமிக்கப்படாமையின் காரணமாக செயல்படும் நிலையில் காணப்படவில்லை. |
| (ஈ) தேசிய பாதீட்டுச் சுற்றுநிருபம் | | |
| 2012 பெப்ரவரி 16 ஆந் திகதிய 156 ஆம் இலக்க அரசாங்க செலவின முகாமைத்துவ சுற்றுநிருபம் | 300,000 | மின்சாரச் செலவினத்திற்காக மதிப்பீட்டில் குறிப்பிடப்பட்ட நிதியேற்பாட்டு எல்லையில் செலவின முகாமைத்துவம் செய்யப்படாமையின் காரணமாக நிதிப் பிரமாணம் 66 இன் கீழ் நிதியேற்பாடு மாற்றப்பட்டிருந்தது. |

| | | | |
|---|---|---|---|
| (உ) | 2006 ஒக்தோபர் 05 ஆந் திகதிய 06 ஆம் இலக்க சுற்று நிரூபத்தின் மூலம் திருத்தப்பட்ட தேசிய கொள்வனவு வழிகாட்டிக் கோவை 2006 | | |
| (i) | 2.8.4 ஆம் பிரிவு | 195,915 | 01 சந்தர்ப்பத்தில் தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழு நியமிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ii) | 2.8.4 (இ) பிரிவு | 1,505,521 | 02 சந்தர்ப்பங்களில் தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவில் விடயம் தொடர்பான விஷேட நிபுணர்கள் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. |
| (iii) | 4.2.1 (அ) பிரிவு | - | கொள்வனவு செய்தல் மற்றும் நிர்மாணங்களுக்காக திணைக்களத்தினால் வருடாந்த கொள்வனவுத் திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (iv) | 4.3.1 ஆம் பிரிவு | 195,915 | 01 சந்தர்ப்பத்தில் மொத்தக் கிரய மதிப்பீடு தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (v) | 5.4.8 (அ) பிரிவு | 875,773 | 01 சந்தர்ப்பத்தில் மதிப்பிடப்பட்ட ஒப்பந்தப் பெறுமதியில் 5 சதவீதத்திற்குக் குறையாத செயலாற்றல் காப்பு பெறப்பட்டிருக்கவில்லை. |
| (vi) | 5.6 ஆம் பிரிவு | 137,860 | 01 சந்தர்ப்பத்தில் கொள்வனவு செய்வதற்காக மாதிரி தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (vii) | 6.3.1 (அ) பிரிவு | 467,370 | 04 சந்தர்ப்பங்களில் முத்திரையிடப்பட்ட கூறுவிலைகள் கோரப்பட்டிருக்கவில்லை. |
| (viii) | 8.9.1(அ) பிரிவு | 875,773 | 01 சந்தர்ப்பத்தில் ரூபா 250,000 தொகையினை விஞ்சிய ஒப்பந்தத்திற்காக முறையான ஒப்பந்த உடன்படிக்கை கைச்சாத்திடப்படாமை |

| | | | |
|---|---|---|---|
| (ஊ) | 2008 திசெம்பர் 31 ஆந் திகதிய 434 ஆம் இலக்க வருமான சேகரித்தல் தொடர்பான சுற்றுநிரூபம் | 3,956,666 | அரசாங்க நிதியுதவியின் கீழ் இயங்குகின்ற சகல நிறுவனங்களுக்காகவும் கட்டணமின்றி மதிப்பீட்டு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டியிருந்த போதிலும் அரசாங்க நிதியுதவியின் கீழ் இயங்குகின்ற நிறுவனங்களிலிருந்து ரூபா 3,956,666 தொகை 2012 ஆண்டிற்குரிய வருமானமாக கணக்கு வைக்கப்பட்டிருந்தது. இந்த நிலுவை வருமானம் அரசாங்க நிதியுதவியின் அடிப்படையில் இயங்குகின்ற நிறுவனங்களினால் தனியார் தரப்பினருக்காக பெறப்பட்ட மதிப்பீட்டு நடவடிக்கைகளுக்காக அறவிடப்பட்டிருந்தமை கூறப்பட்டிருந்த போதிலும் அதனை உறுதிப்படுத்திக் கொள்வதற்காக போதியளவான தகவல்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்க வில்லை. |
| (எ) | திணைக்களச் சுற்றுநிரூபம் 14/2001 | | பிரதேச அலுவலகத்தினால் தலைமை அலுவலகத்திற்கு மாதாந்தம் மதிப்பீட்டு அறிக்கை அனுப்பப்பட்டிருக்கவில்லை. |

**16.7 செயலாற்றல்**

2012 இன் வருடாந்த பாதீட்டு மதிப்பீடு/ கூட்டிணைந்த திட்டம்/ செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் திணைக்களத்தின் முன்னேற்றம் தொடர்பான அவதானிப்புக்கள் கீழே காண்பிக்கப்பட்டுள்ளன.

**திட்டமிடல்**

**வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டம், கூட்டிணைந்த திட்டம் என்பவற்றுடன் இணங்காமை**

கீழே குறிப்பிடப்பட்ட சந்தர்ப்பங்களின் போது தயாரிக்கப்பட்ட வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டம் கூட்டிணைந்த திட்டத்துடன் இணங்கியிருக்கவில்லை.

| | விபரம் | கூட்டிணைந்த திட்டத்திற்கு இணங்க- 2012 இன் இலக்குகள் (அலகு) | 2012 இன் செயல் நடவடிக்கைத் திட்டத்தில் குறிப்பிடப்பட்ட இலக்குகள் (அலகு) |
|---|---|---|---|
| (i) | தனியார் காணிகளைச் சுவீகரித்தல் தொடர்பான நிலைமை அறிக்கை | 6,300 | 9,000 |
| (ii) | காணி சுவீகரிப்பு தொடர்பான மதிப்பீடு செய்தல் | 1,300 | 4,700 |
| (iii) | அபிவிருத்திச் செயற்பாடுகளுக்காக கையேற்கப்பட்டவைகளுக்கான இழப்பீட்டை மதிப்பீடு செய்தல் | 10,600 | 800 |
| (iv) | அரசாங்கத்தின் மூலம் காணிக் கொள்வனவுகள் மற்றும் வாடகைக்கிடலுக்காக மதிப்பீடு செய்தல் | 31,200 | 21,000 |
| (v) | அரசாங்க நிறுவனம் தனது சொத்துக்களை வாடகைக்கிடல் அல்லது தனியார் சொத்துக்களை வாடகைக்குப் பெறுகையில் வாடகை மதிப்பீடு செய்தல் | 5,200 | 3,500 |
| (vi) | நீதிமன்றத் தேவைகளுக்காக மதிப்பீடு செய்தல் | - | 02 |
| (vii) | அரசாங்கத்தின் கட்டிடங்களை வாடகைக்கிடுவதற்காக மதிப்பீடு செய்தல் | 5,600 | 2,400 |
| (viii) | முத்திரை வரி மதிப்பீடு செய்தல் | 373 | 150 |
| (ix) | ஆதனவரி மீள் மதிப்பீடு செய்தல் | | |
| i. | ஆரம்பப் பரிசோதனை | 63,500 | 470,000 |
| ii. | இறுதிப் பரிசோதனை | 0 | 200,000 |
| (x) | ஆதனவரி மதிப்பீடு செய்தல் | 37,200 | 30,500 |
| (xi) | கட்டிட ஆதனவரி மதிப்பீடு செய்தல் | 2,700 | 3,000 |

| | | | |
|---|---|---|---|
| (xii) | ஆட்சேபனைகளை மீள் மதிப்பீடு செய்தல் | 7,000 | 3,500 |
| (xiii) | வீட்டு வாடகைச் சபைக் கூட்டங்களில் பங்கு பற்றுதல் | - | 300 |

## 16.8 மனிதவள முகாமைத்துவம்

### (அ) அங்கீகரித்த பதவியணியும் உள்ளபடியான பதவியணியும்

2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பதவியணி மீதான நிலை பின்வருமாறு.

| | ஊழியர் வகை | அங்கீகரித்த பதவியணி | உள்ளபடியான பதவியணி | வெற்றிடங்களின் எண்ணிக்கை | மிகைகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|
| (அ) | சிரேஷ்ட நிலை | 86 | 58 | 28 | - |
| (ஆ) | மூன்றாம் நிலை | 362 | 331 | 31 | - |
| (இ) | இரண்டாம் நிலை | 101 | 76 | 25 | - |
| (ஈ) | ஆரம்ப நிலை | 90 | 85 | 05 | - |
| (உ) | ஏனையவை(அமைய/ தற்காலிக/ஒப்பந்த அடிப்படை) | - | - | - | 02 |
| | மொத்தம் | 639 | 552 | 89 | 02 |

(ஆ) பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) மீளாய்வாண்டின் இறுதி வரையில் 89 வெற்றிடங்களை நிரப்புவதற்கு திணைக்களத்தினால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) 2012 ஆம் ஆண்டின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரில் இரண்டு விடுதிப் பொறுப்பாளர் பதவி அங்கீகரிக்கப்படாதிருந்ததுடன் அமைய அடிப்படையில் இரண்டு ஊழியர்கள் சேர்க்கப்பட்டிருந்தனர்.

## 17. தலைப்பு 252 – தொகை மதிப்பு, புள்ளிவிபரத் திணைக்களம்

### 17.1 கணக்காய்வின் நோக்கெல்லை

தொகை மதிப்பு, புள்ளிவிபரத் திணைக்களத்தின் 2012 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிஅறிக்கைகள், இணக்கக்கூற்றுகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய அறிக்கைகளை உள்ளடக்கிய ஒதுக்கீட்டுக் கணக்குகள் மீதான கணக்காய்வு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2013 திசெம்பர் 11 ஆந் திகதி திணைக்களத்தின் தலைவருக்கு அனுப்பிவைக்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக்கூற்றுக்கள் சம்பந்தமான கணக்காய்வு அவதானிப்புக்கள், கருத்துரைகள் மற்றும் கண்டுபிடிப்புக்கள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகளினதும் இணக்கக்கூற்றுக்களினதும் மீளாய்வின் அடிப்படையிலும் கொடுக்கல் வாங்கல்களின் மாதிரிகளினது போதியளவு செவ்வை பார்த்தலின் அடிப்படையிலும் எழுந்தனவேயாகும். அவ்வாறான மீளாய்வினதும் செவ்வை பார்த்தலினதும் நோக்கெல்லையும் அளவும் எனக்குக் கிடைப்பதற்குள்ள பதவியணியினர், ஏனைய மூலவளங்கள், நேரம் என்பவற்றிற்கமைய இயலுமானளவு விரிவான கணக்காய்வை உள்ளடக்கக் கூடியவாறிருந்தது.

### 17.2 கணக்குகள் மற்றும் இணக்கக்கூற்றுக்கள் சம்பந்தமாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்புக்கள்

ஒதுக்கீட்டுக் கணக்குகள் மற்றும் இணக்கக்கூற்றுக்களை இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 உறுப்புரைகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், அரசாங்க நிதி மற்றும் நிருவாக பிரமாணங்களுக்கிணங்க பேணுதல், தயாரித்தல் மற்றும் நியாயபூர்வமாகச் சமர்ப்பித்தல் என்பன பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பாகும். மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயபூர்வமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாட்டைத் திட்டமிடுதல், அமுல்படுத்துதல் மற்றும் பராமரித்தல் போன்றன இப்பொறுப்பில் உள்ளடங்குகின்றன.

## 17.3 கணக்காய்வு அவதானிப்புக்கள்

2012 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறான நிதி அறிக்கைகள் மற்றும் ஏடுகளின் தொகை மதிப்பு, புள்ளிவிபரத் திணைக்களத்தின் ஒதுக்கீட்டுக் கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் இந்த அறிக்கையின் (அ) தொடக்கம் (ஈ) வரையிலுமான பொதுவான அவதானிப்புக்கள் மற்றும் கீழேயுள்ள 17.4 தொடக்கம் 17.10 வரையுள்ள பந்திகளில் குறிப்பிடப்பட்ட பிரதான கணக்காய்வு அவதானிப்புக்கள் தவிர திருப்திகரமானதாக தயாரிக்கப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.

(அ) அரசாங்க செலவின முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) 2011 திசெம்பர் 30 ஆந் திகதிய 155 ஆம் இலக்க தேசிய பாதீட்டுச் சுற்றுநிரூபத்தின் பிரகாரம் 2012 ஆம் ஆண்டிற்காக பாராளுமன்றத்தினால் அங்கீகரிக்கப்பட்ட வருடாந்த பாதீட்டு மதிப்பீட்டின் மூலம் ஒதுக்கப்பட்ட மீண்டெழும் நிதியேற்பாடுகளிலிருந்து 2 சதவீதமான நிதியேற்பாடு சேமிக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) 03 மூலதன செலவின விடயங்களில் ரூபா 74,201,830 கூட்டுத்தொகையான சேமிப்புக்களுக்குரிய காரணம் மேலே (அ)(i) இல் குறிப்பிடப்பட்ட சுற்றுநிரூபத்தின் பிரகாரம் சேமிப்பாகக் காண்பிக்கப்பட்டிருந்த போதிலும் அந்த சேமிப்பு, செலவின சேமிப்பாக முகாமைத்துவத்தினால் எதிர்பார்க்கப்பட்ட சேமிப்பாக இல்லாமல் வேறு காரணங்களினால் ஏற்பட்ட சேமிப்பாகக் காணப்பட்டன.

(ஆ) கட்டு நிதிக் கணக்கு

நிதிப் பிரமாணம் 371 இன் பிரகாரம் செயற்பாடு நிறைவு பெற்றதும் உடனடியாக பெறப்பட்ட செயல் நிமித்த உப கட்டுநிதி தீர்க்கப்பட்ட வேண்டியிருந்த போதிலும் செயற்பாடுகள் முடிவடைந்து 01 மாதம் தொடக்கம் 05 மாதங்கள் வரையான தாமதத்தின் பின்னர் தீர்க்கப்பட்ட சந்தர்ப்பங்கள் காணப்பட்டன.

(இ) பொது வைப்புக் கணக்கு

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) சொத்துக்களைக் கொள்வனவு செய்வதற்காக 2011 ஆம் ஆண்டின் இறுதியின் போது பொது வைப்புக் கணக்கிற்கு மாற்றப்பட்டிருந்த ரூபா 24,400,000 தொகையிலிருந்து 2012 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் ரூபா 10,534,742 தொகையான சொத்துக்கள் மாத்திரமே கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. சேமிக்கப்பட்ட ரூபா 13,865,258 தொகை பயன்பாடின்றி பொது வைப்புப் கணக்கில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது.

(ii) வழங்கப்பட்டிருந்தும் கொடுப்பனவிற்காகச் சமர்ப்பிக்கப்படாத 06 மாதங்களை விஞ்சிய காசோலைகள் தொடர்பாக 396 (இ) இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியிருந்த போதிலும் அதற்கு முரணாக 30 காசோலைகளின் ரூபா 117,010 கூட்டுத்தொகை 2012 திசெம்பர் 31 ஆந் திகதி பொது வைப்புக் கணக்கிற்கு மாற்றப்பட்டிருந்தது.

(ஈ) அரசாங்க ஊழியர்கள் முற்பணக் கணக்குகள் தொடர்பான இணக்கக் கூற்று

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) கடன் வழங்குதல் தொடர்பாக பேணப்பட வேண்டிய கடன்பட்டோர் மற்றும் கடன்கொடுத்தோர் பதிவேடுகள் நாளதுவரையாக்கப்பட்டிருக்க வில்லை.

(ii) அசைவுறாத 20 நிலுவைக் கடன் மீதிகளுக்குரிய ரூபா 560,877 தொகையான நிலுவைக் கடன் மற்றும் முற்பணம் காணப்பட்டதுடன் அப்பணத்தை அறவீடு செய்தல் தொடர்பான பின்தொடர் நடவடிக்கைகள் நலிவான நிலையில் காணப்பட்டது

## 17.4 நல்லாளுகையும் கணக்களிப்பொறுப்பும்

### 17.4.1 வருடாந்த செயலாற்றல் அறிக்கை

2010 மார்ச் 10 ஆந் திகதிய பீஎப்/ஆர்/2/2/3/5(4) ஆம் இலக்க அரச நிதிப்பணிப்பாளர் நாயகத்தின் கடிதத்தில் குறிப்பிடப்பட்ட 2002 செப்தெம்பர் 12 ஆந் திகதிய மற்றும் 2004 பெப்ரவரி 20 ஆந் திகதிய 402 மற்றும் 402(1) ஆம் இலக்க அரச நிதிச் சுற்றுநிருபத்தின் பிரகாரம் திணைக்களத்தினால் தயாரிக்கப்பட வேண்டிய வருடாந்த செயலாற்றல் அறிக்கை நிதி ஆண்டு முடிவடைந்து 150 நாட்களுக்குள் தலைமை அதிபதிக்கான பிரதியுடன் பாராளுமன்றத்தில் முன்வைக்கப்படவேண்டிய போதிலும் மீளாய்வாண்டிற்குரிய செயலாற்றல் அறிக்கை 2013 யூன் 21 ஆந் திகதியே பாராளுமன்றத்தில் முன்வைக்கப்பட்டிருந்தது.

### 17.4.2 வருடாந்த கொள்வனவுத் திட்டம்

2006 மார்ச் 24 ஆந் திகதிய 128 ஆம் இலக்க தேசிய வரவு செலவுத் திட்ட சுற்றுநிருபத்தின் பிரகாரம் உத்தேசிக்கப்பட்ட கொள்வனவுத் திட்டத்திற்கு மேலதிகமாக கொள்வனவுக் கால அட்டவணை மற்றும் புதிய கொள்வனவுச் செயற்பாடுகளுக்கான பாதீட்டு மதிப்பீடு தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

### 17.4.3 உள்ளகக் கணக்காய்வு

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2009 யூன் 09 ஆந் திகதிய டீஎம்ஏ/2009(1) ஆம் இலக்க முகாமைத்துவக் கணக்காய்வுச் சுற்றுநிரூபத்தின் 09 ஆம் பந்தியின் பிரகாரம் சனவரி 31 ஆந் திகதியில் உள்ளவாறு உரிய ஆண்டின் ஆரம்ப அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டிராததுடன் ஆண்டின் பொழிப்பு அறிக்கையும் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) உள்ளகக் கணக்காய்வு நிகழ்ச்சித் திட்டத்தின் பிரகாரம் கணக்காய்வு மேற் கொள்ளப்பட்டமையை ஏற்றுக்கொள்வதற்கான எவ்வித உள்ளகக் கணக்காய்வு ஐயவினாக்களும் சமர்ப்பிக்கப்பட்டிராதுடன் 05 விசேட புலனாய்வு ஐய வினாக்கள் மாத்திரம் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. மேலும் திணைக்களத்தின்

பிரதான செயற்பாடான சனத்தொகைக் கணிப்பீட்டை நடாத்துதல் தொடர்பாக உள்ளகக் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(இ) உள்ளகக் கணக்காய்வின் தேவைக்காக இரண்டு உத்தியோகத்தர்கள் மாத்திரம் நியமிக்கப்பட்டிருந்தமை போதியளவாக இல்லாமை மற்றும் பௌதீக வளங்களில் குறைபாடு என்பன உள்ளகக் கணக்காய்வு நடவடிக்கைகளைச் செய்வதில் காணப்பட்ட இடையூறுகளாகக் காண்பிக்கப்பட்டிருந்த போதிலும் அந்த குறைபாடுகளை மாற்றியமைப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**17.5 சொத்துக்கள் முகாமைத்துவம்**

**(அ) வருடாந்த பொருள் மெய்மையாய்வை நடாத்துதல்**

2010 திசெம்பர் 17 ஆந் திகதிய பீஎப்/பொருள் மெய்மையாய்வு/01 ஆம் இலக்க அரச நிதிப் பணிப்பாளர் நாயகத்தின் கடிதத்தின் மூலம் திருத்தப்பட்ட 2009 திசெம்பர் 09 ஆந் திகதிய 441 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றுநிருபத்தின் பிரகாரம் 2012 இன் வருடாந்த பொருள் மெய்மையாய்வு 2013 மார்ச் 31 ஆந் திகதிக்கு முன்னர் நடாத்தப்பட்டு அந்த அறிக்கை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டியிருந்த போதிலும் திணைக்களத்தினால் வருடாந்த பொருள் மெய்மையாய்வு அறிக்கை 2013 செப்தெம்பர் 12 ஆந் திகதியே சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.

**(ஆ) நடைமுறையல்லாச் சொத்துக்கள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) திணைக்களத்திற்கு புதிய கட்டிடம் நிர்மாணிக்கப்படுகின்ற காணியின் பெறுமதி மதிப்பீடு செய்யப்பட்டு கணக்குகளுக்குக் கொண்டுவரப்பட்டிருக்கவில்லை.

(ii) திணைக்களத்தின் மூலம் புதிய கட்டிடத்தை நிர்மாணிப்பதற்காக மேற்கொள்ளப்பட்ட ரூபா 308,284,963 தொகையான செலவினம் நடைமுறையல்லாச் சொத்துக்களின் அசைவுகள் தொடர்பான அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டிருந்த போதிலும் செயற்திட்டம் முடிவடையும் அடிப்படையில் தொகை மதிப்பின் செயற்திறனை முன்னேற்றமடையச் செய்யும் செயற்திட்டத்தின் கீழ் புதிய கட்டிடத்தை நிர்மாணிப்பதற்காக செலவிடப்பட்ட ரூபா 104,018,475 தொகையான

செலவினம் நடைமுறையல்லாச் சொத்துக்களின் அசைவு அறிக்கையில் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை.

**17.6 இணங்காமைகள்**

**சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் என்பவற்றுடனான இணங்காமைகள்**

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாண ஏற்பாடுகள் என்பனவற்றுடன் இணங்காத சந்தர்ப்பங்கள் பகுப்பாய்வு செய்து கீழே தரப்படுகின்றன.

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | பெறுமதி | இணங்காமைகள் |
|---|---|---|
| | ரூபா | |
| (அ) நியதிச்சட்ட ஏற்பாடுகள் | | |
| 1987 இன் 3 ஆம் இலக்க பொது ஒப்பந்த உடன்படிக்கை அதிகாரச் சட்டம் | | |
| (i) 6(1)(அ) உப பிரிவு | - | ஒப்பந்த உடன்படிக்கையின் கிரயம் ரூபா ஐம்பது இலட்சத்தை விஞ்சுகின்ற சந்தர்ப்பத்தில் சகல கேள்விதாரருக்கும் பொது ஒப்பந்த பதிவாளரிடம் பதிவு செய்ய வேண்டியிருந்த போதிலும் தொகை மதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களத்திற்காக நிர்மாணிக்கப்படுகின்ற கட்டிடத்தின் இரண்டாம் கட்டத்திற்காகச் சமர்ப்பித்த கேள்விதாரர் அவ்வாறு பதிவு செய்யப்பட்டிருந்த கேள்விதாரர் என உறுதிப்படுத்த முடியவில்லை.<br><br>மேலும் கேள்வி கையளிக்கப்பட்டு 60 நாட்களுக்குள் ஒப்பந்த உடன்படிக்கையும் இந்த அதிகாரச்சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட வேண்டியிருந்த போதிலும் இந்தக் கேள்வி கையளிக்கப்பட்ட கம்பனி அதன் படி நடவடிக்கை எடுத்திருந்தமை அவதானிக்கப்பட வில்லை. |

(ii) 12 ஆம் பிரிவு - அதிகாரச்சட்டத்தின் 8 ஆம் பிரிவால் குறிப்பிடப்பட்ட நபர்களினால் இந்த அதிகாரச்சட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட செல்லுபடியான பதிவுச் சான்றிதழ் முதலாவதாக தமக்குச் சமர்ப்பிக்கப்பட்டால் அன்றி பொதுப் பதவியணியினர் அல்லது அப்பதவியணியில் தொழில்நுட்பக் குழுவின் கேள்விச் சபை அல்லது மதிப்பீட்டுச் சபையின் எவரேனும் ஒரு அங்கத்தவரால் அல்லது அதில் எவராவது உத்தியோகத்தரால் அல்லாவிடில் தொழில் வழங்குனரால் அல்லது எவரேனும் அரசாங்க உத்தியோகத்தரினால் அல்லது பதிவாளரால் பதிவு செய்யும் செயற்பாட்டிற்காக அன்றி ஏதாவது பொது ஒப்பந்த உடன்படிக்கையால் எழும் அல்லது அவ்வாறான ஒப்பந்த உடன்படிக்கைக்கு உரித்தாகும் ஏதேனும் ஓர் விடயம் தொடர்பாக 8 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட எவரேனும் நபருடன் எவ்வித நடவடிக்கைகளும் மேற்கொள்ளலாகாத போதிலும் இந்தக் கேள்விக்குரிய பதிவு செய்யப்பட்டமைக்கான செல்லுபடியான சான்றிதழ் உள்ளமை உறுதிசெய்யப்படாமல் கேள்விதாரருடன் கொள்வனவு மற்றும் மதிப்பீட்டு குழுக்களில் உத்தியோகத்தர்கள் நடவடிக்கை எடுத்திருந்தமை மேற்கூறப்பட்ட பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டதன் அடிப்படையில் அதிகாரச் சட்டத்தின் 12 ஆம் பிரிவின் பிரகாரம் அவ் உத்தியோகத்தர்களினால் தண்டனை பெறக்கூடிய தவறு மேற்கொள்ளப்பட்டிருந்தது.

(ஆ) தாபன விதிக் கோவை

XII ஆம் அத்தியாயம்

(i) 1.2 மற்றும் 1.7 ஆம் பிரிவு

i. உள்நாட்டில் எடுக்கப்படுகின்ற விடுமுறைகள் பொது 125 அ படிவத்தில் விண்ணப்பிக்கப்பட்டு பொது 190 படிவத்தின் பிரகாரம் விடுமுறைப் பதிவேட்டில் அந்த விடுமுறைகள் உள்ளடக்கப்பட வேண்டியிருந்த போதிலும் தேசிய கணக்குப் பிரிவில் அரசாங்க முகாமைத்துவ சேவையின் ஒரு உத்தியோகத்தரினால் 2012 ஆம் ஆண்டின் சனவரி தொடக்கம் நவம்பர் வரை சமூகமளிக்காத 16 நாட்களுக்காக அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

| | | | |
|---|---|---|---|
| | | | ii. பிரதான அலுவலகத்தின் உத்தியோகத்தர்களின் விடுமுறைகள் பென்சில்களால் குறிப்பிடப்பட்ட சந்தர்ப்பங்கள் மற்றும் விடுமுறைப் பதிவேட்டில் விடுமுறைகள் பதியப்படாத சந்தர்ப்பங்கள் காணப்பட்டன. |
| (ii) | 15.4 மற்றும் 15.12 ஆம் பிரிவுகள் | 421,800 | ஒரு மாதத்திற்கு மேற்பட்ட காலத்திற்காக சம்பளமற்ற விடுமுறை பெற்ற சகல உத்தியோகத்தர்களிற்கும் தமது விடுமுறைக்காலம் முடிவடைந்ததன் பின்னர் அரசாங்கத்தின் கீழ் சேவைக்கு மீளச் சமூகமளித்தற்கும் தங்களால் பெறப்பட்ட சம்பளமற்ற முழுமையான விடுமுறைக் காலத்தின் இரண்டு மடங்கிற்குச் சமனான காலம் அரசாங்கத்திற்கு சேவையாற்றுவதற்கும் உத்தியோகத்தர் விடுமுறையில் செல்வதற்கு முன்னர் உடன்படிக்கை கைச்சாத்திடப்பட வேண்டியிருந்த போதிலும் தொகை மதிப்பு உத்தியோகத்தருடன் சம்பளமற்ற விடுமுறைக் காலப்பகுதியின் இறுதியில் அதாவது 2007 நவம்பர் 01 ஆந் திகதியே உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டிருந்தது. |
| (iii) | 15.16 ஆம் பிரிவு | 108,720 | அங்கீகரிக்கப்பட்ட விடுமுறைக்காலம் நீடிக்கப்படுகின்ற சகல சந்தர்ப்பங்களும் உடன்படிக்கையில் காண்பிக்கப்படுகின்ற கட்டாயச் சேவைக்காலம் மற்றும் தண்டனைத் தொகையும் அதனுடன் நேரொத்தாக வரும் வகையில் நீடிக்கப்பட வேண்டியிருந்ததுடன் அந்தத் திருத்தம் தொடர்பாக உத்தியோகத்தருக்கு அறிவித்து அவரின் விருப்பம் எழுத்து மூலம் பெறப்பட்டு அந்த ஆவணங்கள் உடன்படிக்கையுடன் இணைக்கப்பட வேண்டும். எவ்வாறாயினும் தொகைமதிப்பு உத்தியோகத்தரின் சம்பளமற்ற விடுமுறைக்காலம் 2004 நவம்பர் 01 ஆந் திகதி தொடக்கம் 2006 நவம்பர் 01 ஆந் திகதி வரை நீடிக்கப்பட்டிருந்த போதிலும் அவ்வாறான இணக்கப்பாடின்மையின் காரணமாக அந்தக் காலத்திற்குரிய தொகையை அறவிடுவதற்கு முடியாதிருந்தது. |

| | | | |
|---|---|---|---|
| (iv) | 16.15 ஆம் பிரிவு | 1,409,090 | வெளிநாட்டு வேலைவாய்ப்பிற்காக சம்பளமற்ற விடுமுறை பெற்றுக் கொள்ளும் போது பெறப்பட்ட சம்பளமற்ற விடுமுறையில் இரண்டு மடங்கு கட்டாய சேவைக்காலமாக கடமையாற்ற வேண்டியிருந்த போதிலும் சம்பளமற்ற விடுமுறைக் காலத்தின் பின்னர் 04 உத்தியோகத்தர்கள் சேவைக்கு சமூகமளித்திராததுடன் அந்த உத்தியோகத்தர்களிடமிருந்து அரசாங்கத்திற்கு அறவிட வேண்டிய தொகை அறவிடப்பட்டிருக்கவில்லை. |
| (v) | 23.8 ஆம் பிரிவு | | நாட்டிலிருந்து வெளியேறி குறிப்பிடப்பட்ட தினத்தில் நாட்டிற்கு வந்ததன் பின்னர் தமது முகவரியும் அதன் மாற்றமும் தமது திணைக்களத்தின் தலைவருக்கு அறிவிக்கப்பட வேண்டியிருந்த போதிலும் மேற்கூறப்பட்ட 04 உத்தியோகத்தர்களும் அவ்வாறு செய்திருக்கவில்லை. |
| (vi) | 23.10 மற்றும் 23.10.1 ஆம் பிரிவு | | அவசர சந்தர்ப்பத்தின் போது தவிர நாட்டிலிருந்து வெளியேசென்று விடுமுறைகளை நீடிப்பதற்காக விண்ணப்பித்தமையை அங்கீகரிக்கின்ற அதிகாரியின் உடன்பாடு, நாட்டைவிட்டு வெளிச் செல்வதற்கு முன்னர் பெறப்பட்டால் அன்றி நாட்டிலிருந்து வெளிச்சென்று விடுமுறையை நீடிக்க முடியாததைப் போன்று விடுமுறையை நீடிக்க எண்ணுகின்ற உத்தியோகத்தர்கள் காலதாமதமின்றி விண்ணப்பிக்க வேண்டியிருந்த போதிலும் இரண்டு உத்தியோகத்தர்கள் அவ்வாறு செய்திருக்கவில்லை. |
| (vii) | 23.18 ஆம் பிரிவு | | அரசாங்க உத்தியோகத்தர்கள் நாட்டிலிருந்து வெளியில் சென்ற விடுமுறை தொடர்பான அறிக்கை திணைக்களத் தலைவரினால் மாதந்தோறும் கணக்காய்வாளர் தலைமையதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டியிருந்த போதிலும் அவ்வாறு செய்யப்பட்டிருக்கவில்லை. |

| | |
|---|---|
| (viii) XXVII ஆம் அத்தியாயத்தின் 1.7 ஆம் பிரிவு | அலுவலக ஆவணங்களில் கணக்காய்வு நடவடிக்கைகளின் போது மாத்திரம் பச்சை நிறம் பயன்படுத்தப்பட வேண்டியிருந்த போதிலும் அதற்கு முரணாக சீசீ 10 பதிவேட்டில் பச்சை நிறப் பேனையால் எழுதப்பட்டிருந்தது. |

(இ) பொது நிருவாகச் சுற்றுநிருபம்

---

| | |
|---|---|
| (i) 1990 ஒக்தோபர் 30 ஆந் திகதிய 41/90 ஆம் இலக்க சுற்றுநிருபத்தின் 2.11 ஆம் பிரிவு | ஒவ்வொரு 06 மாதங்களுக்கு ஒரு தடவையும் அரசாங்க வாகனங்களின் எரிபொருள் நுகர்வு பரீட்சிக்கப்பட வேண்டியிருந்த போதிலும் திணைக்களத்தின் 57 வாகனங்களுக்காக அவ்வாறு செய்யப்பட்டிருக்கவில்லை. |
| (ii) 1992 சனவரி 25 ஆந் திகதிய 03/92 ஆம் இலக்க சுற்றுநிருபத்தின் 02(1) ஆம் பிரிவு | மு.ப 8.30 மணி தொடக்கம் மு.ப 9.00 மணி வரையான காலத்தில் அலுவலகத்திற்கு வருகை தருகின்ற உத்தியோகத்தருக்கு அவ்வாறு தாமதமாக வரும் காலம் பி.ப 4.45 வரையும் சிற்றூழியர்களுக்காக மு.ப 8.00 இற்கும் மு.ப 8.15 இற்கும் இடையே தாமதமாகச் சமூகமளிக்கின்ற காலத்தில் பி.ப 5.00 மணி வரையும் மாத்திரம் ஈடு செய்வதற்கு அவகாசமளிக்கப்பட்டிருந்த போதிலும் அதற்கு முரணாக தாமதமாகச் சமூகமளித்தல் மற்றும் குறிப்பிட்ட நேரத்தின் பின்னர் ஈடுசெய்வதற்கு இடமளிக்கப்பட்டிருந்தது. |
| (iii) 2006 மே 30 ஆந் திகதிய 09/2006 ஆம் இலக்க சுற்றுநிருபத்தின் 01 ஆம் பிரிவு | அரசாங்க சேவையில் ஈடுபட்டிருக்கின்ற கனிஷ்ட ஊழியர்கள் தவிர ஏனைய சகல ஊழியர்களதும் அலுவலக நேரம் மு.ப 8.30 தொடக்கம் பி.ப 4.15 வரையும் கனிஷ்ட ஊழியர்களுக்காக அலுவலக நேரம் மு.ப. 8.00 தொடக்கம் பி.ப 4.45 வரையாகவும் இருந்த போதிலும் அதற்கு முரணாக வருகை, வெளிச் செல்லை காணப்பட்டதுடன் அதற்காக விடுமுறை/ குறுகியகால விடுமுறை பெறப்பட்டிருக்கவில்லை. |

| | | |
|---|---|---|
| (iv) | 2008 யூன் 26 ஆந் திகதிய 13/2008 ஆம் இலக்க சுற்றுநிருபத்தின் 7 ஆம் பிரிவு | வீட்டிற்கும் அலுவலகத்திற்குமிடையே குழு போக்குவரத்து வசதி வழங்கக் கூடிய ஆகக் கூடிய தூரம் 50 கிலோ மீற்றராக இருந்த போதிலும் அதற்கு முரணாக 66 கி.மீற்றர் - 108 கி.மீற்றர் வரை 04 வாகனங்கள் குழு போக்குவரத்து வசதிக்காக ஈடுபடுத்தப்பட்டிருந்தன. மேலும் சில சந்தர்ப்பங்களின் போது இந்த தூரத்தையும் விஞ்சியிருந்தது. |
| (v) | 2009 ஏப்ரல் 16 ஆந் திகதிய 09/2009 ஆம் இலக்க சுற்றுநிருபத்தின் 01, 02 ஆம் பிரிவு | சகல அரசாங்க நிறுவனங்களினதும் உத்தியோகத்தர்கள் தமது சேவை நிலையத்திற்கு சமூகமளித்தல் மற்றும் வெளிச் செல்லல் என்பன கைவிரல் அடையாள இயந்திரம் மூலம் உறுதிப்படுத்தப்பட வேண்டியிருந்த போதிலும் சில பிரிவுகளில் மேற்கொள்ளப்பட்ட தெரிவுப் பரிசோதனையின் போது அவ்வாறு செய்யப்படாதிருந்த சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன. |
| (ஈ) | 2006 இன் கொள்வனவு வழிகாட்டிக் கோவை<br>3.2.2(அ) பிரிவு | கொள்வனவு அறிவித்தல், இயலுமான சகல சந்தர்ப்பங்களிலும் ஆகக்குறைந்தது கூடிய விற்பனையுள்ள ஒரு தேசிய பத்திரிகையிலும், தேசிய கொள்வனவு முகவராண்மை இணைய தளத்திலும், ஏனைய உரிய இணையத் தளத்திலும் பிரசுரிக்கப்பட வேண்டியிருந்த போதிலும் தொகை மதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களத்திற்காக நிர்மாணிக்கப்படுகின்ற கட்டிடத்தின் இரண்டாவது கட்டத்திற்காக கோரப்பட்ட கொள்வனவு அறிவித்தல் இணையத் தளங்களில் பிரசுரிக்கப்பட்டிருக்கவில்லை. |

## 17.7 செயலாற்றல்

2012 ஆம் ஆண்டிற்காகச் சமர்ப்பிக்கப்பட்ட செயல் நடவடிக்கைத் திட்டம் மற்றும் செயலாற்றல் அறிக்கையின் பிரகாரம் திணைக்களத்தின் செயல் முன்னேற்றம் தொடர்பான அவதானிப்புக்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

**(அ) போதியளவில் நிறைவேற்றப்படாத பிரதான செயற்பாடுகள்**

திணைக்களத்தின் பிரதான செயற்பாடான சனத்தொகை, குடிசன மதிப்பீடு தொடர்பான 2011 இன் இறுதி அறிக்கை இதுவரையிலும் வெளியிடப்பட்டிருக்கவில்லை.

**(ஆ) திட்டமிடல்**

(i) பின்வரும் சந்தர்ப்பங்களின் போது செயல்நடவடிக்கைத் திட்டத்திற்கு இணங்கிச் செயற்படாதிருந்தமை அவதானிக்கப்பட்டன.

| | செயற்பாடுகள் | பூர்த்தி செய்தல் முன்னேற்றம் |
|---|---|---|
| i. | அரை அரசாங்கப் பிரிவில் சேவையாற்றுகின்றவர்கள் தொடர்பான புள்ளிவிபரம்- 2010 | இணையத் தளத்தில் பிரசுரிக்கப்பட்டிருக்க வில்லை. |
| ii. | அரை அரசாங்கப் பிரிவில் சேவையாற்றுகின்றவர்கள் தொடர்பான புள்ளிவிபரம்- 2011 | 2011 ஆம் ஆண்டிற்குரிய தகவல்களைச் சேகரித்து உள்ளடக்கி பூர்த்திசெய்யப்பட்டிருக்க வில்லை. |
| iii. | விவசாய தொகைமதிப்பு- 2012 | கேள்விக் கொத்துக்கள் மாத்திரம் தயாரிக்கப்பட்டிருந்ததுடன் எவ்வித செயற்பாடுகளும் மேற்கொள்ளப்பட்டிருக்க வில்லை. |
| iv. | வெளியீட்டு நடவடிக்கைகள்- புள்ளிவிபர உள்ளடக்கம், புள்ளிவிபர கைநூல் மூன்று மாத தரவுப் பிரசுரம் | 2011 ஆம் ஆண்டிற்குரிய கைநூல்/ பிரசுரம் வெளியிடப்பட்டிருக்கவில்லை. |
| v. | நூலகம் கொள்வனவு (ரூபா 1,000,000) புத்தகங்கள் பகிர்ந்தளித்தல் | புத்தகங்கள் மற்றும் வெளிநாட்டு நாளிதழ்களின் கொள்வனவு, புத்தகங்கள் பகிர்ந்தளித்தல் மேற்கொள்ளப்பட்டிருக்க வில்லை |

(ரூபா 300,000)

| | | |
|---|---|---|
| vi. | வருடாந்த கைத்தொழில் மெய்மையாய்வு - 2011 | அறிக்கை பகிரங்கப்படுத்தப்படவில்லை. |
| vii. | நெல் புள்ளிவிபரம்-<br>2011, 2012 பெரும்போகம்<br>2012 சிறுபோகம் | அறிக்கை தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. |
| viii. | பெரிய வெங்காய உற்பத்தி - 2012 | அறிக்கை அச்சிடப்பட்டு பகிர்ந்தளிக்கப்பட்டிருக்க வில்லை. |
| ix. | தேயிலை, இறப்பர், தெங்கு உற்பத்திச் செலவின மெய்மையாய்வு – 2011/2012 | மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. |
| x. | இலங்கை ஊழிய சக்தி மெய்மையாய்வு – 2012 | மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. |
| xi. | பயிற்சிப் பிரிவு | கணனிப் பயிற்சி பாடநெறி மூலம் 180 உத்தியோகத்தர்கள், புள்ளிவிபர பயிற்சி பாடநெறி மூலம் 160 உத்தியோகத்தர்கள் மற்றும் விஷேட விரிவுரைகள் மூலம் 20 உத்தியோகத்தர்கள் பயிற்சியளிக்கப்பட வேண்டியிருந்த போதிலும் அப்பயிற்சிகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. |
| xii. | ஆராய்ச்சி மற்றும் விஷேட கற்கை | மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. |

(ii) வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்டிராத பின்வரும் செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன.

i. வைத்திய புள்ளிவிபரம்.

ii. சமூக பாதுகாப்பு ஆர்வலரின் பெயரிலான ஆர்வலரைத் தயார்படுத்துவதற்காக நேரடியான பிரிவு வருமான செலவின மெய்மையாய்விற்கு சமமாக மேலும் ஒரு மெய்மையாய்வை நடாத்துதல்.

**17.8 மோசடியான வடிவிலுள்ள கொடுக்கல் வாங்கல்கள்**

2006 இன் கொள்வனவு வழிகாட்டிக் கோவையின் 5.3.18 (ஆ) பிரிவின் பிரகாரம் கேள்வி மதிப்பீட்டின் போது பெறுமதிசேர் வரி கவனத்திற்கொள்ள முடியாதிருந்த போதிலும் 2008 சனவரி தொடக்கம் 2009 மே வரை தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களத்தின் பாதுகாப்பு சேவை பெற்றுக்கொள்ளும் போது கேள்விதாரர்களின் விலையில் 15 சதவீத பெறுமதிசேர் வரி கவனத்திற் கொள்ளப்பட்டு கேள்வி மதிப்பீடு செய்யப்பட்டிருந்தது.

அவ்வாறு பெறுமதிசேர் வரி சேர்க்கப்பட்ட பின்னர் காண்பிக்கப்பட்ட கூறுவிலைகளுக்கு திணைக்களம் மீளவும் 15 சதவீதப்படி பெறுமதிசேர் வரி சேர்த்து உரிய கம்பனியுடன் உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டிருந்தது. அதனால் இந்தக் கம்பனிக்கு 2008 சனவரி தொடக்கம் 2009 மே வரையான காலப்பகுதியில் ரூபா 1,056,402 தொகை மேலதிகமாகச் செலுத்தப்பட்டிருந்துதுடன் அந்தத்தொகையை மீள அறவீடு செய்வதற்கோ அல்லது பொறுப்புவாய்ந்த உத்தியோகத்தருக்கு எதிராக நடவடிக்கையோ எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**17.9 முகாமைத்துவ நலிவுகள்**

பின்வரும் நலிவுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) வாகனப் பதிவேடு, வாகன சம்பவத்திரட்டுப் புத்தகம், எரிபொருள் கட்டளைப் புத்தகம் மற்றும் நாளாந்த ஓட்டக் குறிப்புக்கள் நாளதுவரையாகப் பேணப்பட்டிருக்கவில்லை.

(ஆ) வருடாந்த இடமாற்றம் பெற்றுச் செல்லாது 05 தொடக்கம் 34 வருடங்கள் வரையான காலமாக இத் திணைக்களத்தில் சேவையில் ஈடுபட்டிருக்கின்ற 31 உத்தியோகத்தர்கள் காணப்படுவதுடன் அவர்களில் 18 பேர் அவர்களின் முதல் நியமனத் திகதி தொடக்கம் இத்திணைக்களத்தில் சேவையில் ஈடுபட்டிருக்கின்ற உத்தியோகத்தர்களாவர்.

(இ) பதிவாளர் நாயகம் திணைக்களத்திற்கு நியமிக்கப்பட்ட தொகை மதிப்புத் திணைக்களத்தின் எழுதுவினைஞர் ஒருவர் 2011 யூலை 13 ஆந் திகதி தொடக்கம் சேவைக்குச் சமூகமளித்திராத போதிலும் 2011 யூலை மாதத்தில் ரூபா 13,153 தொகையான சம்பளம் முழுவதும் அவ் உத்தியோகத்தருக்குச் செலுத்தப்பட்டிருந்தது. 2012 சனவரி 10 ஆந் திகதிய கடிதத்தில் உத்தியோகத்தருக்கு பதவியிலிருந்து விலகிச் சென்றமைக்கான அறிவித்தல் வழங்கப்பட்டிருந்த போதிலும் அத்தொகை உத்தியோகத்தரிடமிருந்து அறவிடப்பட்டிருக்கவில்லை.

## 17.10 மனிதவள முகாமைத்துவம்

### (அ) அங்கீகரித்த பதவியணியும் உள்ளபடியான பதவியணியும்

2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பதவியணி மீதான நிலை பின்வருமாறு.

| | ஊழியர் வகை | அங்கீகரித்த பதவியணி | உள்ளபடியான பதவியணி | வெற்றிடங்களின் எண்ணிக்கை | மிகைகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|
| (அ) | சிரேஷ்ட நிலை | 259 | 137 | 122 | - |
| (ஆ) | மூன்றாம் நிலை | 06 | 04 | 02 | - |
| (இ) | இரண்டாம் நிலை | 1333 | 972 | 361 | - |
| (ஈ) | ஆரம்ப நிலை | 201 | 170 | 31 | - |
| (உ) | ஏனையவை(அமைய/ தற்காலிக/ஒப்பந்த அடிப்படை) | 20 | 23 | - | 03 |
| | மொத்தம் | 1819 | 1306 | 516 | 03 |

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) 2013 யூலை 27 ஆந் திகதிய எச்ஆர்/11/கேஏஆர்டீஆர்/2013 ஆம் இலக்க மேலதிக பணிப்பாளர் நாயகத்தின் கடிதம் மூலம் மேற்கூறப்பட்டதன் படி பதவியணி தொடர்பான விபரம் கணக்காய்விற்கு வழங்கப்பட்டிருந்த போதிலும் செயலாற்றல் அறிக்கையில் 2012 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறான ஊழியர் எண்ணிக்கை

தொடர்பான விபரம் கீழே குறிப்பிடப்படுகின்றதன் பிரகாரம் உள்ளடக்கப்பட்டிருந்தது.

| **அங்கீகரித்த பதவியணி** | **உள்ளபடியான பதவியணி** | **வெற்றிடங்களின் எண்ணிக்கை** |
|---|---|---|
| 1835 | 1336 | 478 |

2013 திசெம்பர் 04 ஆந் திகதிய டீசீஎஸ்/ஏடீ/சீசீ/ஏயூ/2012/26 கடித்தின் பிரகாரம் செயலாற்றல் அறிக்கையில் நிலைமை சரியாக அனுப்பப்பட்டிருந்தமை அறிவிக்கப்பட்டிருந்தது.

(ii) செயலாற்றல் அறிக்கையின் படி வெற்றிடங்களின் எண்ணிக்கைகளின் மொத்தம் 499 ஆக இருக்க வேண்டிய போதிலும் அது 478 ஆகக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(iii) மேலும் சமர்ப்பிக்கப்பட்ட செயலாற்றல் அறிக்கையில் அமைய ஊழியர்களின் கீழ் வெற்றிடங்கள் 23 ஆகக் காண்பிக்கப்பட வேண்டியிருந்த போதிலும் அந்த வெற்றிடங்கள் எதுவும் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(iv) உரிய வகையில் தகவல்கள் பேணப்படாதிருந்தமை மற்றும் கவனத்தில் கொள்ளாமையினால் மேலே காண்பிக்கப்பட்ட நிலைமை உருவாகியிருந்தமை அவதானிக்கப்பட்டதுடன் கால ரீதியாகவும் சரியாகவும் தகவல்களை வழங்குதல் திணைக்களத்தின் செயற்பணியாக காண்பிக்கப்பட்டிருந்தும் தமது திணைக்களத்தின் பதவியணியினர் தொடர்பான விபரங்களை சரியாகப் பேணுவதற்கு முடியாதிருந்தமை அவதானிக்கப்படுகின்றது.

(v) மீளாய்வாண்டின் இறுதியளவில் 516 வெற்றிடங்களை நிரப்புவதற்கு முடியாதிருந்தது.

(vi) சேர்க்கப்பட்டிருந்த 03 மிகை ஊழியர்களுக்காக முறையான அங்கீகாரம் பெறப்பட்டிருக்கவில்லை.

## 18. தலைப்பு 280 – கருத்திட்ட முகாமைத்துவம் மற்றும் கண்காணிப்புத் திணைக்களம்

### 18.1 கணக்காய்வின் நோக்கெல்லை

கருத்திட்ட முகாமைத்துவம் மற்றும் கண்காணிப்புத் திணைக்களத்தின் 2012 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிஅறிக்கைகள், இணக்கக்கூற்றுகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய அறிக்கைகளை உள்ளடக்கிய ஒதுக்கீட்டுக் கணக்குகள் மீதான கணக்காய்வு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2013 நவம்பர் 06 ஆந் திகதி திணைக்களத்தின் தலைவருக்கு அனுப்பிவைக்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக்கூற்றுக்கள் சம்பந்தமான கணக்காய்வு அவதானிப்புக்கள், கருத்துரைகள் மற்றும் கண்டுபிடிப்புக்கள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகளினதும் இணக்கக்கூற்றுக்களினதும் மீளாய்வின் அடிப்படையிலும் கொடுக்கல் வாங்கல்களின் மாதிரிகளினது போதியளவு செவ்வை பார்த்தலின் அடிப்படையிலும் எழுந்தனவேயாகும். அவ்வாறான மீளாய்வினதும் செவ்வை பார்த்தலினதும் நோக்கெல்லையும் அளவும் எனக்குக் கிடைப்பதற்குள்ள பதவியணியினர், ஏனைய மூலவளங்கள், நேரம் என்பவற்றிற்கமைய இயலுமானளவு விரிவான கணக்காய்வை உள்ளடக்கக் கூடியவாறிருந்தது.

### 18.2 கணக்குகள் மற்றும் இணக்கக்கூற்றுக்கள் சம்பந்தமாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்புக்கள்

ஒதுக்கீட்டுக் கணக்குகள் மற்றும் இணக்கக்கூற்றுக்களை இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 உறுப்புரைகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், அரசாங்க நிதி மற்றும் நிருவாக பிரமாணங்களுக்கிணங்க பேணுதல், தயாரித்தல் மற்றும் நியாயபூர்வமாகச் சமர்ப்பித்தல் என்பன பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பாகும். மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயபூர்வமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாட்டைத் திட்டமிடுதல், அமுல்படுத்துதல் மற்றும் பராமரித்தல் போன்றன இப்பொறுப்பில் உள்ளடங்குகின்றன.

## 18.3 கணக்காய்வு அவதானிப்புக்கள்

2012 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறான நிதி அறிக்கைகள் மற்றும் ஏடுகளின் கருத்திட்ட முகாமைத்துவம் மற்றும் கண்காணிப்புத் திணைக்களத்தின் ஒதுக்கீட்டுக் கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் இந்த அறிக்கையின் (அ) தொடக்கம் (இ) வரையிலுமான பொதுவான அவதானிப்புக்கள் மற்றும் கீழேயுள்ள 18.4 தொடக்கம் 18.7 வரையுள்ள பந்திகளில் குறிப்பிடப்பட்ட பிரதான கணக்காய்வு அவதானிப்புக்கள் தவிர திருப்திகரமானதாக தயாரிக்கப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.

### (அ) பாதீட்டு முரண்கள்

15 செலவின விடயங்களின் ரூபா 33,744,400 கூட்டுத்தொகையான தேறிய நிதியேற்பாட்டில் ரூபா 29,719,141 கூட்டுத்தொகையான நிதிஏற்பாட்டைப் பயன்படுத்தியதன் பின்னர் ரூபா 4,025,259 தொகையான சேமிப்பு அவதானிக்கப்பட்டது. அந்த சேமிப்பு ஒவ்வொரு செலவின விடயத்திற்காகவும் ஒதுக்கப்பட்ட தேறிய ஏற்பாட்டில் 9 சதவீதத்திற்கும் 53 சதவீதத்திற்கும் இடையிலான சதவீதத்தைக் கொண்டிருந்தது. செலவின விடயங்களுக்காக மிகை ஏற்பாடுகள் ஒதுக்கப்பட்டமையினால் இந்த சேமிப்பு ஏற்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.

### (ஆ) எரிபொருள் மற்றும் மின்சாரச் செலவின முகாமைத்துவம்

எரிபொருள் மற்றும் மின்சார செலவினங்களுக்கான பாதிடப்பட்ட மதிப்பீட்டின் மூலம் ஒதுக்கப்பட்ட நிதி ஏற்பாட்டிற்குள் செலவின முகாமைத்துவத்தை செய்ய வேண்டியமையும் அதற்காக எவ்வித மேலதிக நிதியும் பெறப்பட முடியாதிருந்தமையும் நிதிப் பிரமாணம் 66 இன் மூலம் நிதி ஏற்பாடு மாற்றுதல் திறைசேரியினால் அங்கீகரிக்கப்படாதிருந்தமையும் 2012 பெப்ரவரி 16 ஆந் திகதிய 156 ஆம் இலக்க பாதீட்டு சுற்றுநிருபத்தின் ஆலோசனை வழங்கப்பட்டிருந்த போதிலும் அந்த ஆலோசனைகளை கவனத்திற் கொள்ளாது எரிபொருட் செலவினங்களுக்காக நிதிப் பிரமாணம் 66 இன் மூலம் ரூபா 590,000 தொகையான நிதியேற்பாடு மீளாய்வாண்டின் போது மாற்றப்பட்டிருந்தது.

**(இ) கட்டுநிதிக் கணக்கு**

எரிபொருள் பெற்றுக்கொள்ளும் போது அரசாங்கத்தின் கட்டளை பயன்படுத்தப்பட்டு எரிபொருள் பெறப்பட வேண்டியிருந்த போதிலும் அதற்கு முரணாக ரூபா 15,000 தொகையான எரிபொருள் கட்டுநிதி வழங்கப்பட்டு அதன் மூலம் எரிபொருள் பற்றுச்சீட்டு மீளளிப்புச் செய்யப்பட்டிருந்தது. 2012 சனவரி தொடக்கம் செப்தெம்பர் வரை இவ்வாறு மீளளிப்புச் செய்யப்பட்ட தொகை ரூபா 324,000 ஆக இருந்தது.

**18.4 நல்லாளுகையும் கணக்களிப்பொறுப்பும்**

**வருடாந்த செயலாற்றல் அறிக்கை**

2010 மார்ச் 10 ஆந் திகதிய பீஎப்/ஆர்/2/2/3/5(4) ஆம் இலக்க அரச நிதிப்பணிப்பாளர் நாயகத்தின் கடிதத்தில் குறிப்பிடப்பட்ட 2002 செப்தெம்பர் 12 ஆந் திகதிய மற்றும் 2004 பெப்ரவரி 20 ஆந் திகதிய 402 மற்றும் 402(1) ஆம் இலக்க அரச நிதிச் சுற்றுநிருபத்தின் பிரகாரம் திணைக்களத்தினால் தயாரிக்கப்பட வேண்டிய வருடாந்த செயலாற்றல் அறிக்கை நிதி ஆண்டு முடிவடைந்து 150 நாட்களுக்குள் தலைமை அதிபதிக்கான பிரதியுடன் பாராளுமன்றத்தில் முன்வைக்கப்படவேண்டிய போதிலும் மீளாய்வாண்டிற்குரிய செயலாற்றல் அறிக்கை 2013 யூலை 23 ஆந் திகதியே பாராளுமன்றத்தில் முன்வைக்கப்பட்டிருந்தது.

**18.5 இணங்காமைகள்**

**சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் என்பவற்றுடனான இணங்காமைகள்**

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாண ஏற்பாடுகள் என்பனவற்றுடன் இணங்காத சந்தர்ப்பங்கள் பகுப்பாய்வு செய்து கீழே தரப்படுகின்றன.

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | பெறுமதி | இணங்காமைகள் |
|---|---|---|
| | ரூபா | |
| (அ) நிதிப்பிரமாணம் | | |
| நிதிப்பிரமாணம் 1646 | | மாதாந்தப் பொழிப்பு மற்றும் நாளாந்த ஓட்ட அட்டவணை என்பன ஒவ்வொரு மாதமும் முடிவடைந்த பின்னர் அடுத்துவரும் மாதத்தின் 15 ஆந் திகதிக்கு முன்னர் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டி இருந்த போதிலும் திணைக்களத்திற்குச் சொந்தமான 11 வாகனங்களுக்குரிய நாளாந்த ஓட்ட அட்டவணை அவ்வாறு கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) பொது நிர்வாக சுற்றுநிருபம் | | |
| (i) 2007 ஆகஸ்ட் 24 ஆந் திகதிய 06/2006(iv) ஆம் இலக்க சுற்றுநிருபத்தின் 5 ஆம் பந்தி | 353,402 | உத்தியோகத்தர் கடமைக்காக வெளியே செல்லும் காலத்திற்காக அவரின் உணவு மற்றும் தங்குமிடம் தொடர்பாக இணைந்த செலவினங்களை தீர்த்துக் கொள்வதற்கு படி செலுத்தப்பட வேண்டி இருந்த போதிலும் அதற்கு முரணாக செயற்திட்ட கண்காணிப்பிற்குச் செல்வதற்காக ரூபா 3,000 தொடக்கம் ரூபா 40,000 வரை உப கட்டுநிதி வழங்கப்பட்டு உணவு, தங்குமிடம் மற்றும் எரிபொருளுக்கான எல்லை இன்றி செலவினங்கள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. |
| (ii) 2009 ஒக்டோபர் 21 ஆந் திகதிய 13/2008(iii) ஆம் இலக்க சுற்றுநிருபத்தின் 2 ஆம் பந்தி | | ஒரு உத்தியோகத்தர் ஓய்வுக்கு முன்னரான விடுமுறை பெற்ற காலத்தில் உத்தியோகபூர்வ வாகனத்தை பயன்படுத்துவதற்கோ அல்லது எரிபொருள் படிகளைப் பெற்றுக்கொள்வதற்கோ அல்லது சாரதியின் சேவையை பெற்றுக்கொள்வதற்கோ உரித்தற்று இருந்தமை |

| | | |
|---|---|---|
| | | குறிப்பிடப்பட்டு இருந்த போதிலும் அதற்கு முரணாக ஓய்வுக்கு முன்னரான விடுமுறை பெற்றுள்ள ஒரு பணிப்பாளரினால் 3 மாதங்களுக்காக உத்தியோகபூர்வ வாகனம் பயன்படுத்தப்பட்டு சாரதியின் சேவை மற்றும் ரூபா 57,540 கூட்டுத்தொகையான எரிபொருள் படியும் வழங்கப்பட்டிருந்தன. |
| (இ) | 2006 இன் 12 ஆம் இலக்க முத்திரைக் கட்டண (விசேட ஏற்பாடுகள்) அதிகாரச் சட்டம் | 11 சந்தர்ப்பங்களின் போது ரூபா 706,322 கூட்டுதொகைக்காக முத்திரைக் கட்டணம் அறவிடப்பட்டிருக்கவில்லை. |

## 18.6 செயலாற்றல்

2012 இன் வருடாந்த பாதீட்டு மதிப்பீடு / செயல் நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் திணைக்களத்தின் முன்னேற்றம் தொடர்பான அவதானிப்புக்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

**போதிய அளவில் நிறைவேற்றப்படாத பிரதான செயற்பாடுகள்**

திணைக்களத்தின் பிரதான செயற்பாடுகள் போதிய அளவில் நிறைவேற்றப்படாதிருந்ததுடன் அவ்வாறு அவதானிக்கப்பட்ட சந்தர்ப்பங்களின் சில கீழே காண்பிக்கப்படுகின்றன.

(அ) வெளிநாட்டு நிதியத்தின் கீழ் அமுல்படுத்தப்படுகின்ற செயற்திட்டங்களின் செயற்பாட்டு நடவடிக்கைகளின் மேற்பார்வை, வெளிநாட்டு நிதியத்தின் பாவனையில் அமுல்படுத்தப்படுகின்ற அபிவிருத்தி செயற்திட்டம் மற்றும் நிகழ்ச்சித் திட்டங்களில் செயல்முன்னேற்றத்தை அதிகரித்தல் மற்றும் வெளிநாட்டு நிதியத்தை பயன்படுத்தும் நலிவுகளை மாற்றியமைப்பதற்குத் தேவையான நடவடிக்கைகளை எடுத்தலும் திணைக்களத்தின் நோக்கமாக இருந்தது. எவ்வாறாயினும் செயற்திட்டத்தின் காலம் முடிவடையும் தறுவாயில் இருந்த போது ரூபா 14,799 மில்லியன் பெறுமதியினை 8 செயற்திட்டங்களின் வேலை ஆரம்பிக்கப்படாதிருந்ததுடன் செயற்திட்டக்காலம் முடிவடையும் தறுவாயிலிருந்தும் மொத்த மதிப்பிடப்பட்ட கிரயத்தில் 0.09 சதவீதம் தொடக்கம்

49 சதவீதத்திற்கிடையிலான செலவினங்கள் மேற்கொள்ளப்பட்ட 46 செயற்திட்டங்கள் காணப்பட்டன.

(ஆ) பிரதேச சுற்றுலாக்களை ஒழுங்கமைத்தல் செயற்திட்ட மதிப்பீட்டில் ஒரு அங்கமாக இருந்த போதிலும் 2012 ஆம் ஆண்டின் போது அமுல்படுத்தப்பட்ட ரூபா 50 மில்லியனுக்கு மேற்பட்ட 527 மொத்த செயற்திட்டங்களில் 9 இல் மாத்திரம் களச் சுற்றுலா மேற்கொள்ளப்பட்டிருந்தது.

(இ) அபிவிருத்தி செயற்திட்டங்களில் காலாண்டு நிலைமை அறிக்கை மற்றும் வருட இறுதியில் நிலைமை அறிக்கை தயாரிக்கப்பட வேண்டி இருந்த போதிலும் அந்த அறிக்கை தயாரிக்கப்பட்டிருக்கவில்லை..

## 18.7 மனிதவள முகாமைத்துவம்

**அங்கீகரித்த பதவியணியும் உள்ளபடியான பதவியணியும்**

2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பதவியணி மீதான நிலை பின்வருமாறு.

| | ஊழியர் வகை | அங்கீகரித்த பதவியணி | உள்ளபடியான பதவியணி | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| (அ) | சிரேஷ்ட நிலை | 34 | 26 | 08 |
| (ஆ) | மூன்றாம் நிலை | 01 | 01 | - |
| (இ) | இரண்டாம் நிலை | 29 | 19 | 10 |
| (ஈ) | ஆரம்ப நிலை | 18 | 16 | 02 |
| | மொத்தம் | 82 | 62 | 20 |

மீளாய்வாண்டின் இறுதி வரையில் 20 வெற்றிடங்களை நிரப்புவதற்கு திணைக்களத்தினால் முடியாதிருந்தது.

## 19. தலைப்பு 296 –இறக்குமதி, ஏற்றுமதிக் கட்டுப்பாட்டுத் திணைக்களம்

### 19.1 கணக்காய்வின் நோக்கெல்லை

இறக்குமதி, ஏற்றுமதிக் கட்டுப்பாட்டுத் திணைக்களத்தின் 2012 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிஅறிக்கைகள், இணக்கக்கூற்றுகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய அறிக்கைகளை உள்ளடக்கிய ஒதுக்கீட்டுக் கணக்குகள் மீதான கணக்காய்வு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2013 திசெம்பர் 12 ஆந் திகதி திணைக்களத்தின் தலைவருக்கு அனுப்பிவைக்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக்கூற்றுக்கள் சம்பந்தமான கணக்காய்வு அவதானிப்புக்கள், கருத்துரைகள் மற்றும் கண்டுபிடிப்புக்கள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகளினதும் இணக்கக்கூற்றுக்களினதும் மீளாய்வின் அடிப்படையிலும் கொடுக்கல் வாங்கல்களின் மாதிரிகளினது போதியளவு செவ்வை பார்த்தலின் அடிப்படையிலும் எழுந்தனவேயாகும். அவ்வாறான மீளாய்வினதும் செவ்வை பார்த்தலினதும் நோக்கெல்லையும் அளவும் எனக்குக் கிடைப்பதற்குள்ள பதவியணியினர், ஏனைய மூலவளங்கள், நேரம் என்பவற்றிற்கமைய இயலுமானளவு விரிவான கணக்காய்வை உள்ளடக்கக் கூடியவாறிருந்தது.

### 19.2 கணக்குகள் மற்றும் இணக்கக்கூற்றுக்கள் சம்பந்தமாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்புக்கள்

ஒதுக்கீட்டுக் கணக்குகள் மற்றும் இணக்கக்கூற்றுக்களை இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 உறுப்புரைகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், அரசாங்க நிதி மற்றும் நிருவாக பிரமாணங்களுக்கிணங்க பேணுதல், தயாரித்தல் மற்றும் நியாயபூர்வமாகச் சமர்ப்பித்தல் என்பன பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பாகும். மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயபூர்வமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாட்டைத் திட்டமிடுதல், அமுல்படுத்துதல் மற்றும் பராமரித்தல் போன்றன இப்பொறுப்பில் உள்ளடங்குகின்றன.

## 19.3 கணக்காய்வு அவதானிப்புக்கள்

2012 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறான நிதி அறிக்கைகள் மற்றும் ஏடுகளின் இறக்குமதி ஏற்றுமதிக் கட்டுப்பாட்டுத் திணைக்களத்தின் ஒதுக்கீட்டுக் கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் இந்த அறிக்கையின் (அ) தொடக்கம் (இ) வரையிலுள்ள பொதுவான அவதானிப்புக்கள் மற்றும் கீழேயுள்ள 19.4 தொடக்கம் 19.7 வரையான பந்திகளில் குறிப்பிடப்பட்ட பிரதான கணக்காய்வு அவதானிப்புக்கள் தவிர திருப்திகரமானதாக தயாரிக்கப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.

### (அ) பாதீட்டு முரண்கள்

11 செலவின விடயங்களின் ரூபா 8,178,372 கூட்டுத்தொகையான தேறிய நிதியேற்பாட்டில் ரூபா 6,783,839 கூட்டுத்தொகையான நிதிஏற்பாட்டைப் பயன்படுத்தியதன் பின்னர் ரூபா 1,394,533 தொகையான சேமிப்பு அவதானிக்கப்பட்டது. அந்த சேமிப்பு ஒவ்வொரு செலவின விடயத்திற்காகவும் ஒதுக்கப்பட்ட தேறிய ஏற்பாட்டில் 10 சதவீதத்திற்கும் 36 சதவீதத்திற்கும் இடையிலான சதவீதத்தைக் கொண்டிருந்தது. செலவின விடயங்களுக்காக மிகை ஏற்பாடுகள் ஒதுக்கப்பட்டமையினால் இந்த சேமிப்பு ஏற்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.

### (ஆ) வருமானக் கணக்கு

வருமானக் குறியீடு – 10.01.03.00 - இறக்குமதி மற்றும் ஏற்றுமதி அனுமதிப்பத்திரக் கட்டணம்

மீளாய்வாண்டில் ரூபா 280,000,000 தொகையான ஆரம்ப வருமான மதிப்பீடு ரூபா 450,000,000 ஆக திருத்தப்பட்டிருந்த போதிலும் ஆண்டின் போது சேகரிக்கப்பட்ட தேறிய வருமானம் ரூபா 512,671,434 தொகை அதாவது ஆரம்ப மதிப்பீட்டு வருமானத்தில் 183 சதவீதமும் திருத்தப்பட்ட மதிப்பீட்டு வருமானத்தில் 114 சதவீதமும் ஆக இருந்தது. அதன் பிரகாரம் மதிப்பீடு செய்தல் எவ்வித ஆய்வுடனும் மேற்கொள்ளப்படாதிருந்தமை அவதானிக்கப்பட்டது.

**(இ) அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு தொடர்பான இணக்கக் கூற்று**

திணைக்களத்தினால் உத்தியோகத்தர்களுக்கு கடன் வழங்கும் போது பின்பற்றப்பட வேண்டிய ஏற்பாடுகள் பின்பற்றப்படாது ரூபா 275,175 தொகையான கடன் செலுத்தப்பட்டிருந்தது.

**19.4 நல்லாளுகையும் கணக்களிப்பொறுப்பும்**

**19.4.1 கூட்டிணைந்த திட்டம்**

2010 மார்ச் 10 ஆந் திகதிய பீஎப்/ஆர்/2/2/3/5(4) ஆம் இலக்க அரச நிதிப்பணிப்பாளர் நாயகத்தின் கடிதத்தின் பிரகாரம் 2010 ஆம் ஆண்டு தொடக்கம் ஆகக் குறைந்தது தொடர்ந்து வரும் 03 வருடங்களுக்கான கூட்டிணைந்த திட்டம் திணைக்களத்தினால் ஆண்டின் ஆரம்பத்தில் தயாரிக்கப்பட வேண்டிய போதிலும் அவ்வாறு கூட்டிணைந்த திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

**19.4.2 உள்ளகக் கணக்காய்வு**

முகாமைத்துவ கணக்காய்வுத் திணைக்களத்தினால் உள்ளகக் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன் 4 காலாண்டிற்குரிய 4 உள்ளகக் கணக்காய்வு அறிக்கை வழங்கப்பட்டிருக்கவில்லை.

**19.4.3 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுவினை அமுல்படுத்துதல்**

ஆகக் குறைந்தது காலாண்டிற்கு ஒரு தடவை கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுவினைக் கூட்டவேண்டியிருந்த போதிலும் 2012 ஆம் ஆண்டின் போது 03 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டம் மாத்திரம் நடாத்தப்பட்டிருந்தன.

**19.5 செயலாற்றல்**

திணைக்களத்தினால் வழங்கப்பட்ட செயலாற்றல் அறிக்கையின் பிரகாரம் 2012 ஆம் ஆண்டின் போது நிறைவேற்றப்பட்ட செயற்பாடுகள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

(அ) அனுமதிப்பத்திரம் விநியோகித்தல்

ஆண்டின் போது 05 அடிப்படைத் தொகுதிகளின் கீழ் பொருட்களை இறக்குமதி செய்வதற்கு வழங்கப்பட்ட மொத்த அனுமதிப்பத்திரங்களின் எண்ணிக்கை 11,598 ஆகும்.

(ஆ) இறக்குமதி மற்றும் ஏற்றுமதி தொடர்பாக அரசாங்கத்தின் கொள்கைகளை அமுல்படுத்துவதற்குச் தேவையான பிரமாணங்களை பகிரங்கப்படுத்தல்

இறக்குமதி மற்றும் ஏற்றுமதி தொடர்பான அரசாங்கத்தின் புதிய கொள்கைகளின் அடிப்படையில் புதிய பிரமாணங்களை பிரசுரிப்பதற்காக 04 வர்த்தமானி அறிவித்தல் பிரசுரிக்கப்பட்டிருந்தது.

**19.6 முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள்**

திணைக்களத்தினால் மேற்கொள்ளப்பட்ட சில கொடுக்கல் வாங்கல்கள் முறையற்றதாக இருந்தது. வெகுமதித் திட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட இறக்குமதி அனுமதிப்பத்திரத்தின் அடிப்படையில் மதத் தலங்களுக்காக இறக்குமதி செய்யப்பட்ட வாகனங்களின் நிபந்தனைகள் முறையற்ற வகையில் அகற்றப்பட்டமையின் காரணமாக அந்த உத்தேசத் திட்டத்தின் நோக்கத்தை நிறைவேற்றாமை வணிக நோக்கத்தில் வாகனங்களை இறக்குமதி செய்வோர்களுக்கு தவறான முறையில் மேற்கொள்வதற்கு அதன் மூலம் இடமளிக்கப்பட்டிருந்தது. அவதானிக்கப்பட்ட அவ்வாறான சில சந்தர்ப்பங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

(அ) அனுமதிப்பத்திர நலனாளிகளின் கோரிக்கையின் அடிப்படையில் கடன் வசதிகளை பெற்றுக்கொள்வதற்காக வாகனங்களை வங்கிக்கு அடகுவைப்பதற்காக “5 வருடங்கள் வரை விற்பனை செய்தல் மற்றும் கையளித்தல் முடியாது” என்ற நிபந்தனையில் திணைக்களம் 27 சந்தர்ப்பங்களின் போது விலகி இருந்த போதிலும் 9 சந்தர்ப்பங்களின் போது வங்கிக்கு அடகுவைக்காமல் வேறொருவருக்கு வாகனங்களின் உரிமை கையளிக்கப்பட்டிருந்தது.

(ஆ) வாகன அனுமதிப்பத்திரங்களில் “5 வருடங்கள் வரை விற்பனை செய்தல் மற்றும் கையளித்தல் முடியாது” என்ற நிபந்தனை காணப்பட்ட போதும் 34

சந்தர்ப்பங்களின் போது 5 வருடங்கள் கடப்பதற்கு முன்னர் வேறு தரப்பினர்களுக்கு வாகனங்களின் உரிமை கையளிக்கப்பட்டிருந்தது.

(இ) முதலாவது பதிவு செய்தலின் போது அனுமதிப்பத்திரக்காரரின் பெயரில் அன்றி ஏனையவர்களின் பெயரில் 159 வாகனங்கள் பதிவு செய்யப்பட்டிருந்தன.

(ஈ) வெகுமதி உத்தேசத் திட்டத்தின் கீழ் இறக்குமதி செய்யப்பட்ட 115 வாகனங்கள் 2012 ஒக்டோபர் 19 திகதி வரையிலும் பதிவு செய்யப்பட்டிருக்கவில்லை.

(உ) வெகுமதி உத்தேசத்திட்டத்தின் பிரகாரம் 2011 சனவரி 01 ஆந் திகதி தொடக்கம் 2012 செப்தெம்பர் 14 ஆந் திகதி வரையான காலப்பகுதியில் கொண்டுவரப்பட்ட 589 வாகனங்களின் பதிவு செய்யப்பட்ட முறையினை பரிசோதனை செய்த போது உள்ளபடியாக விகாரை செயற்பாட்டு சங்கத்தின் பெயரில் பதிவு செய்யப்பட்ட வாகனங்களின் எண்ணிக்கை 254 அதாவது 43 சதவீதம் மாத்திரம் இருந்ததுடன் அது பழைய வாகனங்களை கொண்டுவருதலை ஊக்கப்படுத்தாமை என்ற அரசாங்கத்தின் நிகழ்கால கொள்கையும் முழுமையாக புறக்கணிக்கப்பட்டிருந்தது.

**19.7 மனிதவள முகாமைத்துவம்**

**அங்கீகரித்த பதவியணியும் உள்ளபடியான பதவியணியும்**

2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பதவியணி மீதான நிலை பின்வருமாறு.

| | ஊழியர் வகை | அங்கீகரித்த பதவியணி | உள்ளபடியான பதவியணி | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| (அ) | சிரேஷ்ட நிலை | 08 | 07 | 01 |
| (ஆ) | மூன்றாம் நிலை | 02 | 01 | 01 |
| (இ) | இரண்டாம் நிலை | 60 | 45 | 15 |
| (ஈ) | ஆரம்ப நிலை | 19 | 19 | - |
| | மொத்தம் | 89 | 72 | 17 |

மீளாய்வாண்டின் இறுதி வரையில் 17 வெற்றிடங்களை நிரப்புவதற்கு திணைக்களத்தினால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 20. தலைப்பு 323 – சட்ட அலுவல்கள் திணைக்களம்

### 20.1 கணக்காய்வின் நோக்கெல்லை

சட்ட அலுவல்கள் திணைக்களத்தின் 2012 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிஅறிக்கைகள், இணக்கக்கூற்றுகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய அறிக்கைகளை உள்ளடக்கிய ஒதுக்கீட்டுக் கணக்குகள் மீதான கணக்காய்வு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2013 நவம்பர் 06 ஆந் திகதி திணைக்களத்தின் தலைவருக்கு அனுப்பிவைக்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக்கூற்றுக்கள் சம்பந்தமான கணக்காய்வு அவதானிப்புக்கள், கருத்துரைகள் மற்றும் கண்டுபிடிப்புக்கள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகளினதும் இணக்கக்கூற்றுக்களினதும் மீளாய்வின் அடிப்படையிலும் கொடுக்கல் வாங்கல்களின் மாதிரிகளினது போதியளவு செவ்வை பார்த்தலின் அடிப்படையிலும் எழுந்தனவேயாகும். அவ்வாறான மீளாய்வினதும் செவ்வை பார்த்தலினதும் நோக்கெல்லையும் அளவும் எனக்குக் கிடைப்பதற்குள்ள பதவியணியினர், ஏனைய மூலவளங்கள், நேரம் என்பவற்றிற்கமைய இயலுமானளவு விரிவான கணக்காய்வை உள்ளடக்கக் கூடியவாறிருந்தது.

### 20.2 கணக்குகள் மற்றும் இணக்கக்கூற்றுக்கள் சம்பந்தமாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்புக்கள்

ஒதுக்கீட்டுக் கணக்குகள் மற்றும் இணக்கக்கூற்றுக்களை இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 உறுப்புரைகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், அரசாங்க நிதி மற்றும் நிருவாக பிரமாணங்களுக்கிணங்க பேணுதல், தயாரித்தல் மற்றும் நியாயபூர்வமாகச் சமர்ப்பித்தல் என்பன பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பாகும். மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயபூர்வமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாட்டைத் திட்டமிடுதல், அமுல்படுத்துதல் மற்றும் பராமரித்தல் போன்றன இப்பொறுப்பில் உள்ளடங்குகின்றன.

## 20.3 கணக்காய்வு அவதானிப்புக்கள்

2012 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறான நிதி அறிக்கைகள் மற்றும் ஏடுகளின் சட்ட அலுவல்கள் திணைக்களத்தின் ஒதுக்கீட்டுக் கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் இந்த அறிக்கையின் (அ) தொடக்கம் (இ) வரையிலுமான பொதுவான அவதானிப்புக்கள் மற்றும் கீழேயுள்ள 20.4 தொக்கம் 20.8 வரையிலான பந்திகளில் குறிப்பிடப்பட்ட பிரதான கணக்காய்வு அவதானிப்புக்கள் தவிர திருப்திகரமானதாக தயாரிக்கப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.

### (அ) பாதீட்டு முரண்கள்

05 செலவின விடயங்களின் ரூபா 1,246,600 கூட்டுத்தொகையான தேறிய நிதியேற்பாட்டில் ரூபா 799,968 கூட்டுத்தொகையான நிதிஏற்பாட்டைப் பயன்படுத்தியதன் பின்னர் ரூபா 446,632 தொகையான சேமிப்பு அவதானிக்கப்பட்டது. அந்த சேமிப்பு ஒவ்வொரு செலவின விடயத்திற்காகவும் ஒதுக்கப்பட்ட தேறிய ஏற்பாட்டில் 14 சதவீதத்திற்கும் 75 சதவீதத்திற்கும் இடையிலான சதவீதத்தைக் கொண்டிருந்தது. செலவின விடயங்களுக்காக மிகை ஏற்பாடுகள் ஒதுக்கப்பட்டமையினால் இந்த சேமிப்பு ஏற்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.

### (ஆ) ஒதுக்கீட்டுக் கணக்கில் குறைபாடு

ஒதுக்கீட்டுக் கணக்கில் டீ.ஜீ.எஸ்.ஏ. 5 இல் தேறிய நிதியேற்பாடுகளின் கூட்டுத்தொகை ரூபா 11,262,000 ஆக இருந்த போதிலும் அது ரூபா 11,626,000 ஆகக் காண்பிக்கப்பட்டிருந்தது.

### (இ) அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு தொடர்பான இணக்கக் கூற்று

கடன் வழங்குதல் தொடர்பான ஏற்பாடுகளின் பிரகாரம் பேணப்பட வேண்டிய விழா முற்பணப் பதிவேடு, விசேட முற்பணப் பதிவேடு, கடன்பட்டோர் பதிவேடு, கடன்கொடுத்தோர் பதிவேடு மற்றும் கட்டுப்பாட்டுக் கணக்குகள் பேணப்பட்டிருக்கவில்லை.

**20.4 நல்லாளுகையும் கணக்களிப்பொறுப்பும்**

**வருடாந்த செயலாற்றல் அறிக்கை**

சகல அமைச்சுகளினதும் செயலாளர்கள், மாகாணசபைகளின் பிரதான செயலாளர்கள், திணைக்களத் தலைவர்கள், மாவட்டச் செயலாளர்கள் மற்றும் உள்ளூராட்சி நிறுவனங்களின் தலைவர்கள் என்போருக்கு விலாசமிடப்பட்ட 2010 மார்ச் 10 ஆந் திகதிய பீஎப்/ஆர்/2/2/3/5(4) ஆம் இலக்க அரச பொது நிதிப்பணிப்பாளர் நாயகத்தின் கடிதத்தில் குறிப்பிடப்பட்ட 2002 செப்தெம்பர் 12 ஆந் திகதிய மற்றும் 2004 பெப்ரவரி 20 ஆந் திகதிய 402 மற்றும் 402(1) ஆம் இலக்க அரச நிதிச் சுற்றுநிருபத்தின் பிரகாரம் திணைக்களத்தினால் தயாரிக்கப்பட வேண்டிய வருடாந்த செயலாற்றல் அறிக்கை நிதி ஆண்டு முடிவடைந்து 150 நாட்களுக்குள் தலைமை அதிபதிக்கான பிரதியுடன் பாராளுமன்றத்தில் முன்வைக்கப்படவேண்டிய போதிலும் மீளாய்வாண்டிற்குரிய செயலாற்றல் அறிக்கை 2013 ஒக்தோபர் 09 ஆந் திகதியே பாராளுமன்றத்தில் முன்வைக்கப்பட்டிருந்தது.

**20.5 சொத்துக்கள் முகாமைத்துவம்**

ஏனைய திணைக்களம் மற்றும் செயற்திட்டத்தின் மூலம் கிடைத்த 25 சொத்து விடயங்கள், நிலையான சொத்துப் பதிவேட்டில் உள்ளடக்கப்பட்டிருந்த போதிலும் அவைகளின் பெறுமதி காண்பிக்கப்பட்டிருக்கவில்லை. அந்த சொத்துக்கள் நடைமுறையல்லாச் சொத்துக்களின் அசைவுகள் தொடர்பான அறிக்கையிலும் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

**20.6 இணங்காமைகள்**

**சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் என்பவற்றுடனான இணங்காமைகள்**

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாண ஏற்பாடுகள் என்பனவற்றுடன் இணங்காத சந்தர்ப்பங்கள் பகுப்பாய்வு செய்து கீழே தரப்படுகின்றன.

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமை |
|---|---|
| **தாபன விதிக்கோவை** | |
| 11 ஆவது அத்தியாயத்தின் 2.1 ஆம் பிரிவு | பணிப்பாளர்(சட்டம்), சிரேஷ்ட சட்டப் பகுப்பாய்வாளர், சட்டப்பகுப்பாய்வாளர் போன்ற பதவிகளுக்காக ஆட்சேர்ப்பு நடைமுறைகள் பின்பற்றப்பட்டிருக்கவில்லை. |

## 20.7 செயலாற்றல்

2012 இன் வருடாந்த பாதீட்டு மதிப்பீடு / செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் திணைக்களத்தின் செயல்முன்னேற்றம் தொடர்பான அவதானிப்புக்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

### போதியளவில் நிறைவேற்றப்படாத பிரதான செயற்பாடுகள்

திணைக்களம் பிரதான செயற்பாடுகளை போதியளவில் நிறைவேற்றாதிருந்ததுடன் அவ்வாறு அவதானிக்கப்பட்ட சில சந்தர்ப்பங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

### (அ) வழக்கு நடவடிக்கைகள் தொடர்பான செயற்பொறுப்புக்கள்

2012 திசெம்பர் 31 ஆந் திகதி வரையில் வழக்கு நடவடிக்கைகளுக்காக திணைக்களத்திற்குக் கிடைத்துள்ள வழக்கு நடவடிக்கைககள் தொடர்பான விபரம் பின்வருமாறு இருந்தது.

| விபரம் | கிடைத்துள்ள வழக்குகளின் எண்ணிக்கை | முடிவடைந்த வழக்குகளின் எண்ணிக்கை | தற்போது நடைபெறுகின்ற வழக்குகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| மேல் மன்றம் | 46 | 11 | 35 |
| மேன்முறையீட்டு நீதிமன்றம் | 29 | 04 | 25 |
| உயர் நீதிமன்றம் | 03 | 01 | 02 |

| | | | |
|---|---|---|---|
| மாவட்ட நீதிமன்றம் | 02 | - | 02 |
| மனித உரிமைகள் ஆணைக்குழு | 04 | 01 | 03 |
| | ---------- | ------------- | ------------- |
| மொத்த | 84 | 17 | 67 |
| | === | === | === |

2012 திசெம்பர் 31 ஆந் திகதி வரையில் 84 வழக்கு நடவடிக்கைகள் திணைக்களத்திற்குக் கிடைத்துள்ள போதிலும் 2012 திசெம்பர் 31 ஆந் திகதி உள்ளவாறு 17 வழக்கு நடவடிக்கைகள் மாத்திரமே முடிவடைந்திருந்தது.

**(ஆ) சட்ட ஆலோசனை வழங்குதல்**

2012 திசெம்பர் 31 ஆந் திகதி வரையில் சட்ட ஆலோசனை பெறுவதற்கு சட்ட அலுவல்கள் திணைக்களத்தின் சிபார்சுகளுக்காக கிடைத்துள்ள கோவைகளின் எண்ணிக்கை (உடன்படிக்கை தவிர) 10 ஆக இருந்ததுடன் வேலை நடவடிக்கைகள் முடிவடைந்துள்ள கோவைகளின் எண்ணிக்கை 07 ஆகும். அதன் பிரகாரம் 03 கோவைகளின் வேலை நடவடிக்கைகள் முடிவடைந்திருக்கவில்லை.

**(இ) உடன்படிக்கை மற்றும் இணைந்த செயற்பாடுகள்**

நிதி, திட்டமிடல் அமைச்சின் கீழுள்ள திணைக்களத்தின் ஊடாக வெளிநாட்டு அரசாங்கம் மற்றும் இரு தரப்பினர் மற்றும் வெளித்தரப்பினர் அமைப்பின் மூலம் நாட்டின் அபிவிருத்தியைக் கருத்திற் கொண்டு பல்வேறு செயற்திட்டங்கள் மற்றும் நிகழ்ச்சித் திட்டங்களுக்காக கிடைக்கின்ற கடன் பணம் மற்றும் உதவிகளில் 2012 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் கிடைத்துள்ள உடன்படிக்கைகளின் செயல்முன்னேற்றம் தொடர்பான விபரம் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| | **உடன்படிக்கை தொடர்பாக அனுப்பப்பட்டுள்ள கோவைகளின் எண்ணிக்கை** | **வேலை நடவடிக்கைகள் நடை பெற்றுக் கொண்டிருக்கின்ற கோவைகளின் எண்ணிக்கை** | **வேலை முடிவடைந்த கோவைகளின் எண்ணிக்கை** |
|---|---|---|---|
| வெளிநாட்டு வளங்கள் திணைக்களம் | 74 | 53 | 21 |
| ஏனைய திணைக்களங்கள் | 03 | 02 | 01 |
| மொத்தம் | 77 | 55 | 22 |

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) வெளிநாட்டு வளங்கள் திணைக்களத்திலிருந்து உடன்படிக்கை தொடர்பாக அனுப்பப்பட்டுள்ள 74 கோவைகளில் 21 கோவைகளில் வேலை முடிவடைந்திருந்த போதிலும் 53 கோவைகளில் வேலை முடிவடையாதிருந்ததுடன் அது மொத்த அளவில் 71 சதவீதமாகும்.

(ii) அவ்வாறு ஏனைய திணைக்களங்களிலிருந்து கிடைத்திருந்த 03 கோவைகளில் 01 கோவையின் செயற்பாடுகள் முடிவடைந்திருந்ததுடன் 02 கோவைகளின் செயற்பாடுகள் முடிவடைந்திருக்கவில்லை.

## 20.8 மனிதவள முகாமைத்துவம்

### (அ) அங்கீகரித்த பதவியணியும் உள்ளபடியான பதவியணியும்

2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பதவியணி மீதான நிலை பின்வருமாறு.

| | ஊழியர் வகை | அங்கீரித்த பதவியணி | உள்ளபடியான பதவியணி | வெற்றிடங்களின் எண்ணிக்கை | மிகைககளின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|
| (அ) | சிரேஷ்ட நிலை | 15 | 08 | 07 | - |
| (ஆ) | இரண்டாம் நிலை | 05 | 05 | - | - |
| (இ) | ஆரம்ப நிலை | 06 | 02 | 04 | - |
| (ஈ) | ஏனையவை(அமைய /தற்காலிக/ஒப்பந்த அடிப்படை) | - | 01 | - | 01 |
| | மொத்தம் | 26 | 16 | 11 | 1 |

### (ஆ) பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) மீளாய்வாண்டின் இறுதி வரையில் 11 வெற்றிடங்களை நிரப்புவதற்கு திணைக்களத்தினால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) சேர்க்கப்பட்ட மேலதிக ஊழியர் எண்ணிக்கை தொடர்பாக முறையான அங்கீகாரம் பெற்றுக்கொள்வதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 21. தலைப்பு 324 – முகாமைத்துவ கணக்காய்வுத் திணைக்களம்

### 21.1 கணக்காய்வின் நோக்கெல்லை

முகாமைத்துவ கணக்காய்வுத் திணைக்களத்தின் 2012 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிஅறிக்கைகள், இணக்கக்கூற்றுகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய அறிக்கைகளை உள்ளடக்கிய ஒதுக்கீட்டுக் கணக்குகள் மீதான கணக்காய்வு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2013 நவம்பர் 08 ஆந் திகதி திணைக்களத்தின் தலைவருக்கு அனுப்பிவைக்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக்கூற்றுக்கள் சம்பந்தமான கணக்காய்வு அவதானிப்புக்கள், கருத்துரைகள் மற்றும் கண்டுபிடிப்புக்கள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகளினதும் இணக்கக்கூற்றுக்களினதும் மீளாய்வின் அடிப்படையிலும் கொடுக்கல் வாங்கல்களின் மாதிரிகளினது போதியளவு செவ்வை பார்த்தலின் அடிப்படையிலும் எழுந்தனவேயாகும். அவ்வாறான மீளாய்வினதும் செவ்வை பார்த்தலினதும் நோக்கெல்லையும் அளவும் எனக்குக் கிடைப்பதற்குள்ள பதவியணியினர், ஏனைய மூலவளங்கள், நேரம் என்பவற்றிற்கமைய இயலுமானளவு விரிவான கணக்காய்வை உள்ளடக்கக் கூடியவாறிருந்தது.

### 21.2 கணக்குகள் மற்றும் இணக்கக்கூற்றுக்கள் சம்பந்தமாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்புக்கள்

ஒதுக்கீட்டுக் கணக்குகள் மற்றும் இணக்கக்கூற்றுக்களை இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 உறுப்புரைகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், அரசாங்க நிதி மற்றும் நிருவாக பிரமாணங்களுக்கிணங்க பேணுதல், தயாரித்தல் மற்றும் நியாயபூர்வமாகச் சமர்ப்பித்தல் என்பன பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பாகும். மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயபூர்வமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாட்டைத் திட்டமிடுதல், அமுல்படுத்துதல் மற்றும் பராமரித்தல் போன்றன இப்பொறுப்பில் உள்ளடங்குகின்றன.

## 21.3 கணக்காய்வு அவதானிப்புக்கள்

2012 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறான நிதி அறிக்கைகள் மற்றும் ஏடுகளின் முகாமைத்துவ கணக்காய்வுத் திணைக்களத்தின் ஒதுக்கீட்டுக் கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் இந்த அறிக்கையின் (அ) தொடக்கம் (இ) வரையிலுமான பொதுவான அவதானிப்புக்கள் மற்றும் கீழேயுள்ள 21.4 தொக்கம் 21.7 வரையிலான பந்திகளில் குறிப்பிடப்பட்ட பிரதான கணக்காய்வு அவதானிப்புக்கள் தவிர திருப்திகரமானதாக தயாரிக்கப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.

### (அ) பதிவேடுகள் மற்றும் புத்தகங்களைப் பேணுதல்

திணைக்களத்தினால் கீழே காட்டப்படுகின்ற பதிடேுகள் நாளதுவரையாகப் பேணப்பட்டிருக்கவில்லை.

| | உரிய பிரமாணங்கள் | பதிவேடுகளின் வகை |
|---|---|---|
| (i) | 1978 திசெம்பர் 19 ஆந் திகதிய 842 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கை | நிலையான சொத்துப் பதிவேடு |
| (ii) | 2002 நவம்பர் 28 ஆந் திகதிய ஐஏஐ/2002/02 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கை | கணனி மற்றும் கணனி உதிரிப்பாகங்கள் தொடர்பான நிலையான சொத்துப் பதிவேடு |

### (ஆ) பாதீட்டு முரண்கள்

ஒரு செலவின விடயத்தின் கீழ் ஏற்பாடு செய்யப்பட்ட ரூபா 50,000 தொகையான மொத்த மூலதன நிதியேற்பாடும் சேமிக்கப்பட்டிருந்தது.

### (இ) அரச உத்தியோகத்தர்களின் முற்பணக் கணக்குகள் தொடர்பான இணக்கக்கூற்றுக்கள்

(i) 2004 ஒக்தோபர் 11 ஆந் திகதிய 118 ஆம் இலக்க சுற்றுநிருபத்தின் 1.1.7 ஆம் பந்தியின் பிரகாரம் மாற்றலாகி வந்த உத்தியோகத்தர்களின் கடன்மீதி 02 மாத காலத்திற்குள் தீர்க்கப்பட வேண்டியிருந்த போதிலும் இரண்டு உத்தியோகத்தர்களின் ரூபா 188,850 கூட்டுத்தொகையான

கடன்மீதி 03 தொடக்கம் 08 மாதங்கள் வவைரயான காலதாமதத்துடன் தீர்க்கப்பட்டிருந்தது.

(ii) மேற்கூறப்பட்ட சுற்றுநிருபத்தின் பிரகாரம் மாற்றலாகிச் சென்ற உத்தியோகத்தர்களின் கடன்மீதி 03 மாதங்களுக்குள் தீர்க்கப்பட வேண்டியிருந்த போதிலும் இடமாற்றலாகிச் சென்ற உத்தியோகத்தர்களின் ரூபா 175,088 தொகையான கடன் மீதி 05 மாத தாமதத்துடன் தீர்க்கப்பட்டிருந்தது.

## 21.4 நல்லாளுகையும் கணக்களிப்பொறுப்பும்

### வருடாந்த செயலாற்றல் அறிக்கை

2010 மார்ச் 10 ஆந் திகதிய பீஎப்/ஆர்/2/2/3/5(4) ஆம் இலக்க அரச பொது நிதிப்பணிப்பாளர் நாயகத்தின் கடிதத்தில் குறிப்பிடப்பட்ட 2002 செப்தெம்பர் 12 ஆந் திகதிய மற்றும் 2004 பெப்ரவரி 20 ஆந் திகதிய 402 மற்றும் 402(1) ஆம் இலக்க அரச நிதிச் சுற்றுநிருபத்தின் பிரகாரம் திணைக்களத்தினால் தயாரிக்கப்பட வேண்டிய வருடாந்த செயலாற்றல் அறிக்கை நிதி ஆண்டு முடிவடைந்து 150 நாட்களுக்குள் தலைமை அதிபதிக்கான பிரதியுடன் பாராளுமன்றத்தில் முன்வைக்கப்படவேண்டிய போதிலும் மீளாய்வாண்டிற்குரிய செயலாற்றல் அறிக்கை 2013 யூன் 18 ஆந் திகதியே பாராளுமன்றத்தில் முன்வைக்கப்பட்டிருந்தது.

## 21.5 சொத்துக்கள் முகாமைத்துவம்

### வருடாந்த பொருள் மெய்மையாய்வை நடாத்துதல்

2010 திசெம்பர் 17 ஆந் திகதிய பீஎப்/மெய்மையாய்வு சபை/01 ஆம் இலக்க அரச பொது நிதிப் பணிப்பாளர் நாயகத்தின் கடிதத்தின் மூலம் திருத்தப்பட்ட 2009 திசெம்பர் 09 ஆந் திகதிய 441 ஆம் இலக்க அரச பொது நிதிச் சுற்றுநிருபத்தின் பிரகாரம் 2012 இன் வருடாந்த பொருள் மெய்மையாய்வு மேற்கொள்ளப்பட்டு அந்த அறிக்கை 2013 மார்ச் 31 ஆந் திகதிக்கு முன்னர் நடாத்தப்பட்டு அந்த அறிக்கை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டியிருந்த போதிலும் அந்த அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

**21.6 செயலாற்றல்**

2012 இன் வருடாந்த பாதீட்டு மதிப்பீடு, கூட்டிணைந்த திட்டம் மற்றும் செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் திணைக்களத்தின் செயல்முன்னேற்றம் தொடர்பான அவதானிப்புக்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

**(அ) போதியளவில் நிறைவேற்றப்படாத பிரதான செயற்பாடுகள்**

திணைக்களம் பிரதான செயற்பாடுகளை போதியளவில் நிறைவேற்றாதிருந்த சில சந்தர்ப்பங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

(i) காலாண்டிற்கு ஒரு தடவைப்படி வருடத்திற்கு கணக்காய்வு முகாமைத்துவக் குழு ஆகக் குறைந்தது 04 தடவைகள் நடாத்தப்பட வேண்டியிருந்த போதிலும் நிதி, திட்டமிடல் அமைச்சிற்காக 03 கூட்டங்கள் மாத்திரமே நடாத்தப்பட்டிருந்தன.

(ii) மேலும், ஒரு முகாமைத்துவக் குழுக் கூட்டத்தினை நடத்தாத 03 அமைச்சுக்களும், ஒரு கூட்டத்தினை நடாத்திய 04 அமைச்சுக்களும், 02 கூட்டங்களை மாத்திரம் நடாத்திய 10 அமைச்சுக்களும், 03 கூட்டங்களை மாத்திரம் நடாத்திய 20 அமைச்சுக்களும் காணப்பட்டன.

**(ஆ) திட்டமிடல்**

**வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டத்திற்கு இணங்க செயற்படாமை**

பின்வரும் சந்தர்ப்பங்களின் போது செயல் நடவடிக்கைத் திட்டத்திற்கு இணங்க செயற்படாதிருந்தமை அவதானிக்கப்பட்டது.

(i) ஆண்டின் போது நடாத்துவதற்கு எதிர்பார்க்கப்பட்ட கணக்காய்வு முகாமைத்துவக் குழுக் கூட்டங்களின் எண்ணிக்கை மற்றும் அவை நடாத்தப்பட வேண்டிய காலங்கள் என்பன திட்டத்தில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) செயல் நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் உள்ளகக் கணக்காய்வு கைநூல் தயாரிக்கப்பட்டதன் பின்னர் யூலை மாதம் தொடக்கம் திசெம்பர் மாதம் வரை பயிற்சி நிகழ்ச்சித்திட்டம் நடாத்த வேண்டிய

போதிலும் எந்த அளவான பயிற்சி நிகழ்ச்சித்திட்டம் நடாத்த வேண்டியிருந்தது என திட்டத்தில் காண்பிக்கப்பட்டிராததுடன் பயிற்சி நிகழ்ச்சித்திட்டம் எதுவும் நடாத்தப்பட்டிருக்கவில்லை.

(iii) 2012 மார்ச் 12, 15, 19, 21, 22 ஆந் திகதிகளில் நிதி, திட்டமிடல் அமைச்சில் பயிற்சி நிகழ்ச்சித்திட்டம் மற்றும் 2012 செப்தெம்பர் 14 தொடக்கம் 19 வரை கதிர்காமத்தில் வதிவிட செயலமர்வு நடாத்தப்பட்டிருந்த போதும் அது செயல்நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

## 21.7 மனிதவள முகாமைத்துவம்

### (அ) அங்கீகரித்த பதவியணியும் உள்ளபடியான பதவியணியும்

2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பதவியணி மீதான நிலை பின்வருமாறு.

| | ஊழியர் வகை | அங்கீகரித்த பதவியணி | உள்ளபடியான பதவியணி | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| (அ) | சிரேஷ்ட நிலை | 07 | 07 | - |
| (ஆ) | மூன்றாம் நிலை | 09 | 03 | 06 |
| (இ) | இரண்டாம் நிலை | 18 | 14 | 04 |
| (ஈ) | ஆரம்ப நிலை | 09 | 09 | - |
| | மொத்தம் | 43 | 33 | 10 |

(ஆ) பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) 2012 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு பிரதிப் பணிப்பாளர் பதவியின் எண்ணிக்கை 1 ஆக இருந்த போதிலும் 2012 ஆம் ஆண்டின் செயலாற்றல் அறிக்கையில் அந்த பதவிகளின் எண்ணிக்கை 2 எனக் குறிப்பிடப்பட்டிருந்தது.

(ii) மீளாய்வாண்டின் இறுதி வரையில் 10 வெற்றிடங்களை நிரப்புவதற்கு திணைக்களத்தினால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 22. மிலோதா நிறுவனம் - 2012

### 22.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 22.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து மிலோதா நிறுவனத்தின் 2012 திசெம்பர் 31 இல் இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 22.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 22.2.1 பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

ஒரே நிறுவனம் கடன்பட்டோராகவும் கடன்கொடுத்தோராகவும் காண்பிக்கப்பட்டிருந்ததுடன் அவ்வாறான 17 நிறுவனங்களின் கூட்டுத்தொகையான ரூபா 453,800 கடன்கொடுத்தோராகவும், ரூபா 260,475 கூட்டுத்தொகையானது கடன்பட்டோராகவும் காட்டப்பட்டிருந்தன. இதில் ஈடு செய்யக்கூடிய மீதிகள் முறையே ரூபா 91,975 மற்றும் ரூபா 79,200 ஆக இருந்த போதிலும் அவ்வாறு ஈடு செய்யப்பட்டிருக்கவில்லை.

#### 22.2.2 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் போன்றவற்றுடனான இணங்காமைகள்

கீழே காணப்படுகின்ற சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் போன்றவற்றுடனான இணங்காமைச் சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன.

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் |
|---|---|---|
| (i) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக் கோவை | |
| | IX ஆம் அத்தியாயத்தின் 1.2 ஆம் பிரிவு | தாபன பணிப்பாளரின் முன் அங்கீகாரமின்றி முன்னைய ஆண்டைப் போன்றே மீளாய்வாண்டின் போதும் நிறுவனத்தின் இரண்டு கணக்காளர்களுக்கு சம்பளத்தில் 1/3 கொடுப்பனவாக ரூபா 160,946 தொகை செலுத்தப்பட்டிருந்தன. |
| (ii) | அரச நிதிப் பிரமாணம் 756 | 2012 ஆம் ஆண்டிற்கான பொருட்கள் மெய்மையாய்வு மேற்கொள்ளப்பட்டு உரிய அறிக்கையின் பிரதியொன்று கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்க வில்லை. |
| (iii) | 2011 பெப்ரவரி 09 ஆந் திகதிய 13/2008(iv) ஆம் இலக்க பொதுநிருவாகச் சுற்றுநிருபத்தின் 02 ஆம் பந்தி | எரிபொருள் படி பெற்றுக்கொள்வதற்கு உரித்தற்ற இரண்டு உத்தியோகத்தர்களுக்கு மாதாந்தம் ரூபா 20,000 படி ரூபா 289,032 கூட்டுத்தொகையான எரிபொருள் படி செலுத்தப்பட்டிருந்தன. |

## 22.3 நிதி மீளாய்வு

### 22.3.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2012 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிறுவனத்தின் செயற்பாட்டு விளைவு ரூபா 3,975,277 மிகையாக இருந்ததுடன் அதற்கு எதிராக முன்னைய ஆண்டின் பற்றாக்குறை ரூபா 1,975,354 ஆக இருந்தமையால் நிதி விளைவுகளில் ரூபா 5,950,631 தொகையான அதிகரிப்பைக் காண்பித்தது. முன்னைய ஆண்டின் பற்றாக்குறை மீளாய்வாண்டில் மிகையாக ஏற்பட்டமைக்கு பயிற்சி நிகழ்ச்சித்திட்ட வருமானம் அதிகரித்தமை, வட்டி வருமானம் அதிகரித்தமை, நேர்ச் செலவினம் குறைவடைந்தமை மற்றும் பெறுமானத் தேய்வு செய்யப்பட்ட சில சொத்துக்கள் பயன்தரு காலம் முடிவடைந்தமையினால் ஆண்டின் பெறுமானத் தேய்விடல் குறைவடைந்தமை என்பன காரணமாக இருந்தன.

### 22.3.2 பகுப்பாய்வு ரீதியான நிதி மீளாய்வு

மீளாய்வாண்டின் நேர்ச் செயற்பாட்டு நடவடிக்கைகளின் தேறிய விளைவுகள் ரூபா 7,133,399 பற்றாக்குறையாக இருந்த போதிலும் ஆண்டின் போது கிடைத்த ரூபா 11,108,676 தொகையானது வட்டி வருமானமானமையால் மீளாய்வாண்டின் தேறிய நிதி விளைவுகள் ரூபா 3,975,277 தொகையான மிகையை ஏற்படுத்தியிருந்தது.

## 22.4 செயற்பாட்டு மீளாய்வு

### 22.4.1 செயலாற்றல்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன

(அ) மீளாய்வாண்டின் போது 204 பயிற்சி மற்றும் கல்விச் செயலமர்வுகள் திட்டமிடப்பட்டிருந்த போதிலும் ஆண்டின் போது அதில் 59 மாத்திரம் நடாத்தப்பட்டு 1829 உத்தியோகத்தர்கள் பயிற்சியளிக்கப்பட்டிருந்தனர். அதன் பிரகாரம் நிறுவனம் திட்டமிட்டிருந்த பாடநெறிகளில் 145 பாடநெறிகளை நடாத்துவதற்கு முடியாதிருந்தது.

(ஆ) 2010 ஆகஸ்ட் 04 ஆந் திகதிய அமைச்சரவைத் தீர்மானத்தின் பிரகாரம் நிதி, திட்டமிடல் அமைச்சில் சேவையில் ஈடுபட்டிருக்கின்ற உத்தியோகத்தர்கள், கணக்காளர் சேவை மற்றும் திட்டமிடல் சேவையில் உள்ள உத்தியோகத்தர்கள், உள்நாட்டு இறைவரித் திணைக்களம், சுங்கத் திணைக்களம் மற்றும் மது வரி திணைக்களம் என்பவற்றில் சேவையில் உள்ள உத்தியோகத்தர்கள் என்போருக்காக பொருத்தமான நிருவாக மற்றும் நல்லாளுகை ஒன்றை இனங்கண்டு வழங்குவதற்காக நிதி, திட்டமிடல் அமைச்சுடன் இணைந்த பயிற்சி நிறுவனமொன்றாக மிலோதா நிறுவனம் ஸ்தாபிக்கப்பட்டிருந்த போதிலும் 2012 ஆம் ஆண்டின் போது பயிற்சிப் பாடநெறிகளில் பங்குபற்றியிருந்த 1829 உத்தியோகத்தர்களில் 1537 பேர் அதாவது 84 சதவீதமானோர் ஏனைய அமைச்சுக்கள், திணைக்களங்கள், மாவட்ட செயலகம் மற்றும் சபை போன்ற நிறுவனங்களின் உத்தியோகத்தர்களாக இருந்தனர்.

(இ) மேலும் இந்த அமைச்சரவைத் தீர்மானத்தில் காண்பிக்கப்பட்டுள்ளவாறு உரிய நிறுவனங்களில் விசேட உத்தியோகத்தர்களுக்கான எந்த பாடநெறியும் திட்டமிடப்பட்டிருக்கவில்லை.

### 22.4.2 முறையற்ற முதலீடு

2005 யூலை 13 ஆந் திகதிய 30 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றுநிருபத்தின் பிரகாரம் அரசாங்க நிறுவனங்களில் தற்காலிக மேலதிக நிதியம் திறைசேரி உண்டியல்களில் அல்லது ஏனைய நிலையான வைப்புக்களில் முதலீடு செய்யப்பட்டிருக்குமாயின் அப் பணம் 2005 ஆகஸ்ட் 01 ஆந் திகதி தொடக்கம் 4670 ஆம் இலக்க கணக்கில் அரசாங்க நிறுவனங்களின் தற்காலிக மேலதிக பொறுப்பு நிதியத்தில் வைப்புச் செய்ய வேண்டியிருந்த போதிலும் அதற்கு முரணாக ரூபா 93,000,000 தொகை மக்கள் வங்கியின் நிலையான வைப்புக்களில் முதலீடு செய்யப்பட்டிருந்தன.

### 22.4.3 பதவியணியினர் நிரவாகம்

2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பதவியணியினர் எண்ணிக்கை மற்றும் வெற்றிடங்கள் தொடர்பான நிலைமை பின்வருமாறு இருந்தது.

| வகை | அங்கீகரிக்கப்பட்ட எண்ணிக்கை | உள்ளவாறான எண்ணிக்கை | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| பதவி நிலை | 06 | 02 | 04 |
| பதவி நிலையல்லாத | 15 | 13 | 02 |
| கனிஷ்ட தரம் | 05 | 02 | 03 |
| | ----- | ------ | ----- |
| | 26 | 17 | 09 |
| | ===== | ===== | ===== |

நிறுவனத்தின் பதவி வெற்றிடங்களின் எண்ணிக்கை 09 ஆகக் காணப்பட்ட போதிலும் அதனைச் சேர்த்துக்கொள்வதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**22.5. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்**

**22.5.1 கூட்டிணைந்த திட்டம்**

நிறுவனத்திற்கான கூட்டிணைந்த திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

**22.5.2 பாதீட்டுக் கட்டுப்பாடு**

மீளாய்வாண்டில் நிறுவனத்தின் அடிப்படை நோக்கமான பயிற்சி மற்றும் கல்வி நிகழ்ச்சித்திட்டங்களின் கீழ் மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம் ரூபா 36,125,000 ஆக இருந்ததுடன் அதன் கீழ் பெறப்பட்ட உள்ளவாறான வருமானம் ரூபா 19,107,900 ஆக இருந்தது. அதன் பிரகாரம் திட்டமிடப்பட்ட வருமானம் ரூபா 17,017,100 இனால் குறைவடைந்திருந்தது. நடாத்துவதற்கு எதிர்பார்க்கப்பட்ட பாடநெறிகள் நடாத்தப்படாமையின் காரணமாக அவ்வாறு உள்ளவாறான வருமானம் பாதீடு செய்யப்பட்ட அளவினை விட 47 சதவீதத்தினால் குறைவடைந்திருந்ததுடன் தேறிய மிகையும் பாதிடப்பட்ட பெறுமதியை விட 24 சதவீதத்தினால் குறைவடைந்திருந்தது. அதன் பிரகாரம் 2012 ஆம் ஆண்டின் போது நிறுவனம் பாதிடப்பட்ட இலக்கினை அடைய முடியாதிருந்ததுடன் பாதீடு ஒரு சிறந்த முகாமைத்துவ கட்டுப்பாட்டுக் கருவியாக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

**22.5.3 ஆண்டறிக்கையினை பாராளுமன்றத்தில் முன்வைத்தல்**

ஆண்டறிக்கை பாராளுமன்றத்தில் முன்வைக்கப்பட்டிருக்கவில்லை.

**22.6 முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்**

கணக்காய்விகன் போது அவதானிக்கப்பட்ட குறைபாடுகள் தொடர்பாக அவ்வப்போது நிறைவேற்றுப் பணிப்பாளருக்கு அறிவிக்கப்பட்டிருந்தது. பின்வரும் கட்டுப்பாட்டுப் பகுதிகள் தொடர்பாக விசேட கவனம் செலுத்தப்பட வேண்டும்.

(i) கடன்பட்டோர் மற்றும் கடன்கொடுத்தோர்

(ii) பாதீடு

## 23. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிக்கூற்றுக்கள் மீது கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை - 2012

### 23.1 அபிப்பிராயம்

நிதிக்கூற்றுக்களானவை இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 23.2 நிதிக்கூற்றுக்கள்

#### 23.2.1 நிதிசார் செயலாற்றல்

2012 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசின் நிதிசார் செயலாற்றல் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடப்பட்டு கீழே காட்டப்பட்டுள்ளது.

| 2012 ஆம் ஆண்டின் திருத்திய பாதீடு | | 2012 உள்ளவாறான | 2011 உள்ளவாறான |
|---|---|---|---|
| ரூபா. மில்லியன் | | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் |
| | **வருமானம்** | | |
| 177,303.0 | வருமான வரி | 172,593.1 | 157,308.6 |
| 497,740.0 | உள்நாட்டு பொருட்கள் சேவை வரி | 462,164.1 | 467,560.9 |
| 221,556.0 | சர்வதேச வர்த்தகத்தின் அடிப்படையிலான வரி | 210,539.3 | 187,777.8 |
| **896,599.0** | **வரி வருமானம்** | **845,296.5** | **812,647.3** |
| **141,732.0** | **வரியல்லாத வருமானம் ஏனையவையும்** | **151,520.4** | **130,295.7** |

| | | | |
|---|---|---|---|
| **1,038,331.0** | **வருமானங்களின் மொத்தம்(அ)** | **996,816.9** | **942,943.0** |
| | **கழி: செலவினம்** | | |
| 273,982.5 | சம்பளம், வேதனங்கள் மற்றும் ஏனைய சேவை நலன்கள் | 272,620.0 | 251,128.9 |
| 114,308.0 | ஏனைய பொருட்களும் சேவைகளும் | 110,014.4 | 112,186.1 |
| 334,403.5 | உதவுதொகைகள் மானியங்கள் மற்றும் மாற்றல்கள் | 326,576.3 | 303,839.5 |
| 410,850.6 | வட்டிக் கொடுப்பனவு | 408,986.7 | 353,008.9 |
| 640.6 | ஏனைய மீண்டுவரும் செலவினம் | 133.3 | 33.8 |
| **1,134,185.2** | **மொத்த மீண்டுவரும் செலவினங்களின் கூட்டுத்தொகை (ஆ)** | **1,118,330.7** | **1,020,197.2** |
| **95,854.2** | **வருமானக் குறை** (அ) – (ஆ) | **121,513.8** | **77,254.2** |
| 554,156.6 | **அரச முதலீடுகள்** | 471,088.9 | 398,518.9 |
| **650,010.8** | **பாதீட்டுப் பற்றாக்குறை** | **592,602.7** | **475,773.1** |
| | **பாதீட்டு பற்றாக்குறைக்கான நிதியீட்டம்** | | |
| 241,555.3 | வெளிநாட்டுக் கடன் எடுப்பனவு | 365,698.4 | 287,012.4 |
| (153,320.0) | வெளிநாட்டுக் கடன் மீளச் செலுத்தல் | (152,898.7) | (72,262.2) |
| **88,235.3** | **தேறிய வெளிநாட்டு கடன் வழங்கல்** | **212,799.7** | **214,750.2** |
| 20,000.0 | வெளிநாட்டு மானியங்கள் | 16,070.8 | 15,961.6 |
| **108,235.3** | **மொத்த வெளிநாட்டு நிதியீட்டப் பங்களிப்பு** | **228,870.5** | **230,711.8** |
| 946,952.2 | உள்நாட்டு வங்கியல்லாக் கடன் எடுத்தல் | 725,869.3 | 695,393.9 |
| (451,809.0) | உள்நாட்டுக் கடன் கொடுப்பனவு | (449,915.1) | (470,075.0) |
| **495,143.2** | **தேறிய உள்நாட்டு கடன் எடுப்பனவு** | **275,954.2** | **225,318.9** |
| 16,470.0 | கடன் அறவீடு | 16,409.1 | 14,877.7 |
| 500.0 | மூலதனச் சொத்து விற்பனை | 831.1 | 514.3 |
| 0.0 | வைப்புக் கணக்குள் மற்றும் பொறுப்புக்களில் தேறிய மாற்றம் | 22,160.9 | 6,527.2 |
| 0.0 | காசு மற்றும் அதற்குச் சமமானவற்றின் அதிகரிப்பு/ (குறைவு) | 48,376.8 | (2,176.7) |
| **620,348.5** | **மொத்த நிதியீட்டத்தின் கூட்டுத்தொகை** | **592,602.6** | **475,773.2** |

### 23.2.2 நிதி நிலைமை

மீளாய்வாண்டிலும் முன்னைய ஆண்டின் இறுதியில் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான ஒப்பீடு கீழே காட்டப்பட்டுள்ளது.

| | திசெம்பர் 31 இல் உள்ளவாறு | |
|---|---|---|
| | 2012 | 2011 |
| | ரூபா. மில்லியன் | ரூபா மில்லியன் |
| **நிதிச் சொத்துக்கள்** | | |
| அரச உத்தியோகத்தர்களுக்கான கடன் | 24,034.4 | 26,121.8 |
| அரச திணைக்களங்களுக்கான முற்பணம் | 9,052.2 | 8,530.8 |
| அங்கத்தவர் கட்டணக் கொடுப்பனவு | 3,517.2 | 3,517.2 |
| கடன் வழங்கல் | 323,121.6 | 298,967.3 |
| அரசாங்கத்தின் வசமுள்ள வியாபாரங்களில் அரசின் பங்களிப்பு | 176,600.8 | 124,010.4 |
| கிரவுன் முகவர்களுக்கு பணம் அனுப்பும் கணக்கு | 1,010.3 | 906.8 |
| **நிதிச் சொத்துக்களின் மொத்தம்** | **537,336.5** | **462,054.3** |
| **பொறுப்புக்கள்** | | |
| வங்கி மேலதிகப் பற்று | 104,479.0 | 56,102.2 |
| மத்திய வங்கி முற்பணம் | 111,291.8 | 94,743.0 |
| வெளிநாட்டுக் கடன் சுழற்சி நிதியம் | 22,183.4 | 19,846.4 |
| நானாவித நிதியம் | 1,456.7 | 1,610.8 |
| அரசின் கடன் எடுப்பனவு | 5,408,759.8 | 4,634,972.7 |
| வைப்புக்களும் ஏனைய பொறுப்புக்களும் | 75,756.0 | 64,271.8 |
| அரச திணைக்களங்களுடனான செயற்பாட்டுக் கணக்கு | (3,963.1) | 3,440.0 |
| நானாவிதக் கணக்குகள் | (2,107.7) | 5.8 |
| **மொத்தப் பொறுப்புக்கள்** | **5,717,855.9** | **4,874,992.7** |
| எதிர்பாரா சந்தர்ப்ப நிதியம் | 140.0 | 140.0 |
| **பொறுப்புக்கள் மற்றும் எதிர்பாரா சந்தர்ப்ப நிதியத்தின் மொத்தம்** | **5,717,995.9** | **4,875,132.7** |
| **நிதிச் சொத்துக்களை மிகைத்த மொத்தப் பொறுப்புக்களும் எதிர்பாரா சந்தர்ப்ப** | **5,180,659.4** | **4,413,078.4** |

| | | |
|---|---|---|
| **நிதியத்தினதும் மீதிகள்** | | |
| திரட்டிய நிதியம் - திரண்ட நிலுவை | 272,239.7 | 201,700.2 |
| பௌதீகச் சொத்துக்களின் மொத்த முதலீடும் திரட்டிய தேறிய வருமான நிலுவையும் | 4,908,419.7 | 4,211,378.2 |
| | **5,180,659.4** | **4,413,078.4** |
| **எதிர்பாராதவைகளும் பொறுப்புக்களும்** | **401,411.0** | **291,448.9** |

### 23.2.3 கணக்கீட்டுக் குறைபாடுகள்

#### 23.2.3.1 வங்கி மேலதிகப் பற்று

2012 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறான நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் வங்கி மேலதிகப் பற்றாக ரூபா 104,479 மில்லியன் காணப்பட்டதுடன் அது கூட்டிணைந்த நிதிக்கூற்று அட்டவணை இலக்கம் 21 இல் காண்பிக்கப்பட்டிருந்தது. அது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) திறைசேரி பிரதிச் செயலாளரின் கணக்கின் (8020) கீழான 12 வங்கிக் கணக்குகளில் 3 கணக்குகளில் வங்கி மேலதிகப் பற்று மீதிகளின் கூட்டுத் தொகை ரூபா 150,187 மில்லியனாக இருந்ததுடன் அதில் 9 வங்கிக் கணக்குகளில் சாதமான மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 12,892 மில்லியன் ஈடுசெய்யப்பட்டதன் பின்னர் வங்கி மேலதிகப்பற்று மீதி ரூபா 137,295 மில்லியனாக நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் மீளாய்வாண்டின் மேலதிகப்பற்று மீதி முன்னைய ஆண்டின் மேலதிகப் பற்று மீதிகளின் கூட்டுத்தொகையான ரூபா 101,396 மில்லியனை விட ரூபா 48,791 மில்லியனால் அதாவது 48.11 சதவீத அளவினால் அதிகரித்திருந்தது.

(ஆ) திறைசேரி அங்கீரித்த கட்டுநிதிக் கணக்கில் (7002) ரூபா 36,513 மில்லியன் வரவு மீதியில் ரூபா 732 மில்லியன் செலவு மீதி ஈடுசெய்யப்பட்டதன் பின்னர் ரூபா 35,781 மில்லியனாகக் காண்பிக்கப்பட்டிருந்தது. இந்த வரவு மற்றும் செலவு மீதிகளில் 12 வருடங்களுக்கும் 15 வருடங்களும் இடைப்பட்ட காலப்பகுதிகளுக்குரிய ரூபா 622 மில்லியன் கூட்டுத்தொகையான வரவு மீதி மற்றும் ரூபா 275 கூட்டுத்தொகையான செலவு மீதிகள் தீர்க்கப்படாது காணப்பட்டன. விபரம் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| கணக்கு இலக்கம் | 2012 திசெம்பர் 31 ஆந் | மீதி கொண்டு |
|---|---|---|

| | திகதியில் உள்ளவாறு மீதி | | வரப்படுகின்ற வருடம் |
|---|---|---|---|
| | வரவு | செலவு | |
| | ரூபா | ரூபா | |
| 7002/0000/00/336/97 | 94,289,127 | - | 1997 |
| 7002/000/00/377/98 | 161,096,408 | - | 1998 |
| 7002/0000/00/328/00 | 200,405,060 | - | 2000 |
| 7002/0000/00/332/99 | 101,591,142 | - | 1999 |
| 7002/0000/00/325/00 | 10,854,275 | - | 2000 |
| 7002/0000/00/325/98 | - | 223,410,209 | 1998 |
| 7002/0000/00/325/99 | - | 51,297,162 | 1999 |
| 7002/0000/00/75/97 | 53,575,400 | - | 1997 |
| | 621,811,412 | 274,707,371 | |

(இ) திறைசேரி பிரதிச் செயலாளரின் கணக்கின் (8020) கீழ் மத்திய வங்கியில் பராமரிக்கப்பட்ட 4237 ஆம் இலக்க கணக்கில் காணப்படுகின்ற ரூபா 116.8 மில்லியன் வரவு மீதி 2009 ஆம் ஆண்டு தொடக்கம் குறைவான பயன்பாட்டுடன் காணப்பட்டது.

(ஈ) மீளளிப்புச் செய்யக்கூடிய வெளிநாட்டு உதவிக்கான திறைசேரி அங்கீகரித்த கணக்கில் (7003) மீளாய்வாண்டின் இறுதியில் ரூபா 72,589,249 தொகையான வரவு மீதி, ரூபா 53,557 தொகையான செலவு மீதி ஈடு செய்யப்பட்டதன் பின்னர் ரூபா 72,535,692 தொகையான வரவு மீதி நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது. இந்த வரவு மற்றும் செலவு மீதிகளில் 7 வருடங்களுக்கும் 11 வருடங்களுக்கும் இடைப்பட்ட காலப்பகுதிகளுக்குரிய ரூபா 38,401,706 கூட்டுத்தொகையான வரவு மீதி மற்றும் ரூபா 15,000 தொகையான செலவு மீதியும் உள்ளடங்கியிருந்தது. விபரம் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| கணக்கு இலக்கம் | 2012 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு மீதி | | மீதி கொண்டு வரப்படுகின்ற வருடம் |
|---|---|---|---|
| | வரவு | செலவு | |
| | ரூபா | ரூபா | |
| 7003/0000/00/372/03 | 20,000,000 | - | 2003 |
| 7003/000/00/43/04 | - | 15,000 | 2004 |
| 7003/0000/00/43/05 | 14,286,931 | - | 2005 |
| 7003/0000/00/43/01 | 11,358 | - | 2001 |

| | | | |
|---|---|---|---|
| 7003/0000/00/47/00 | 4,043,282 | - | 2000 |
| 7003/0000/00/43/02 | 60,135 | - | 2002 |
| | 38,401,706 | 15,000 | |

(உ) வங்கி மேலதிகப் பற்றுக்காக மீளாய்வாண்டின் போது ரூபா 7,604 தொகையான வட்டியைச் செலுத்த வேண்டியேற்பட்டிருந்ததுடன் அது முன்னைய ஆண்டில் செலுத்தப்பட்ட ரூபா 4,368 மில்லியன் வட்டியை விட ரூபா 3,236 மில்லியனால் அதாவது 74.08 சதவீதத்தினால் அதிகரித்திருந்தது.

(ஊ) திறைசேரி பிரதிச் செயலாளரின் காசுக் கணக்கிற்குரிய கீழே காண்பிக்கப்படுகின்ற கணக்குகள் செயற்பாடற்ற கணக்குகளுக்கு உள்ளாக்கப்பட்டிருந்தது. அவ்வாறே அந்த கணக்குகளில் காணப்படுகின்ற காசு குறைந்த பயன்பாட்டுடன் நீண்ட காலமாக கணக்குகளில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது.

| | கணக்கின் பெயர் | மீதி | செயற்பாடற்றிருந்த காலம் |
|---|---|---|---|
| | | ரூபா | |
| (i) | யாழ்தேவி புகையிரத வீதி மீள் நிர்மாணம் | 20,156,958 | 2010 யூலை மாதம் தொடக்கம் |
| (ii) | நகர அபிவிருத்தி நிதியம் | 154,638,880 | 2011 யூலை மாதம் தொடக்கம் |
| (iii) | திறைசேரி பிரதிச் செயளாலரின் கணக்கு | 116,779,395 | 2010 ஆகஸ்ட் மாதம் தொடக்கம் |

(எ) 2012 திசெம்பர் 31 ஆந் திகதி வரையில் விஷேட ரூபா கணக்கில் (9114) ரூபா 15,735,820,464 தொகையான மீதி 2008 ஆம் ஆண்டு தொடக்கம் கொண்டுவரப்படுகின்ற செயற்பாடற்ற மீதியாகும்.

**23.2.3.2பொது வைப்புக் கணக்கு**

(அ) 2012 ஆம் ஆண்டின் நிதிக்கூற்றுக்களில் குறிப்பு 26 இல் திறைசேரி பொது வைப்பபுக் கணக்கில் (6000) ஆண்டின் இறுதியளவில் மீதி ரூபா 70,610 மில்லியனாக காண்பிக்கப்பட்டிருந்தும் திறைசேரி கணனி அச்சிடல் குறிப்புக்களின் பிரகாரம் அந்த மீதி ரூபா 70,611.2 மில்லியன் ஆனமையால்

ரூபா 1.2 மில்லியன் வேறுபாடு காணப்பட்டது. அவ்வாறே அந்த மீதி கீழே காண்பிக்கப்படுகின்றவாறு ரூபா 71,625.4 மில்லியன் கூட்டுத்தொகையான செலவு மீதியில் ரூபா 1,014.2 மில்லியன் கூட்டுத்தொகையான செலவு மீதி கழிக்கப்பட்டு நிதிக்கூற்றுக்களில் ரூபா 70,611.2 மில்லியனாகக் காண்பிக்கப்பட்டிருந்தது.

| வைப்பு வகை | 2012 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு மீதி | | |
|---|---|---|---|
| | வரவு மீதி | செலவு மீதி | தேறிய செலவு மீதி |
| | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் |
| பிணை வைப்பு | - | 136.9 | 136.9 |
| கேள்வி வைப்பு | - | 106.6 | 106.6 |
| நானாவித வைப்பு (பழைய) (6000-3) | 3.0 | 6.0 | 3.0 |
| கூட்டுத்தாபன மற்றும் நிதியம் | - | 1,222.0 | 1,222.0 |
| அரசாங்கத்திற்குக் கையளிக்கப்பட்ட நிறுவனங்கள் | - | 111.2 | 111.2 |
| நிதியம் (சபைகளில்) | - | 32,523.0 | 32,523.0 |
| மிகை நிதியம் | - | 5,252.4 | 5,252.4 |
| பெறுமானத்தேய்வு ஒதுக்க நிதியம் | - | 147.6 | 147.6 |
| தற்காலிக கடன் ஈட்டல் (நிர்வாகக் கடன்) | - | 1,083.7 | 1,083.7 |
| வெளிநாட்டு உதவி மானியம் | 989.4 | 5,536.4 | 4,547.0 |
| நிதியேற்பாட்டு வைப்பு | 21.8 | 531.6 | 509.8 |
| தனியார் நிறுவனத்தினால் மேற்கொள்ளப்பட்ட வைப்பு | - | 60.6 | 60.6 |
| மாகாண சபைகளுக்கு வருமானத்தை அனுப்புதல் | - | 1,096.9 | 1,096.9 |
| பொது வைப்பு | - | 23,809.4 | 23,809.4 |
| ஏனையவை | - | 1.1 | 1.1 |
| | 1,014.2 | 71,625.4 | 70,611.2 |

இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

2009 ஒக்தோபர் 29 ஆந் திகதிய 200/2009 ஆம் இலக்க அரசாங்க கணக்குகள் சுற்றுநிருபத்தின் பிரகாரம் 2009 நவம்பர் 01 ஆந் திகதியில் உள்ளவாறு பழைய கணக்குகளில் எவ்வித வைப்புக்களும் செலவு வைக்கப்படாது அந்தக் கணக்குகளில் காணப்படுகின்ற வைப்பு மீதிகளைத் தீர்த்ததன் பின்னர் அந்த வைப்புக் கணக்கு கலைக்கப்பட வேண்டியிருந்த போதிலும் திறைசேரி வைப்புக் கணக்கில் (பழைய) (6000-3) தீர்க்கப்படாத மீதி தொடர்பாக நிதிப் பிரமாணம் 571 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2011 ஆம் ஆண்டின் நிதிக்கூற்றுக்களில் விளக்கமளித்தல் குறிப்பு இலக்கம் 26 இன் மூலம் காண்பிக்கப்பட்ட ஹோட்டல் கைத்தொழில் அபிவிருத்திக்காக வழங்கப்பட்ட காணிக்காகக் கிடைத்த ரூபா 19,817 மில்லியன் தொகையும் 2012 சனவரி 01 ஆந் திகதி வரையில் அதில் உழைக்கப்பட்ட வருமானமான ரூபா 155 மில்லியன் தொகையும் ஆக ரூபா 19,972 மில்லியன் கூட்டுத்தொகையான மீதி அரசாங்கத்தின் வருமானத்தில் செலவு வைக்கப்படாது பொது வைப்புக் கணக்கில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது. மீளாய்வாண்டின் போது அதில் கிடைத்த வருமானம் ரூபா 9,370 மில்லியன் ஆக இருந்ததுடன் அது அரசாங்கத்தின் வருமானத்தில் செலவு வைக்கப்பட்டிருக்கவில்லை. அதில் ரூபா 6,197 மில்லியன் கொடுப்பனவு செய்யப்பட்டு 2012 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு ரூபா 23,145 தொகையான மீதி காணப்பட்டது.

**23.2.3.3நட்டம் மற்றும் இழப்பு**

**------------------------------------**

மீளாய்வாண்டின் நிதிக்கூற்றுக்களில் நட்டம் மற்றும் இழப்பாக ரூபா 133,266,321 தொகை காண்பிக்கப்பட்டிருந்ததுடன் அது முன்னைய ஆண்டின் நட்டம் மற்றும் இழப்புக்களின் பெறுமதியான ரூபா 33,768,120 தொகையினை விட ரூபா 99,498,201 தொகை அதாவது 294.6 சதவீதத்தினால் அதிகரித்திருந்தது. அரசாங்க கணக்குகள் குழுவின் ஆலோசனையின் பிரகாரம் பல ஆண்டுகள் தொடக்கம் முற்பணக் கணக்குகளில் அறவிடப்படாத கடன் மீதியை பதிவழிப்பாதாகும். நி.பி 106 மற்றும் 113 இன் பிரகாரம் அதில் தலைப்பு 112 மற்றும் தலைப்பு 300 இன் கீழ் பதிவழிக்கப்பட்ட நட்டம் மற்றும் இழப்புக்களின் மொத்த நட்டம் மற்றும் இழப்புக்களின் அளவு 97.87 சதவீதம் அதாவது ரூபா 130,421,968 ஆக இருந்தது. அதன் கீழ் கொண்டுவரப்படாத நி.பி 109 இன் கீழ் புத்தகங்களிலிருந்து பதிவழிக்கப்பட்ட ஏனைய நட்டங்கள் மற்றும் இழப்புக்களின் பெறுமதி நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

**23.2.3.4 நிலையான சொத்துக்களை கணக்கு வைத்தல்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

2010 யூலை 12 ஆந் திகதிய 150 ஆம் இலக்க தேசிய பாதீட்டுச் சுற்றுநிருபத்தின் பிரகாரம் குத்தகை அடிப்படையில் பெறப்பட்ட வாகனத்திற்காகச் செலுத்தப்பட்ட வருடாந்தப் பெறுமதி ரூபா 1,403.2 மில்லியன் தொகை மீளாய்வாண்டின் இறுதியிலுள்ள வாகனத்தின் பெறுமதிகளில் சேர்க்கப்பட்டிருந்தது.

**23.2.3.5 செயற்பாடற்ற கட்டுப்பாட்டுக் கணக்கு**

கீழே விபரங்கள் குறிப்பிடப்படுகின்ற கட்டுப்பாட்டுக் கணக்குகள் 08 வருடங்களுக்கும் 17 வருடங்களுக்கும் இடையிலான காலம் தொடக்கம் செயற்பாடற்றுக் காணப்பட்டதுடன் அந்த ஆறு கணக்குகளின் ரூபா 407,578,389 கூட்டுத்தொகையான வரவு மீதிகளையும் மூன்று கணக்குகளில் ரூபா 54,082,370 கூட்டுத்தொகையான செலவு மீதிகளையும் உள்ளடக்கியிருந்தது. விபரம் பின்வருமாறிருந்தது.

| கட்டுப்பாட்டு கணக்கு இலக்கம் | கணக்கு விபரம் | பரீட்சை மீதியின் பிரகாரம் மீதி | | செயற்பாடற்ற காலம் |
|---|---|---|---|---|
| | | வரவு | செலவு | |
| | | ரூபா | ரூபா | வருடம் |
| 8037 | அஞ்சல் பணிப்பாளர் நாயகம் | - | 6,602,795 | வழங்கப்பட வில்லை |
| 8105 | சுங்கப் பணிப்பாளர் நாயகம் | 300,000,000 | - | வழங்கப்பட வில்லை |
| 8491 | கம்பனிப் பங்குகளின் முதலீடு மூலதன வரி கையளித்தல் | 88,589 | - | 17 |
| 8574 | ஆழ் நிதி நிதிய முதலீட்டுக் கணக்கு | 46,492,720 | - | 17 |
| 8575 | ஆழ் நிதி நிதியக் கணக்கு | - | 46,492,720 | 17 |

| | | | | |
|---|---|---|---|---|
| 8859 | தேசிய வீடமைப்பு பிணைகளுக்கான முதலீட்டுக் கணக்கு | 1,284,200 | - | - |
| 9098 | திறைசேரி பிரதிச் செயலாளரின் சேகரித்தல் கணக்கு | 38,940,420 | - | 13 |
| 9099 | திறைசேரி பிரதிச் செயலாளரின் மீளச் செலுத்துதல் நிதியம் | - | 986,855 | 8 |
| 9100 | செயற்பாடற்ற கணக்கு | 20,772,460 | - | - |
| | | 407,578,389 | 54,082,370 | |

### 23.2.3.6 திறைசேரி மற்றும் உள்நாட்டு வங்கியினால் விநியோகிக்கப்பட்ட பிணைமுறி

மீளாய்வாண்டின் நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2012 திசெம்பர் 31 ஆந் திகதி வரையில் திறைசேரியினாலும் உள்நாட்டு வங்கிகளினாலும் விநியோகிக்கப்பட்ட பிணைமுறிகளின் பெறுமதி முறையே ரூபா 379,190 மில்லியன் மற்றும் ரூபா 22,221 மில்லியன் ஆக ரூபா 401,411 மில்லியன் கூட்டுத்தொகையாக இருந்தது. அது முன்னைய ஆண்டின் பிணைமுறிகளின் பெறுமதியான ரூபா 291,449 மில்லியனை விட ரூபா 109,962 தொகை அதாவது 38 சதவீத அதிகரிப்பாகும்.

### 23.2.3.7 அரசிற்குரிய பொது முயற்சிகளில் மூலதனப் பங்களிப்பு

மீளாய்வாண்டின் போது அரசாங்கத்தினால் அரசிற்குச் சொந்தமான முயற்சிகளில் மூலதனப் பங்களிப்பாக ரூபா 54,100 மில்லியன் முதலீடு செய்யப்பட்டிருந்ததுடன் அதன் பிரகாரம் 2012 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு மொத்த முதலீட்டுப் பெறுமதி ரூபா 176,601 மில்லியனாக இருந்தது. மீளாய்வாண்டின் போது அரசாங்கத்தினால் செய்யப்பட்ட முதலீடு, மொத்த முதலீட்டில் 30.6 சதவீதமாக இருந்தது. அது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) அரசாங்கத்தினால் 47 நிறுவனங்களில் அதன் மூலதனத்தில் ரூபா 8,726 மில்லியன் தொகை முதலீடு செய்யப்பட்டிருந்தமை நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்த போதும் உரிய நிறுவனங்களினால் அந்த முதலீடுகளின் சரியான தன்மை உறுதிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ii) அரசினால் 12 நிறுவனங்களின் மூலதனப் பங்களிப்பாக ரூபா 104,051 மில்லியன் கூட்டுத்தொகையானது நிதிக் கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்த

போதிலும் உரிய 12 நிறுவனங்களினாலும் அரசினால் செய்யப்பட்ட முதலீடுகளின் பெறுமதி ரூபா 119,693 மில்லியன் கூட்டுத்தொகையாக உறுதிப்படுத்தப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் 12 நிறுவனங்களினால் நிதிக் கூற்றுக்களில் குறிப்பிடப்பட்ட அரசினால் செய்யப்பட்டிருந்த மூலதனப் பங்களிப்பு ரூபா 15,642 மில்லியனால் குறைத்து காண்பிக்கப்பட்டிருந்தது. (இணைப்பு 01)

(iii) அரசாங்கத்தினால் 13 நிறுவகங்களில் மூலதனப் பங்களிப்பாக ரூபா 5,532 மில்லியன் நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்த போதிலும் உரிய நிறுவனங்களினால் மூலதனப் பங்களிப்பாக ரூபா 1,531 மில்லியன் கூட்டுத் தொகையாக உறுதிப்படுத்தப்பட்டிருந்தமையினால் நிதிக்கூற்றுக்களில் அந்த முதலீடு ரூபா 4,001 மில்லியனால் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது. (இணைப்பு 02)

(iv) 9 நிறுவனங்களின் ரூபா 755,954,670 கூட்டுத்தொகையான முதலீட்டிற்கான கொள்கைத் தீர்மானத்திற்கு உடன்பட்டதன் பின்னர் மீளாய்வாண்டின் நிதிக் கூற்றுக்களில் தேவையான சீராக்கங்கள் செய்யப்பட்டதாக அரசாங்கக் கணக்குகள் பணிப்பாளர் நாயகத்தின் 2012 செப்தெம்பர் 4 ஆந் திகதிய எஸ்ஏ/ஏஎஸ்/டிபி/கணக்காய்வு/2012 ஆம் இலக்க கடிதத்தின் மூலம் எனக்கு அறிவிக்கப்பட்டிருந்த போதிலும் தேவையான சீராக்கங்கள் மீளாய்வாண்டில் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. உரிய விபரம் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| நிறுவனத்தின் பெயர் | திறைசேரிப் புத்தகங்களின் பெறுதி | தற்போதைய நிலை |
|---|---|---|
| லங்கா டெக்ஸ்டைல்ஸ் மில்ஸ் எம்போரியம் | 7,000,000 | நிறுவனம் மூடப்பட்டுள்ளது. |
| லங்கா டிரெக்டர்ஸ் லிமிட்டட் | 52,500,000 | தனியார் பிரிவிற்கு கையளிக்கப்பட்டது. |
| புத்தளம் சீமெந்துக் கூட்டுத்தாபனம் | 970,710 | ஹொல்சீம் என்ற பெயரில் தனியார் பிரிவிற்கு கையளிக்கப்பட்டது |
| உறுகுணு சீமெந்துக் கம்பனி | 101,750,000 | -மேற்படி- |
| இலங்கை இறப்பர் ஏற்றுமதி மற்றும் கைத்தொழில் நிறுவனம் | 77,980,000 | நீண்டகால வாடகையில் வழங்கப்பட்டது. |

| | | |
|---|---|---|
| ஸ்டடிகன் இறப்பர் கம்பனி லிமிட்டட் | 748,300 | மூடப்பட்டுள்ளது. |
| சிறு தேயிலைத் தோட்ட உரிமையாளர்களின் சங்கம் | 490,000,000 | தகவல்கள் தேடப்படுகின்றது |
| சர்க்கஸ் அன் கிறீன லிமிட்டட் | 5,700 | தகவல்கள் அனுப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது |
| கொஸ்மெக் மெனேஜ்மன்ட் சேவிசஸ் | 24,999,960 | மூடப்பட்டுள்ளது. |
| | --------------- | |
| | 755,954,670 | |
| | ======== | |

**23.2.3.8 மூலதனப் பங்களிப்பில் வருமானப் பெறுவனவு**

அரசிற்குச் சொந்தமான 78 நிறுவனங்கள், 24 பெருந்தோட்டக் கம்பனிகள் 3 அபிவிருத்தி வங்கிகள் மற்றும் அமெரிக்க டொலர்களினால் செயற்படுகின்ற மூன்று கூட்டுத்தாபனங்களை உள்ளடக்கிய 108 நிறுவனங்களில் கூட்டுத்தொகை ரூபா 46,525 மில்லியன் பங்கு மூலதனத்தில் முதலீடு செய்யப்பட்டிருந்த போதிலும் மீளாய்வாண்டின் போது அதில் ரூபா 23,139 மில்லியன் தொகை முதலீடு செய்யப்பட்ட 30 நிறுவனங்களிலிருந்து ரூபா 4,547 மில்லியன் பங்கிலாபம் கிடைத்திருந்தது. அத்தொகை முதலீட்டுப் பெறுமதியில் 19.7 சதவீதமாக இருந்தது.

**23.2.3.9 வெளிநாட்டுக் கடன்**

மீளாய்வாண்டின் நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் வெளிநாட்டுக் கடன் பெறுவனவுகள் ரூபா 365,698 மில்லியனாக குறிப்பிடப்பட்டிருந்தது. அது தொடர்பாக பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) வெளிநாட்டு வள திணைக்களத்தினால் வருடாந்தம் தயாரிக்கப்படுகின்ற 854 -1 அறிக்கையின் பிரகாரம் கீழே காண்பிக்கப்படுகின்ற 6 கடன் உடன்படிக்கைகளில் 2012 ஆம் ஆண்டின் போது கிடைத்த ரூபா 49,873 மில்லியன் கூட்டுத்தொகையான வெளிநாட்டுக் கடன் தொகை நிதிக் கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை.

| **கடன் உடன்படிக்கை இலக்கம்** | **கடன் வழங்கப்பட்ட நிறுவனம் அல்லது அரசாங்கம்** | **கடன் பணம் ஈடுபடுத்தப்படுகின்ற செயற்திட்டம்** | **2012 ஆண்டில் பெறப்பட்ட தொகை** |
|---|---|---|---|
| | | | **ரூபா** |
| 2006045 BLA 06032 | சீன அரசாங்கம் | புத்தளம் அனல் மின் செயற்திட்டம் | 1,865,429,245 |
| 2011036 CLK 1003-01J | Financial De Development | யாழ்ப்பாணம், கிளிநொச்சி, நீர்வழங்கல் மற்றும் சுகாதார நடவடிக்கை செயற்திட்டம் | 968,648 |
| 2007044 BLA 0704 | சீன ஏற்றுமதி / இறக்குமதி வங்கி | அம்பாந்தோட்டை துறைமுக அபிவிருத்தி செயற்திட்டம் | 3,755,120,287 |
| 2009027 | மேற்படி | புத்தளம் அனல் மின் செயற்திட்டம் | 16,717,950,539 |
| 2010006 | மேற்படி | அம்பாந்தோட்டை மத்தள விமான நிலைய செயற்திட்டம் | 7,109,373,139 |
| 2012033 | மேற்படி | அம்பாந்தோட்டை துறைமுக அபிவிருத்தி செயற்திட்டக் கட்டம் II | 20,424,651,633 |
| மொத்தம் | | | 49,873,493,491 |

(ஆ) நிதிக்கூற்றுக்களுடன் சமர்ப்பிக்கப்பட்ட அட்டவணை II இல் 2012 ஆம் ஆண்டின் போது கிடைத்ததாக குறிப்பிடப்பட்ட ரூபா 227,446,219 கூட்டுத் தொகையான கீழே குறிப்பிடப்படுகின்ற 3 கடன் உடன்படிக்கைகளுக்குரிய வெளிநாட்டுக் கடன் தொகை வெளிநாட்டு வளத் திணைக்களத்தினால் தயாரிக்கப்பட்ட 854 -1 அறிக்கையில் 2012 ஆம் ஆண்டின் போது கிடைத்தாக குறிப்பிடப்பட்டிருக்கவில்லை.

| கடன் உடன்படிக்கை இலக்கம் | கடன் தொகை வழங்குகின்ற நிறுவனம் | கடன் ஈடுபடுத்தப்படுகின்ற செயற்திட்டம் | நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் கிடைத்ததாகக் குறிப்பிடப்பட்ட தொகை |
|---|---|---|---|
| | | | ரூபா |
| 2004008 2096 SRI (SF) | ஆசிய அபிவிருத்தி வங்கி | இரண்டாம் நிலைக் கல்வி நவீனமயப்படுத்தல் செயற்திட்டம் II | 143,123,264 |
| 2008021 2066901 | ஒஸ்ட்கியா வங்கியின் கடன் முகவர் | கிரிந்தி ஓயா நீர் வழங்கல் நவீனமயப்படுத்தல் செயற்திட்டம் | 61,315,543 |
| 2008038 | பெபேசன் சென்ட்ரல் வங்கி | தொழில்நுட்பக் கல்வி கட்டியெழுப்பும் செயற்திட்டம் | 23,007,412 |
| மொத்தம் | | | 227,446,219 |

(இ) நிதிக்கூற்றுக்களின் பிரகாரமும் வெளிநாட்டு வள திணைக்களத்தின் 854 -1 அறிக்கையின் பிரகாரமும் மீளச் செலுத்த வேண்டிய கடன் மீதி மற்றும் ஆண்டின் போது தீர்க்கப்பட்ட கடன் தொகைகளுக்கிடையே கீழே குறிப்பிடப்படுகின்ற வேறுபாடுகள் வெளிப்படுத்தப்பட்டது. அந்த வேறுபாடுகள் கணக்கிணக்கம் செய்யப்பட்டிருக்கவில்லை. விபரம் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| விபரம் | நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் மீதி | 854-1 அறிக்கையின் பிரகாரம் மீதி | வேறுபாடு |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா |
| செலுத்த வேண்டிய கடன் மீதி | 2,422,684,382,236 | 2,579,388,741,077 | 156,704,358,841 |
| ஆண்டின் போது செலுத்தப்பட்ட கடன் தொகை | 152,898,693,427 | 153,206,013,391 | 307,319,964 |

(ஈ) மீளாய்வாண்டில் 29 வெளிநாட்டுக் கடன் உடன்படிக்கையில் வெளிநாட்டுக்கடன் பெறுவனவு ரூபா 365,698 ஆக நிதிக்கூற்றுக்களில் குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் வெளிநாட்டு வள திணைக்களத்தினால் தயாரிக்கப்பட்ட 854-1 ஆம்

அறிக்கையில் காண்பிக்கப்பட்டவாறு மீளாய்வாண்டிற்குரிய பெறுவனவுகளின் கூட்டுத்தொகை ரூபா 420,595 மில்லியன் ஆனமையினால் பெறுவனவுகளில் ரூபா 54,897 மில்லியன் வேறுபாடு அவதானிக்கப்பட்டது.

**23.2.3.10 வெளிநாட்டு மானியம்**

மீளாய்வாண்டின் வருடாந்த பாதீட்டு மதிப்பீட்டின் பிரகாரம் வெளிநாட்டு மானியாக ரூபா 20,000 மில்லியன் பெறுவதற்கு திட்டமிடப்பட்டிருந்தது. எனினும், மீளாய்வாண்டின் இநுதிவரையில் அதில் ரூபா 16,071 மில்லியன் சேகரிக்கக் கூடியதாக இருந்தது. அதன் பிரகாரம் ரூபா 3,929 மில்லியன் வெளிநாட்டு மானியத்தை பெற முடியாதிருந்தது. எனினும் 30 செயற்திட்டங்களில் கிடைத்த ரூபா 1,861 கூட்டுத்தொகையான வெளிநாட்டு மானியங்கள் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. (இணைப்பு 03)

**23.2.3.11 முற்பணக் கணக்கு**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) மீளாய்வாண்டின் இறுதி வரையில் செயற்பாடற்றிருந்த முற்பணக் கணக்கில் ரூபா 102,421 தொகையான கடன் மீதி 2012 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் அறவிடப்பட்டிருக்கவில்லை.

(ii) மாகாண சபைகளுக்கு இடமாற்றம் பெற்றுச்சென்ற உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிட வேண்டிய 193,040,033 தொகையான மீதி நீண்ட காலத்திலிருந்து அறவிடப்படாது காணப்பட்டது.

**23.3 நிதி மற்றும் செயற்பாட்டு மீளாய்வு**

**23.3.1 அரசாங்க வருமானம்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டிற்காக பாராளுமன்றம் அங்கீகரித்த வருடாந்த பாதீட்டின் பிரகாரம் அரசாங்கத்தின் மொத்த வருமானத்தை வெளிநாட்டு மானியத்துடன் ரூபா 1,150 பில்லியனாக இருந்தது. இருந்த போதிலும் மீளாய்வாண்டின் போது அந்த மதிப்பிடப்பட்ட வருமானம் ரூபா 75 பில்லியனால் குறைக்கப்பட்டு ரூபா 1,075

பில்லியன் வரை திருத்தப்பட்டிருந்தது. அது ஆரம்ப மதிப்பிடப்பட்ட வருமானத்தில் 6.5 சதவீத குறைவாக இருந்தது. மீளாய்வாண்டின் உள்ளபடியான வருமானம் வெளிநாட்டு மானியத்துடன் ரூபா 1,030 பில்லியனாக இருந்தது. அந்த உள்ளபடியான வருமானம் ஆரம்ப மதிப்பீட்டில் 89.6 சதவீதமாகவும் திருத்தப்பட்ட மதிப்பீட்டில் 95.8 சதவீதமாகவும் இருந்தது.

(ஆ) 06 வருமானக் குறியீடுகளின் கூட்டுத்தொகை ரூபா 131,094 மில்லியனான ஆரம்ப வருமான மதிப்பீட்டின் கூட்டுத்தொகை ரூபா 115,446 மில்லியன் வரை குறைக்கப்பட்டு திருத்தப்பட்டிருந்த போதிலும் உள்ளபடியான வருமானங்களின் கூட்டுத்தொகை ரூபா 98,490 மில்லியன் ஆனமையால் ரூபா 16,956 மில்லியன் கூட்டுத்தொகையான திருத்தப்பட்ட வருமானத்தையும் சேகரிக்க முடியாதிருந்தது. விபரம் பின்வருமாறாகும்.

| வருமானக் குறியீடு | விபரம் | ஆரம்ப மதிப்பீடு | திருத்திய மதிப்பீடு | உள்ளவாறான பெறுவனவு | வேறுபாடு |
|---|---|---|---|---|---|
| | | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் |
| 1001-01-00 | இறக்குமதி வரி | 93,830 | 76,830 | 73,458 | 3,372 |
| 2002-01-01 | அரசாங்கக் கட்டிட வாடகை | 700 | 650 | 582 | 68 |
| 2002-01-04 | பிரதேச தோடக்கம்பனிகளிலிருந்து கிடைக்கின்ற குத்தகை வாடகை | 762 | 927 | 771 | 156 |
| 2003-02-09 | பாராளுமன்றக் கட்டணம் செலுத்துதல் | 22,102 | 20,883 | 17,499 | 3,384 |
| 2003-02-09 | நானாவித | 7,700 | 7,114 | 2,941 | 4,173 |
| 2003-99-00 | ஏனைய பெறுவனவுகள் | 6,000 | 9,042 | 3,239 | 5,803 |
| | | 131,094 | 115,446 | 98,490 | 16,956 |

(இ) மீளாய்வாண்டின் போது 11 வருமானக் குறியீடுகளின் ரூபா 100,880 மில்லியன் கூட்டுத்தொகையான வருமானம் சேகரிக்கப்பட்டிருந்ததுடன் முன்னைய ஆண்டின் போது அது ரூபா 119,668 மில்லியன் கூட்டுத் தொகையாக இருந்தது. அதன் பிரகாரம் முன்னைய ஆண்டிற்கு ஒப்பீடாக மீளாய்வாண்டின்

போது ரூபா 18,808 மில்லியன் கூட்டுத்தொகையினால் 15.7 சதவீதத்தினால் வருமானம் குறைவடைந்திருந்தது. விபரம் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| வருமானக் குறியீடு | வருமான விபரம் | மீளாய்வாண்டிற்குரிய பெறுவனவு | முன்னைய ஆண்டிற்குரிய பெறுவனவு | வருமானக் குறைவு | சதவீதமாக |
|---|---|---|---|---|---|
| | | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | |
| 2002-01-02 | அரசாங்க வாடகையிலிருந்து கிடைக்கின்ற வருமானம் | 758 | 1,399 | 641 | 45.8 |
| 2002-01-99 | ஏனைய குத்தகை வாடகை | 50 | 662 | 612 | 92.4 |
| 2002-02-99 | ஏனையவை | 1,388 | 2,553 | 1,165 | 45.6 |
| 2003-02-01 | கணக்காய்வுக் கட்டணம் | 60 | 101 | 41 | 40.6 |
| 2003-02-03 | 1968 இன் 32 ஆம் இலக்க ஆட்களைப் பதிவு செய்வதற்கான அதிகாரச் சட்டத்தின் கீழ் கட்டணம் அறவிடல் | 84 | 91 | 7 | 7.6 |
| 1001-01-00 | இறக்குமதி வரி | 73,488 | 76,010 | 2,522 | 3.3 |
| 2002-01-01 | அரசாங்கக் கட்டிடங்களின் வாடகை வருமானம் | 582 | 633 | 51 | 8.0 |
| 2002-01-04 | பிரதேச தோட்டக் கம்பனிகளிலிருந்து கிடைக்கின்ற குத்தகை வாடகை | 771 | 826 | 55 | 6.6 |
| 2003-02-00 | நிருவாகக் கட்டணக் கொடுப்பனவு | 17,499 | 18,180 | 681 | 3.7 |
| 2003-02-99 | நானாவித | 2,941 | 6,502 | 3,561 | 54.7 |
| 2003-99-00 | ஏனைய பெறுவனவுகள் | 3,239 | 12,711 | 9,472 | 74.5 |
| | | 100,860 | 119,668 | 18,808 | 15.71 |

(ஈ) மீளாய்வாண்டின் போது 16 வருமானக் குறியீடுகளுக்காக திருத்தப்பட்ட வருமான மதிப்பீடுகளின் கூட்டுத்தொகை ரூபா 66,308 மில்லியனாக இருந்த போதிலும் அந்த திருத்தப்பட்ட மதிப்பீடு ரூபா 17,254 இனால் மிகைத்து ரூபா

83,562 மில்லியன் கூட்டுத்தொகையான வருமானம் சேகரிக்கப்பட்டிருந்தது. அந்த சேகரிக்கப்பட்ட வருமானம் திருத்தப்பட்ட வருமான மதிப்பீட்டில் 0.9 சதவீதம் தொடக்கம் 71.2 சதவீதம் வரையிலான வீச்சினைக் கொண்டிருந்தது. வருமான அதிகரிப்பு வீச்சினைக் கருத்திற் கொள்ளும் பொது சாத்தியமான மதிப்பீடு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(உ) 08 வருமானக் குறியீடுகளில் 2012 திசெம்பர் 31 ஆந் திகதி வரையில் நிலுவையான இருந்த வருமானங்களின் கூட்டுத்தொகை ரூபா 8,641 மில்லியனாக இருந்த போதிலும் அந்த நிலுவையான இருந்த வருமானம் தொடர்பாக நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டோ அல்லது வெளிப்படுத்தப்படவோ இல்லை. விபரம் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| வருமானக் குறியீடு | விபரம் | தொகை |
|---|---|---|
| | | ரூபா |
| 2002-01-01 | அரசாங்கக் கட்டிட வாடகை | 382,908,172 |
| 2002-02-01 | வட்டி வருமானம் - கடன் வழங்கியதன் அடிப்படையில் | 3,364,458,223 |
| 2002-02-99 | வட்டி வருமானம் - ஏனையவை | 72,187 |
| 2003-02-99 | விற்பனைக் கட்டணம் - நானாவித | 4,392,242 |
| 2003-99-00 | விற்பனைக் கட்டணம் - ஏனைய பெறுவனவுகள் | 13,000 |
| 2006-04-00 | மூலதன வருமானம் - கடன் மீள அறவிடல் | 3,453,550,242 |
| 2005-01-00 | மத்திய வங்கி இலாபம் | 1,350,000,000 |
| 1002-10-00 | சமூகப் பொறுப்பு வரி | |
| | - இலங்கை சுங்கம் | 82,306,007 |
| | - உள்நாட்டு இறைவரித் திணைக்களம் | 3,552,149 |
| | | 8,641,252,222 |

## 23.3.2 அரசாங்க செலவினம்

இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்புச் சட்டத்தின் 148 ஆவது உறுப்புரையின் பிரகாரம் அரசாங்க நிதி தொடர்பான முழுமையான கட்டுப்பாடு பாராளுமன்றத்திற்குரியதாகும். அதன் பிரகாரம் 2012 ஆம் ஆண்டிற்காக பாராளுமன்றம் அங்கீகரித்த 2011 இன் 52 ஆம் இலக்க ஒதுக்கீட்டு அதிகாரச்

சட்டத்தின் மூலம் அரசாங்கத்தின் வழங்கல் மற்றும் சேவைகளுக்காக தலைப்பு 201 இன் கீழ் மீண்டெழும் செலவினங்களுக்காக ரூபா 724 பில்லியன் தொகையும் மூலதனச் செலவினங்களுக்காக ரூபா 560 பில்லியன் தொகையும் ஆக ரூபா 1,284 பில்லியன் நிதியேற்பாடு செய்யப்பட்டிருந்தது. அவ்வாறே விசேட சட்டச் சேவைகளுக்காக மீளாய்வாண்டின் போது மீண்டெழும் செலவினங்களுக்காக ரூபா 458 பில்லியன் தொகையும் மூலதனச் செலவினங்களுக்காக ரூபா 551 பில்லியன் தொகையுமாக ரூபா 1,009 பில்லியன் கூட்டுத்தொகையான செலவினங்களைச் செய்ய வேண்டியிருந்தது. அதன் பிரகாரம், மீளாய்வாண்டின் போது மீண்டெழும் செலவினமாக ரூபா 1,182 பில்லியன் தொகையும், மூலதனச் செலவினமாக ரூபா 1,111 பில்லியன் தொகையும் ஆக ரூபா 2,293 பில்லியன் கூட்டுத்தொகையான நிதியேற்பாடு பாராளுமன்றத்தினால் அங்கீகரிக்கப்பட்டிருந்தது. மீளாய்வாண்டின் போது ரூபா 2,192 பில்லியன் பயன்படுத்தப்பட்டமையினால் ரூபா 101 பில்லியன் அதாவது ஒதுக்கப்பட்ட நிதியேற்பாட்டில் 4 சதவீதம் சேமிக்கப்பட்டிருந்தது.

இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டில் மதிப்பீடு செய்யப்பட்ட ரூபா 2,220 பில்லியன் செலவினம் உள்நாட்டு நிதியத்தில் ரூபா 1,958 பில்லியனினாலும் வெனிநாட்டு நிதியத்தில் ரூபா 262 பில்லியனினாலும் நிதியீட்டம் செய்வதற்கு மதிப்பிடப்பட்டிருந்த போதிலும் 2012 ஆம் ஆண்டின் போது வெளிநாட்டு நிதியீட்டத்தின் கீழ் கடன் மற்றும் மானியமாக ரூபா 382 பில்லியன் கிடைத்திருந்தது. அது 2012 ஆம் ஆண்டில் எதிர்பார்க்கப்பட்ட அளவில் ரூபா 120 பில்லியனால் அதாவது 45.8 சதவீத அளவிலான அதிகரிப்பாகும். எனினும் இந்த மேலதிகமாகக் கிடைத்த வெளிநாட்டு நிதியத்தை பயன்படுத்துவதற்காக வருடாந்த மதிப்பீட்டில் நிதியேற்பாடு வழங்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மீளாய்வாண்டின் செலவினத்தில் ரூபா 152,899 மில்லியன் வெளிநாட்டுக் கடன் அடைப்புக்களுக்காகவும் ரூபா 449,915 மில்லியன் தொகை உள்நாட்டுக்கடன் தீர்ப்பனவுகளுக்காகவும் மற்றும் உள்நாட்டு, வெளிநாட்டு கடன்களுக்கான வட்டி செலுத்துவதற்காக ரூபா 408,987 மில்லியன் தொகையுமாக ரூபா 1,011,801 மில்லியன் கூட்டுத்தொகையானது செலவிடப்பட்டிருந்தது. அது மொத்தச் செலவினத்தில் 46.17 சதவீதமாக இருந்தது.

(இ) தலைப்பு 240 இன் தேசிய பாதீட்டுத் திணைக்களத்தின் 2 ஆவது நிகழ்ச்சித் திட்டத்தில் மீண்டெழும் செலவினங்களுக்காக ரூபா 39,209 மில்லியன் தொகையான நிதியேற்பாடுகளிலிருந்து ரூபா 503 மில்லியன் தொகையும் ரூபா 33,690 மில்லியன் தொகையான மூலதன நிதியேற்பாடுகளிலிருந்து ரூபா 941

மில்லியனுமாக பயன்படுத்தப்பட்டிருந்தது. இதற்கு மேலதிகமாக இந்த செலவினத் தலைப்பில் அதிகாரப் பத்திரம் 89 இல் மாற்றப்பட்டிருந்த நிதியேற்பாடு ரூபா 52,658 மில்லியன் தொகை மீளக் கையளிக்கப்பட்டிருந்தது.

(ஈ) தலைப்பு 77 இன் கீழ் வருகின்ற செலவின விடயம் 216 இற்காக ரூபா 6,902,796,179 கூட்டுத்தொகையான நிதியேற்பாடு வழங்கப்பட்டிருந்ததுடன் அதில் ரூபா 2,225,902,281 தொகை பயன்படுத்தப்பட்டதன் பின்னர் ரூபா 4,676,893,898 தொகையான நிதியேற்பாடு சேமிக்கப்பட்டிருந்தது. அந்த சேமிப்பு ஒதுக்கப்பட்ட தேறிய நிதியேற்பாட்டில் 67.8 சதவீதமாக இருந்தது.

(உ) தலைப்பு 141 இன் மூலதன செலவின விடயம் 832 இற்காக ரூபா 92,638,807,848 கூட்டுத்தொகையான நிதியேற்பாடு வழங்கப்பட்டிருந்ததுடன் அதில் ரூபா 35,907,223,584 தொகை பயன்படுத்தப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் ரூபா 56,737,953,298 தொகை அதாவது ஒதுக்கப்பட்ட நிதியேற்பாட்டில் 61.2 சதவீதமான நிதியேற்பாடு சேமிக்கப்பட்டிருந்தது.

### 23.3.3 பாதீட்டு நிலுவை

மீளாய்வாண்டில் திருத்தப்பட்ட மதிப்பிடப்பட்ட பாதீட்டு நிலுவை ரூபா 650 பில்லியனாக இருந்ததுடன் அது முன்னைய ஆண்டின் மதிப்பிடப்பட்ட திருத்தப்பட்ட பாதீட்டு நிலுவையான ரூபா 563 பில்லியனுடன் ஒப்பீடு செய்த போது ரூபா 87 பில்லியனால் அதாவது 15 சதவீதத்தினால் அதிகரித்திருந்தது. 2012 இன் நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் உள்ளபடியான பாதீட்டு நிலுவை ரூபா 593 பில்லியனாக இருந்ததுடன் முன்னைய ஆண்டின் போது அது ரூபா 476 பில்லியானாக இருந்தது. அதன் பிரகாரம் முன்னைய ஆண்டின் உள்ளபடியான பாதீட்டு நிலுவையை விட ரூபா 117 பில்லியனால் மீளாய்வாண்டின் பாதீட்டு நிலுவை குறைவடைந்திருந்தது. 2003 இன் 03 ஆம் இலக்க நிதி முகாமைத்துவ (பொறுப்புக்கள்) அதிகாரச் சட்டத்தின் 3(அ) பிரிவின் பிரகாரம் மீளாய்வாண்டில் மதிப்பிடப்பட்ட பாதீட்டு நிலுவை மதிப்பிடப்பட்ட மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 5 சதவீதத்தை விட குறைவாக இருக்க வேண்டியிருந்த போதிலும் மீளாய்வாண்டின் போது 6.1 சதவீதமாக இருந்தது. மீளாய்வாண்டின் உள்ளபடியான பாதீட்டு நிலுவை மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 7.8 சதவீதத்தைக் கொண்டிருந்தது. பொருளாதார வகைப்படுத்தலின் பிரகாரம் 2012 ஆம் ஆண்டின் பாதீட்டு நிலுவை ரூபா 465.2 பில்லியனாக கணிப்பீடு செய்யப்பட்டிருந்ததுடன் அந்த பெறுமதி மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 6.2 சதவீதத்தைக் கொண்டிருந்தது.

### 23.3.4 குடியரசின் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் ஆண்டின் இறுதியில் குடியரசின் மொத்த பொறுப்புக்கள் ரூபா 5,717,857 மில்லியனாக இருந்ததுடன் முன்னைய ஆண்டின் குடியரசின் மொத்த பொறுப்புக்களாக ரூபா 4,874,993 மில்லியனுடன் ஒப்பீடு செய்த போது அது ரூபா 842,864 மில்லியன் அல்லது 17.3 சதவீத அதிகரிப்பாகும். அந்த அதிகரிப்பு பின்வருமாறு இருந்தது.

| பொறுப்புக்கள் | 2012 ஆம் ஆண்டின் இறுதியில் பொறுப்புக்கள் | 2011 ஆம் ஆண்டின் இறுதியில் பொறுப்புக்கள் | வேறுபாடு அதிகரிப்பு/ (குறைவு) | வேறுபாடு சதவீதமாக |
|---|---|---|---|---|
| | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | |
| வங்கி மேலதிகப்பற்று | 104,479 | 56,102 | 48,377 | 86.2 |
| மத்திய வங்கி முற்பணம் | 111,292 | 94,743 | 16,549 | 17.5 |
| உள்நாட்டுக் கடன் சுழற்சி நிதியம் | 22,183 | 19,846 | 2,337 | 11.8 |
| நானாவித நிதியம் | 1,457 | 1,611 | (154) | 9.6 |
| அரசாங்கக் கடன் பெறுவனவு | 5,408,760 | 4,634,973 | 773,787 | 16.7 |
| வைப்புக்கள் மற்றும் ஏனைய பொறுப்புக்கள் | 75,756 | 64,272 | 11,484 | 17.8 |
| அரசாங்கத்தின் திணைக்களங்களின் செயற்பாட்டுக் கணக்கு | (3,963) | 3,440 | (7,403) | 215.2 |
| நானாவித கணக்கு | (2,107) | 6 | (2,113) | |
| | 5,717,856 | 4,874,993 | 842,864 | |

**இணைப்பு 01**

அரசாங்க நிதி முதலீடு செய்யப்பட்டுள்ள நிறுவனங்களில் மேற்கொள்ளப்பட்ட உறுதிப்படுத்தல்களின் பிரகாரம் மீதி அதிகரித்து உறுதிப்படுத்தப்பட்ட சந்தர்ப்பங்கள் பின்வருமாறு இருந்தது.

| நிறுவனத்தின் பெயர் | 2012.12.31 ஆந் திகதியில் உள்ளவாறான நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் மூலதனப் பங்களிப்பு | உறுதிப்படுத்தப்பட்ட மீதி | வேறுபாடு |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா |
| இலங்கை மின்சார சபை | 96,090,404,058 | 109,569,168,671 | (13,478,764,613) |
| மக்கள் வங்கி | 7,198,133,000 | 7,198,134,700 | (1,700) |
| இலங்கை ஆயுர்வேத மருந்தகக் கூட்டுத்தாபனம் | 5,000,000 | 240,038,210 | (235,038,210) |
| எயார்போர்ட் என்ட் ஏவியேசன்ஸ் சர்விசஸ் லிமிடெட் | 20,000,000 | 20,000,200 | (200) |
| இலங்கை கொழும்பு கொமர்ஷல் உரக் கம்பனி | 10,000,000 | 100,000,000 | (90,000,000) |
| ஹோட்டேல் டிவலபர்ஸ் லிமிடெட் | 293,884,630 | 1,811,615,719 | (1,517,731,089) |
| கந்தளாய் சீனிக் கம்பனி | 26,899,300 | 269,000,000 | (242,100,700) |
| இலங்கை லேலன்ட் கம்பனி | 8,951,906 | 8,957,907 | (6,001) |
| மில்கோ தனியார் கம்பனி | 319,454,030 | 319,454,060 | (30) |
| லக்திவ இன்ஜினியரிங் | 10 | 20 | (10) |
| எல்பிட்டிய தோட்டக் கம்பனி | 78,065,460 | 156,130,920 | (78,065,460) |
| வட்டவல தோட்டக் கம்பனி | 160 | 1,510 | (1,350) |
| மொத்தம் | 104,050,792,554 | 119,692,501,917 | 15,641,709,363 |

**இணைப்பு 02**

அரசாங்க நிதி முதலீடு செய்யப்பட்டுள்ள நிறுவனங்களில் மேற்கொள்ளப்பட்ட உறுதிப்படுத்தல்களின் பிரகாரம் மீதி குறைத்து உறுதிப்படுத்தப்பட்ட சந்தர்ப்பங்கள் பின்வருமாறு இருந்தது.

| நிறுவனத்தின் பெயர் | 2012 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறான நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் மூலதனப் பங்களிப்பு | உறுதிப்படுத்தப்பட்ட மீதி | வேறுபாடு |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா |
| வீடமைப்பு அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபனம் | 346,490,000 | 0 | 346,490,000 |
| நெஷனல் இன்ஸ்டியூட் ஒப் பிஸ்னஸ் மெனேஜ்மன்ட் | 57,175,766 | 0 | 57,175,766 |
| இலங்கை போக்குவரத்துச் சபை | 3,944,890,550 | 350,000,000 | 3,594,890,550 |
| அரச ஈட்டு முதலீட்டு வங்கி | 889,813,000 | 889,812,893 | 107 |
| இலங்கை லேலன்ட் கம்பனி | 4,300 | 0 | 4,300 |
| தொழிற் திறன் அபிவிருத்தி நிதியம் | 102,001,520 | 100,000,010 | 2,001,510 |
| ஹொரண தோட்டக் கம்பனி | 58,890 | 58,880 | 10 |
| கேகாலை தோட்டக் கம்பனி | 43,870 | 10 | 43,860 |
| கொட்டகல தோட்டக் கம்பனி | 38,005,570 | 38,005,560 | 10 |
| மடுல்சிமா தோட்டக் கம்பனி | 38,056,530 | 38,000,000 | 56,530 |
| மத்துரட்ட தோட்டக் கம்பனி | 78,060,210 | 78,060,200 | 10 |
| நமுனுகுல தோட்டக் கம்பனி | 37,633,010 | 37,633,000 | 10 |
| தலவாக்கலை தோட்டக் கம்பனி | 3,680 | 3,670 | 10 |
| மொத்தம் | 5,532,236,896 | 1,531,574,223 | 4,000,662,067 |

**இணைப்பு 03**

**பயன்படுத்தப்படாத வெளிநாட்டு மானியம்**

| செயற்திட்டம் மற்றும் கோவை இலக்கம் | 2012.01.01 இல் உள்ளவாறு மீதி | ஆண்டின் போதான பெறுவனவு | ஆண்டின் போது பயன்படுத்தப் பட்டவை | 2012.12.31 இல் உள்ளவாறு மீதி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| Agriculture Commodities TO/DS and A/FAG/04/682 11 | 232,376,087 | - | - | 232,376,087 |
| Preserving the Documentary film Heritage of Sri Lanka TO/DS and A/FAG/04/802 | 310,670 | - | - | 310,670 |
| Master of Development Practice Degree Programme TO/DS and A/FAG/04/815 | 1,998 | - | - | 1,998 |
| The Workshop on review of the atoptotion of ILO/ITC manalan Labour Ingiection TO/DS and A/FAG/04/819 | 710 | 300,000 | - | 300,710 |
| North East Energancy Recon Struction Programme TO/DS and A/FAG/04/853 | 284,834,402 | - | - | 284,834,402 |
| Agriculture Productivity Project TO/DS and A/FAG/04/403 | 275,219,396 | - | - | 275,219,396 |
| UNEP/GEF (MBC and S.T.H.N. Project) TO/DS and A/FAG/04/811 | 262 | - | - | 262 |
| Post Tsunnani Environment Recovery Programme of Environment TO/DS and A/FAG/04/458 i | 5,974,676 | (5,947,186) | - | 27,490 |
| Tsunami Affected Displased Children and Backing thirty families | 1,243,336 | - | - | 1,243,336 |

| | | | | |
|---|---|---|---|---|
| TO/DS and A/FAG/04/793 | | | | |
| Social Protection Index Project TO/DS and A/FAG/04/840 | 1,125,744 | - | - | 1,125,744 |
| European Commission Funded Project (equit) TO/DS and A/FAG/04/812 | 997,337 | - | - | 997,337 |
| Early Childhood Care and Development Trust Fund TO/DS and A/FAG/04/832 | 259,373,379 | - | - | 259,373,379 |
| House holed Survey to Masasure Access and use of Medicines in Kandy District TO/DS and A/FAG/04/816 | 1,621,036 | 5,877,868 | - | 7,498,904 |
| 5th Asian Biotechnologies and Dave. Conference TO/DS and A/FAG/04/822 | 2,764,693 | - | - | 2,764,693 |
| Project on Improved Production of Thriposha Raw M.U.L.P. TO/DS and A/FAG/04/828 | 498,000 | - | - | 498,000 |
| World Food Programme TO/DS and A/FAG/04/836 | 4,529,790 | - | - | 4,529,790 |
| Formulation of Sub Region Action Programme (UNCCD) TO/DS and A/FAG/04/742 | 48,809 | 3,823,625 | 495,000 | 3,377,434 |
| Child Activity Programme TO/DS and A/FAG/04/408-ii | 2,464,970 | 2,143,200 | 476,000 | 4,132,170 |
| Shelter Grant Project (UNHCR) TO/DS and A/FAG/04/664-ii | 131,663,344 | 36,480,000 | 38,955,000 | 129,188,344 |
| Collabarative Recerch Project TO/DS and A/FAG/07/884 | 2,686,933 | 724,143 | - | 3,411,076 |
| Supporting Demining In | 6,008,555 | - | - | 6,008,555 |

| | | | | |
|---|---|---|---|---|
| North East<br>TO/DS and A/FAG/07/830 | | | | |
| TO/DS and A/FAG/07/879 | - | 11,873,502 | - | 11,873,502 |
| TO/DS and A/FAG/07/724 | - | 10,020,797 | - | 10,020,797 |
| TO/DS and A/FAG/07/850 | - | 808,125 | - | 808,125 |
| TO/DS and A/FAG/07/850 | - | 624,344 | - | 624,344 |
| Swedish Consultancy Assistance Fund<br>TO/DS and A/FAG/07/842 | 40,097 | - | - | 40,097 |
| SARCE Project<br>TO/DS and A/FAG/07/845 | 92,412 | - | - | 92,412 |
| Construction of Stabilization Pond in Hambanttota<br>TO/DS and A/FAG/07/857 | 395,394,543 | - | - | 395,394,543 |
| Employment Oriented training for Youth Project | 56,690 | - | - | 56,690 |
| Education Sector Development Project | 224,970,493 | - | - | 224,970,493 |
| | --------------- | ------------- | ------------- | --------------- |
| | 1,834,298,362 | 66,728,418 | 39,926,000 | 1,861,100,780 |
| | ========= | ======== | ========= | ========== |